2989

T.N.L.A Debates

Official Report

Vol-4 NO-5

11th May 1987

(C)

V2ll,31 N8
N87.43.5
136534

வெளியீடு 19-2-1988 Issued 19-2-1988

529/AL/88
2989

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 11, 1987-தொகுதி 43-எண் 5
Monday, the 11th May 1987-Volume 43-No. 5

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat Fort St. George,**
**Madras-600 009**

விலை ரு.3.00 காசுகள்] [Price Rs-3.00 paise

D

V211,31 N87

N87.43-5

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136534
சென்னை-600 008.

# உள்ளடக்கம்

11—5—1987


| | பக்கங்கள் |
|---|---|
| 1. அறிவிப்புகள் — | |
| (அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம். .. .. .. | 729—730 |
| (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் .. | 730—731 |
| (இ) பேரவை நூலகக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் .. .. .. | 731 |
| (ஈ) நிலுவையிலுள்ள வினா குறித்து ஏற்கெனவே செய்த அறிவிப்பு .. .. | 732 |
| (உ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.) .. | 732 |
| (ஊ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.) | 734 |
| (எ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.) .. | 734 |
| (ஏ) (i) திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன்வடிவு, 1987 (அ.இ.) | 774 |
| (ii) தமிழ்நாடு விளம்பரப் பொருள்களின் கட்டாயத் தணிக்கை சட்ட முன்வடிவு, 1987, (ஆ.இ.) .. | 774 |
| (ஐ) பதவி நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர்களின் மேல் முறையீடு தொடர்பாக உச்ச நீதி மன்றம் அனுப்பியுள்ள அறிவிக்கையை ஏற்காமை. .. | 807 |
| (ஒ) சென்னை மாநகர் காவல் (மதுரை மாநகருக்கும், கோயம்புத்தூர் மாநகருக்கும் நீட்டிப்பு) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.) .. | 807—811 |
| (ஓ) சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1987. (ஆ.இ.) .. | 900 |
| (ஔ) பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்த விவரங்கள் .. .. .. | 916—920 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, மே 11, திங்கட்கிழமை

சித்திரை 28, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கண் செய்தலின் தீது."

பலர்முன்னே பயனில்லாத சொற்களைச் சொல்லுதல், நண்பரிடத்தில் அறம் இல்லாத செயல்களைச் செய்தலைவிடத் தீமையானதாகும்.

### 1. அறிவிப்புகள்

#### (அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 239(1) வது விதியின் கீழ் பின்வரும் சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களை 1987–88 ஆம் ஆண்டிற்கான "சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு" உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. திரு. பு. கோ. நாராயணன்
2. திரு. ஆ. பிரேம்குமார்
3. திரு. பி. எம். நரசிம்மன்
4. திரு. எஸ். புருசோத்தமன்
5. திரு. க. பாலசுப்பிரமணியன்
6. திரு. எஸ். என். இராசேந்திரன்
7. திரு. த. பழனி
8. திரு. சி. சிவப்பிரகாசம்

9. திரு. கு. தமிழரசன்
10. திரு. எஸ். பி. மணவாளன்
11. திரு. ஆ. சந்திரசேகரன்
12. திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா
13. திரு. வி. தங்கவேலு
14. திரு. பொன் முத்துராமலிங்கம்
15. திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்
16. திரு. வை. பாலச்சந்திரன்
17. திரு. சி. சுப்புராயர்

பேரவையின் 240-வது விதியின் கீழ் திரு. எஸ். என். இராசேந்திரன் அவர்களை இக்குழுவின், தலைவராக நியமிக்கிறேன்.

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 268(1)வது விதியின் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1987–88 ஆம் ஆண்டிற்கான '' பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு '' விற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. திரு. பி. எம். நரசிம்மன்
2. திரு. தா. சாமிக்கண்ணு
3. திரு. எம். என். ராமஜெயம்
4. திரு. மு. ஜான் வின்சென்ட்
5. திரு. ஆர். இராசமாணிக்கம்
6. திரு. மு. ஆறுமுகம்
7. திரு. ச. குமரகுருபர ராமநாதன்
8. திரு. எஸ். இராசாராமன்



9. திரு. ஆர். ரெங்கசாமி
10. டாக்டர் தே. குமாரதாஸ்
11. திரு. கு. ரமணி

பேரவையின் 268(2) வது விதியின் கீழ் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(இ) பேரவை நூலகக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 264(1) வது விதியின் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1987–88 ஆம் ஆண்டிற்கான '' பேரவை நூலகக் குழு''விற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், பேரவைத் துணைத் தலைவர்.
2. திரு. கா. செ. பழனிச்சாமி
3. திரு. வ. பாலகிருஷ்ணன்
4. திரு. இரா. அரிக்குமார்
5. திரு. அ. பிரணவநாதன்
6. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்
7. திரு. கா. சொர்ணலிங்கம்
8. திரு. கு. ரமணி
9. திரு. கே. உச்சி

பேரவையின் 264(3)-வது விதியின் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இக்குழுவின் தலைவராக இருப்பார்.

**(ஈ) நிலுவையிலுள்ள வினா குறித்து ஏற்கெனவே செய்த அறிவிப்பு**

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவைக்கு ஓர் அறிவிப்பு; 1985-ஆம் ஆண்டு உறுப்பினரால் கொடுக்கப்பட்ட ஒரு கேள்விக்கு விடை அளிக்கப்படாதது குறித்து மாண்புமிகு திரு தமிழரசன் அவர்கள் 11-4-1987 அன்று அவையில் ஒரு பிரச்சினை எழுப்பினார். அதற்கு மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள், அந்தக் குறிப்பிட்ட கேள்வி சமூக நலத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளதென்றும் அத்துறைச் செயலாளர்** அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இந்தக் கேள்வியை அன்று வரை கொண்டு வரவில்லை என்றும் கூறினார். எனவே, நான், அப்படியானால் அந்தத் துறை செயலாளரை** அந்தக் கோப்பை அமைச்சரிடம் உடனடியாகக் கொண்டுவரவேண்டுமென்று உத்தரவிட்டேன். 29-4-1987 அன்று அவையில் மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்து மேற்குறிப்பிட்ட வினா சமூகநலத் துறைக்கு கிடைத்த மறுநாளே வணிக வரி மற்றும் அறநிலையத் துறைக்கு மாற்றப்பட்டு விட்டது என்றும், பேரவைச் செயலகத்திற்கு உடனே தெரிவிக்கப்பட்டு விட்டது என்றும் தெரிவித்தார். இந்த வினாவுக்கு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்கள் 22.4.1987 அன்று பிடை அளித்து உள்ளார். இதிலிருந்து பார்க்கும்போது இந்த வினா சமூகநலத் துறையில் நிலுவையில் இல்லை என்பது தெளிவாகிறது. சமூக நலத் துறை செயலாளர் இதில் தாமதம் எதுவும் செய்யவில்லை என்றும் புலப்படுகிறது. எனவே 11.4.1987 அன்று நான் சமூக நலத் துறை செயலாளரை** என்று சொல்லியதை பேரவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறேன்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அறிவுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

**(உ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1987, (ஆ. இ.)**

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவைக்கு ஓர் அறிவிப்பு: "1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்."

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



**2. அரசினர் சட்டமுன்வடிவுகள்.**

**(அ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.**

மாண்புமிகு திரு த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன் தேவை. இன்றைக்கு 4, 5 சட்டங்கள் இன்ட்ரடியூஸ் செய்வதற்கு தாங்கள் அனுமதித்து இருக்கிறீர்கள். அது எப்போது விவாதத்திற்கு வருகிறது; இன்றைக்கே விவாதத்திற்கு வருகிறதா? How it is possible?

மாண்புமிகு பேரவைத் தலைவர்; Time இருந்தால் இன்றைக்கு evening; இல்லையென்றால் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கு. ரமணி; அப்படியும்கூட சாத்தியம் இல்லையே. ஒரு சட்டத்தை விவாதிப்பதற்கு எங்களுக்கு 48 மணி நேரம் அவகாசம்கூட இல்லாமல், எந்தவிதமான சிந்தனைக்கும் இடமில்லாமல் எப்படி சட்டத்தை விவாதித்து பாஸ் பண்ண முடியும்? அது கஷ்டம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை கூட்டுறவுத் துறை சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டு இரண்டு நாட்கள் கழித்து எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லி தங்களும் ஏற்றுக் கொண்டு இரண்டு நாட்கள் கழித்து விவாதத்திற்கு தாங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். எனவே கொஞ்சம் அவகாசம் கொடுத்து விட்டால் நாங்கள் படித்துவிட்டு பேசுவதற்குப் பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; படிப்பது, பேசுவது ஆகிய அந்த இரண்டு உரிமைகளையும் நான் பாதுகாக்கிறேன். அந்த பில்லில் பேசுங்கள், அவ்வளவுதான்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

1. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஊ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

2. அரசினர் சட்டமுன் வடிவுகள் — தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(எ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ. இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய, ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்."



2. அரசினர் சட்ட முன்வடிவுகள்— தொடர்ச்சி.

(இ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்." (குறுக்கீடுகள்.)

**திரு. அ. ரகுமான்கான்:** இதை அப்போஸ் பண்ணுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டெலிபரேஷன் வரும் போது பேசலாம். I will record your objections.

திரு. அ. ரகுமான்கான்: சட்டமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர், அமைச்சர்கள், பேரவைத் தலைவர், துணைத் தலைவர் இவர்கள் நடத்தை பற்றி விமர்சனங்களை, திரைப் படங்களில்.... (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் அவசரப்படுகிறீர்கள்? இது வேறு பில். இது வணிக வரித்துறை.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

(திருவாளர்கள் கே. சுப்பராயன், ஜே. ஹேமச்சந்திரன், மற்றும் அ. ரகுமான்கான் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

MR. SPEAKER: I will record the objections of the three hon. members.

டிபேட் வரும்போது நீங்கள் பேசலாம். இப்போது யாரும் இதில் பேசமுடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**(உ) சென்னைப் பெருநகர்ப்பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1987.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப்பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



(முற்பகல் 10-10)

**(ஊ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேருந்துகளை அதனுடைய வெயிட்டின் அடிப்படையில் வரி போடுவதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே ஏற்கனவே இருந்த வரியை விட அதிகமாக வரி உயர்த்தப்பட்டிருக்கிறது என்பது ஒரு அம்சம். ஆனால், இந்த வரி உயர்வு காரணமாக வசதி உள்ளவர்கள் மட்டும் அல்ல, பேருந்துகளைப் பொறுத்த அளவில் நடுத்தர மக்களும் ஓரள விற்கு ஏழை மக்கள் கூட அவர்களுடைய வாழ்க்கைக்காக அவர் களுக்கு இருக்கும் எல்லா வசதிகளையும் பயன்படுத்தி கடன் போன்ற மற்ற ஏற்பாடுகளைப் பயன்படுத்தி, அதிகமான வட்டி கொடுத்து இன்றைக்கு பேருந்துகளை வாங்கிக்கொண்டிருக்கி றவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத முறையில் இந்த வரி வரவேண்டும் என்பதுதான் எங்க ளுடைய கருத்து. அதே போன்று மோட்டார் வாகனங்களைப் பொறுத்த அளவில் வரி வசூலிக்கக்கூடிய நேரத்தில் இந்த மோட் டார் வாகனங்கள் காரணமாக சாலைகள் பழுதடையக்கூடிய நிலை ஏற்படுகின்றது. சாலைகளைப் போதுமான அளவிற்குப் பராமரிப்பதற்கு நிதியை அரசு ஒதுக்கவில்லை என்பது ஒட்டு மொத்தமான புகாராக இருக்கின்றது. இன்று சாலைகளைப் பரா மரிப்பதற்கு பல நகராட்சிகளுக்கும், நகர மன்றங்களுக்கும், பேரு ராட்சிகளுக்கும் முடியாத நிலை இருந்துகொண்டிருக்கின்றது. அந்த இடங்களிலே இப்படி வசூலிக்கக்கூடிய மோட்டார் வரியிலிருந்து ஒரு அளவு நிதி உதவியை அவர்களுக்குக் கொடுக்க முடியுமா என் பதைப்பற்றி அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் இன்று அதிகமான வரியை நாம் வசூலிக்கக்கூடிய நேரத் தில் இந்த பேருந்தினால் பழுதடைவது சாலைகள்தான் என் பதை நாம் மறந்துவிட முடியாது. சாலைகள் நல்ல முறையில்

*1987 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 மே 11

பராமரிக்கப்பட்டால்தான் இந்த பேருந்துகள் ஓடுவதற்கு வசதி செய்ய முடியும். ஆகவே, பல இடங்களில் கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் இரண்டு பருவமழை காரணமாகவே சாலைகள் கடுமையாக கெட்டுப்போகக்கூடிய நிலை ஏற்படுகின்றது. அந்தச் சாலைகளை 5, 6 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட சரியாகப் பராமரிக்க முடியாத நிலை இருந்து கொண்டிருக்கின்றது. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் இதுசம்பந்தமாக பிரச்சினை எழுப்பப்பட்டால் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்தவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் எங்களுக்கு சாலைகளின் குறைந்த பட்ச பராமரிப்புக்குத் தேவையான பணம் கூட ஒதுக்கப்படவில்லை. ஆகவே, எங்களால் அதைச் செய்ய முடியவில்லை என்கிறார்கள். ஆகவே, இன்று மோட்டார் வாகனங்கள் சம்பந்தமாக வசூலிக்கக்கூடிய வரியிலிருந்து, இந்த சாலைகளை பராமரிப்பதற்கு, நெடுஞ்சாலைத் துறைக்கோ அல்லது நகராட்சிகளுக்கோ, நகர மன்றங்களுக்கோ நிதியுதவி செய்யக் கூடிய முறையில் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்களும், அரசும் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தை அமுல்படுத்தக்கூடிய நேரத்தில் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல ஏழை எளிய நடுத்தர மக்கள் இந்த வரி உயர்வின் காரணமாக கடுமையாக பாதிக்கப்படாத நிலையை ஏற்படுத்தி அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று இன்னொரு அம்சம், இந்த வாகனங்களைப் பொறுத்த அளவில் கூட, பழுதடைந்த வாகனங்களை இப்பொழுது ஓட்டுவதன் காரணமாக பல பிரச்சினைகளும், சாலை விபத்துக்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இப்படி நாம் ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்து வரி விதிக்கக்கூடிய நேரத்தில் கண்டெடம் செய்யப்பட்டு சாலையிலே ஓட்டுவதற்கு தகுதியில்லாத வண்டிகளை ஓட்டுவதைத் தடுக்கக் கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன் வந்து சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக இந்த வரி உயர்வின் காரணமாக நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற ஒரு அச்சத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, அதற்கான வாய்ப்பு இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே வருகிற வருமானம் மிக அதிகமான அளவில் கூடியிருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. 10 கோடி ரூபாய் அளவில் தான் வரி உயர்வை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும் அதிலே வருகிற வருமானம் கூட பல்வேறு பொது நல காரியங்களுக்காக செலவிடப்படுகிற நோக்கத்தோடு இந்த வரி உயர்வு செய்யப்பட்டிருக்கிறது என்ற காரணத்தால் இதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.



[1987 மே 11] [திரு. சு. முத்துசாமி]

அதோடு வாகனங்கள் மூலமாக வசூலிக்கப்படுகிற வரியிலிருந்து சாலைகள் முறையாக பராமரிக்கப்பட வேண்டும் என்ற உணர்வைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் சாலைப் பராமரிப்பில் மிகவும் அக்கறையோடு செயல்படுகிறது. ஆனால், பல்வேறு பிரச்சினைகள் நம்மை எதிர்நோக்கி இருக்கிற காரணத்தாலும் வறட்சி நிலை காரணமாகவும் நிறைய நிதி ஒதுக்கீடு, அடிப்படைத் தேவைகளுக்காக செய்யப்படுகிற சூழ்நிலையில் சில நேரங்களில் பணத்தை ஒதுக்க முடியாத நிலை கூட ஏற்பட்டு விடுகிறது. இருந்தாலும் இந்த வரி உயர்விலே நிச்சயமாக ஒரு பங்கை சாலைப் பராமரிப்பிற்கான நிலையை ஏற்படுத்துவதற்காகக் கொடுக்க இருக்கிறார்கள் என்று நிச்சயமாக நீங்கள் நம்பலாம். எனவே, காரியங்களைச் செய்வதற்காக பொது நோக்கோடு, பொது நன்மைக்காக செய்யப்பட்டு இருக்கின்ற இந்தக் காரியத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வரவேற்பார்கள், வரவேற்க வேண்டும், இதற்கு ஆதரவு தரவேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) சிறுநீரகங்கள் (நோய் தீர்க்கும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப் படுதலுக்கான அதிகாரமளிப்பு) சட்ட முன்வடிவு 1987.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு, சிறுநீரகங்கள் (நோய் தீர்க்கும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுதலுக்கான அதிகாரமளிப்பு) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுநீரகங்கள் (நோய் தீர்க்கும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுதலுக்கான அதிகாரமளிப்பு) சட்டமுன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்மொழிந்து இருப்பதை நான் வரவேற்கிறேன். குறிப்பாக நோய் தீர்க்கும் நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கான அதிகாரம் அளிக்கக்கூடிய இந்தச் சட்டம் இந்த நோக்கத்தில் விளக்கப்பட்டு இருப்பதை போல மிக அண்மை காலமாக தள்ளாமல் ஏற்றுக்கொள்ள புதிய மருந்துகளை பயன்படுத்தி மருத்துவத் துறையில் ஏற்பட்டு இருக்கக்கூடிய முன்னேற்றமும் அந்த மருந்து கண்டுபிடிப்பும் இந்தச் சட்டத்தைத் தேவையாக ஆக்கி இருக்கிறது. எனவே, மிக அண்மை காலத்தில் இந்த மருத்துவத் துறையில் ஏற்பட்டு இருக்கக்கூடிய முன்னேற்றம் மிக சிறப்பாக அமைய இருக்கிற காரணத்தால் நோய் தீர்க்கக்கூடிய நோக்கங்களுக்கு பயன்படுத்த முடியும் என்று கருதப்படுகிறது. இறந்தவர்களின் சிறுநீரகங்களை நோய் தீர்க்கும் நோக்கங்களுக்குப் பயன்படுத்திக்கொள்வதற்காக வகை செய்யக்கூடிய இந்த புதிய சட்டமுன்வடிவு இயற்றப்பட்டு எப்படி இந்த ரத்த சேமிப்பு வங்கிகளை ஏற்படுத்தி இருக்கிறோமோ அதுபோல் இந்த சிறுநீரகங்களை சேமித்து வைக்கக்கூடிய வங்கிகள் ஏற்படுத்துவதன் மூலமாக, அதைப் பாதுகாப்பதற்கு முடியுமா என்று அரசு யோசிக்க வேண்டும்.

(முற்பகல் 10-20)

அதோடு மட்டுமல்லாமல், சிலர் எழுதிக் கொடுத்ததற்குப் பிறகு, கடைசியிலே அவர்களுடைய உற்றார், உறவினர்,

*1987 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், அதை மறுத்தால் என்ன செய்வது என்பதைப் பற்றியும் பரிசீலிக்க வேண்டும். அடுத்து, தனியார் மருத்துவ மனைகளிலே இப்படி எழுதிக் கொடுத்திருப்பவர்கள் இருந்தார்களேயானால், அவர்களிடமிருந்து அந்த சிறுநீரகங்களை எடுப்பதற்கு ஏற்பாடு என்ன என்பதையும் பரிசீலிக்க வேண்டும். இவைகளையெல்லாம் விதிகளை இயற்றும் போது அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன்.

டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இப்போதெல்லாம் இந்த நவீன விஞ்ஞான உலகத்திலே இந்த சிறுநீரகங்கள், அதாவது—ஆர்கன் டிரான்ஸ்பிளான்டேஷன் என்று சொல்வார்களே, அதெல்லாம் இப்போது மேலை நாடுகளில் நல்ல முறையில் செய்யப்பட்டு வருகின்றது.

நமது தமிழ்நாட்டில், குறிப்பாக நமது பொது மருத்துவ மனைகளில்கூட, நல்லமுறையில் இவைகள் எல்லாம் செய்து கொண்டு வருகிறார்கள். அந்த சிறுநீரகங்கள் எல்லாம் கெட்டு விட்டால் அதனுடைய வேலையைச் செய்வதற்கு, ஒன்று, பெரிட்டோனியத்தைஉபயோகப்படுத்தவேண்டும் அல்லது ரத்தத்தைச் சுத்திகரிப்பதற்காக 'ஆர்ட்டிபிஷியல் கிட்னி' என்ற சாதனத்தை உபயோகப்படுத்த வேண்டும், என்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம். பெரிட்டோனியம் டயலிஸிஸ் என்ற முறையை உபயோகப்படுத்த வேண்டும் என்றால் அது டைம் கன்சூமிங் ஆக இருக்கிறது. அதே நேரத்தில், ஆர்ட்டிபிஸியல் கிட்னி என்ற ஒரு முறையை உபயோகப்படுத்தி, 'ஹேமோடயலிஸிஸ்' செய்ய வேண்டும் என்றால் அது காஸ்ட்-கன்சூமிங் ஆக இருந்து கொண்டிருக்கிறது. ஏழை-எளிய மக்கள் எல்லாம் இந்த 'ஆர்ட்டிபிஷியல் கிட்னி'-யை உபயோகப்படுத்தி அந்த நோயைக் குணப்படுத்திக் கொள்ளுவது என்பது சற்று சிரமமான காரியமாக இருக்கிறது. செல்வமும் மிகுந்த அளவு செலவாகிறது. அதன் காரணமாக, கிட்னியை மாற்றி, ஆர்ட்டிபிஸியல்—அதாவது கிட்னி டிரான்ஸ்பிளான்டேஷன் என்ற முறையில் செய்தால், அவர்களுக்கு சிறந்த முறையில் அந்த நோயிலிருந்து குணப்படுவதற்கு நல்ல வாய்ப்பு பெற வசதி இருக்கிறது. ஆனால் அந்த கிட்னியை மாற்றும்போது, புதிதாக ஒன்றை மாற்றும்போது உற்றார், உறவினர்கள் அதைக் கொடுத்தால் நன்றாக இருக்கும். ஆனால் அவர்கள் அவ்வாறு கொடுப்பதற்குக் கூட முன் வருவதில்லை. அதன் காரணமாக, கிட்னி கிடைப்பதற்கு, குறிப்பிட்ட நபர் இறந்தவுடனே அதை எடுப்பதற்கு வேண்டிய சட்ட முன்வடிவை இப்போது நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

[டாக்டர் அ. பொன்னுசாமி] [1987 மே 11

இது வரவேற்கப்படக்கூடிய ஒன்று. எப்படி கண்ணிலே இருக்கின்ற கார்னியாவை டிரான்ஸ்பிளாண்ட் செய்தால் நல்லமுறையில் கண் தெரியாதவர்களுக்கு எல்லாம் ஒளி கிடைக்கிறதோ அதைப் போல இந்த நோயிலிருந்து அதுவும் குறிப்பாக, க்ரானிக் நோய் என்று சொல்வார்கள்—அந்த நோயிலிருந்து விடுபடுவதற்காக, 'கிட்னி டிரான்ஸ்பிளான்டேஷனுக்காக', ஆர்கன் டிரான்ஸ்பிளான்டேஷனுக்காக இந்தச் சட்ட முன் வடிவைக் கொண்டு வந்திருக்கிற நமது அரசைப் பாராட்டி, இந்தச் சட்ட முன் வடிவை வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த இறந்த நபர்களுடைய உடலிலிருந்து சிறுநீரகத்தை அப்புறப்படுத்தி, மற்ற நோயாளிகளுக்கு பயன்படுத்துவதற்கு உரிய வகைகள் செய்கிற இந்தச் சட்டத்தை மிக்க மகிழ்ச்சியுடன் மனதார வரவேற்கிறேன். இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சற்று காலம் கடந்து இந்தச் சட்டம் வந்திருந்தாலும் கூட, நல்ல காரியங்கள் செய்யப்படுகிறபோது அதைப் பாராட்ட வேண்டியது எங்களுடைய கடமை என்ற முறையில், இதிலே சில கருத்துக்களையும், சில உண்மைகளையும்கூட சொல்ல நான் விழைகிறேன்.

அண்மையிலே விஞ்ஞானத்திலே ஏற்பட்டிருக்கிற முன்னேற்றத்தின் காரணமாக ஒரு மனிதனுக்கு, மாற்று உறுப்புகளைப் பொருத்துகின்ற அந்த விஞ்ஞானம் மிகவும் உயர்ந்திருக்கிறது. உச்சக்கட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறது. ஒரு மனிதனுடைய உடலிலே உள்ள உறுப்புகள் மற்ற மனிதனுக்குச் சேருமா என்பதற்காகவே பலகாலங்கள், பல ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு, 'டிஷ்யூ கம்பாட்டபிலிட்டி' என்று சொல்லி, அதற்காக சில நவீன யுக்திகளைக் கையாண்டு அப்படிப் பொருத்தப்படுகின்றபோது அவைகள் சேராமல் போனால் அவைகளைத் தடுப்பதற்காகக்கூடிய 'சைக்ளோஸ்கோரின்' போன்றவை—பல மருத்துவ நிபுணர்களால், மருத்துவ சாதனைகள் புரியப்பட்டு, சில மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு, இன்று வழக்கத்திலே மேலை நாடுகளிலே இருந்து கொண்டிருக்கின்றன.

சிறுநீரகங்கள் மாத்திரமல்ல. ஏற்கனவே நமக்குத் தெரியும், கார்னியா டிரான்ஸ்பிளான்டேஷன்-'ஐ பாங்க்' என்று முதல் முதலாக உலகத்திலேயே நம்முடைய ஈழத்திலே, சிலோன் நாட்டிலே வைத்திருந்தார்கள். அங்கிருந்து பல கார்னியாக்கள் தமிழ்நாட்டிற்கு வந்து, இங்கே அகர்வால் இன்ஸ்டிடியூட்டிலும், மற்ற இடங்களிலும் அவை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. மிகவும் வேதனைக்குரிய செய்தி ஒன்றை இந்த நேரத்தில் சட்டமன்றத்தில் உள்ள உறுப்பினர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்மையில் எங்கேயோ பத்திரிகையில் படித்தேனோ அல்லது யாராவது என்னிடத்தில் சொன்னார்களோ எனக்குச் சரியாக நினைவில்லை. இருந்தாலும் எனக்குக்



1987 மே 11] [டாக்டர் கே. சௌரிராஜன்]

கிடைத்த தகவல் கல்கத்தாவில் உள்ள ஒரு நிறுவனம் இப்படி
இறந்தவர்களின் உறுப்புகளையெல்லாம் பெற்று அவற்றை
புரோசென் செக்ஷனில்—அதாவது குளிர் பதனப்படுத்தி வைத்
திருந்து — பிறகு ஆஸ்திரேலியா நாட்டுக்கு ஏராளமாக ஏற்றுமதி
செய்து கொண்டிருந்தார்களாம். ஆஸ்திரேலிய நாட்டில்
சிறுநீரகம், கண், மனித எலும்பு என்று எல்லாமே அங்கே
டிரான்ஸ்பிளாண்ட் செய்யப்படுகின்றன. எனவே அங்கே தேவைப்
படுகிற உறுப்புகளை கல்கத்தாவில் உள்ள ஒரு நிறுவனம்
ஏற்றுமதி செய்து கொண்ருந்ததாம். ஆனால் அந்த நிறுவனத்
திற்கு எப்படி இந்த மனித உறுப்புகள் கிடைத்து வந்தன என்று
கேட்டால் ஈழத்தில் நம் தமிழ் இன மக்கள் கொலை செய்யப்
படுகிறார்களே — படுகொலை செய்யப்படுகிறார்களே — அந்தப்
பிணங்களிலிருந்து எடுத்து அந்தக் கல்கத்தா நிறுவனம் ஏற்றுமதி
செய்து வந்ததாம். தமிழ்-ஈழத்தவர்களின் பிணங்களி
லிருந்து அந்த உடல் உறுப்புகள் வெட்டி எடுக்கப்பட்டு பிறகு
அவை குளிர்பதனப்படுத்தப்பட்டு பிறகு ஆஸ்திரேலியாவிற்கு
ஏற்றுமதி செய்யப்பட்டு வந்ததாகவும் பிறகு ஆஸ்திரேலிய
அரசாங்கத்திற்கு இதுபற்றிய தகவல் கிடைத்ததால் அதுபின்னர்
நிறுத்தப்பட்டுவிட்டதாகவும் ஒரு வேதனையான செய்தி
எனக்குக் கிடைத்தது.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் சிறுநீரகம் மாத்திர
மல்லாமல் உடலில் இருக்கிற எல்லா உறுப்புகளும் மற்றும் எலும்பு
உட்பட அனைத்தும் இறந்த மனிதனின் உடலிலிருந்து எடுத்து
உயிருள்ள மனிதருக்கு மாற்றி அமைக்கக் கூடிய வாய்ப்புகள்
ஆஸ்திரேலியாவில் இருக்கின்றன. இந்தச் சட்ட முன்வடிவை
நான் வரவேற்கிற நேரத்தில் இன்னும் காம்ப்ரெஹென்சிவ்
—ஆக அதாவது இறந்த மனிதனுடைய உடலில் இருந்து எல்லா
உறுப்புகளையும்—எலும்பு, கார்னியா, சிறுநீரகம் முதலிய எல்லா
உறுப்புகளையும் எடுத்துப் பயன்படுத்துவதற்கு உரிய வகையில்
முறையான சட்ட முன்வடிவை விரைவில் கொண்டுவர வேண்டும்—
கொண்டு வருவார்கள் என்று நான் நம்புகிறேன். இருப்பினும்
நான் இந்தச் சட்ட முன்வடிவை மனதார வரவேற்கிறேன்.
அடுத்தபடியாக ஒரு திருத்தத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.
இந்த அறுவையை — வெட்டி எடுக்கிற பணிய ரெஜிஸ்டர்டு
மெடிகல் பிராக்டிஷனர் செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்
கிறது. அத்துடன் 'ஆப் மாடர்ன் மெடிசின்' என்று அடிசன
லாகச் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அல்லது
எம்.பி.பி.எஸ் அல்லது எம்.எஸ். படித்தவர்கள் மட்டும் செய்ய
லாம் என்றாவது போடலாம். இல்லையென்றால் — வெறும்
மெடிகல் பிராக்டிஷனர் என்றால் யுனானி, ஆயுர்வேதம் மற்றும்
ஹோமியோபதி படித்தவர்கள்கூட இதற்காகக் கையெழுத்து
போடக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுவிடும். எனவே அதைத் தவிர்க்க
ரெஜிஸ்ட்டர்டு மெடிக்கல் பிராக்டிஷனர் இன் மாடர்ன் அலோ
பதிக் மெடிசின் என்றோ அல்லது போஸ்ட்கிராஜுவேட் இன்
மாடர்ன் சர்ஜரி ஆப் மாடர்ன் மெடிசின் என்று போட்டால் நல்ல

முறையில் இந்தச் சட்டம் பயன்படும் என்று சொல்லி அரசாங்கத்தை மனதாரப் பாராட்டி மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுநீரகங்கள் பயன்படுத்துவற்கான அதிகாரமளிப்பு சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையில் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கும்போது பொதுவாக இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்றுப் பேசியதற்காக அரசின் சார்பாக அவர்களுக்கு வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் பேசும் போதும் டாக்டர் பொன்னுசாமி அவர்கள் பேசும் போதும் நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் பேசும் போது ஒரு பயங்கரமான செய்தியைச் சொன்னார்கள். இலங்கைத் தமிழர்களுடைய பிணத்திலிருந்து உறுப்புகளை எடுத்து ஏற்றுமதி செய்வதாகவும் அதில் ஒரு நிறுவனம் ஈடுபட்டிருப்பதாகவும் சொன்னார்கள். ஆனால் இந்த அரசைப் பொறுத்த வரையில் அப்படி இருக்க முடியாது என்று கருதுகிறேன். அப்படி இருக்கக் கூடாது என்றும் கருதுகிறேன். ஏனென்றால் மாற்றுச் சிறுநீரகத்தைப் பயன்படுத்துவதுபற்றி நான் மருத்துவர்களிடம் விரிவாகப் பேசினேன். ஒருவர் இறந்து 6 மணி நேரத்திற்குள்ளாக அந்த உறுப்பை அப்புறப்படுத்த வேண்டும் என்றும் இல்லை என்றால் அந்த உறுப்பு பயன்படாது என்றும் சொல்லுகிறார்கள். மேலும் உறுப்புகளை வங்கியில் வைப்பதுபோல் 'பேங்கில்' வைக்க முடியுமா, என்றுகூட கேட்டேன். அப்படி வைப்பதற்கு இதுவரை ஆராய்ச்சியின் மூலம் வழி கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் தெரிவித்ததோடு இறந்தவர் உடலிலிருந்து ஒரு உறுப்பை எடுத்த உடனே அந்த மற்றவருக்குப் பொறுத்த வேண்டும் என்றும் எனவே நோயாளியும் தயாராக இருக்க வேண்டும், உறுப்பைத் தருகிறவர்களும் தயாராக இருக்க வேண்டும். அப்படித்தான் செய்ய வேண்டும் என்றார்கள். இதற்காகச் சட்டம் கொண்டுவரும்போது மருத்துவர்களிடம் நான் இதுகுறித்து விரிவாகப் பேசினேன். இது போன்ற சட்டம் வேறு எங்கேயாவது இருக்கிறதா என்று விசாரித்ததில் கருநாட்க மாநிலத்தில் ஒரு சட்டம் இருப்பதாகச் சொல்லப்பட்டதால் அந்தச் சட்டத்தை வரவழைத்துப் பார்த்து நாம் இந்தச் சட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். எனவே இந்தச் சட்டத்தில் இருக்கிற முக்கியமான செய்தி என்னவென்றால் — மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல்— ஒரு உண்மை இருக்கிறது. அதாவது சிலர் இதை வியாபாரமாகச் செய்கிறார்கள். அதைத் தடுக்கத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த வகையில் இது ஒரு வியாபாரமாக இருக்கக் கூடாது. ஒருவரைச் சாகடித்துவிட்டு கூட இப்படி உறுப்புகளை எடுக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது.





(முற்பகல் 10.30)

அப்படிச் செய்வதை தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிச் செய்திருக்கிறோம். தானமாகக் கொடுக்கிறவர்கள் எழுதிக் கொடுத்துவிட்ட பிறகு அவர்களுடைய உற்றார் உறவினர் அவற்றைத் தடுக்காமல் இருக்க வேண்டும், ஆட்சேபிக்காமல் இருக்க வேண்டும். அப்படி அவர்கள் ஆட்சேபித்தால அதில் சட்டச் சிக்கல் இருக்கிறது என்பது தெரியும். இந்தச் சட்டச் சிக்கலைத் தவிர்க்க இந்தச் சட்டத்தைப் போட்டிருக்கிறோமே தவிர வேறல்ல. எனவே இலங்கையிலிருந்த தமிழர்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் என்று நான் நினைக்கவில்லை. வங்காளத்திலே மட்டுமல்ல, பொதுவாக இப்படி ஒவ்வொரு நாட்டிலும் வாணிபம் நடைபெறுகிறது. கிட்னிகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதும், அவற்றை வேறு யாருக்காவது பொருத்துவதும், அதற்காக ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் வாங்குகிறார்கள் என்பதும் போன்ற செய்தி கிடைத்த பிறகு அதை முறைப்படுத்த வேண்டும், ஒழுங்குபடுத்த வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் விரும்பி இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

சென்னையிலே உள்ள பொது மருத்துவமனையிலும் ஸ்டான்லி மருத்துவமனையிலும் மருத்துவர்கள் சிநீரக மாற்று சிகிச்சையை சிறப்பாகச் செய்து வெற்றிகரமாகச் செய்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைபபட்டிருக்கிறேன். சிறுநீரகத்தை மாற்றுவதை நமது மருத்துவர்கள் மிக வெற்றிகரமாக நடத்துகிறார்கள். அவர்களுக்கு போதுமான கருவிகள் இல்லையென்றாலும் செய்திருக்கிறார்கள். ஆகவே தேவையான கருவிகளை உடன்டியாக வாங்கிக் கொடுக்கும்படி முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இரண்டு கருவிகள் வாங்கிக் கொடுக்க அரசு ஆணை பிறப்பித்தாகிவிட்டது. அவைகள் சீக்கிரத்தில் வந்து விடும். சிறுநீரகம் மாற்றம் செய்து கொள்பவர்களுக்கு கொடுக்கப்படும் 'இம்ப்ரால்' என்ற மாத்திரை—மாற்றம் செய்யப்பட்ட சிறுநீரகத்தை ரிஜெக்ட் செய்யாமல் இருக்க கொடுக்கப்படும். அந்த மாத்திரையை அவர்கள் எவ்வளவு காலம் உயிரோடு இருந்தாலும் அவர்களுக்கு அது வரையில் இனாமாகக் கொடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சிறுநீரகம் மாற்றப்படுபவர்களுக்கு ஒரு ஆளுக்கு பத்தாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்பதை ஏற்கெனவே மானியக் கோரிக்கை விவாதத்தின்போது தெரிவித்திருப்பதை நினைவுபடுத்துகிறேன். ஆகவே நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்திற்கான ரூல்ஸ்சை உருவாக்குகிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய கருத்தை கவனத்திலே கொள்ளுவோம் என்ற உறுதியைத் தெரிவித்து இந்தச் சட்ட முன் வடிவை ஏற்றுக் கொள்ளும்படி பேரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுநீரகங்கள் (நோய் தீர்க்கும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுதலுக்கான அதிகாரமளிப்பு) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 25/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுநீரகங்கள் (நோய் தீர்க்கும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுதலுக்கான அதிகாரமளிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

**(ஏ) விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1987.**

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 32/1987) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக வரி திருத்தச் சட்டத்தின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

---

*1987 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



இந்த வரி விதிப்பால் அரசாங்கம் எதிர்பார்க்கிற இனங்களை விட மிக அதிகமான வருவாய் வரும் என்பது ஒரு கணக்கு. இதற்கு முன்பு கழிந்த காலங்களில் வரி விதிக்கப்பட்டுள்ள இனங்களுக்கு இந்த கூடுதல் விற்பனை வரி விதிக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த ஆண்டு இந்த வரி விதிக்கிற இலக்கு பத்து லட்சம் என்று இருப்பதை 7 இலட்சமாகக் குறைத்திருப்பது மட்டுமல்லாமல் வரிவிதிப்புக்குட்பட்ட பல்வேறு இனங்களை சேர்த்து வரிவிதிக்கும் வகையில் இந்தச் சட்டத் திருத்தம் வருகிறது. இப்படி வரி செலுத்துவதற்கான டர்ன் ஓவர் இருந்தாலும், இல்லாவிட்டாலும் வரி விதிப்புக்கு உட்பட்ட பல்வேறு இனங்களைக் கொண்டு வந்து இந்தச்சட்ட திருத்தம் கொண்டு வருவதால் வரிஏய்ப்புகள் அதிகம் ஆகாதா என்று நான் கேட்க விரும்புகிறேன். சிறு வியாபாரிகள் மட்டுமல்லாமல், பெரிய வியாபாரிகளையும் இது பாதிக்கும் என்று சென்ற முறை பேசப்பட்டபோது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். பெரிய வியாபாரிகளுக்கு இந்த வரி விதிப்பு இருந்தாலும் அவர்கள் விற்கின்ற அத்தனை பொருள்களையும் சமுதாயத்தில் வசதி பெற்றவர்கள் மட்டும் உபயோகப்படுத்துவதில்லை.

சாதாரண மக்களும் உபயோகப்படுத்துகிற காரணத்தால், இந்த வரி விதிப்பு விலைவாசி உயர்வதற்கும், பொருள்களின் விலை உயர்வதற்கும் காரணமாக இருக்கிறது என்பதால் சாதாரண ஏழை நடுத்தர மக்களை இது பாதிக்கும். இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இந்த முறை இருக்காதென்று கருதுகிறேன். அந்த அளவுக்குக் கடுமையாக இருக்கிறது. கடந்த காலத்தில் கூடுதல் விற்பனை வரி வரும்போது, அதை எதிர்த்தோம். இது அதிகமான அளவுக்கு இருக்கிறது. அதனால் நியாயமான வரி செலுத்துபவர்கள் தண்டிக்கப்படும் வகையில் அதிகமான வரி செலுத்துவதோடு, இது சாதாரண மக்களைப் பாதிப்பதால், இது தேவையற்றது என்று சொல்லியிருக்கிறோம். எனவே அரசாங்கம் இதை மறு பரிசிலனை செய்ய வேண்டுமென்று கூறி அமைகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன் வடிவு சம்பந்தமாக சில கருத்துக்களைச் சொல்வதற்கு விரும்புகிறேன். இன்றைக்கு 7 இலட்சம் வரை மொத்த வருவாய் உள்ள வியாபாரிகளுக்கு இதிலிருந்து விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையாக இருந்தாலும், அப்படி 7 இலட்சம் ரூபாய் வரை வருமானமுள்ள எத்தனை டீலர்ஸ் விதி விலக்கு பெறுவார்கள் என்பது முக்கியமான பிரச்சினையல்ல. அதையொட்டி இந்தச் சட்ட முன்வடிவின் காரணமாக ஏற்படக் கூடிய மற்ற பிரச்சினைகளைப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே 2 முறையிலே வரி விதிப்பு இருக்கிறது. 180-க்கும் அதிகமான பொருள்களை நாம் பல முனை விற்பனை வரியிலிருந்து ஒரு முனை விற்பனை வரிக்குக் கொண்டு வந்திருக்கிறோம். அதிலே ஒரு சில பொருள்கள் மேலே, இன்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 மே 11

னொரு அதிகபட்சமான வரியைப் போடக் கூடிய நிலை இதன் காரணமாக ஏற்பட்டிருக்கிறது. அடிஷனல் சேல்ஸ்டாக்ஸ் என்ற முறையிலே போடும் நேரத்திலே, இதனுடைய சட்டப் பிரச்சினை கூட சுப்ரீம் கோர்ட்டிலே ஏற்கெனவே விவாதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, ஒருவருடைய வருமானத்திலிருந்து இந்தக் கூடுதல் விற் பனை வரி கட்ட வேண்டிய நிலை ஏற்படுமானால், அது சட்ட விரோதமானது என்று சுப்ரீம் கோர்ட் சொல்லியிருக்கிறது. உச்ச நீதி மன்றம் என்ன சொல்லியிருக்கிறது என்றால் இந்தக் கூடுதல் வரியைப் பொறுத்த அளவில் டர்ன்-ஓவர் மேலே வரும் நேரத்தில், கண்ட்ரோல்ட் பிரைஸ் கமாடிடிஸ் பொறுத்தவரையில் அதை வியாபாரிகள் தங்கள் கையிலே இருந்து கொடுக்க வேண்டி யிருக்கிறது. ஏனென்றால் இப்போது மருந்து வகைகள், பெட்ரோல், உரம் போன்ற பொருள்களைப் பொறுத்தவரையில் எம். ஆர். டி. பி. கன்ட்ரோல் சட்டத்தின்கீழ் அதன் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த கன்ட்ரோல் விலைக்கு மேலே விற்றால், அவர்களைத் தண்டிப்பதற்கு சேல்ஸ் டாக்ஸ் சட்டத்தில் மட்டுமல்ல, டிரக்ஸ் பிரைசஸ் கன்ட்ரோல் ஆர்டர், 1979-ன் படியும், அதைப் போன்ற மற்ற சட்டங்களின் படியும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கிறது. அந்தப் பின்னணி யில் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அந்தப் பொருள்களைப் பொறுத்த, அளவில், இன்று டர்ன்ஓவர் மேல் நாம் வரிபோடும் நேரத்தில், அந்த வரியை அவர்கள் நிச்சயமாக கன்ஸ்யூமர்கள் தலையிலே வைக்க முடியாது. கன்ட்ரோல் கமாடிடீஸ் அல்லாத பொருள்களைப் பொறுத்த அளவில் நிச்சயமாக இந்தக் கூடுதல் வரி காரணமாக வரும் சுமை அதை வாங்கி உபயோகிக்கும் மக்கள் தலையில் வருவது என்பது இயல்பு.

(முற்பகல் 10-40)

எந்த வியாபாரியும் அவருடைய லாபத்திலே இருந்து இந்த விற்பனை வரியைக் கொடுப்பதற்குத் தயாராக இல்லை. வெளியில் இருந்து பொருள்களை வாங்கி கொடுப்பதற்குத் தயாராக மாட் டார்கள் என்று தெரியும். ஆகவே அந்த மாதிரி நான்-கன்ட்ரோல்ட் பிரைஸ்கூட்ஸ் பொறுத்த அளவிலே, கம்மாடிட்டீஸ் பொறுத்த வரையிலே ஃப்ரீ மார்க்கெட் கூட்ஸ் பொறுத்த அளவிலே அதை வெளியிலே இருந்து வாங்கி உபயோகப்படுத்துகின்றவர்களுக்கு சிரமம் ஏற்படும். இன்று அதன் காரணமாக நாணயப் பெருக்கம்கூட ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இன்று பிரைஸ் கன்ட்ரோல் பண்ணப்படாத பொருளை பொறுத்த அளவுக்கு இந்த வரி காரணமாக விலை உயர்வு ஏற்படும். விலை உயர்த்தப் படுவதன் காரணமாக இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படும். அதாவது வாங்கி உபயோகிப்பவர்களுக்கு கஷ்டம் ஏற்படும். கன்ட்ரோல்ட் ரேட்ஸ் கம்மாடிட்டீஸ் பொறுத்த அளவிலே அது தொழிலைக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய நிலை ஏற்படும். அந்த தொழிலைப் பொறுத்த அளவிலே தொழிலையே எடுக்கக்கூடிய நிலை கூட ஏற்படலாம் என்பது என்னுடைய



1987 மே 11] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

கருத்து. இதிலே 4 ஸ்லாப் கொடுத்திருக்கின்றார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால் ஒரு பர்செண்ட் அல்லது 2 பர்செண்ட் அந்த வருவாயிலிருந்து அவர்கள் வரி கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும். இதன் காரணமாக தொழிலுக்கு, வியாபாரத்திற்கு பாதிப்பு ஏற்படும். அதனால் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படும். இந்த பாதிப்புகளை கணக்கிலே எடுத்துக்கொண்டு, ஏற்கெனவே இந்த அவையிலே எல்லாரும் சொல்லியதுபோல ஒரு முனை விற்பனை வரி கொண்டு வருவதுபற்றி பரிசீலிப்பதாகச் சொல்லப்பட்டிருக் கிறது. (மணி அடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன். அந்த அம்சத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு இன்று தமிழ்நாடு ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் ஆக்டிலே ஒரு திருத்தம் கொண்டு வந்து எல்லாப் பொருள்களுக்கும் ஒரு முனை வரியை ஏற்படுத்தி, அதிலே அரை சதவிகிதம் வரியை உயர்த்துவது என்ற நிலையை மேற்கொள்வோமானால் இந்த வரியை சுமத்துவதால் தொழில்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பும், பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பும் மாற்றப் படமுடியும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் ஏற்கெனவே இன்னொரு சேல்ஸ் டேக்ஸ் மசோதா மீது பேசுகிற நேரத்தில்சொன்னேன். மத்திய அரசினுடைய கொள்கையால் மருந்து, பெட்ரோல், உரம், தொழில்கள் போன்றவற்றிற்கு கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது.

மல்டி நேஷனல் நிறுவனங்களுடைய நிர்ப்பந்தத்திற்கும் பணிந்து இந்தத் தொழில்களைப் பாதிக்கக்கூடிய நிலையை மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டினேன். இந்த நேரத்திலே இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்து, தொழிலைப் பாதிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக விற்பனை வரிச் சட்டத்திலே எல்லாப் பொருள்களுக்கும் ஒரு முனை வரியைக் கொண்டு வந்து, அரை சதவிகிதம் வரி விகி தத்தை உயர்த்தினால் மொத்தமாக வரியிலே அதிகமாக வசூலா கின்ற நிலை இருப்பதால், அந்த வரியினை அந்த நிலையிலே உயர்த்துவதைப்பற்றிப் பரிசீலிக்கக்கூடாதா என்று அரசைக் கேட்டுக்கொண்டு இன்றைக்கு தொழில் பாதிப்பு மற்றும் மக்கள் பாதிப்பு என்ற நிலை ஏற்படுகின்ற முறையிலே இந்தச் சட்டம் அமையாமல் அந்த பாதிப்புகள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவானது, வணிகர்களைப் பாதிக்கிறது. பொது மக்களை மிகக் கடுமையாகப் பாதிக்கிறது, என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பட்ஜெட்டிலே நான் பேசும்போது இதுபற்றி எல்லா விவரங்களையும் சொல்லியிருந்தாலும் திரும்பவும் சொல்ல வேண்டிய நிலை இப்போது இருந்துகொண்டிருக்கிறது. இந்த வரி 80 கோடி ரூபாய்தான் வசூல் ஆகும் என்று கணக்கு கொடுத்து இருக்கின் றார்கள். இந்தமாதிரி வசூல் பண்ணினால் ஏறக்குறைய ரூ. 500 ரூ. 600 கோடி வசூலாகும் என்று ஏற்கெனவே சொல்லி இருக்

கிறேன். அந்த அளவிலே இந்த வரி விதிப்பு சாதாரண வியா பாரிகளைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது. அப்படி பாதிக்கப்படுகின்றபோது எந்த வியாபாரியும் தன்னுடைய கையிலிருந்து எடுத்து இந்த வரியை கட்ட சம்மதிக்க மாட்டார். 0.07 சதவிகிதம் வரி கூடுதலாக போட்டால் அவர்கள் ஒரு மூட்டையின் விலை 500 ரூபாய் என்றால் 3 1/2 ரூபாய் கூட்டி விற்பார்கள். அதுபோல 1 சதவிகித வரி உயர்வு என்றால் அவர்கள் 5 ரூபாய் கூடுதலாக பொருள்களின் விலையை உயர்த்து வார்கள். அப்படிப் பார்க்கின்றபோது சாதாரணமாக இந்த வரி உயர்வு விவசாயிகள், மற்றும் சாதாரண ஏழை எளியவர்களைத் தான் பாதிக்கும். அதுபோக கன்ட்ரோல் பொருள்களான உரங் கள், மருந்து சாமான்கள், பெட்ரோலிய பொருள்கள் போன்ற வற்றுக்கு வரி விதித்திருப்பதால் அவர்களுக்கு கிடைக்கின்ற லாபம் அடியோடு பாதிக்கப்படுகிற நிலை இருக்கிறது. அவர்கள் இன்றைக்கு இத்தகைய பொருள்களின் விலையை உயர்த்தக் கூட முடியாது. மண்ணெண்ணெயை எடுத்துக்கொண்டால் ஆயிரம் லிட்டர் மண்ணெண்ணெயை 20 ரூபாய் லாபத்தில்தான் விற்க வேண்டுமென்பது அரசின் உத்திரவு. ஆனால் இந்த வரி விதிப்பின்காரணமாக அவர்கள் லாபத்திலிருந்து 24 ரூபாய் கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. வருகிற லாபமோ 20 ரூபாய். ஆனால், லாபத்திலிருந்து 24 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொன்னால் அது எப்படி முடியும் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதல் விற்பனை வரி விதிப்பு பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் பேசிக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டில் 7 லட்சம் ரூபாய் வரையில் விதி விலக்கு அளித்திருக்கிறோம். அதற்கு மேல் விற் கின்றவர்களுக்குத் தான் வரி விதிப்பு. இதனால் விவசாயிகளும், பொதுமக்களும் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். கர்நாடகா மாநிலத்தில் 5 லட்சம் ரூபாய் வரை தான் விதி விலக்கு அளித்திருக்கிறார்கள். அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அபிப்பிராயம் சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகா பற்றி இங்கே மாண்புமிகு அமைச்சர் சொன்னார். அப்படி என்றால் கர்நாடக அரசின் கொள்கைகளை இந்த அரசு பின்பற்றத் தயாரா என்று அறிய விரும்புகிறேன். அங்கு இருக்கின்ற அரசின் கொள்கைகள் வேறு, இங்கு இருக்கின்ற அரசின் கொள்கைகள் வேறு, அங்கு மும் மொழித் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. இங்கே இரு மொழித் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. அங்கே இந்தியை எதிர்த்தவர்களை முன்கூட்டியே கைது செய்தார்கள். இங்கே பின்னர் கைது செய்தார்கள். இப்படி கொள்கைகளை நடை முறைப்படுத்துவதில் இரண்டு அரசுகளுக்கும் இடையே பல்வேறு வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.



அடுத்து, 7 லட்சம் வரை விதி விலக்கு என்று சொன்னார்கள். இன்றைக்கு உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால் 40 லட்சம் ரூபாய்க்கு வியாபாரம் செய்கின்ற ஒரு மண்ணெண்ணெய் வியாபாரி தனக்கு வருகின்ற லாபத்தை விட அதிகமாக வரி கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. 7 லட்சம் வரை தான் அவருக்கு சலுகை. அதற்கு மேல் அவர் வரி கட்டியாக வேண்டும். அப்படி என்றால் அவர் தனக்கு வருகிற லாபத்தை விட அதிகமாக வரி கட்ட வேண்டி வருகிறது. இப்படிப்பட்ட நிலையில் அவர் மண்ணெண்ணெய் வியாபாரத்தை நிறுத்தி விட்டால் கிராமங் களுக்கு மண்ணெண்ணெய் போய்ச் சேராத நிலைமை ஏற்பட்டு அதுவே பெரிய பிரச்சினையாக வாய்ப்பிருக்கிறது. அதுபோல மருந்துப் பொருள்களுக்கு வரி விதிப்பு செய்யப்பட்டிருக்கிறது. விவசாயிகள் பயன்படுத்துகின்ற உரத்திற்கும் வரி விதிப்பு செய்யப் பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விற்பனை வரிச் சட்டத்தை இந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் கொண்டு வரமாட்டார்கள் என்று தான் நாங்களெல்லாம் நம்பிக் கொண்டிருந்தோம். ஆனால் இங்கே இப்பொழுது இச்சட்டத்தை கொண்டு வருவதன் காரணமாக அதிகமாக பாதிக்கப்படக் கூடிய வர்கள், மிகக் கடுமையாக பாதிக்கப்படக் கூடியவர்கள் ஏழை யெளிய பொது மக்களும், விவசாயிகளும் தான். இன்றைக்கு இதன் காரணமாக மருந்து சாமான்கள், பெட்ரோலிய பொருள் கள் போன்றவற்றின் வியாபாரத்தை எல்லாம் நிறுத்தி வைத்து விட்டு சம்பந்தப்பட்ட வியாபாரிகள் போராட்டம் நடத்தக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை எல்லாம் அரசு பரிவுடனும், கனிவுடனும் கவனித்து முன்பு இருந்த மாதிரி ஸ்டேட்டஸ் கோவை மெயின்டெயின் பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தவகையில் முன்பு இருந்ததுபோல டாக்ஸபிள் டர்ன் ஓவருக்கு மட்டும் வரி விதிக்க வேண்டும். நஷ்டம் வந் தாலும் டர்ன் ஓவருக்கு வரி கட்ட வேண்டுமென்றிருப்பது சரியல்ல என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உங்கள் மூலமாக மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன். டாக்ஸபிள் டர்ன் ஓவருக்கு 1, 1 1/4, 1 1/2 பெர்சென்ட் வரி என்று முன்பு இருந்தது. இப் போது 1/4, 1/4 பெர்சென்ட் என்று குறைத்திருக்கிறார்கள். அப்படி சிலவற்றிற்கு சிறிது குறைத்திருந்தாலும் டர்ன் ஓவருக்கு மேல் என்று வரும்போது செக்கண்ட் சேல்ஸ் செய்கின்ற வியா பாரிகளை கடுமையாக இது பாதிக்கும் என்று சொல்லி, ஏற் கெனவே நான் கேட்டதுபோல இதில் மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர் கள் சித்தனும், ஹேமச்சந்திரனும், ஆறுமுகமும் தங்கள் தங்கள் கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள்.

(முற்பகல் 10–50)

பொதுவாக நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பொழுதே இந்தக் கூடுதல் வரி சம்பந்தமாக இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் இந்த அரசுக்கு எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்த நேரத்திலே அரசின் சார்பிலே மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் பதிலுரையும் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த அவை அறியும்.

ஆகையினாலே ஏற்கெனவே பல்வேறு கருத்துக்களை, எந்த எந்தக் கோணங்களிலே மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கிறார்களோ அந்த அடிப்படைகளையெல்லாம் அரசுக்கு எடுத்து வைத்திருக்கிறார்கள். பொதுவாக நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த மட்டில் இந்தக் கூடுதல் வரியை 1970-லேயிருந்து நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இருந்தாலும் ஆண்டுக்கு ஒருமுறை வரி விதிப்பிலே இதனால் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறதே தவிர கூடுதல் வரி என்பது மாநிலத்திலே 1970-லேயிருந்துதான் சில குறிப்பிட்ட இடங்களிலே நடைமுறைப் படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

பொதுவாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்களும் இதனால் ஏழைகள் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். ஏழைகளிடத்திலேயிருந்து இந்த வரியை வாங்க முடியாது, வாங்கக் கூடாது என்றுதான் அரசும் சொல்லியிருக்கிறது. பொதுவாக ஏழு இலட்திற்கு மேலே உள்ளவர்கள் அல்லது பத்து இலட்சத்திற்கு மேலேயிருந்து நாற்பது இலட்சம் வரை அல்லது அதற்கு மேலே உள்ளவர்கள்தான் இந்த வரி விதிப்புக்கு உட்பட்டு வருகிறார்களே தவிர, சாதாரண ஏழை எளியவர்கள் இதிலே பாதிக்கப்படுவதற்கு இடமில்லை. ஆகையினாலே மாண்புமிகு உறுப்பினர், பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த நம்முடைய ஹேமச்சந்திரன் அவர்கள் வசதி படைத்த வணிகர்களுக்குக்கூட இங்கே வாதாடுவது என்பது உள்ளபடியே எனக்கு வியப்பாக இருக்கிறது. ஆகவே, அந்த அளவிற்கு இன்றையதினம் பொதுவாக ஏழை எளிய மக்களைப் பாதிக்காத அளவிற்குத்தான் நம்முடைய அரசு மிகுந்த பரிசீலனை செய்து, ஆய்வு செய்து இந்த வரியை விதித்திருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு ஆறுமுகம் அவர்கள் சொன்னார்கள். கர்நாடக மாநிலத்திலே இப்படியிருக்கிறது என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்ட பொழுதுகூட அவர்கள் அந்தக் கொள்கைகளை இங்கே நிறைவேற்றுவீர்களா என்று கேட்டார்கள். பொதுவாக





இன்னொரு மாநிலத்திலே கொள்கையை நிறைவேற்றுகின்ற பொழுது அந்தக் கொள்கைதான் இந்த மாநிலத்திலேயும் நிறைவேற்றப்பட வேண்டுமென்பது அவசியமில்லை. இருந்தாலும் மாநிலத்தினுடைய நிதி ஆதாரங்களைப் பெருக்குவது, அந்த மாநில அரசாங்கத்தினுடைய சுய மரியாதை களைக் காத்துக் கொள்வது இவையெல்லாம் அந்த மாநிலத்திலேயிருக்கக்கூடிய அரசினுடைய கடமையாக இருக்கிறது. ஆகையினாலே அங்கே மும்மொழித் திட்டத்தைக் கொண்டு வந்தார்களே, இங்கேயும் கொண்டு வந்தீர்களா என்று கேட்டால், சுய மரியாதை இயக்கங்கள் தொடர்ந்து வழி வழியாக ஆட்சிக்கு வந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே எப்படி அதை இங்கே அமல்படுத்த முடியும் என்று தெரியவில்லை. ஆகையினாலே அந்தப் பாணியிலே அவர்கள் சொன்னார்கள். அண்டை மாநிலங்களைப் பொறுத்தமட்டிலே பல்வேறு மாநிலங்களிலே இந்த வரிவிதிப்பு, கூடுதல் வரி என்பது நடைமுறையிலே இருந்து வருகிறது. அந்த அளவிலேதான் நம்முடைய மாநிலத்தில் இன்றையதினம் ஒருசில குறிப்பிட்ட இடங்களிலேயிருந்த இந்தக் கூடுதல் வரியை ஓரளவு குறைத்து, வணிகப் பெருமக்களை பாதிக்கக் கூடாத அளவிற்கு, அதே நேரத்தில், வாங்குகின்ற பொதுமக்களையும் பாதித்து விடாத அளவிற்கு மிகுந்த கவனமாக, எச்சரிக்கையாக இருந்துதான் புரட்சித் தலைவருடைய அரசாங்கம் இந்த வரி விதிப்பைச் செய்திருக்கிறது என்பதை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்து, ஏற்கெனவே பல்வேறு கருத்துக்களையெல்லாம் இங்கே சொல்லி, அது சம்பந்தமாக நாம் நிறைய விவாதித்திருக்கிறோம். அரசின் சார்பிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களும் மன நிறைவு கொள்ளத்தக்க அளவிற்குப் பதிலுரையும் தரப்பட்டிருக்கிறது. ஆகையினாலே மாண்புமிகு உறுப்பினர்கள் மன நிறைவோடு இந்தச் சட்டமுன்வடிவை ஆதரித்து, நிறைவேற்றித்தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த வரியைப்பற்றிச் சொன்னார்கள். இது கூடுதல் வரி. நம்முடைய மாநிலத்திலே—ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். 2,72,000 வணிகர்கள் பதிவு செய்யப்பட்டவர்கள். அதிலே ஏற்கெனவே, கூடுதல் வரி செலுத்துபவர்கள் 5,000 பேர்தான். இப்பொழுது கூடுதல் வரிக்கு உள்ளாகின்றவர்கள் 15,000 பேர்தான். ஆகவே, மொத்தத்திலே இந்த வரி செலுத்துகின்ற அளவிற்கு இருக்கின்ற பெரு வியாபாரிகள்— மாண்புமிகு ஆறுமுகம் போன்றவர்கள் 20,000 பேர்தான் வருகிறார்கள். 2,72,000 பேர்களிலே 20,000 பேர்தான் இந்த டர்ன் ஓவர் வரி கட்ட வேண்டி வரும். அதுவும் 7 இலட்சத்திற்குக் கீழே இருக்கின்றவர்கள் கட்ட வேண்டிய அவசியமில்லை. சென்ற ஆண்டுக்கு முதல் ஆண்டு 3 இலட்சத்திற்குக் கீழே இருக்கின்ற

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 11

வர்கள் கட்ட வேண்டிய அவசியமில்லை; அதற்குமேலே இருப்பவர்கள் கட்ட வேண்டுமென்று இருந்தது. சென்ற ஆண்டுதான் அதை 10 இலட்சமாக ஆக்கினோம். அப்படி ஆக்கினாலும் 9 இலட்சம் வந்தவுடன் இரண்டு கம்பெனிகளாகப் பிரித்தார்கள், 2, 3 கம்பெனிகளாகப் பிரித்துவிட்டால் இந்த வரியிலிருந்து தப்பிக்கலாம் என்று. ஆகவேதான் இந்த ஆண்டு மறுபடியும் 7 இலட்சத்திற்குக் கொண்டு வந்தோம். அதைத்தான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் குறிப்பிடுகின்றபொழுது கர்நாடகத்திலே ஹெக்டே அவர்கள் 15 இலட்சம் வரையிலும் சலுகை தந்து, 15 இலட்சத்திற்கு மேற்பட்டு டர்ன் ஓவர் என்று வைத்தார்கள். அங்கேயும் என்ன செய்தார்கள் என்றால் 2, 3 கம்பெனிகளாகப் பிரிக்க ஆரம்பித்தவுடன் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், இப்படிப் பிரிக்கிறார்கள் என்றவுடனே 5 இலட்சத்திற்கு மறுபடியும் கொண்டு வந்து சேர்த்து விட்டார்கள்.

5 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் வரி செலுத்த வேண்டுமென்று வைத்தார்கள். எனவே இது கொள்கை பற்றியதல்ல. மக்களைப் பாதிக்காத நிலை இருக்குமேயானால், வணிகர்களைப் பாதிக்காத நிலை இருக்குமேயானால் இங்கேயும் ஏன் வரக்கூடாது என்பதுதான் கேள்வியே தவிர அரசியல் தன்மை, கொள்கை பொறுத்ததல்ல இது. வணிகர்கள் மட்டுமேதான் செலுத்தவேண்டும் என்றாலும், இதனைப் போடுவதால் ஏழை எளியவர்கள்தான் பாதிக்கப்படுவார்கள் என்று வணிகர்களுடைய நிலையினைப் பற்றி நன்றாகத் தெரிந்த திரு. ஆறுமுகம் சொல்கிறார். அப்படியானால் சரக்குகளின் மீது அவர்கள் அதை ஏற்றுவார்கள் என்று தெரிகிறது. அப்படி ஏற்றக்கூடாது. அப்படி ஏற்றுவார்கள் என்றால் வணிகர்கள் சரியாக நடக்கவில்லை என்றுதான் பொருள். வணிகர்தான் கட்ட வேண்டுமே தவிர பொருட்களின் மீது ஏற்றக்கூடாது. பாம்பின் கால் பாம்பறியும் என்பதற்கிணங்க நிலைமையை உணர்ந்து திரு. ஆறுமுகம் அவர்கள் சொல்கிறார்கள். எனவே அப்படி ஏழை, எளியவர்கள் மீது ஏற்றும்போது வணிகர்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லையே, எப்படியும் இதை ஏற்றுவார்கள் என்றால் வணிகர்கள் ஏன் ஊர்வலம் நடத்தவேண்டும்? ஏன் கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்? தேவையில்லை.

மேற்கொண்டும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசுகிறபோது இதில் 500 கோடியாவது வரவேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே நான் அடுத்த ஆண்டு கணக்குப் பார்ப்பேன். அந்த அளவுக்கு வராவிட்டால் வணிகர்கள் ஏமாற்றிவிட்டார்கள் என்ற ஒரு முடிவுக்கு வருவேன். இப்படிப்பட்ட ஒரு செய்தியைச் சொன்னதற்காக மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்து இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.



1987 மே 11]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித்துறை அமைச்சர் அவர்கள் பதிலளிக்கக் கூடிய நேரத்தில் வியாபாரிகளுக்காகப் பேசுவதாகச் சொன்னார்கள். என்னுடைய வாதம் என்னவென்றால் ''நான் ''ப்ரைஸ் கன்ட்ரோல்ட் குட்ஸ்'' என்பனவற்றின் மேல் இந்த டர்ன் ஓவர் டாக்ஸ் விதிக்கக்கூடிய நேரத்தில் வியாபாரிகள் கையில் இருந்து கட்டமாட்டார்கள். இறுதியாக அது வாங்கி உபயோகிக்கக் கூடியவர்களின் தலையில்தான் ஏறும். அப்படி நடக்காது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களைப் பாதிக்காத அளவில் இருக்க வேண்டும்; மக்களிடத்தில் இருந்து வசூலிக்கக்கூடாது என்பதுதான் அரசினுடைய கொள்கை.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கும்போது ஒன்று சொன்னார்கள். ஆனால், ஏ. ஆர். தாமோதரன், எம்.எல்.சி. போன்றவர்களைக் கொண்ட தூது கோஷ்டி மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்திக்கும்போது இதனை நிறுத்தி வைப்பதாக அவர்கள் சொன்னார்கள். அதுபற்றிய விளக்கம் இப்போது சொல்லப்படவில்லை.

அதேபோல் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பணம் வரவில்லை என்றால் 500 கோடி ரூபாயினை வியாபாரிகள் ஏமாற்றுவார்கள் என்று சொன்னார்கள். அப்படி என்றால் அதிலே வணிக வரித்துறை அதிகாரிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளை நாங்கள் வசூலிக்கச் சொல்கிறோம். நீங்களும் பார்த்துக் கொடுப்பீர்களேயானால் அடுத்த ஆண்டு வரி விதிக்காமல் ஓரளவுக்குச் செய்வதற்கு வசதி ஏற்படும். அடுத்து அவர்கள் முதலமைச்சரைச் சந்தித்தது உண்டு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள்? பற்றாக்குறை 141 கோடி ரூபாய்க்கு வந்திருக்கிறது; இந்த வரியை எடுப்பது பற்றி ஆட்சேபணை இல்லை; ஆனால் இதற்கு ஈடாக எந்த வகையில் வரி போடுவது என்பதைக் குறித்து பதில் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். அதற்கு இதுவரையில் யாரும் வரவில்லை. ஆகவேதான் சட்டம் வந்துவிட்டது.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வியாபாரிகள் முதலமைச்சரைச் சந்தித்தபோது மாற்று யோசனை எதுவும்

சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். நாங்கள் மாற்று யோசனை சொல்லியிருக்கிறோம். அன்றைக்கு முதலமைச்சர் அவர்களை வியாபாரிகள் குழு சந்தித்தபோது கூடுதல் வரியை எடுத்துவிட்டு எப்படி வரி போடலாம் என்பதைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அப்போது முதலமைச்சருடன் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் இருந்தார்கள். ஆகவே அதற்கான விளக்கங்கள் தந்திருக்கிறோம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது அவர்கள் சொன்ன யோசனை என்ன வென்றால் அதனை கன்ஸ்யூமர் தலையில் வைக்கலாம் என்பது தான். ''Not to be passed on to the consumer'' என்பதை எடுத்துவிடுங்கள், அதாவது வியாபாரிகள்தான் கொடுக்கவேண்டும் என்பதை விட்டுவிட்டு வசூலித்துக் கொடுக்கலாம் என்ற வகையில் போடுங்கள் என்று சொன்னார்கள். வசூலித்துக் கொடுப்பது என்றால் அது ஏழைகளைப் பாதிக்கும், எனவே, அப்படிப் போட முடியாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்போதே மறுத்துவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

'' 1987 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 32/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

'' 1987 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 32/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.



(முற்பகல் 11—00)

## (ஐ) திரைப்படங்கள் முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவு, 1987

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் .—

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 17/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

திரு. ஜி. கே. ஜே. பாரதி : மாண்புமிகு பேரவையின் தலைநாயகர் அவர்களே, திரைப்படங்கள் முறைப்படுத்துதல் பில்லின் மீது பேசுகின்ற வாய்ப்பை உருவாக்கிய காங்கிரஸ் பேரியக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, இந்த பில்லிலே ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

உரிமங்கள் வழங்குகிறபோது 3 முறை அவர்களுக்குச் சலுகை தருவது போன்ற ஒரு பாவனையைக் காட்டி இருப்பதாக நான் அறிகிறேன். இப்போது அதிகமான டிக்கட்டுக்களை ஓவர் டிக் கெட்டாக கொடுத்து பொது மக்களிடம் இருந்து பணத்தை வசூல் செய்கிறார்கள். மேலும், அப்படி ஓவர் டிக்கெட் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் கள்ள டிக்கெட் பிளாக் மார்க் கெட்டிலே விற்பதற்கு ஒரு சூழ்நிலையை உருவாக்கி விடுகிறார் கள். இப்படி உருவாக்கி விடுவதனால் திரை அரங்குகளில், புதிய திரைப்படங்கள் வெளி வருகிறபோது, மக்கள் பாதிக்கப் படுகின்ற சூழ்நிலை உருவாகிற தன்மை இருக்கிறது. அதை போக்க வேண்டும். மேலும், ஓவர் டிக்கெட் கொடுக்கும்போது அதை கிழிக்காமலேயே உள்ளே இருப்பவர்கள் வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட முறை இருப்பதை நாம் பார்க்கிறோம். அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள். திரைப்படங்களுக்கு உரிமங்கள் வழங்குகிறபோது இப்படிப் பலவற்றையும் பார்க்க வேண்டும். அவர்கள் டாய் லெட்டுகளை சுத்தமாக வைத்திருப்பது இல்லை. அந்த கழி வறைகளுக்குத் தண்ணீர் வசதி கூட வழங்காத சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். மேலும், கழிவறையை தவிர்த்து திரை அரங்கு களின் ஓரங்களிலேயே சிறுநீர் கழித்து தூய்மையற்ற ஒரு சூழ் நிலையை உருவாக்குகிறார்கள்.

*1987 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. ஜி.கே.ஜே. பாரதி] [1987 மே 11

மேலும், சவுண்ட் பொல்லுயூஷன் என்ற அளவில் திரைப்
படங்களின் ஒலிகளை சரியாக கேட்க முடியாத அளவுக்கு ஒரு
சூழ்நிலை உருவாகி விடுகிறது. அதனால், படம் பார்ப்பவர்
களுக்கு ஒரே இரைச்சலாக இருப்பதோடு பொது மக்களின் காது
டிரம் பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலையையும் பார்க்கிறோம்.
மேலும், சில திரைஅரங்குகளிலே ஏ.சி. எனப்படும் குளிர் சாத
னங்களை வைத்திருக்கிறார்கள். ஆனால், ஏ.சி.ஐ போடுவதே
கிடையாது. அதற்கான பணத்தை வாங்குகிறார்கள். ஆனால்,
போடுவதில்லை. அதனால் ஏ.சி. வேலை செய்யவில்லை என்
றால் அந்தக் கட்டணத்தைத் திருப்பிக் கொடுப்பார்களா? அதற்கு
என்ன செய்ய இருக்கிறீர்கள். ஏ.சி. ஒழுங்காக வேலை செய்
கிறதா இல்லையா என்று பார்க்க ஒரு டெம்பரேச்சர் கருவியை
வைக்க வேண்டும் என்று நடைமுறையிலேயே காவல் துறையின்
மூலமாக உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அப்படிச் செய்கி
றார்களா என்றால் இல்லை. நகராட்சிகள், மாநகராட்சிகள்
மூலமாக அது குறித்து சர்க்குலரும் அனுப்பியிருக்கிறார்கள்.
ஆனால், திரை அரங்குகளில் உள்ளவர்கள் அப்படிச் செய்வதே
இல்லை. இப்போது மேலும் ஒரு சில ஆராய்ச்சிகள் கண்டு
பிடித்திருக்கிறார்கள். திரை அரங்குகளில் திரைப் படங்களை
பார்த்துக்கொண்டிருக்கும் போது அதன் உள்ளே இருக்கிற
கார்பன்-டை-ஆக்ஸைடு எத்தனை சதவீதம் என்று கண்டுபிடித்து
இருக்கிறார்கள். அதில் 53 சதவீதம் கார்பன்-டை-ஆக்ஸைடும்
மீதி 47 சதவீதம் தான் ஆக்ஸிஜன் இருப்பதாகவும், ஏ.சி. தியேட்
டர்களில் கண்டு பிடித்திருக்கிறார்கள். இவ்வளவு குறைவாக
ஆக்ஸிஜன் இருந்தால் குழந்தைகளுக்கும், வயதானவர்களுக்கும்
மூச்சுத் திணறல் ஏற்படாதா. அப்படி மூச்சுத் திணறல் ஏற்
படுவதோடு மட்டும் அல்லாமல் உடல் நிலையிலேயும் மாற்றங்
கள் ஏற்படுவதாகச் சொல்கிறார்களே. இந்தச் சூழ்நிலைகளை
தவிர்க்க ஆக்ஸிஜன் அதிகமாக வரும் அளவுக்கு திரை அரங்கு
களில் ஏற்பாடு செய்ய வேண்டும். இது ஒரு புதிய சிந்தனை.
இந்தப் புதிய சிந்தனை திரை அரங்குகளில் அமல் படுத்துவதற்கு
அரசு வழி கோல வேண்டும்.

மேலும், திரை அரங்குகளில் சிகரெட்டைப் பிடிக்கிறார்கள்.
பிடிக்க வேண்டாம் என்ற சட்டம் இருந்தாலும் பிடித்து முகத்தி
லேயே புகை விடுகிற பழக்கம் இருக்கிறது. சிகரெட்டினை குடிப்
பவர்களுக்குத் தான் நிக்கோடின் வருகிறது என்று சொன்னால்
அதை விட அதிகமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிற
எங்களைப் போன்றவர்களுக்கும் தாய்மார்களுக்கும் உள்ளங்கள்
பாதிக்கப்படுகிறதே, அதைத் தடுக்க வேண்டும். மேலும்,
லோயர் கிளாஸ்களில் சேர்கள் கிழிந்து விட்டால் அதை ரிப்பேர்
செய்வதில்லை. ஆனால் ஹை-கிளாஸ்களில் இருக்கும் குஷன்
களை ரிப்பேர் செய்கிறார்கள். அதை மாற்ற வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்
துக் கொள்ள நினைக்கிறேன். திரை அரங்குகளிலே ஒரு தனி
போலீஸ் படையை பறக்கும் படை என்ற வகையில் நிறுவி



[987 மே 11] [திரு. ஜி. கே. ஜே. பாரதி]

அங்கு செய்கிற ஊழல்களை கண்டுபிடிக்க வேண்டும். மேலும்,
சைக்கிள் ஸ்டாண்டுகளுக்கும் கார் பார்க்கிங்களுக்கும் 2 ரூபாய்
வாங்குகிறார்கள். அதற்கு வரி கட்டுகிறார்களா ? மேலும், டீ
போன்றவற்றை சாப்பிடுவதில் கூட $1\frac{1}{2}$ மடங்கு அதிக
விலைக்கு விற்கிறார்கள். எந்தப் பொருளும் வெளியிலே வாங்
குவதை விட 1 ரூபாய்க்கு வெளியிலே கிடைப்பது 2 ரூபாய்க்குத்
தான் அங்கே கிடைக்கிறது . அதற்குத் தனியாக வரி கட்டுகிறார்
களா, இல்லேயை. ஏன் இந்த சூழ்நிலையை உருவாக்குகிறீர்
கள் என்று கேட்க விரும்புகிறேன். மூன்று முறைதவறு செய்
தால் லைசென்சை ரத்து செய்யலாம் என்று இந்த பில்லில் சொல்
லப்பட்டிருக்கிறது. அதனை மாற்றி ''ஓவர் டிக்கெட்''
கொடுத்தால், தவறு செய்தால் அவர்களுடைய லைசென்சை
''சீஸ்'' பண்ணவேண்டும். மன்னிப்பே கொடுக்கக்கூடாது
என்று சொல்லி, இந்த பில்லில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு
நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த சட்டமுன்வடிவை வரவேற்று என்னுடைய
கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு இதயத்
தெய்வம் தமிழக முதல்வர் அவர்கள் இந்தத் துறைக்குப் பல
நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அந்தவகையில்
மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பல நல்ல காரியங்களை
செய்துகொண்டிருக்கிறார்கள். இங்கு திரைப்படங்கள் முறைப்
படுத்துதல் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ''ஓவர் அக்காம
டேஷன்'' பற்றி குறிப்பிடும்போது நான் பணிவாகத் தெரிவிக்க
விரும்புவது திரையரங்க உரிமையாளர்கள் அதிகாரிகளின் தவிர்க்க
முடியாத விருந்தினர்களையும், அரசியல் முக்கியஸ்தர்களையும்
அனுமதிக்க வேண்டிய சூழ்நிலையிருப்பதால் நான்கு பேர், ஐந்து
பேர், பத்து பேர் என்று பாஸ் கொடுப்பது வழக்கமாக இருந்து
கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் அதனை ஒரு
பெருங் குற்றமாக அரசு கருதாமல் அதிகாரிகளின் விருந்தினர்
கள் மற்றும் அரசியல் முக்கியஸ்தர்களுக்கு அனுமதியளிக்கலாம்.

அடுத்து, ''டாக்ஸ் எவேஷன்'' பற்றி காங்கிரஸ் கட்சி
உறுப்பினர் பாரதி அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் இது
பற்றி குறிப்பிட விரும்புவது பொதுவாக திரையரங்க உரிமை
யாளர்கள் அப்படிப்பட்ட தவறுகளைச் செய்வதில்லை. சில
சமூகவிரோத சக்திகள் உதாரணத்திற்குச் சொல்வதென்றால்,
சென்னையில் கூட தியேட்டர்களுக்குச் சென்று பல டிக்கெட்டுக்
களை வாங்கிக்கொண்டு, வெளியே விற்றுகொண்டிருக்கிறார்கள்.
அதையெல்லாம் காவல் துறையினர் தான் கண்காணிக்க வேண்
டும், கடுமையான நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கூறிக்
கொள்ள விரும்புகிறேன். திரையரங்கங்களில் டிக்கெட்டுகள்
அதிகமான விலைக்கு விற்றால், குறிப்பிட்ட தொகைக்கு மேல்
அதிகமான தொகை வசூலித்தால் நிச்சயமாக அவர்களுடைய
லைசென்சை சஸ்பென்ட் செய்வதில் தவறில்லை. அப்படி தவறு

[திரு. எம். இராசரத்தினம்] [1987 மே 11

செய்பவர்கள் தண்டனை அனுபவித்தே தீரவேண்டும். ஓவர் அக்காமடேஷன் என்ற தவறை மூன்று முறை செய்தால், அந்தத் தவறுக்காக அவர்கள் லைசென்சை ரிவோக் செய்வதைப் போல இந்த சட்ட முன் வடிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தயவு செய்து பரிவோடு பரிசீலிக்க வேண்டும். சில நேரங்களில் சமூக விரோதிகள் மட்டுமல்லாமல், அரசியல் முக்கியஸ்தர்களுக் கும் அங்கே இடமில்லையென்று சொல்லிவிட்டால் அன்று மாலையே திரையரங்குகள் நடக்கமுடியாத வண்ணம் தொண் டர்கள் அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் செய்கிற காட்சி யைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். பல மானேஜர்கள் கத்தியால் குத்தப்பட்டு இறந்திருக்கிறார்கள். பல நிர்வாகிகள் அதனால், உயிரை இழந்திருக்கிறார்கள். காயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலையை தினசரி பத்திரிகைகளில் பார்த்துக் கொண்டிருக் கிறோம். ஆகவே, கடுமையாக இருக்கக்கூடிய தண்டனையை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

'' டாக்ஸ் எவேஷன் '' பற்றி குறிப்பிட்டார்கள். '' காம் பவுண்ட் டாக்ஸ் '' வந்ததற்குப் பின்னால் முன்பு ஏறக்குறைய 20 கோடி என்று இருந்தது இப்போது 1987 ஆம் ஆண்டில் 60 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதை முன்பு கேளிக்கை வரிகள் சட்டமுன்வடிவின் மீது பேசியபோது கூட குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே, '' டாக்ஸ் எவேஷன் '' என்ப தற்கு சந்தர்ப்பமே கிடையாது. கள்ள டிக்கட்டுகளைப் பற்றி குறிப்பிடுகிறபோது நான் மறுபடியும் தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கும் தியேட்டர்காரர்களுக்கும் சம்பந்தமில்லை.

அடுத்து, என்.ஓ.சி. கொடுக்கிறபோதும், லைசன்ஸை புதுப் பிக்க வேண்டுமென்ற நிலையிலும் இங்கே ஒன்றைகுறிப்பிட்டிருக் கிறார்கள். உதாரணமாகச் சொல்லவேண்டுமென்றால் ரிவால்வர் போன்றவைகளை வைத்துக்கொள்வதற்கு லைசென்ஸ் கொடுக்கிறபோது கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டிருக்கிறீர்களா என்று கேட்பார்கள். அதைப்போல சினிமா லைசென்ஸ் கொடுக் கிறபோதும் டாக்ஸ் எவேஷன் போன்ற குற்றங்களில் தண்டனை பெற்றிருக்கிறீர்களா என்று கேட்பது இயல்பு. இது நடைமுறைப் படுத்தப்பட்டு தான் வந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் மீண்டும் அதை வலியுறுத்தினால் மீண்டும் அப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்தினால் '' எண்டர்டெயின்மென்ட் டாக்சாக '', '' காம்பவுண்ட் டாக்சாக '' அரசாங்கத்திற்கு வரக்கூடிய வரி வராமல் வரி இழப்பு ஏற்படும் என்ற நிலையை அரசாங்கத்தின் கவனத்திற்கு இந்த நேரத்தில் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பேசியவர்கள் எல்லாம் '' டூரிங்- சினிமா ''-வில்தான் பெரும்பாலான தவறுகள் நடந்து கொண் டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். '' மபசிலாக'' இந் கக்கூடிய இடங்களில், டூரிங் சினிமா என்.ஓ.சி. கொடுப்பதற்



1987 மே 11] [எம். இராசரத்தினம்]

முன்னால், 40-க்கு 80 ஷெட் போட வேண்டும். அதற்கு கீழாக போடக்கூடாது என்று சட்டத்தில் கொண்டுவந்தால் நன்றாக இருக்குமென்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கள்ள வீடியோ போன்ற வற்றால் சினிமாத் துறை அழிந்து கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, அதனைக் காப்பாற்ற நடவடிக்கையெடுக்க வேண்டும். தவறு செய்பவர்கள் மீது தண்டனையை கடுமை யாக்க வேண்டுமென்பதில் மாறுபட்ட கருத்துக்கள் இல்லை. ஆனால், தண்டனை மிகக் கடுமையாக இருக்கக்கூடாது. ஓரள விற்கு சஸ்பென்ட் செய்யலாம், ஓரிரு முறைகள் சஸ்பென்ட் பண்ணலாம்.

(முற்பகல் 11–10)

அதற்குப் பிறகு ஒரு மாதத்திற்கு சஸ்பென்ட் செய்யலாம், அல்லது 3 மாதத்திற்கு சஸ்பென்ட் செய்யலாம் என்று இருக்க லாமே தவிர, ஒட்டு மொத்தமாக லைசென்சை ரத்து செய்ய வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டாம் என்று அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டு, இந்தத் துறையை மிகச் சீரும் சிறப்புமாக செய்து கொண்டு இருக்கிற அமைச்சர் அவர்களுக்கும் தாய் உள்ளம் கொண்டு, திரை உலகத்தினரை வாழ வைத்துக் கொண்டிருக்கிற இதய தெய்வத்திற்கும் என் பணிவான வேண்டுகோளை வைத்து, விடைபெறுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தில் சினிமா காட்சி நடத்தக் கூடியவர்கள், செய்யக்கூடிய தவறுக்கு, அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்ற நோக்கம் இருந்தாலும், நடைமுறையிலே வரக்கூடிய சில பிரச்சினைகளை நான் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். ஏற்கெனவே செக்சன் 9-லே என்ன இருக்கிறது என் றால், 3 தடவை தவறு செய்யக் கூடியவர்களைக் காப்பாற்றக் கூடிய முறையில் விஷயம் இப்போது இல்லை, ஆனால் இந்தச் சட்டத் திருத்தத்திலே என்ன கொண்டு வந்திருக்கிறது என் றால், 3 தடவைக்கு அதிகமாக, அல்லது 3 தடவையாவது அவர்கள் சட்டப்படி தொழில் நடத்துவதில் ,சட்டத்தை மீறிய குற்றங்களுக்குத் தண்டிக்கப்பட்டவர்களை சஸ்பென்ட் பண்ணு வதற்கு இடம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இது தவறு செய்யக் கூடியவர்களுக்கு ஒரு சலுகையாக அமையாதா என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஏன் என்றால், இப்படிப்பட்ட தொழிலிலே எல்லாம் ஒரு தடவை தண்டிக்கப் பட வேண்டும், அல்லது 2 தடவை அட் தி மேக்சிமம் தண்டிக்கப் பட வேண்டும்.

அதற்கு மேலே இப்படி தண்டிக்கப்படக் கூடியவர்களுக்கு 3 தடவை என வாய்ப்பு கொடுப்பது என்பதும், அதுமட்டுமல்ல, இன்றைக்கு இதிலே, என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், 'Where the holder of a licence or anyperson employed by him has been-

"onvicted." அதாவது இந்த சினிமா ஸ்தாபனத்தினுடைய அந்த
தியேட்டரினுடைய ஓனர்ஸ் மட்டுமல்ல, ஏதேனும் ஒரு தொழி
லாளி தவறு செய்தாலும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது.
ஆகவே சாதாரணமாக இந்த சினிமாத் தியேட்டர்களுடைய
சொந்தக்காரர்கள், நாங்கள் தவறு செய்யவில்லை ஏதோ சில
ஊழியர்கள் செய்து விட்டார்கள், எங்களுக்குத் தெரியவில்லை
என்று சொல்லி, அதைச் சரிக்கட்டிப் போகக்கூடிய ஆபத்து
இந்தச் சட்டத்திலே இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட
விரும்புகிறேன். ஆகவே இந்தத் திருத்தம் உண்மையிலேயே
தவறு செய்யக் கூடியவர்களை அவர்களுடைய தவறு ஒரு
கடுமையான நடைமுறைக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு விஷயம்
என்ற முறையிலே அமைந்து, அப்படி தண்டனை கொடுப்பதற்கு
பதிலாக அவர்களைக் காப்பாற்றுவதற்கு, அவர்கள் தப்பித்துக்
கொள்வதற்கு இடம் கொடுக்கக்கூடிய வகையிலே இந்தச்
சட்டத் திருத்தம் அமைந்திருக்கிறது என்பது என்னுடைய
கருத்தாகும். ஆகவே அந்த முறையில் அமையாமல் இருப்பதற்கு
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் சுட்டிக் காட்ட
விரும்புகிறேன்.

இன்றைக்கு சினிமாத் தியேட்டர்களைப் பொறுத்தவரையில்
சட்டத்திலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

The Licensing Authority shall not grant a licence unless it is satisfied that the rules made under this Act have been substantially complied with and that adequate precautions have been taken in the place in respect of which the licence is to be granted to provide for the safety, convenience and comfort of the persons attending therein."

ஆனால் இன்றைக்கு பல தியேட்டர்களைப் பொறுத்த
வரையிலும் இப்படிப்பட்ட வசதிகள் இல்லை என்பதை நான்
சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பல தியேட்டர்களிலே
இன்றைக்கு கழிப்பிடங்கள் சரியான முறையில் சுத்தம் செய்யப்
பட்டு வைக்கப்படவில்லை. அதே மாதிரி சீட்டிங் அரேஞ்மெண்ட்
சரியான முறையில் இல்லை. எந்த முறையிலே, தியேட்டர்கள்
அமைய வேண்டுமோ, அந்த முறையிலே அமைக்கப்படாத
தியேட்டர்களுக்கு இன்றைக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டு
இருக்கிறது. எந்த முறையிலே இவைகளுக்கு லைசென்ஸ் கொடுக்
கப்பட்டிருக்கிறது என்பதை என்னால் புரிந்துக் கொள்ள முடிய
வில்லை. ஏன் என்றால், இன்றைக்கு இந்தத் துறையை ஓர்
அளவிற்கு வளர வைக்க வேண்டும், அவர்களை அதற்காக
என்கரேஜ் பண்ண வேண்டும் என்று சொல்லக் கூடிய
அதே நேரத்தில், அவர்கள் மக்களுக்கு வசதிகளைச் செய்து
கொடுத்து, இந்த சினிமாவை அவர்கள் பார்த்து ரசித்துக்
கொள்வதற்கு உள்ள வாய்ப்பை ஏற்படுத்தக் கூடிய முறையிலே
இன்றைக்கு விஷயங்கள் அமைய வேண்டும். தியேட்டர்களிலே
போய் உட்கார்ந்து, வசதியாக சினிமாவைப் பார்ப்பதற்கான
வசதி செய்யப்பட வேண்டும்.





ஆனால் பல தியேட்டர் சொந்தக்காரர்கள் ஒரு வியாபார
நோக்கத்தோடு பணம் கிடைக்கப்பெற வேண்டுமென்ற
எண்ணத்திலே அவர்கள் இன்றைக்கு அனுமதித்து இருக்கக்
கூடிய இடங்களுக்கு அப்பால் அந்த இடத்திலேயே நாற்காலி
களைப் போட்டு அதிகமான ஆட்களை அட்மிட் செய்யக் கூடிய
நிலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இப்படிப்
பட்ட தவறுகளை தடுக்க வேண்டிய முறையில் நாம் நடவடிக்கை
களை எடுக்க வேண்டும். இன்னொரு பக்கத்திலே, இந்த
'எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸ்-லேயிருந்து ஒரு பகுதி நக
ராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் கிடைக்கிறது. ஆனால்
நாம் என்ன பார்க்கிறோம் என்றால், சினிமா தியேட்டர்களுடைய
சொந்தக்காரர்கள் சில அதிகாரிகளோடு சேர்ந்து அவர்களுடைய
உதவியோடு இன்றைக்குத் திருட்டுத்தனமான கணக்குகளைக்
கொடுத்து நகராட்சிகளையும் பேரூராட்சிகளையும் ஏமாற்றிக்
கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு எடுத்துக் காட்டு சொல்
கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் பத்மநாபபுரம் முனிசி
பாலிட்டிக்கு உட்பட்ட தக்கலையில் ஒரு தியேட்டர் இருக்கிறது.
அந்த தியேட்டரிலே முனிசிபல் சேர்மன் சென்று பார்க்கக்கூடிய
நேரத்திலே ஒரு வாரத்திலே 17 காட்சிகளை அவர்கள் நடத்தி
இருக்கிறார்கள். ஆனால் முனிசிபாலிட்டிக்கு கொடுக்கப்பட்
டிருக்கிற கணக்கு 10 காட்சிகள் என்று மட்டும்தான் இருக்கிறது.
அப்படி இன்றைக்கு யதார்த்தமாக நகராட்சிகளுக்கு வரவேண்டிய
வருவாயைக் குறைப்பதற்கு, திருட்டுத்தனமான கணக்குகள்
கொடுக்கப்படுகின்றன. அங்கே போய் உள்ளே பார்த்தால்
இந்த முனிசிபாலிட்டியினுடைய முத்திரை போட்டு கொடுக்கப்
படாத டிக்கெட்டுகளை விநியோகம் செய்திருக்கிறார்கள். இப்
படிப்பட்ட தவறுகள் செய்யக் கூடியவர்கள், அவர்கள் ஒரு
உள் நோக்கத்தோடு அரசுக்கும், நகராட்சிக்கும் கிடைக்க
வேண்டிய வருவாயை மனப்பூர்வமாக சாப்பிட வேண்டுமென்று,
ஏப்பமிட வேண்டுமென்று செய்பவர்களை நிச்சயமாக தண்
டிப்பதற்கு இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட வேண்டுமானால்
இப்படி 3 தடவை என்ற அந்தத் திருத்தம் அவர்களுக்கு ஒரு
சாதகமான நிலையில் அமையும் என்று நான் சுட்டிக் காட்ட
விரும்புகிறேன்.

இன்னொன்று, நான் சுட்டிக் காட்ட விரும்புவது என்ன
வென்றால், தியேட்டர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கக்கூடிய
நேரத்திலே, அந்த லைசென்ஸிங் அத்தாரிட்டி சில குறைந்த
பட்ச விஷயங்களைப் பார்க்க வேண்டுமென்று 5 வது ஷரத்து
சுட்டிக் காட்டுகிறது. 'The suitability of the place where
cinema otograph exhibitions are proposed to be given....
இது சம்பந்தமாக நான் ஒன்றை அரசுக்கும், அமைச்சர்
அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன்.
எங்களுடைய மாவட்டத்தில், நாகர் கோவிலில் ஒரு மிகப் பெரிய
மருத்துவமனை இருக்கிறது. காதரின் ஹாஸ்பிடல் என்ற மருத்
துவமனை இருக்கிறது. இந்தியாவிலேயே பிரசித்திப் பெற்ற

மருத்துவமனை இது.பலவைத்திய வசதிகள்அங்கே இருக்கின்றன.
அதே நேரத்திலே என்ன பார்க்கிறோம் என்றால், அந்த
மருத்துவமனையைப் பொறுத்த அளவிலே, அதற்கு அருகாமை
யிலே தியேட்டர் கட்ட வேண்டுமென்று ஒருவர் விண்ணப்பம்
கொடுக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட கண்
கணிப்பாளர் அதுபோன்று லேண்ட் அட்மினிஸ்ட்ரேஷன் கமிஷ
னர் அனைவரும் அந்த இடத்தில், இப்படி ஒரு சிறப்பான
முறையில் நடக்கக்கூடிய மருத்துவமனைக்கு அருகாமையில்
ஒரு தியேட்டரைக் கட்டுவதற்கு அனுமதி வழங்குவது சரியல்ல
என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.. மத்திய அரசினுடைய
அமைச்சர் அவர்கள்கூட இந்த மருத்துவமனைக்குச் சென்று
பார்த்து, அந்த மருத்துவமனை நடைபெறும் முறையைப்
பாராட்டி இருக்கிறார்கள். ஆனால் எனக்கு கிடைத்திருக்கக்
கூடிய தகவல் என்னவென்றால், இங்கே மேல் மட்டத்திலே
அந்த இடத்திலே, அந்த மருத்துவமனைக்கு அருகாமையிலே
ஒரு தியேட்டர் கட்டுவதற்கு அனுமதி வழங்குவதற்கான நட
வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதை நிச்சயமாக suitability
of the place என்பதற்கு எதிரானவை என்பதை
நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அங்கே ஒரு தியேட்டர்
வருவது என்பது மருத்துவமனைக்குத் தேவையான அமைதியை
கெடுக்கக்கூடிய முறையிலே, விஷயங்கள் அமையும். ஆகவே,
அந்த முறையிலே ,அந்த இடத்தில் மட்டுமல்லாமல், எல்லா
இடங்களிலும் இப்படி சினிமா தியேட்டர்களை கட்டுவதற்கு
நாம் அனுமதி வழங்குவது சரியல்ல. அந்த இடத்திலே மட்டு
மல்ல, எந்த இடத்திலேயானாலும் சரி, மருத்துவமனைக்கு
அருகாமையில் தியேட்டர் கட்டுவது என்பது அந்த மருத்துவ
மனையினுடைய அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் என்பதை நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

தியேட்டர்களில் போய் டிக்கட் கேட்கக்கூடிய நேரத்தில்
அதற்கான வாய்ப்பு அந்த உரிமையாளர்களால் ஏற்படுத்திக்
கொடுக்க முடியவில்லை என்றால் எல்லா அரசியல் கட்சிகளைச்
சேர்ந்தவர்களும் அங்கே போய் தகராறு செய்வதாக மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நான் ஒன்றைச்
சுட்டிக் காட்ட விரும்புகிறேன், எங்களுடைய கட்சியைப்
பொறுத்த வரையில் நாங்கள் அந்த முறையில் ஒரு பழக்கத்தை
வைத்துக் கொள்ளவில்லை. அவர் அப்படி அனைத்துக் கட்சிகள்
என்று சொன்னது சரியல்ல. ஆகவே எந்த எந்த கட்சி அந்த
முறையில் செய்திருக்கிறார்கள் என்று அவர் சுட்டிக் காட்ட
வேண்டும். அப்படி சுட்டிக்காட்டினால் அதை திருத்துவதற்கு
அதன் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு எங்களுக்கு ஒரு சந்தர்ப்
பத்தை கொடுப்பதாக இருக்கும். ஆகவே அனைத்துக் கட்சிகள்
என்ற முறையில் அவர் சொன்னது சரியல்ல என்பதை இந்த
நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (மணியடிக்க
பட்டது) ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ளு



கிறேன். நகராட்சிகளுக்கு கொடுக்கக்கூடிய வகையில் கொஞ்சம்
உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு
முடித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, திரைப் படங்கள் முறைப்படுத்துதல் சம்பந்தப்
பட்ட சட்டத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல
விழைகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
இன்றைக்கு கொண்டு வந்திருப்பது சினிமா தியேட்டர் உரிமையாளர்களுக்கு
கொண்டு வந்திருப்பது சினிமா தியேட்டர் உரிமையை மீறி இன்றைக்கு அதிக
கொடுத்து இருக்கக்கூடிய உரிமையை மீறி இன்றைக்கு அதிக
கொடுத்து இருக்கக்கூடிய விற்கப்படுகிறது, அந்த தவறு 3 தடவை
மான டிக்கெட்டுகள் விற்கப்படுகிறது, அந்த தவறு 3 தடவை
மான டிக்கெட்டுகள் உரிமையை பறிக்க வேண்டும் என்று
செய்தால் அவர்களுடைய உரிமையை பறிக்க வேண்டும் என்று
செய்தால் அவர்களுடைய வந்திருக்கிறார்கள். நான் சொல்லிக் கொள்
அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் சொல்லிக் கொள்
அவர்கள் கொண்டு இன்றைக்கு சினிமா தியேட்டர்கள் என்பது
ளுவது எல்லாம், இன்றைக்கு சினிமா தியேட்டர்கள் என்பது
ளுவது எல்லாம், கிராமங்களில் கூட 10 பஞ்சாயத்துக்கு ஒரு
நகரத்தை விட்டு கிராமங்களில் கூட 10 பஞ்சாயத்துக்கு ஒரு
நகரத்தை விட்டு முறையில் வந்தாகிவிட்டது. படம்
தியேட்டர் என்ற முறையில் வந்தாகிவிட்டது. படம்
தியேட்டர் என்ற ஓடுகிறது. இரவு எல்லாம் ஓடுகிறது.
விடிய, விடிய ஓடுகிறது. இரவு எல்லாம் ஓடுகிறது.
விடிய, விடிய ரொம்ப பேர் வேலைக்குப் போகாமல்
பகலிலும் ஓடுகிறது. ரொம்ப பேர் வேலைக்குப் போகாமல்
பகலிலும் ஓடுகிறது. பக்கத்தில் க்யூ வரிசையில் நிற்கக்கூடிய
சினிமா தியேட்டர் பக்கத்தில் க்யூ வரிசையில் நிற்கக்கூடிய
சினிமா தியேட்டர் நெருங்கிக் கொண்டு இருக்கிறது.
ஒரு காலம் தமிழ்நாட்டில் நெருங்கிக் கொண்டு இருக்கிறது.
ஒரு காலம் தமிழ்நாட்டில் சினிமா தியேட்டரைப் பார்த்
ஆக இப்படி இருக்கும்போது சினிமா தியேட்டரைப் பார்த்
ஆக இப்படி இருக்கும்போது உள்ளே உட்கார முடிய
தால் பெரும்பாலான தியேட்டர்களில் உள்ளே உட்கார முடிய
தால் பெரும்பாலான போய்விட்டது. ஆனால் அதிகாரிகள்
வில்லை. தூசி படிந்து போய்விட்டது. ஆனால் அதிகாரிகள்
வில்லை. தூசி படிந்து விட்டுத்தான் வருகிறார்கள். அவர்கள்
எல்லாம் போய் பார்த்து விட்டுத்தான் வருகிறார்கள். அவர்கள்
எல்லாம் போய் பார்க்கிறார்கள், அதைப்பற்றி எங்களால்
எல்லாம் எப்படிப் பார்க்கிறார்கள், அதைப்பற்றி எங்களால்
ஒன்றும் சொல்ல முடியவில்லை.

இன்னும் ஒன்று சினிமா டிக்கெட்டுக்கள் 3 நாளைக்கு முன்பே
கொடுத்து முடித்து ஆகிவிட்டது என்று சொல்கிறார்கள். அப்புறம்
ஓடுகிற அன்று தியேட்டரில் பார்த்தால் வெளியே அந்த டிக்கெட்
டுகளை வைத்துக் கொண்டு 20 ரூபாய், 25 ரூபாய், 30 ரூபாய்
என்று விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இது தொடர்ந்து நடை
பெறுகிறது பல தியேட்டர்களில். ஆனால் இவைகள் எல்லாம்
எப்படி நடைபெறுகிறது. இதற்கு உரிமையாளர்கள் மட்டும்
பொறுப்பா? அதிகாரிகள் என்ன செய்துக் கொண்டிருக்கிறார்கள்.
என்னுடைய தாழ்மையான கருத்து என்ன என்று கேட்டால்
இவ்வளவு தியேட்டர்களுக்கு உரிமையை வழங்கும் போது
தியேட்டர்களை எப்படி வைத்துக் கொள்ளுவது, டிக்கெட்
கொடுக்கும்போது எப்படி கொடுப்பது, எப்படி முறைப்படுத்து
வது என்று எல்லாம் அதிகாரத்தைப் போட்டுக் கொடுத்து
இருக்கிறோம். அதிகாரிகள் எல்லாம் என்ன செய்கிறார்கள்
என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீவிரமாக
பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகள்
போட்டு இருக்கிற சட்டத்தை ஒழுங்காக நிறைவேற்றி முடிக்கும்
அளவுக்கு அவர்கள் பணிகள் இருந்தால் இந்த மாதிரி சட்டத்
திருத்தங்கள் எல்லாம் 1 ஆண்டுக்குள் 10 முறை திருத்தங்கள்

[திரு. பொ. உத்திராபதி] [1987 மே 11

கொண்டு வரவேண்டிய அவசியம் வராது என்பதுதான் என்
னுடைய அபிப்பிராயம். ஆகவே நான் சொல்லிக் கொள்ளுவது
எல்லாம் அந்த பேரூராட்சி என்று சொன்னால் அவர்களுக்கு
அந்த கேளிக்கை வரியில் ஒரு சதவீதம் போகிறது. நகராட்சி
என்று சொன்னால் அவர்களுக்கு போகிறது, கிராமத்தில் உள்ள
பஞ்சாயத்துக்களுக்கு இந்த நிதி போகிறது. அப்படி போகிற
பணத்தை பொது மக்களுக்குத்தான் பயன்படுத்துகிறோம்.
ஆனால் முறையாக அந்தப் பணம் அந்த வருமானம் சர்க்காருக்
குப் போய் சேருகிறதா என்று சொன்னால் இதைக் குறைப்
பதற்கு, உரிமையாளர்களுடைய வசதியை பெருக்குவதற்கு
இடையில் போகக்கூடிய அதிகாரிகள் அதில் எந்த அளவுக்குச்
சரியாக கவனம் செலுத்தாமல் போகிறார்கள் என்பது பற்றி
எல்லாம் எதிர் காலத்தில் பார்க்க வேண்டும். இப்போது
போட்டுள்ள 3 தடவை என்பதற்குப் பதிலாக 2 தடவை என்று
கொடுத்தால் போதும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.
இப்படி மக்களுடைய பணத்தை மோசடி செய்கிறார்கள்.
ஆனால் தியேட்டர்களும் நன்றாக இருப்பது இல்லை.
மக்களும் ஒழுங்காக படம் பார்க்க முடியவில்லை.
அந்த மாதிரி காரியங்களைச் செய்வதற்கு, என்னுடைய
அபிப்பிராயம் உரிமையாளர்கள் மட்டும் பொறுப்பு அல்ல.
அந்த தியேட்டரில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் மீது
பழியைப் போட்டு விட்டு இவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள்.
ஆகவே இவைகளைப் போக்க வேண்டும் என்றால் அரசு அதி
காரிகள் இதை முனைப்போடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் அவர்கள் பேசும்போது ஒன்றைச்
சொன்னார்கள். அனைத்துக் கட்சி தொண்டர்களும், தலைவர்
களும் தியேட்டர்களுக்குப் போய் அங்கே டிக்கட் கேட்கிற
போது அவர்கள் இல்லை என்றால் அங்கே கலகம்
செய்கிறார்கள் என்று அவர்கள் சொல்லியிருப்பது நல்லது அல்ல.
அதை சபாநாயகர் அவர்கள் அனைத்துக் கட்சி தொண்டர்கள்
சினிமா தியேட்டரில் இடம் கொடுக்காவிட்டால் கலகம் செய்
கிறார்கள் என்று சொன்ன வாசகத்தை நீக்குவது நன்றாக இருக்
கும். அது அவைக் குறிப்பில் இடம் பெறக் கூடாது. நான்
அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுவது எல்லாம், கம்யூனிஸ்டு
கட்சியைச் சேர்ந்தவர்கள் தொண்டர்கள் அல்லது தலைவர்கள்
இப்படி இடம் கொடுக்க வேண்டும் அப்படி கொடுக்கா
விட்டால் சினிமா ஓடாது என்று மிரட்டித் தான் சினிமா பார்க்க
வேண்டும் என்ற அவல நிலையில் நாங்கள் எல்லாம் அந்தக் கட்சி
யில் இல்லை. அப்படி ஏதாவது ஒன்றிரண்டு இடத்தில்
கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்திருக்கிறார்கள் என்று
அந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் என்றால்
உண்மையில் அந்தக் கட்சியில் அவர்கள் மேல் நடவடிக்கை
எடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆகவே அனைத்து
அரசியல் கட்சிகள் என்ற வாசகத்தை இந்த அவைக் குறிப்பில்
இருப்பது நல்லது அல்ல என்று சொல்லி அமர்கிறேன்.



1987 மே 11]

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கின்ற தாமரைக்கனி
அவர்கள் இடத்தில் இப்போது வேகன்ட் என்று போடப்
பட்டிருக்கிறது. அதைப்பற்றிய விவரத்தை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்
சர் அவர்கள் தாமரைக்கனியை மீண்டும் ஆளுங்கட்சியிலே
சேர்த்து விட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகையால்,
அவருக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இடம்
கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, திரை அரங்கு உரிமையை வழங்குகின்ற
சட்டத்தையும், அதேபோன்று திரையரங்குகளிலே அதிகமான
இருக்கைகளை அமைத்து, அதிலே வருவாயைத் திரையரங்கு
முதலாளிகள் அனுபவிப்பதாக இந்த ஒரு திருத்தச் சட்டத்தை
யும் இங்கே அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்
தத் திருத்தச் சட்டத்தை நாங்கள் ஏதோ திரை அரங்குகள்
முதலாளிகளுக்காக வாதாடுகிறோம் என்று நினைக்காமல் உள்ள
நிலைமையை நான் இங்கே விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.
திரையரங்கு முதலாளிகள், ஏதோ முதலாளி வர்க்கத்திற்காகப்
பேசுவதாக யாரும் நினைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கி
றேன்.

இன்றைய வீடியோ உலகத்தில் இந்த சினிமாத் திரையரங்கு
முதலாளிகள் எல்லாம் திரையரங்குகளைச் சார்ந்த சில முக்கியஸ்
தர்களையெல்லாம் கண்டு பேசிய நேரத்தில், சினிமாக் கொட்ட
கைகளை விட்டுவிட்டு, வேறு தொழிலுக்குப் போகலாம் என்று
நினைத்துக் கொண்டிருக்கிற ஒரு நிலைமை இருந்துகொண்டிருக்
கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். அதிலே டி.ஆர்.ஆர்.
போன்றவர்களையெல்லாம் அணுகியிருக்கிறேன். இதையெல்
லாம் சொல்வதற்குக் காரணம், வீடியோவை நாம் உலவ விட்டு
விட்டு, ஏதோ சினிமாக் கொட்டகை அரங்குகளிலே அதிகமான
இருக்கைகளை யாரோ ஒருவர், இருவர் செய்வதை வைத்து,
எல்லோரையும் சந்தேகக் கண்ணோடு பார்ப்பது நல்லதல்ல என்று
நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். கேரளாவில்
கொண்டுவந்ததைப்போல், இந்தத் திருத்தச் சட்டத்தையும்,
நினைத்துக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். கேர
ளாவில் வீடியோ சினிமா துவங்கப்பட்ட, அதை வெளியிட்ட நாளி
லிருந்து மூன்று மாதத்திற்கு அதை வீடியோ எடுக்கக் கூடாது
என்ற கடுமையான உத்தரவை போட்டிருக்கிறார்கள். அதைச்
செயல்முறையிலேயும் செய்து காட்டியிருக்கிறார்கள். அதைப்
போன்ற ஒரு நிலைமையை இங்கே உருவாக்கினால், நம்முடைய
உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, ரூ. 60 கோடி
வருமானம் அரசாங்கத்திற்கு வருகிறது என்று சொன்னால், நான்
இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அரசு இந்த வீடியோ
உலகத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்

[திரு. சோ. மா. இராமச்சந்திரன்] [1987 மே 11

கிறேன். குறிப்பாக சினிமாத் திரையரங்குகளில் அங்கொன்றும்,
இங்கொன்றுமாக தவறுகள் செய்வதை நான்
மறுப்பதற்கில்லை. இந்த மானியத்திலே பேசும்போது நம்மு
டைய ஆர்.எம்.வீ. அவர்கள்
இருந்த நேரத்தில், நான் குறிப்பிட்டுப் பேசினேன். இந்தத்
தவறுகள் நடப்பதற்குக் காரணம், இங்கே திரையரங்கத்திலே
'' காம்பவுண்டிங் டாக்சை '' இந்த அரசு கொண்டு வந்ததை,
முதலிலே இந்த அரசைப் பாராட்டினார்கள். இன்றைய தினம்
நான் கேட்டுக் கொள்வதெல்லாம், திரையரங்குகளுக்கு வந்து
நீங்கள் அவர்களைக் கேட்பீர்களேயானால், அவர்கள் இன்றைக்கு
மனம் நொந்து கொண்டிருக்கிறார்கள். 17 சதவீதம் என்று முத
லிலே இருந்தது இன்றைக்கு 18, 18½ சதவீதம் என்று இருந்து
கொண்டிருக்கிறது. நீங்கள் எவ்வளவு காம்பவுண்டிங் டாக்சை
அதிகப்படுத்துகிறீர்களோ, அந்த விகிதாச்சாரத்தை அதிகப்படுத்த
அதிகப்படுத்த அவர்கள் இந்த நிலைமையைக் கையாளத்தான்,
செய்வார்கள். இன்றைய தினம் திரை அரங்கு முதலாளிகளின்
நிலைமை இவ்வாறு இருந்து கொண்டிருக்கிறது.
அதனால்தான் நான் சொல்கிறேன். இந்த காம்பவுண்டிங்
டாக்சை, அந்த சதவீதத்தை நீங்கள் குறைப்பீர்
களேயானால், இந்த ரூ. 60 கோடிக்கு மேலே ரூ. 70 கோடி
கூட அரசுக்கு வரும் என்று உறுதியாக இந்த நேரத்தில் சொல்
லிக்கொள்ள விரும்புகிறேன். ஏன் என்று கேட்டால், அங்கே
யிருக்கின்ற இருக்கைகளை அகற்றிவிட்டு, அந்த காம்பவுண்டிங்
டாக்ஸ் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்த இருக்கை
களை எடுத்துவிட்டு, இன்றைக்குக் கொஞ்சம் அதிகமாக வரு
கின்ற நேரத்திலே, வேறு இருக்கைகளைபோடுவது என்பது
இயற்கையானதுதான். அவர்களுக்கு வருவாயைக்
குறைக்கின்ற காரணத்தினால்தான் இதை அவர்கள்
செய்கிறார்கள். ஆகவே, நீங்கள் காம்பவுண்டிங் டாக்ஸ் சத
வீதத்தை குறைப்பீர்களேயானால், அரசாங்கத்திற்கும் வருமானம்
அதிகமாகும். குறைத்த பெருமையும் உங்களைச் சாரும்
என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

ஆகவே, இப்போது நான் பேசுகிற நேரத்தில் நம்முடைய
கலைஞர் அவர்கள் அந்த நாளிலே சொன்னார்கள். திரையரங்கு
கள் எல்லாம் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்று— நான்
கூடச் சொல்கிறேன். இப்போதிருக்கிற திரையரங்கு முதலாளி
கள் எல்லாம், தேசியமயமாக்கி விட்டால் கூட பரவாயில்லை
என்று நினைத்துக் கொண்டிருக்கிற காலம் என்று சொல்லி,
இந்தச் சட்டத் திருத்தத்தில் நான் சொன்ன குறிப்பிட்ட சில
திருத்தங்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்றும்,
வீடியோ நிகழ்ச்சிகளை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும்,
வரிக் குறைப்பைக் கையாண்டால் இந்த நடவடிக்கையே வராது
என்றும் நான் இந்த நேரத்தில் சொல்லி விடைபெறுகிறேன்
நன்றி, வணக்கம்.



1987 மே 11]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வரப்பட்ட
திருத்தம், ஏற்கனவே திரையரங்குகளுக்கு அளிக்கப்பட்ட உரி
மத்தில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக நாற்காலி மற்
றும் இடவசதிகளைப் பெருக்குவதன் மூலமும், 1939 ஆம் ஆண்டு
கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் கீழ் வரி ஏய்த்த குற்றங்களுக்
காகவும், தடுப்பதற்காக தண்டனை வழங்குகிற முறையில் மூன்று
தடவை தொடர்ந்து, இந்தக் குற்றங்கள் புரியப்படுமானால் அவர்
களுடைய உரிமங்களை ரத்துச் செய்ய வேண்டும் என்ற நோக்
கத்தின் அடிப்படையில் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டு
இருக்கிறது.

பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இந்
தத் திருத்தச் சட்டத்தின் மீது சொல்கிறபோது, மாண்புமிகு
உறுப்பினர் பாரதியிலிருந்து, மாண்புமிகு சோ. மா. இராமச்
சந்திரன் வரையில் பல்வேறு கருத்துக்களைச் சொன்
னார்கள். ஆனால், இந்தத் திருத்தத்தின் நோக்கத்தைப்
பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன
தற்கும் இதற்கும் பொருத்தமாக இல்லை. ஆனால் திரையரங்கில்
தூய்மையான சுற்றுப்புறச் சூழல் இருக்க வேண்டும், அதிக ஒலி
இருந்து காதைக் கெடுக்கக்கூடாது, பிராணவாயு அதிகமாக இருக்க
வேண்டும்; ஆனால் கரியமிலவாயு அதிகமாக இருக்கிறது; திரை
யரங்கினுள்ளே டீ அதிகமாக விற்கிறார்கள் ; டிக்கெட்டை
ஏற்கனவே விற்றுவிட்டதாக திரைப்படத் துவக்கத்திலேயே
சொல்கிறார்கள் ; அதிக விலைக்கு விற்கிறார்கள் என்று
எல்லாம் சொன்னார்கள்.

இவைகளுக்கெல்லாம் ஏற்கனவே சம்பந்தப்பட்ட மாவட்ட
ஆட்சித் தலைவர் மற்றும் அவர் மேலுள்ள மேல்முறையாட்கள்
எல்லோரும் தண்டனை கொடுத்து வருகிறார்கள். எனக்குத்
தெரிந்த வரை தமிழ்நாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட திரை
யரங்குகள், மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன பல்வேறு குற்
றங்களுக்காக அவர்களுடைய உரிமங்கள் தற்காலிகமாக நிறுத்தி
வைக்கப்பட்டிருக்கின்றன.

முதல் தடவை குற்றம் செய்தால், முதல் தடவை குற்றம்
செய்திருக்கிறார்கள் ஆகவே, அதிக நாள் சஸ்பென்ட் பண்
ணாமல் கொஞ்ச நாள் போதும் என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்
கிறது. ஆனால், இரண்டாம் தடவை செய்தால் கருணை காட்
டுவதில்லை. மூன்றாம் தடவை செய்தால், கருணை காட்டு
வதற்கு கொஞ்சம்கூட வழி இல்லாமல் ரத்துச் செய்ய வேண்டும்
என்ற நோக்கத்தில்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்
டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் திரையரங்
கின் உரிமையாளர். அவர் இந்தச் சட்டத்தை மறுபரிசீலனை
செய்ய வேண்டும் என்று சொன்னார்கள்.

மறு பரிசீலனை செய்யக்கூடாது, மூன்று தடவை ஏன் கொடுக்க வேண்டும், ஒரு தடவை குற்றம் புரிந்தாலே போதும் என்று எதிர் வரிசையில்லே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். நடுநிலையில் நின்று இந்த அரசு மூன்று தடவை பார்த்து அதற்கு மேல், மூன்றாவது தடவையும் குற்றம் புரிவார்களானால், அந்த உரிமத்தை ரத்து செய்வது தான் சரியாக இருக்கும் என்ற முறையில் ரத்துச் செய்திருக்கிறார்கள்.

திரு. ஹேமச்சந்திரன் அவர்கள், அவருடைய தொகுதியில் ஒரு மருத்துவமனைக்குப் பக்கத்தில் ஒரு திரையரங்கிற்கு இந்த அரசு ஆட்சேபனை இல்லை என்ற சான்றிதழ் வழங்கியதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். உண்மையில், ஆட்சேபனை இல்லை என்ற சான்றிதழை இந்த அரசு வழங்கியிருக்கிறது. இந்தச் சட்டம், மருத்துவமனைக்குப் பக்கத்தில் திரையரங்குகள் இருக்கக்கூடாது என்று கொண்டு வரப்பட்ட காலத்தில் சினிமாக் கொட்டகைகள் கூடுமானவரையில், எல்லாம் நடமாடும் திரையரங்குகளாகவும், ஒரே சத்தம் காதை பிய்ப்பதுமாகவும் இருந்த காலம். இப்போது திரையரங்குகள் சத்தம் கொஞ்சம் கூடக் கேட்காமல், சத்தம் கேட்கிறதா என்று டாக்டர் ஸ்டெதாஸ்கோப் வைத்துப் பார்த்தால்தான் தெரியும். அப்படி சத்தம் இல்லாமல் '' ஏர் கண்டிஷன் '' மூலம் இருக்கிறபோது இந்த முறை அனுஷ்டிக்கப்படவேண்டுமா என்பது தான் அரசினுடைய கொள்கை ஆகும். அந்த அடிப்படையில் அவர் தொகுதியிலுள்ள அந்தத் திரையரங்கிற்கு—அது '' ஏர் கண்டிஷன் தியேட்டர் '' ஆகும்— அதனால், அரசு '' நோ அப்ஜெக்ஷன் '' சர்ட்டிபிகேட் வழங்கியது. அதை அடுத்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து தடையாணை வழங்கினார்கள். அந்தத் தடையாணை ரத்துச் செய்யப்பட்டு, இப்போது இந்த அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டு வருகிறது.

' காம்பவுண்ட் டாக்ஸைப் ' பற்றி சோ. மா. இராமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள். காம்பவுண்ட் டாக்ஸ் இருப்பதனால் அவர்கள் ஏதோ வேண்டாம் என்று உரிமையாளர்கள் சொல்வதாகச் சொல்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில், அண்மையில், நடைபெற்ற தமிழ்நாடு திரையரங்கு உரிமையாளர்கள் கூட்டத்தில் நான் கலந்துகொண்டேன். அவர்கள் திரையரங்குகளை தேசியமயமாக்க வேண்டும் என்ற அந்தக் கருத்து அவர்கள் இதயத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி எனக்குத் தெரியவில்லை. இந்தச் சர்க்கார் வரி போட்டிருக்கிறது எனறு சொல்கிறார்கள். வரி போடுகிறது ; நியாயமாகப் பார்த்துத்தான் போடுகிறோம். தேசியமயமாக்குவது என்பது நல்ல கொள்கை அல்ல. நானே நகரசபைத் தலைவராக இருந்த போது பேரறிஞர் அண்ணா அவர்கள் நகரசபை எல்லாம் தங்களுடைய எல்லைக்குள் உள்ள திரையரங்குகளை தேசியமயமாக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் நகரசபைத் தலைவரான பிறகு என்னை அழைத்து கருத்து கேட்டபோது ''ஒரு பைசா கூடசெலவில்லாமல் நகராட்சிகளுக்கும், பேரூராட்சி





களுக்கும், மாநகராட்சிகளுக்கும் வருமானம் தருகிற இந்த அருமையான திரையரங்குகள், தனியார்களின் கையில் இருப்பதே நல்லது. இதை நாம் எடுத்துக் கொண்டுவிடுவோமாலால்—நகராட்சிகளே எடுத்து நடத்துமானால் நகராட்சியில் உள்ளவர்களும் அங்கே பணியாற்றுகிறவர்களின் பந்துக்களும் சொந்தக்காரர்களும் தான் திரை அரங்கில் இருப்பார்கள் '' என்று சொன்னதால் அவரும் அதைக் கைவிட்டுவிட்டார்கள். இது நல்ல கொள்கை அல்ல என்பதால்தான் அவருடைய காலத்திலேயே இது செய்யபடவில்லை. எனவே இப்படி செலவில்லாமல் அரசாங்கத்திற்கு அதிக வருமானத்தைத் தேடித்தருகிற திரையரங்குகளை நல்லமுறையில் பாதுகாப்போம், காப்பாற்றுவோம் என்று சொல்லிக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் திரையரங்குகளுக்குள் நல்ல குளிர் சாதன வசதி வேண்டும். அதிகமான பிராணவாயு இருக்கும் படி பார்த்துக் கொள்ள வேண்டும். உரிய விலையில் டிக்கெட் கிடைக்க வேண்டும். மற்றும் புதிய படங்கள் திரையிடப்படுகிற நாட்களில் டிக்கெட்டுகளில் ஒரு குறிப்பிட்ட சதவீதமாவது உரிய விலையில் கொட்டகைகளில் வழங்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கைகளை எல்லாம் மனதில் கொண்டு அரசு தக்க அதிகாரிகளின் மூலமாக நடவடிக்கை எடுக்கும் என்று கூறிக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்ட முன் வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

**திரு. அ. மலர்மன்னன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் உரையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் திரையரங்குகளை தேசிய மயமாக்கும் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னார்கள். அவர் எப்போது, எங்கே சொன்னார்கள்? தேசியமயமாக்கும் கொள்கை என்பது நாம் ஒன்றாக இருந்த நாளிலிருந்து வற்புறுத்தப்பட்ட ஒரு கொள்கையாகும். அதுதான் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்து. எனவே அந்தக் கருத்தை அண்ணா அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். எனவே அவர் எப்போது சொன்னார், எங்கே சொன்னார் என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். அவர் இன்றைய தினம் இல்லை. உண்மையிலேயே பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் கொள்கையை மனமார அமுல்படுத்த வேண்டுமென்று விரும்பியிருந்தால் அவருடைய ஆட்சிக் காலத்திலேயே கொண்டு வந்திருப்பார். கொண்டுவரவில்லை என்பதே அதற்குக் காரணம்—சான்று.

**திரு. சோ. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீடியோ பற்றி இந்தத் திருத்தச் சட்டத்தின்போது குறிப்பிடுவார்கள் என்று முக்கியமாக எதிர்பார்த்தேன். எப்படி

[திரு. சோ. மா. இராமச்சந்திரன்] [1987 மே 11

யாவது இந்தச் சட்டத்தில் அதை நுழைக்க வேண்டுமென்று நான்
கேட்டுக்கொண்டேன். அதன் காரணமாகத்தான் திரையரங்
கங்களே பாதிக்கப்பட்டிருக்கின்றன. தவறுகள் நடக்கின்றன.
அதன் காரணமாகத்தான் நான் அதை இங்கே குறிப்பிட்டேன்.
ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் குறிப்பாக
விட்டுவிட்டார்கள். எனவே அதை இப்போதாவது சேர்க்கு
மாறு நான் கேட்டுக் கொள்வதோடு அமைச்சர் அவர்கள் அதைச்
செய்ய முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, வீடியோ கேசட்டுகள் கள்ளத்தன
மாகத் தயாரிக்கப்படுவதை அரசு கடுமையாகக் கண்டிப்பதுடன்
அதைக் கடுமையாகத் தண்டிக்க நடவடிக்கையும் எடுத்து வரு
கிறது. ஆனால் நான் ஏற்கெனவே சொன்னபடி திரைப்படம்
எடுப்பவர்கள் — தயாரிப்பவர்கள் — அதை இந்தியாவில்
திரையிடுவதற்கு முன்னதாகவே அயல் நாடுகளுக்கு விற்றுவிடு
கிற முறை இருக்கிற காரணத்தால் இங்கே திரையிடப்படுவதற்கு
3 நாட்களுக்கு முன்னாலே அவர்களுக்கு விற்றுவிடுகிற நிலை
இருக்கிறது. இதன் காரணமாக அந்தத் திரைப்படம் இங்கே
வெளியிடப்படுவதற்கு முன்னாலே சிங்கப்பூரிலும் அரபு நாடுகளி
லிருந்தும் மிக அழகாக கேசட்டாக வண்ணப்படங்களிலே, அது
வும் ஒரிஜனலைவிட மிக அழகாக எடுக்கப்பட்டுவிடுகிறது. அதன்
காரணமாகத்தான் இந்த நிலைமை ஏற்படுகிறது. எனவே திரைப்
படம் எடுப்பவர்கள், திரைப்படம் விநியோகிப்பவர்கள், வீடியோ
சம்பந்தப்பட்டவர்கள் ஆகியோரைக் கொண்ட கலப்பு ஆலோ
சனைக் கூட்டத்தில் இதைப்பற்றி விவாதித்து முடிவு செய்யலாம்.
அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்போது முடி
வெடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** மாண்புமிகு பேரவையின்
தலைநாயகர் அவர்களே, திரைப்படங்கள் (முறைப்படுத்தல்)
திருத்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் திரைப்படத்
துறையில் கேளிக்கை வரியால் கிடைக்கிற வருமானத்தில் பெருந்
தலைவர் திரு. காமராசர் அவர்களின் ஆட்சியில் 90 விழுக்காடு
பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் அளித்து வந்தார்கள்.
ஆனால் நம்முடைய அரசு இப்போது 30 சதவீதம் அளவுக்குத்
தான் அளிக்கிறது என்று நிதி நிலை அறிக்கையின்போது குறிப்
பிட்டிருக்கிறார்கள். எனவே உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக
மாக அளிக்கிற வகையில் 70 சதவீதம் அளவுக்காவது அளிப்பதற்கு
அரசு வழிவகை செய்யுமா ? மேலும் அது 70 சதவீதமா அல்லது
30 சதவீதமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இது கொள்கை சம்பந்தமான
பிரச்சினை. மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்
களும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் கலந்து பேசி
சொல்ல வேண்டிய பதிலாகும் இது.



1987 மே 11]

**திரு. ஆர். தியாகராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, திரைப்படங்களில் காட்டக்கூடிய தவறான காட்சி
களைப்பற்றி நான் அன்றைக்கே கூட பேசும்போது சொன்னேன்.
அதைக் குறித்து இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்பதையும் சொன்னேன். அவர்கள் எடுக்கிற
காட்சிகளைப் பார்த்து—கேலிச் சித்திரங்களைப் பார்த்து—மற்ற
வர்கள் தவறாக நினைக்கிற நிலை இருக்கிறது. அதிலும்
குறிப்பாக அதிகாரத்தில் உள்ளவர்களைப் பற்றிதான் அவர்கள்
கேலி பண்ணுகிறார்கள். அதையெல்லாம் மக்கள் பார்க்கிற
போது அவர்கள் மனதில் எந்த அளவுக்குக் கேவலமாக நினைப்பு
வரும் என்பது அமைச்சர் அவர்களுக்கே தெரியும். திரைப்படங்
களுக்கு லைசென்ஸ் கொடுப்பது அரசாங்கம்தான். சினிமா
கொட்டகைக்களுக்கான கன்ட்ரோல் முழுவதும் உங்களிடம்தான்
இருக்கிறது. எனவே அம்மாதிரியான படங்களை திரையிடக்
கூடாது என்று நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே அதை
யொட்டி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்
தின் அடிப்படையில் தான் காலையில் ஒரு சட்ட முன்வடிவு
இங்கே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-40).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள
கேள்வி :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்
படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை
சட்டமுன்வடிவு எண். 17/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்
பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு
எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று
நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின்
முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர்
அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்
படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை
சட்ட முன்வடிவு எண். 17/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்
வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## 1. அறிவிப்புகள்.

(ஏ) (i) திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன் வடிவு, 1987 (அ. இ.)

(ii) தமிழ்நாடு விளம்பரம் பொருள்களின் கட்டாயத் தணிக்கைச் சட்டமுன் வடிவு, 1987 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

தமிழ்நாடு 1987ஆம் ஆண்டு திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன் வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பொருள்களின் கட்டாயத் தணிக்கைச் சட்டமுன் வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

இரண்டு சட்டமுன்வடிவுகளைப் பற்றியும் சேர்த்தே பேசி விடலாம். ஆனால் தனித்தனியாக ஓட்டுக்கு விடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 2. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(ஓ) திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன் வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன் வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்டமுன் வடிவு, மற்றும் 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பொருள்களின் கட்டாயத் தணிக்கைச் சட்டமுன்வடிவு ஆகிய இந்த இரண்டு சட்ட

*1987 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



முன் வடிவுகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே இந்த இரண்டு மசோதாக்கள் மீது மொத்தமாக கருத்துக்களைச் சொல்லிவிடுவது சரியென்று நான் கருதுகிறேன்.

போஸ்டராக இருந்தாலும், ஸ்டில் போட்டோவாக இருந்தாலும், போட்டோவாக இருந்தாலும், ஓவியமாக இருந்தாலும், விளம்பரச் ஸ்லைடாக இருந்தாலும், இவைகள் எல்லாம் வன்முறையைத் தூண்டுவதாக இருக்க கூடாது, மதம், இனம் மொழி, வட்டார மக்கள் சாதியைப் பின்பற்றும் மக்களிடையே ஒரு வெறுப்புணர்ச்சியைத் தூண்டக் கூடியதாக, அமைதியின்மையை உருவாக்கக் கூடியதாக இருக்ககூடாது. அருவெறுக்கத்தக்கதாக இருக்கக் கூடாது, ஆபாசமாக இருக்கக் கூடாது. ஒழுக்கக் கேட்டை உருவாக்குவதாக இருக்கக் கூடாது, சிற்றின்பத்தை உருவாக்குவதாக இருக்கக் கூடாது. பெண்களை ஆபாசப் படுத்துவதாக இருக்கக் கூடாது என்று ஒரு மசோதாவிலே சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னொரு மசோதாவில் திரைப்படங்களைப் பொறுத்த வரையில் ஆபாசமாக, அருவறுக்கத்தக்கதாக இருக்கக் கூடாது, வன்முறையைத் தூண்டுவதாக, சிற்றின்பத்தைத் தூண்டுவதாக இருக்கக் கூடாது என்பதற்காக அவற்றைத் தடுக்க, அவைகள் தட்டிகளாக இருந்தாலும், போஸ்டர்களாக இருந்தாலும், திரைப்பட விளம்பரங்களாக இருந்தாலும், ஸ்லைடாக இருந்தாலும், இவைகளையெல்லாம் தணிக்கை செய்ய அரசாங்கம் ஒரு தணிக்கை குழுவைப் போடுகிறது, அதற்கு உறுப்பினர்களை நியமிக்கிறது. அதற்கு ஒரு தலைவரை போடுகிறது. அவர்களுக்கு அரசாங்கம் சம்பளம் கொடுக்கிறது. அரசாங்கம் போடுகிற உறுப்பினர்களும், தலைவர்களும் இவைகள் ஆபாசமானதுதானா, அருவறுக்கத்தக்கதுதானா சிற்றின்பத்தைத் தூண்டுவதுதானா வன்முறையைத் தூண்டுவதுதானா என்ற மிகப் பெரிய ஆராய்ச்சியைச் செய்து ஒரு சர்டிபிகேட் கொடுத்தால்தான் போஸ்டர்களை ஒட்ட முடியும், ஸ்லைடுகளை காட்ட முடியும், திரைப்பட விளம்பரங்களை வெளியிட முடியும். திரைப்பட விளம்பரங்களைப் பொறுத்த வரையில் இந்த மாதிரி சர்டிபிகேட் வாங்காமல் விளம்பரங்கள் ஒட்டப்பட்டால் அவர்களுக்கு 6 மாதம் ஜெயில், ஆயிரம் ரூபாய் அபராதம், திரைப்படங்கள் அல்லது போஸ்டர்கள், ஸ்டில் போட்டோ, போட்டோ, ஓவியம், விளம்பரத்தட்டிகள் ஆகியவற்றுக்கு சர்டிபிகேட் சென்சார் போர்டிலிருந்து வாங்காமல் வெளியிட்டால் அதற்கும் தண்டனை கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக அவர்களுக்கு மூன்று ஆண்டுக் காலம் என்று தண்டனை கொடுத்திருக்கிறார்கள்.

எனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலம் நான் தெரிவிக்க விரும்புவது இன்றைக்கு ஜனநாயகத்திற்கு மிகப் பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இதிலே ரொம்ப நுணுக்கமாக ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மே 11

பத்திரிகைகள், வார இதழ்களாக இருந்தாலும் சரி
அன்றாடப் பத்திரிகைகளாக இருந்தாலும சரி, கட்டுரை
களாக இருந்தாலும், படங்களாக இருந்தாலும் கார்ட்டூன்
களாக இருந்தாலும், ஓவியங்களாக இருந்தாலும், இவ்வகள்
ஆபாசத்தைத் தூண்டுகின்றன, அருவறுக்கதத்க்கதாக இருக்
கின்றன, ஆளுங் கட்சி, எதிர்க் கட்சிகளுக்கிடையே வன்முறை
யைத் தூண்டுவதாக இருக்கின்றன என்று சொல்லி, ஒட்டுமொத்த
மாக இந்த அரசாங்கத்தைப் பற்றி அல்லது ஆளுங் கட்சிக்காரர்
கள் அல்லது மற்றவர்கள் செய்யும் தவறுகளைப் பற்றி பத்திரிகை
கள் எழுதினால், கார்ட்டூன்கள் போட்டால், அவர்கள் ஜெயி
லுக்குப் போக வேண்டுமென்று சொல்லக்கூடிய மிகப் பெரிய
அபாயம் இந்தச் சட்டமுன் வடிவிலே இருக்கிறது. இந்த அடிப்
படையிலேதான் ஆனந்தவிகடன் பத்திரிகை ஆசிரியர் உள்ளே
போக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மாலை முரசு பத்
திரிகை ஆசிரியர் உள்ளே போக வேண்டிய நிலைமை ஏற்பட்டது.
அரசாங்கத்தை விமர்சிக்க எல்லாப் பத்திரிகைகளுக்கும் அடிப்
படை உரிமை உண்டு. ஆளுங் கட்சிக்காரர்களை விமர்சிக்க
எல்லோருக்கும் உரிமையுண்டு. தவறு செய்பவர்கள் யாராக
இருந்தாலும், அவர்களைப் பற்றி விமர்சிக்க உரிமை
அவர்களுக்கு உண்டு. ஆனால் தவறாக அவர்கள் விமர்
சித்தால், அந்தப் பத்திரிகைகள் மீது வழக்கு போடலாம். எனவே
இந்த அடிப்படை உரிமையைப் பறிக்கக் கூடிய சட்டம் இது.
ஜனநாயக விரோதச் சட்டம், கருப்புச் சட்டம் என்பதைத் தங்
கள் மூலமாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டு
வருகிறேன்.

அடுத்து ஒரு முக்கியமானதொரு விஷயத்தை இங்கே நினைவு
படுத்த விரும்புகிறேன். இங்கே ஆபாசம் என்று ஒரு வார்த்தை
சொல்லப்பட்டிருக்கிறது. இதை யார் தீர்மானிப்பது? அரசாங்
கம் போடுகிற சென்சார் போர்ட். எது ஆபாசம்? இது வரைக்
கும் வரையறுக்கப்பட்டிருக்கிறதா? பல சிற்பங்கள் இருக்கின்றன.
அந்தச் சிற்பங்களை ஆபாசம் என்று நாம் சொல்ல முடியாது.
அவை ஆபாசம் என்றால், அந்தச் சிற்பங்களை எல்லாம்
எடுத்துவிட வேண்டுமென்று சொல்லும்படியான நிலைமை
ஏற்படும். அண்ணா அவர்களே இந்தப் பேரவையில் சொல்லி
யிருக்கிறார்கள், ஒருவருக்கு ஆபாசமாக இருப்பது மற்றொரு
வருக்கு ஆபாசமாக இருக்காது என்று. எனவே சென்சார் போர்ட்
அதிகாரிகள், உங்களால் நியமிக்கப்படுகிறவர்கள், எதை ஆபாசம்
என்று சொல்லுகிறார்களோ, அது ஆபாசம். எதை ஆபாசம்
இல்லை என்று சொல்லுகிறார்களோ அது ஆபாசமில்லை என்ற
நிலைமை ஏற்படுகிறது. ஆனால் மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, நீங்கள் ஒரு வழக்கறிஞர் என்ற முறையில், லேப்ஸ்
ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். போஸ்
டர்ஸ், ஸ்லைட்ஸ், திரைப்பட போஸ்டர்ஸ் இவைகள் ஆபாசமாக
அருவறுக்கத்தக்கதாக இருந்தால், சென்சார் போர்ட் சர்ட்டிபிகேட்
வாங்கி, தடுத்து விட்டால், போட முடியாது. சர்ட்டிபிகேட்
கொடுத்தால், போடலாம், இல்லையென்றால் ஜெயில். கைக்குக்



1987 மே 11] [திரு. அ. ரகுமான்கான் ]

கொள்கிறேன். நான் யாரையும் புண்படுத்த வேண்டுமென்று
சொல்லவில்லை. இன்றைக்கு பல நடிகைகள் இருக்கிறார்கள்.
அவர்கள் மீது எனக்குத் தனிப்பட்ட முறையில் எந்தவித தாவாக
களும் இல்லை. நடிகைகள் ஆபாசமாக டிரெஸ் செய்கிறார்
கள். இன்னும் சொல்லப்பேரனால் கிளறிவிடும் அளவுக்கு மேக்கப்
செய்கிறார்கள். நான் கேட்கிறேன். இந்தச் சட்டப்படி
அந்தமாதிரி காரியத்தைச் செய்தால் தப்பு, தண்டனைக்குரியது.
அப்படியானால் நடிகை ஆபாசமாக இருக்கிறாரா, இல்லையா
என்பதற்கு எந்த சென்சார் போர்ட் சர்ட்டிபிகேட் கொடுக்கும்?
அப்படி ஆபாசமாக இருக்கும் நடிகையைப் பார்த்தால்,
சென்சார் போர்ட் உறுப்பினர்கள் நிச்சயமாக சர்ட்டிபிகேட்
கொடுப்பார்கள் என்று நம்புகிறீர்களா? எனவே அதிலே பாரபட்ச
மாக நடக்கக் கூடிய அபாயம் இருக்கிறது. இன்றைக்கு ஆபாசமான
பாடல்கள் இருக்கின்றன. நாகரீகம் கருதி அந்தப் பாடல்களை
எல்லாம் நான் இங்கே சொல்லிக் காட்ட விரும்பவில்லை. சினி
மாக்களிலே வரும் பாடல்களிலே எவ்வளவோ ஆபாசம் இருக்
கிறது. திரைப் படங்களில் வரும் கதைகளில் ஆபாசம் இருக்
கிறது. திரைப்படங்களில் வரும் நடனங்களில் ஆபாசம் இருக்
கிறது. இதையெல்லாம் உங்களுடைய சென்சார் போர்ட் எப்படிக்
கட்டுப்படுத்தும்? உறுப்பினர்கள் எப்படி சர்ட்டிபிகேட் கொடுப்
பார்கள்? அவர்கள் மீது என்ன நடவடிக்கை? அப்படியானால்,
பாடலின் மூலம் ஆபாசம் வரலாமா? நடனம் மூலம் வரலாமா?
நான் கேட்க விரும்புவது, அதற்கு என்ன வழி என்பதை எண்ணிப்
பார்க்க வேண்டும். இன்னும் ஒன்றையும் தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன். ஒரு எதிர் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு போஸ்
டரைக்கூட சென்சார் போர்டில் கொடுத்து, சர்ட்டிபிகேட் வாங்க
வேண்டியிருக்கிறது. காரணம் என்ன என்று கேட்டால்,
அவர்கள் ஒட்டுகிற போஸ்டரில், வன்முறையைத் தூண்டுகிறார்
கள், மொழி உணர்வைத் தூண்டுகிறார்கள் என்று சொல்லலாம்.
இந்தி ஆதிக்க எதிர்ப்பு போஸ்டர் ஒட்டினால், இந்தி பேசும்
மக்கள், இந்தி பேசாத மக்களிடத்திலே எதிர்ப்பு உணர்வைத்
தூண்டுகிறது என்று அந்த போஸ்டர்களை ஒட்டாதே என்று
சொல்லிவிடலாம். ஈழப் போராளி போஸ்டர் ஒட்டினால், இது
வன்முறையைத் தூண்டுகிறது, எனவே ஈழப் போராளிகளே,
போஸ்டர்கள் ஒட்டாதே என்று தடுத்து விட முடியும். இதைப்
போன்ற அபாயம் இருக்கிறது. எதிர்க்கட்சிகள் தங்கள்
போஸ்டர்களைக் கூட சர்க்கார் குழுவிடம் காட்டி, சர்ட்டிபிகேட்
வாங்கி, ஒட்ட வேண்டும். இல்லையென்றால் ஜெயிலுக்குப்
போக வேண்டுமென்று சொல்லி, நடவடிக்கை எடுக்கும் அபாயம்
இருக்கிறது. தந்தை பெரியாருடைய கொள்கையை போஸ்ட
ரில் போட வேண்டுமானால், அது ஆஸ்திக வாதிகளுக்கு விரோத
மான கொள்கை, மதவாதிகளுக்கிடையே வெறுப்புணர்ச்சியைத்
தூண்டுகிறது என்று சொல்லி, ஐயாவின் கொள்கைகளுக்கே
ஆபத்தைஉருவாக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது.

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மே 11

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

(முற்பகல் 11–50)

இதற்கு இடையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை, தலைவர் அவர்கள் மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். முன்பு சிவாஜி கணேசன் நடித்தார், ஜெமினி கணேசன் நடித்தார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நடித்திருக்கிறார்கள். அது போல அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் போன்றவர்கள் நடித்தார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்கூட நடித்துக்கொண்டு இருக்கின்றார்கள். அதற்கு நான் சொல்ல விரும்புவது அந்த போஸ்ட்டர்களில் ஆபாசம் இருந்தால், அது ஒட்டப்படுமானால் நடவடிக்கை எடுப்பார்களா ? **பாடல்களில் ஆபாசம் இருந்தால் நடவடிக்கை உண்டா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். காரணம் இதற்கு வேண்டுமானால் தங்கள் அனுமதியோடு நான் ஆதாரம் தரத் தயாராக இருக்கிறேன்.** என்பதை ஆதாரத்தோடு நான் கொண்டு வந்திருக்கிறேன். இது குறித்து இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆபாசம் பற்றி என்ன ஆபாசம், எது ஆபாசம் என்பது பற்றி அதிகாரப்பூர்வமாக நான் ஒரு திருத்தத்தை இங்கே கொண்டுவர இருக்கிறேன். இந்த சட்டமே வர இருக்கும் முன்பு ஆபாசமாக நடித்த படங்களைப் பற்றியும், நடிகைகளைப் பற்றியும் பேசுவது சரியல்ல. அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தப் பகுதியை நீக்கி விடலாம். சட்டமே, அதை நீக்க வேண்டும் என்பதற்காகத் தான் வருகிறது. அது நீக்கப்படுமா இது நீக்க ஒதுக்கப்படுமா என்று கேட்க வேண்டாம். சட்டம் வருகிறது. அதற்கான ஆலோசனை சொல்ல வேண்டும். இன்டிவிடுயல்ஸ் பற்றி சொல்ல வேண்டாம். அந்தப் பகுதியை** என்ற அந்த பகுதியை நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவது, ஆபாசம் அருவறுக்கத் தகுந்ததாக திரைப்படங்கள் போஸ்டர்கள் இருக்கக் கூடாது. பத்திரிகைகளிலே புகைப்படங்களோ, ஸ்டில்களோ இருக்கக்கூடாது என்பது இந்தச் சட்டத்தின் கொள்கை. நீங்கள் கொண்டுவரக்கூடிய சட்டத்தினுடைய கொள்கையில் ஆபாசம் எது என்பதுதான் தீர்மானிக்கப்படவில்லை. அதை அந்த சென்சார் போர்டு கமிட்டி தான் தீர்மானம் செய்யும் என்று சட்டத்திலே இருக்கிறது. நான் கேட்ப

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1987 மே 11] [திரு. அ. ரகுமான்கான்]

தெல்லாம் ஏற்கெனவே சினிமா போஸ்டர்கள் மற்ற போஸ்டர்கள் எல்லாம் இருக்கின்றன. என்னுடைய பாயின்ட் ஆஃப் வியூவிலே, அதாவது என்னுடைய பார்வையிலே ஒன்று ஆபாசம், சிலருடைய பார்வையிலே இன்னொன்று ஆபாசம் என்று இருக்கும். நான் கேட்க விரும்புவது இந்த போஸ்டர் ஆபாசமா இல்லையா என்பது. இந்த போஸ்ட்டர் ஒட்டப்பட்டால், முதலமைச்சரும் மற்றவர்களும் நடித்த படங்களில் ஆபாசம் இருக்குமானால் நான் யாரையும் புண்படுத்த விரும்பவில்லை, அப்படி இருக்குமானால், அரசாங்கம் வேறுபாடு இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். நியாயத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன்.

ஒரு சுவிட்சர்லாந்து பெண்மணி திருவண்ணாமலையில் ஒரு பஸ் ஏற்றிவிட்ட சாதாரண சைக்கிள் ரிக்ஷா ஓட்டும் தொண்டனுக்கு அவர்கள் நாட்டு வழக்கப்படி முத்தம் கொடுத்துவிட்டார். சட்டப்படி நடவடிக்கை எடுத்து இருக்கின்றார்கள் நம்முடைய போலீஸ்காரர்கள். ஆனால், ஒரு நடிகை ஆயிரக்கணக்கான மக்கள் இருக்கக்கூடிய இடத்திலே ஒரு முக்கியமானவருக்கு முத்தம் கொடுக்கிறார். போலீஸ் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறது. எதற்குச் சொல்கிறேன் என்றால் ஒரு இன்ஸ்பெக்டர் தியேட்டருக்குள் போய் ஒரு டாக்குமெண்டை எடுக்கலாம். தியேட்டரிலே போய் ஸ்லைட்ஸ் ஆபாசமாக இருக்கிறதா என்று பார்க்கலாம். ஆனால், ஆளுங்கட்சிக்காரர்கள் என்று சொன்னால் ஒரு நடைமுறை. எதிர்க்கட்சிக்காரர்கள் பேப்டர் வைத்திருந்தால், எதிர்க்கட்சிக்காரர்கள் படம் எடுத்திருந்தால், எதிர்க்கட்சியில்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டத்தில் ஆலோசனை சொல்ல வேண்டும். ஹைபோதட்டிக்கல்-ஆக கேட்டுக்கொண்டே போனால் எப்படி சரியாக வரும். பில்லிலே ஆலோசனை சொல்லுங்கள். அதற்கு என்ன '' கைட்லைன்ஸ் '' என்று சொன்னால், பரவாயில்லை. நீங்களாக நினைத்துக் கொண்டு கேள்விகள் கேட்கிறீர்கள். நேரம் போகிறது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வது எது ஆபாசம் என்பது தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம். சென்சார் போர்டுக்கு என்று கைட்லைன்ஸ் உண்டா ? அதைப் பற்றி அண்ணா அவர்களே சொல்லி இருக்கின்றார்கள். '' யெட், இட் இஸ் நாட் டிபைன்ட் '' என்று. ஆபாச தடைச் சட்டங்கள் எல்லாம் இருக்கிறது. எனவே, இப்படி ஒரு சட்டம் கொண்டுவருவது, ஆளுகின்ற கட்சி அரசாங்கம் எதிர்கட்சியைச் சார்ந்தவர்களுக்கு திரை உலகிலே படங்கள் எடுக்கின்றவர்களுக்கு சிரமங்கள் கொடுக்கவும் பத்திரிகைகளை இன்றைக்கு அடக்குமுறைக்குள்ளாக்கவும் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கவும் மாறுவடிவத்திலே இந்தச் சட்டம் வருகிறது.

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மே 11

ஜனநாயகத்தைப் படுகொலை செய்ய வருகிறது. இன்று துக்க
தினம். ஜனநாயகப் படுகொலை நாளாகும். எங்கள் கட்சியின்
சார்பாக இந்த சட்டத்தை கடுமையாக எதிர்க்கிறேன்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு
வந்திருக்கின்ற இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளையும் மகிழ்ச்சி
யோடு நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த
இரண்டு சட்டங்களிலும் வரவேற்கக் கூடிய அம்சங்கள் நிறைய
இருக்கின்றன. நான் மகிழ்ச்சியோடு வரவேற்க ஒரு காரணம்
இருக்கிறது. இந்த மன்றத்திலே 1985 ஜூலை மாதத்தில் விளம்
பரங்களை கையகப்படுத்துதல் சட்டத்தின் மீது பேசுகின்ற
போது இப்படி ஆபாசம் கலக்காமல் இருப்பதற்காக அட்வர்
டைஸ்மென்ட் சென்சார் போர்ட் என்ற ஒரு அமைப்பை அமைத்
தால் [illegible]ன்றாக இருக்கும் என்ற கருத்தை அன்றைக்குச் சொன்
னேன். என்னுடைய அந்த எண்ணத்திற்கு ஏற்ப இந்தச் சட்டம்
கொண்டு வரப்படுகிறது. அந்த வகையிலே அந்த மாதிரி சட்ட
முன்வடிவு வந்திருப்பதாலே எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது.
பொதுவாகச் சொல்வார்கள். 'மென்ட்டல் எல்த் இஸ் பெட்டர்
தென் பிசிகல் எல்த்' என்று சொல்வார்கள். ஆபாசம் எந்த
வகையிலே இருக்கக் கூடாது என்பதற்கு ஒரு பொது நியதி இருக்க
வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் ஸ்டூடியோவிலே
படம் எடுக்கின்றார்கள். அது தியேட்டரில் ஓடிக் கொண்டி
டிருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. காரணம் சினிமா நல்ல
கருத்துக்களை சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டுகின்ற ஒரு
மீடியமாக இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.
இன்றைக்கு தியேட்டரிலே காட்டப்படுகின்ற படங்கள் இன்
றைக்கு டி. வி. யிலேயும் காட்டப்படுகிறது. ஒவ்வொரு வீட்டி
லேயும் ஒளி பரப்பப்பட்டு வருகிறது. இதையும் நாம் மனதிலே
கொள்ள வேண்டும்.

அதற்காக சென்சார் போர்டு இருக்கிறது என்றெல்லாம்
இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் சொன்னார்.
சில நேரங்களில் சென்சார் போர்டு நீக்கிய காட்சிகளை கூட
போஸ்டர்களிலே போட்டு விடுவதால், போஸ்டரைப் பார்த்து
விட்டு, படம் பார்க்காதவர்களைக் கூட எப்படியாவது பார்க்
கும்படி தூண்டி விடுகிறார்கள். அதன் காரணமாக இந்தக்
காட்சியை எப்படியாவது போய் பார்க்க வேண்டுமென்று தூண்
டப்பட்டவர்கள் அங்கே போய் பார்த்துவிட்டு அந்தக் காட்சி
இடம் பெறாத நிலையினால் வெறுப்படைந்து, விரக்தி
யடைந்து வெளியே வரும்போது சில சமயங்களில் சில சமுதாய
விரோத செயல்களில் ஈடுபடுவதையும் இங்கே நான் சுட்டிக்
காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, சென்சார் போர்ட் அனுமதிக்காமல் இருக்கிற அந்
தப் படங்களை வெளியிடுவதற்கு, விளம்பரப்படுத்துவதற்கு
எதிராக எந்த வகையிலே நம்முடைய இந்த போர்ட் நடவடிக்கை



1987 மே 11] [திரு. செ. செம்மலை]

எடுக்க இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்
களிடமிருந்து அறிய விரும்புகிறேன். ஒரு படத்திலே ஒரு ஆபாச
காட்சி ஒரு சில நேரங்களில் சென்சார் போர்டின் கத்திரிக்
கோலுக்கு தப்பி வந்து விட்டால் கூட அந்த குறிப்பிட்ட ஆபாச
காட்சி, காட்சியோடு காட்சியாக ஒரு நொடி பொழுதில் வந்து
மறைந்துவிடுகிறது. கண்ணின் பார்வையிலிருந்து உடனடியாக
மறைந்து போய் விடுகிறது. ஆனால் சென்சார் போர்ட் அனுமதி
யளித்திருக்கிற காட்சிகளை கூட சில சமயங்களிலே விளம்பரப்
படுத்துவதன் மூலம் ஆபாசம் வெளிப்படுகிறது என்பது தான்
இப்போதைய பிரச்சினை. அந்த ஆபாசக் காட்சி மக்களிடத்தில்
பிரதிபலிக்கிறது. மக்களிடத்தில் உணர்வை தூண்டுகிறது.
ஆகவே தான் சென்சார் போர்ட் அனுமதித்தால் கூட, விளம்பரப்
படுத்தும்போது, ஆபாசமாக இருந்தால் அதனை எப்படி நாம்
கட்டுப்படுத்தப் போகிறோம் என்பதைப் பற்றி மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் இங்கே விளக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். மத்திய சென்சார் போர்ட் அனுமதித்த பிறகு
நம்முடைய சென்சார் போர்ட் அதனைக் கட்டுப்படுத்த சட்டத்
திலே ஏதாவது வழிவகை இருக்கிறதா என்பதைப் பற்றியும்
இங்கே சொல்ல வேண்டுமென்று வேண்டுகிறேன்.

அடுத்து, வயது வந்தவர்களுக்கென்று சில படங்களை வெளி
யிட அனுமதிக்கிறார்கள். இத்தகைய படங்களை வயது வந்த
வர்களுக்கு மட்டும்தான் காட்ட வேண்டும். ஆனால் படத்திலே
இருக்கின்ற ஆபாச காட்சியை போஸ்டராக போடுகின்றபோது
அதனை பார்க்கின்ற சிறுவர்களுடைய மனதை அது கெடுக்கிறது.
இத்தகைய நிலையினை எந்த வகையில் அரசு தடுக்கப் போகிறது,
கட்டுப்படுத்த போகிறது, அதற்கு இந்தச் சட்டத்திலே வழி
வகை இருக்கிறதா என்பதைப் பற்றியும் இங்கே மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கினால், எடுத்துச் சொன்
னால் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, விளம்பரப்படுத்துகின்ற பொருள்களைப் பற்றி
இரண்டு வாரத்திற்குள் கட்டாயமாக விளம்பரம் செய்ய வேண்டு
மென்று நம்முடைய சட்ட முன்வடிவிலே சொல்லியிருக்கிறார்
கள். சாதாரணமாக நாள்பட விளம்பரங்களை இரண்டு வார
கால அவகாசத்திலே விளம்பரப்படுத்தலாம். ஆனால் ஓர்
அமைப்பு, கட்சி இவைகளைப் பொறுத்த வரையில் இரண்டு
நாட்களுக்குள் விளம்பரப்படுத்த வேண்டுமென்ற நிலை இருக்கு
மானால் இந்த இரண்டு வாரம் என்பது கொஞ்சம் இடைஞ்சலாக
இருக்கிறது. இதனை கருத்தில் கொண்டு அரசாங்கத்திற்கு
என்து கருத்தாக, ஆலோசனையாக ஒன்றைச் சொல்கிறேன்.
இதற்கு சட்டத்தில் வழிவகை இருக்க ஆவன செய்ய வேண்டும்.
எல்லா பிரஸ்களும், எல்லா ஸ்டூடியோக்களும், எல்லா
அட்வர்டைசிங் ஏஜென்டுகளும் ரெஜிஸ்டர் செய்யப்படுவ
துடன் அவைகளுக்கு ஒரு கெய்ட் லைன்ஸும் கொடுக்க வேண்டும்.
அப்படி ஒரு கெய்ட்லைன்ஸ் கொடுத்து விட்டோம் என்றால்
ஏப்படிப்பட்ட அம்சங்கள் இடம் பெறக் கூடாது என்று அரசு
எதிர் பார்க்கிறதோ அதனை அவர்களாகவே கட்டுப்படுத்

[திரு. செ. செம்மலை] [1987 மே 11

தடுத்து விடுவார்கள். எனவே, அப்படி ஒரு கெய்ட்லைன்ஸ்
கொடுத்து விட்டால் அதன்படி அவர்கள் அதனை கடைப்பிடிக்
கிறார்களா என்று இந்த கமிட்டி ஒரு வாச் டாக் கமிட்டியாக
இருந்து கண்காணிக்க வாய்ப்பாக இருக்கும். அப்படிப்பட்ட
ஒரு நிலை இருந்தால் இந்த பிரஸ்களுக்கோ, ஸ்டுடியோக்களுக்கோ
அல்லது அட்வர்டைசிங் ஏஜென்சிகளுக்கோ ஏதாவது விளம்பரப்
படுத்தல் சம்பந்தமாக சந்தேகம் வந்தாலும் அதனை போக்க
வாய்ப்பு இருப்பதுடன் ஏதாவது பொருள்களுக்கு பிரையாரிட்டி
கொடுத்து விளம்பரப்படுத்த வேண்டிய நிலை இருந்தால், விரை
வாக இரண்டு நாட்களுக்குள் விளம்பரப்படுத்த வேண்டிய நிலை
இருந்தால் உடனடியாக அப்படிப்பட்டவைகளுக்கு அனுமதி வழங்
கவும் வாய்ப்பு இருக்கும். இரண்டு வார காலம் அவகாசம்
என்று கொடுத்திருக்கின்ற நிலைமையை, வாசகத்தை மாற்றி
விரைவில், உடனடியாக கொண்டு வர விரும்பினால் அவற்றுக்கு
மாற்று ஏற்பாடாக இச்சட்ட முன்வடிவில் வழிவகை செய்தால்
நன்றாக இருக்கும் என்று சொல்லி இந்த இரண்டு சட்ட முன்
வடிவுகளையும் வரவேற்று, பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு
மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி
கூறி அமர்கிறேன்.

(நண்பகல் 12.00.)

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்
களே, திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களைக் கட்
டாயமாகத் தணிக்கை செய்யும்படியான இந்தச் சட்டத்தில்
அந்தத் திரைப்பட விளம்பரங்களுக்குச் சான்றிதழ் அளிப்பதில்
பின்பற்ற வேண்டிய வழி முறை கோட்பாடுகள் என்று குறிப்
பிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இதுதான் கைட்லைன்ஸ்.
கைட்லைன்ஸை வைத்துக்கொண்டு தான் அவர்கள் விளம்
பரங்கள் எப்படிச் சரியில்லை, தவறானது என்றும், பொது
மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியது அல்ல அல்லது நல்லது
என்ற முடிவுக்கு வர வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

ஆபாசமானதாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டியிருக்
கிறது. அரசின் பாதுகாப்பு நலன்களுக்கு அல்லது வெளி நாட்டு
நட்புறவிற்கு எதிரானதாக இருக்கிறதா என்பது. இதெல்
லாம் வெறும் விளம்பரத்தை மட்டும் உட்கொண்டதாக
இல்லை. இதிலே உண்மையாகவே அரசியல் துறையிலேகூட
கவனம் செலுத்தக் கூடிய முறை, தன்மைகள் அந்த சர்டிபிகேட்
வழங்கக்கூடிய அந்த போர்டுக்கு இருந்து தீர வேண்டியிருக்
கிறது.

பொது அமைதிக்கு, நற்பாங்கிற்கு அல்லது ஒழுக்க நெறிக்கு
எதிரானதாக இருக்கிறதா என்பது ; அவதூறு அல்லது நீதி
மன்ற அவமதிப்பு உள்ளடங்கியதாக இருக்கிறதா ; அல்லது
யாதொரு குற்றத்தையும் செய்வதற்குத் தூண்டி விடக்கூடியதாக
இருக்கிறதா என்பதைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்



1987 மே 11] [திரு. கு. ரமணி]

என்பது. இப்படியொரு ஐந்து விதமான வழி காட்டும்
நெறிகளை அவர்களுக்கு இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.
இதை அடிப்படையாகக் கொண்டுதான் இந்தச் சட்டத்தை,
இதனுடைய நடவடிக்கைகளை விளம்பரப் பொருட்களைத்
தணிக்கை செய்வது என்பதை கொண்டு வர வேண்டும். இது
ரொம்ப சிக்கலான ஒரு விஷயம். ஆனால் ஆபாசமான விளம்
பரங்களைத் தடுப்பது என்பதற்கு எல்லோருடைய ஆதரவும்
கிடைக்கும். அதிலே எந்தப் பிரச்சினையும் கிடையாது.
சினிமாக்களிலே நடக்கின்றபடுமோசமான பல காட்சிகள், சென்
சார் போர்டையெல்லாம் தாண்டி அது வந்து விடுகிறது. ஆனால்
இவையெல்லாம் ஒவ்வொரு வீட்டினுடைய சுவர்களிலேயும்,
தெருக்களிலேயும் அவை முன்னே வந்து நிற்கும் பொழுது அது
ஜனங்களினுடைய மனத்தை எப்படிக் கெடுக்கும்படியான
தன்மையுள்ளதாக இருந்து, எவ்வளவு பெரிய பாதகங்கள்
செய்யும் என்பதை நாம் உணர வேண்டியுள்ளது.

நம் நாட்டிலிருக்கின்ற பெண்கள் இயக்கத்தைச் சேர்ந்த
ஸ்தாபனங்கள் இதைக் கடுமையாக எதிர்த்து வருகின்றன.
காரணம் என்னவென்றால், விளம்பரங்கள் முழுவதும் நீங்கள்
எடுத்துக் கொண்டால் 100-க்கு 90 பெண்களைத்தான்
சித்தரித்துக் காட்டிக் காட்டி இப்படிப்பட்ட விளம்பரங்
களைக் கொண்டு வருகிறார்கள். பணம் சேமிப்பதற்கு இருக்
கும்படியான கருவிகளைப் போல அவர்கள் பெண்களைச்
சித்தரிப்பது என்பதை ஒரு வகையாக வைத்திருக்கிறார்கள்.
அப்படிப்பட்ட ஆபாசங்களைக் கட்டாயமாகத் தடுத்து நிறுத்த
வேண்டியிருக்கிறது. அதை எதிர்த்து சினிமா தியேட்டர்களுக்கு
முன்னால் கிளர்ச்சி நடக்கிறது. தகராறுகள் கூட நடக்கிறது. சில
படங்களைத் தடுக்க வேண்டிய நிலை கூட ஏற்பட்டுள்ளது.
தமிழ்நாட்டில் கூட அப்படித் தடுக்கப்பட வேண்டிய சில படங்
கள் இருக்கின்றன. பெண்களை இழிவு படுத்திக் காட்டி, பெண்
களை வர்த்தகப் பொருளைப்போல இழிவு படுத்திக்காட்டு
கின்ற அப்படிப்பட்ட தன்மைகள், அப்படிப்பட்ட விளம்
பரங்களைத் தடுப்பது நியாயமானது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அரசின் பாதுகாப்பு, அன்னிய நாட்டு அரசினுடைய உறவைப்
பாதுகாப்பது என்று சொல்லும் பொழுது பிரச்சினை அப்படி
வராது. வேறு விதமான பிரச்சினைகள் வரும். ஒரு ஏகாதி
பத்திய நாட்டிலிருந்து நம் நாட்டுக்கு மோசமான விளைவுகளை
உண்டாக்கக் கூடிய நடவடிக்கைகள் நடக்கின்றபொழுது அதை
எதிர்த்து நின்று போராடக்கூடிய நாம் பலவிதமான பிரச்
சார இயக்கங்களை நடத்துவதில் போஸ்டர்கள் போட வேண்டி
யிருக்கும். அதேபோன்று கேலிச் சித்திரங்கள் போட வேண்டி
யிருக்கும். சில சமயங்களிலே கொடும்பாவிகூட கட்டி
இழுக்க வேண்டிய நிலை ஏற்படும். அப்படிப்பட்ட நிலைமை
கள் ஏற்படும். அந்த மாதிரி வரக்கூடிய விளம்பரங்கள், எதை
யெல்லாம் இவர்கள் தடுப்பார்கள் என்பது இல்லை. இப்படிப்

பட்ட உறவைக் காப்பாற்றுவதற்கு இருக்க வேண்டுமென்று
சொல்வது. அது ஒரு மெக்கானிக்கலாக, யதார்த்தமாகப்
புரிந்து கொண்டால் நியாயமான அந்நிய ஏகாதிபத்திய எதிர்ப்பு
அரசியலுக்கே அது வேட்டு வைத்து விடும். அப்படிப்பட்ட
நிலை ஏற்படக் கூடாது. நீங்கள் அமைக்கக்கூடிய போர்டு
இந்த அளவிற்கு கவனிக்குமா என்பதும் தெரியாது. (மணியடிக்கப்
பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரமாக
முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. கு. ரமணி : பேச வேண்டாமென்றால் உட்கார்ந்து
விடுகிறேன். சட்டத்தைப் பற்றிப் பேசும்பொழுது கொஞ்சம்
அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரமாக
முடித்துவிடுங்கள்.

திரு. கு. ரமணி : பொது அமைதிக்கு, நற்பாங்கிற்கு
அல்லது ஒழுக்க நெறிக்கு எதிரானதாக இருக்கிறதா என்பது.
இதிலும் நான் சொல்கிறேன். கைட்லைன்ஸ் கொடுத்திருக்கக்
கூடிய அந்த போர்டு, பொது அமைதி என்று சொன்னால்,
ஒரு பொது வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்று விளம்
பரம் செய்வது கூட பொது அமைதிக்குக் கெடுதல் கொண்டு
வரலாம் என்று சொல்லலாம்.

அப்படிப்பட்ட நிலை வரக் கூடாது. அதனால் கெடுதல்
வரும். அந்த மாதிரி வரக் கூடாது. ஜனநாயக இயக்கங்
களின் வளர்ச்சிக்காக எடுக்கப்படுகின்ற முயற்சிகளில் வருகின்ற
விளம்பரங்களைப் பொறுத்த வரையில் அதற்கு இது ஒரு தடை
யாக அமைந்து விடக் கூடாது. நமக்கெல்லாம் தெரியும்,
நீதிமன்றத்திற்கு முன்னால் இருக்கக்கூடிய ஒன்றைப் பற்றி
வெளியே விமர்சனம் பண்ண ஆரம்பித்தால் தண்டனை கிடைக்
கும், அதுவே கட்டெம்ப்ட் ஆஃப் கோர்ட் ஆகிவிடும். எனவே
அந்த மாதிரி காரியங்கள் வரக் கூடாது. குற்றங்களைப்
பொறுத்த வரையில் அவற்றைச் செய்வதற்குத் தூண்டுவதும்
கூடாது. அதற்கான விதிமுறைகள் இன்டியன் பீனல் கோடி
லேயே இருக்கிறது. ஐ.பி.சி. 120 இருக்கிறது. தூண்டிவிட்டுக்
கொலை செய்யச் செய்தார்கள் என்றால் கொலை செய்தவருக்கு
இருப்பது மாதிரியே தூண்டி விட்டவருக்கும் அந்தப் பொறுப்பு
இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கும் தண்டனை கொடுக்
கலாம். எனவே அப்படி தூண்டுவது என்று சொல்வதை
அர்த்தப்படுத்துவதில் இந்த சர்ட்டிபிகேட் கொடுக்கிற போர்ட்
எந்த அளவில் இந்த கைட்லைன்ஸ் வைத்துச் செயல் படுவார்
கள் என்பதை நடை முறையில்தான் பார்க்க வேண்டும்.
அப்படிப்பட்ட கெடுதல்கள் ஏற்படாமல் இந்தச் சட்டத்தை
அமலாக்க அரசு முன் வர வேண்டும்.





அடுத்து ஆபாசங்களைத் தடுக்க வேண்டும். நான் ஒன்றைக்
கேட்க விரும்புகிறேன். அமெரிக்காவில் ஹாலிவுட்டில் படம்
எடுக்கப்படுகின்ற அந்தத் தன்மையின் அடிப்படையில் இங்கேயும்
படங்களை உருவாக்கப் பார்க்கிறார்கள். அப்படி என்றால்
பகிரங்கமாக ஆண்-பெண் உறவை அதாவது கட்டிப் பிடித்து
முத்தம் கொடுக்கும்படியான காட்சிகளை நடு ரோட்டுக்கும்,
தெருவுக்கும் கொண்டு வருவது நம்முடைய நாட்டின் பண்
பாட்டுக்கு ஒத்ததா என்று நான் கேட்க விரும்புகிறேன். அதற்கு
என்ன வழி? அதை நீங்கள் தடை செய்தீர்களா? இன்றைக்கு
எத்தனை படங்கள் அப்படி வந்திருக்கின்றன? தடை செய்தால்
உடனே கலைஞர்களும் மற்றவர்களும் கிளர்ந்து விடுவார்கள்.
இது உலக நியதிதானே என்று கூடச் சொல்வார்கள். அதெல்லாம்
சரியில்லை. ஓரளவுக்கு நம்முடைய பண்பாடு காப்பாற்றப்பட
வேண்டும். அந்த முறையில் நீங்கள் வழி வகை செய்ய முன்
வந்தாலும் நல்லதுதான்.

அடுத்ததாக விளம்பரப் பொருட்களைப் பொறுத்தவரையில்
அதிலே இருப்பது என்ன? விளம்பரத் தட்டி, இயங்கா
நிழற்படம், விளம்பரத் துண்டு, நாளேடுகளிலும், கால முறை
இதழ்களிலும் வெளியிடப்படுவதற்கான இயங்கா நிழற்படம்
மற்றும் வகுத்துரைக்கப்படக் கூடிய பிற எந்த பொருளையும்
உள்ளடக்கும் என்று இதிலே வந்திருக்கிறது. முதலிலே எனக்கு
என்ன சந்தேகம் என்றால் இந்த இரண்டு சட்ட முன்வடிவையும்
ஏன் ஒன்றாகப் போட்டு கொண்டு வந்திருக்கக் கூடாது?
இரண்டுமே சினிமா படம் சம்பந்தப்பட்டது தானே. இரண்டைப்
பொறுத்த வரையிலும் சில பொருட்கள் பற்றி இங்கே
வருகிறது. சிலவற்றைப் பற்றி அங்கே வருகிறது. சிலவற்றைப்
பொறுத்த வரையில் மாறுபட்டு வருகிறது. அப்படியானால்
என்ன நோக்கம்? இந்த இரண்டையும் ஒன்றாகவே எடுத்து
வைத்து இருக்கலாம். அந்த வகையில் இன்னும் கொஞ்சம்
விளக்கமாகவே தந்து இருக்கலாம். ஏன் இப்படி தனித்தனியாகக்
கொண்டு வரப்பட்டிருக்கிறது?

அடுத்து இந்த விளம்பரங்களைப் பொறுத்த வரையில் வேறு
சில கஷ்டங்களும்கூட உருவாக்கப்பட்டு இருக்கின்றன. உதாரண
மாக வன்முறைகள் உள்ளடங்கிய குற்றங்களைச் செய்ய அல்லது
பொது பண்பு நலனுக்கு அல்லது ஒழுக்க நெறிக்கு ஊறு விளை
விக்கக் கூடியதாக இருக்கிறது, அல்லது வட்டார பிரிவுகள்
அல்லது சாதிகள் அல்லது சமூகங்களுக்கிடையே சமயம், இனம்,
முதலியவற்றின் அடிப்படையில் வெறுப்புணர்ச்சியை வளர்க்கக்
கூடிய செயல்களை அனேகமாக தூண்டி விடக்கூடிய அந்தத்
திரைப்பட விளம்பரப் பொருட்கள் அல்லது பிற விளம்பரப்
பொருட்கள் என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது
திரைப்படத்தோடு இது நிற்கவில்லை. அதனால்தான் இதைத்
தனிச் சட்டமாகக் கொண்டு வந்தீர்களா? விளம்பரத்தோடு
நிற்கவில்லை; அதற்கு அப்பாற்பட்டும் போகிறது. எனவே
அரசியல் கட்சிகளையும் மற்ற சில ஜனநாயக ஸ்தாபனங்களை

யும், பொது மக்களின் இயக்க ஸ்தாபனங்களையும் இது பாதிக்கிறது. இதனை மெக்கானிக்கலாக நடத்திக் கொண்டு வந்தால் அவர்கள் செய்யக்கூடிய விளம்பரங்களிலே வன்முறை தூண்டப்படுகிறது என்று சிலர் சொல்வார்கள் ; சிலர் அவ்வாறு தூண்டப்படவில்லை என்று சொல்வார்கள் ; ஜாதி, மத இன வெறியைத் தூண்டுவதைத் தடுப்பது கரெக்ட். ஆனால் ஜாதிக்காரர்களும், மதக்காரர்களும் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர்கள் சொல்வார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் அதிலே ஏற்படுகிறது. எனவே இவை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு அவியல் மாதிரி உருவாக்கி இருக்கிறீர்கள். கேட்கிறவர்களுக்கும், மற்றவர்களுக்கும் புரிகிற வகையில் தெளிவாக அதனுடைய நோக்கம் செயல் பாடுகள் அடிப்படைத் தத்துவம் ஆகியவற்றைப் பற்றிச் சொல்லியிருக்கிறீர்களா ? இதையெல்லாம் கரெக்ட்டாக வைக்க வேண்டும். இல்லை என்றால் இப்படிப்பட்ட கஷ்டங்கள் தான் ஏற்படும். ஜாதி, மத, சமுதாய வெறுப்புணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய பற்பல உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய, அவ்வாறு தூண்டுவதன் மூலம் கலகங்களை உருவாக்கக்கூடிய அப்படிப் பட்ட பிற்போக்கு சக்திகளின் தவறான போக்கைத் தடுக்கக் கூடிய முறையில் விளம்பரங்களை ஒரு வழிவகை செய்வதில் தவறில்லை. அதைச் செய்யலாம். எனவே இந்த விமர்சனத்தையும் அமைச்சர் அவர்கள் கணக்கில் எடுத்துக் கொண்டு முறையாக செய்ய வேண்டிய திருத்தங்களைச் செய்து இதைக்கொண்டு வருவது நல்லது என்று கூறி நான் முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10.)

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, திரைப்படங்கள் மீதான விளம்பரங்களை கட்டாயமாக தணிக்கை செய்ய வேண்டும் என்ற சட்டத்தின் மீதும், திரைப்படங்கள் அல்லாத விளம்பரங்களின் மீது தணிக்கை செய்வதற்கான சட்டத்தின் மீதும் நான் ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிக் ரமணி அவர்கள் ஆபாசத்தைப் பற்றி அதிகம் சொல்லியிருகிறார்கள். ஆனால் நாம் சட்ட சபையிலே எத்தனையோ சட்டங்களைக் கொண்டு வருகிறோம். அதற்கென நேரத்தையும் செலவு செய்து பேசி நிறைவேற்றுகிறோம். ஆனால் அது எந்த அளவுக்கு அமல்படுத்தப்படுகிறது, நிறைவேற்றப்படுகிறது என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

சென்ற ஆண்டு விளம்பரப் பலகைகளை கையகப்படுத்துதல் என்று ஒரு சட்டம் போட்டோம். ஆனால் இப்போது அந்தப் பலகைகள் அதிகமாகி இருக்கின்றன. சட்டமன்ற விடுதிக்குப் பக்கத்திலேயே நிறைய பலகைகள் இருக்கின்றன. போன வருஷமே இதை நான் சொன்னேன். அது அதிகரித்திருக்கிறதே தவிர குறைவதாக இல்லை. அதைக் கவனிக்கவேண்டும். மெட்ராசிலேயே பெண்களை ** வைக்கிறார்கள். அதை லட்சம் பேர்கள் வேடிக்கை பார்க்கிறார்கள். அதுமட்டும் அல்ல, பெண்





களை இழிவு படுத்தக்கூடிய முறையில் விளம்பரம் செய்யக் கூடிய அளவுக்கு இன்றைக்கு விளம்பரங்கள் வருகின்றன. ஆகவே அதை கட்டுப்படுத்த வேண்டும் அல்லது ஒழிக்க வேண்டும் என்பதிலே நாங்கள் மாறுபட்ட கருத்துச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் எப்படி அதை அமுல் படுத்தப் போகிறீர்கள்..........

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: அவையின் தலைநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது சென்னையிலே என்று பெண்கள்** என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த இடத்தில் எப்போது ஓடினார்கள். சென்னை உறுப்பினர் என்ற முறையில் விளக்கம் கேட்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரம் அல்லாமல் இருக்கலாம். சென்னையிலே ஓடியதாக பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. ஆனால் பெரிய பெரிய ஓட்டல்களில் (குறுக்கீடு) நான் ஒரு குறிப்பிற்காக உதாரணத்திற்காக சொன்னேன். எல்லாவற்றிற்கும் விளக்கம் தர வேண்டுமானால் நேரம் போதாது. (கூச்சல்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எங்கே ஓடினார்கள் என்று கேட்கிறார்கள். இல்லை என்றால் அதை எடுத்து விடலாம்.

திரு. பொ. உத்திராபதி: நிறைய பேர்கள் சாமியார்கள் என்று சொல்லி ஓடுகிறார்கள். உதாரணத்திற்காக சொன்னேனே தவிர, அதை வாதப் பொருளாக எடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆகவே இப்போது ஆபாசம் என்பது மிகவும் மோசமான நிலையில் போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே வெறுமனே சட்டத்தை மட்டும் நிறைவேற்றாமல் அதை அமல் படுத்தக் கூடிய அளவுக்கு அதிகாரிகள் முழுமையாக அதில் ஈடுபடவேண்டும் என்பதுதான் எங்களுடைய அபிப்பிராயம். இன்னொன்று அரசின் பாதுகாப்பிற்கு அல்லது வெளிநாட்டு நட்புறவிற்கு எதிராக இருக்கிற பொது நலனுக்கு எதிராக இருக்கிறதா ; குற்றத்தை செய்வதற்கு தூண்டி விடக்கூடிய அளவுக்கு இருக்கிறதா என்று பல வகைகளில் 5 பாயிண்ட் தந்திருக்கிறீர்கள். காரண-நோக்க விளக்கத்தில். இதிலே தூண்டி விடக்கூடிய என்பது சரியல்ல. ஒருவர் விரும்பினால் தூண்டிவிட்டதனால் தான் இந்த நிகழ்ச்சி நடந்தது என்று சொல்லி வழக்கு போடுவதற்கு கூட இந்தச் சட்டத்தை பயன்படுத்த முடியும். ஆகவே இந்தச் சட்டத்தை கொண்டு வரும்போது இதன் உள்ளே பல விரும்பத் தகாத ஷரத்துக்கள் இருப்பதை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. பொ. உத்திராபதி] [1987 மே 11

அடுத்து இந்த விளம்பர பொருள்களுக்கு கட்டாய தணிக்கை
என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். இதன் காரண நோக்க
விளக்கத்திலே கீழ்த்தரமானதாகவும் உணர்ச்சியை கிளறிவிடத்
தக்கதாகவும், வகுப்பு கிளர்ச்சிகளைத் தூண்டி விடக்
கூடியதாகவும் உள்ள விஷயங்கள் அடங்கியவையும் திரைப்பட
விளம்பரத் தட்டியல்லாதவையுமான பிற விளம்பரத் தட்டிகள்
பெருகி வருவதை முழுவதும் தடை செய்வதற்கான சட்டத்தினை
இயற்றும் பணியை மேற்கொள்ளுவதே இதன் கருத்துருவாகும்
என்று காரண—நோக்க விளக்கத்திலே சொல்லியிருக்கிறார்கள்.
அது இப்போதுதான் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?
ஏன் இப்போது மட்டும் தான் விளம்பரங்கள் வருகின்றனவா ?
நீங்கள் ஆட்சிக்கு வந்து 10 வருஷம் 11 வருஷம் நிரம்பப்போகிறது.
11 வருடங்களாக இந்த மாதிரி காரியங்கள் அப்போதைக்
கப்போது அரசின் கவனத்திற்கு வந்து சட்டங்கள் இயற்றப்படு
கின்றன. இந்தச் சட்டங்கள் சரியான முறையில் அமலாக்கப்
பட்டிருந்தால் ஒவ்வொரு ஆண்டும் இப்படிப்பட்ட காரியங்கள்
வருவதற்கு வாய்ப்பில்லை. இப்போது ஒவ்வொன்றாக எடுத்துக்
கொள்வோம். எரிசாராயத்தை ஒழிக்க வேண்டுமென்று சொல்
கிறோம். ஆனால் எரிசாராயம் வளர்ந்து கொண்டேயிருக்கிறது.
தினமும் பார்த்தால் 50 ஆயிரம் லிட்டர், 60 ஆயிரம் லிட்டர்
பிடிக்கிறோம் என்று சொல்கிறார்கள். கொலைகளை குறைக்க
வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் கொலைகள் அதி
கரித்துக் கொண்டே வருகின்றன. அதைப்போல கற்பழிப்பைப்
பற்றி குறைக்க வேண்டுமென்று சொல்கிறோம். அதுவும்
வருடா வருடம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதற்
கெல்லாம் என்ன காரணம் ? நாம் சட்டங்களை நிறைய
நிறைவேற்றுகிறோம். அந்தச் சட்டங்கள் பூராவும் நாட்டில்
மதிக்கப்படுகின்றனவா ? அவைகளை நிறைவேற்றுவதற்கு
அதிகாரிகள் முனைப்புடன் செயல் படுகிறார்களா என்று
பார்த்தால் நாம் சட்டங்களை அதிகமாக கொண்டு வந்து
சபையின் நேரம் போகிறதே தவிர, சட்டங்களை நிறைவேற்றாத
நிலை தான் இருக்கிறது. சட்டங்களை முறையாக நிறைவேற்றி
னால் இந்த ஆபாசங்களையும் மற்ற காரியங்களையும் குறைக்க
முடியும் அல்லது ஒழிக்க முடியும். சட்டங்களை நிறைவேற்று
வதற்கு பதிலாக அவைகளை நாட்டில் அமல்படுத்துவதற்கு
அதிகாரிகளும் அமைச்சர்களும் எதிர் காலத்தில் முனைப்பாக
இருக்க வேண்டும். சட்டங்களை கொண்டு வருவதில் உள்
நோக்கம் எதுவும் இருக்கக் கூடாது. எந்த சட்டத்தைக் கொண்டு
வந்தாலும் ஒரு உள்நோக்கத்தை வைத்து எதிர் காலத்தில்
அதை எப்படியெல்லாம் பயன் படுத்தலாம் என்ற முறையில்
கொண்டு வருகிறபோது தான் எதிர் கட்சியில் இருக்கிற
நாங்கள் ஆட்சேபணைகளைத் தெரிவிக்கிற அளவிற்கு, வருத்
தத்தைத் தெரிவிக்கிற அளவிற்கு நிலை இருக்கிறது. எதிர்
காலத்தில் அது போன்ற நிலை வராத அளவிற்கு அமைச்சர்
அவர்கள் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.



1987 மே 11]

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்
களே, 1987 ஆம் ஆண்டு திரைப் படங்கள் தொடர்பான விளம்
பரங்களை கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன் வடி
வின் மீது ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.
எப்போதுமே குறைவான சட்டங்களை வைத்து அவைகளை
நிறைவாக நிறைவேற்றுவது தான் ஒரு அரசாங்கத்திற்கு ஏற்
புடையதாக இருக்கும். இன்றைக்கு இந்த சட்ட முன் வடிவின்
மூலமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, எதை எதைத் தவிர்க்க
வேண்டும், கட்டுப்படுத்த வேண்டுமென்று இந்த அரசாங்கம்
விரும்புகிறதோ அவைகளையெல்லாம் இப்போதிருக்கிற இந்திய
தண்டனைச் சட்டம் உள்பட இருக்கிற சட்டங்களால் செய்ய
முடியும். ஆகவே அவைகளைத் தவிர்ப்பதற்கும், கட்டுப்படுத்து
வதற்கும் இருக்கிற சட்டங்களை முறையாக செயல்படுத்தாமல்
ஒவ்வொரு செயலுக்கும் ஒரு சட்ட மென்று சட்டங்கள் வரு
மானால் இங்கே சட்டத்தின் ஆட்சி நடப்பதற்கு பதிலாக
அதிகார வர்க்கத்தின் ஒரு ஆட்சி அமைப்பு உருவாகிவிடுமென்று
சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சட்ட முன் வடிவின் மூலமாக நீதி மன்றங்களின்
அதிகார வரம்புக்குள் நிர்வாக அமைப்பு தலையிடுகிற ஒரு சூழ்
நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. வன் முறையைக் கட்டுப்படுத்த
வேண்டுமென்று, ஆபாசத்தை ஒழிக்க வேண்டுமென்று ஒரு
நிலையை உருவாக்கி, சந்தடிச் சாக்கில் இந்த அரசு யார் மீது
எந்த அமைப்பின் மீது கை வைக்கப் போகிறது இந்தச் சட்டத்தின்
மூலமாக என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது.
ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் இன்னொரு மதத்தைச் சார்ந்
தவர்களைப் புண் படுத்தக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்
கிறது. புண் படுத்தல் என்பதற்கு என்ன விளக்கமென்று இங்கே
சொல்லப்படவில்லை. ஒரு விளக்கத்தை இந்தச் சந்தர்ப்பத்தில்
அறிய விரும்புகிறேன். வேறு மதத்தைச் சார்ந்தவர்களை
நான் சான்றாக அழைத்து அதில் பிரச்சினை உருவாக விரும்ப
வில்லை. என்னுடைய மதத்தை, நான் சார்ந்திருக்கிற இந்து
மதத்தை சான்றாக எடுத்து வைக்க விரும்புகிறேன். என்னுடைய
மதத்தைச் சார்ந்த காவி கட்டிய ஒரு சாமியார் ஒரு கொலையை
செய்து விட்டார் என்று வைத்துக் கொள்வோம். அவர்
இன்னொரு மதத்தைச் சார்ந்த ஒருவரை கொலை செய்து
விட்டார் என்ற நிலையில், காவி கட்டிய அந்த சாமியார் மீது
நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த அரசாங்கம், அதி
காரிகள் வேறு பல காரணங்களுக்காக, தயங்கினால், அந்த
சமயத்தில் இந்த சாமியாரால் கொலை செய்யப்பட்ட வேறொரு
மதத்தைச் சார்ந்தவரின் குடும்பம் அல்லது அந்தச் சமுதாயத்
தைச் சார்ந்தவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்
கிறபோது, இந்த சாமியாரின் பெயரைச் சொன்னால் அது ஒரு
குறிப்பிட்ட மதத்தினருடைய உணர்வுகளை புண் படுத்துவதாக
இருக்குமென்று கருதப்படுமா, கருதப்பட மாட்டாதா
என்பதை தெளிவாக அறிய விரும்புகிறேன். இவைகளையெல்
லாம் கற்பனையாகக் கேட்கவில்லை. 1985 ஆம் ஆண்டில்

எங்களுடைய மாவட்டத்தில் ஒரு சம்பவம் நடைபெற்றது ஒரு கொலை நடை பெற்றது. அந்த கொலைக்கு கண்ணால் கண்ட சாட்சி இருந்தது. அவருடைய வாக்குமூலத்தைப் பெற்றார்கள். ஆனால் இந்த கொலை வழக்கிற்கு இதுவரையில் நடவடிக்கையெதுவும் எடுக்கப்படவில்லை. ஏனென்றால் கொலை செய்யப்பட்டவரின் மதத்தைச் சார்ந்தவரல்லாத வேறு மதத்தைச் சார்ந்தவர் மீது வழக்கு தொடுத்தால் ஒரு குறிப் பிட்ட மதத்தின் மக்களுடைய வெறுப்பிற்கு ஆளாக வேண்டு மென்ற காரணத்தால் நடவடிக்கையெடுக்காமல் விட்டு விட் டார்கள்.

(பிற்பகல் 12-20)

இப்படிப்பட்ட சூழ்நிலையில், பாதிக்கப்பட்ட மக்களின் சார் பாக, சுவரொட்டிகள் வெளியிடுவதும், ஒட்டுவதும், கோரிக்கைகள் வைப்பதும், தட்டிகள் வைப்பதும், மறுக்க முடியாத ஒரு உரிமை யாக ஆகிவிடுகிறது. ஆகவே, அந்த கோரிக்கைக் குரல் எழும்பு கிற வகையில், அந்தப் போராட்டங்கள் நடக்கிற வகையில், அங்கு நிலைமைகள் உருவாக்கப்படுகின்றன. ஆகவே, ஒரு மதத்தைச் சேர்ந்தவர், இன்னொரு மதத்தைப் புண்படுத்துகிற வகையில் என்று சொல்லுகிறபோது, எப்படி எப்படி இருக்க வேண்டும் என்று விளக்காமல், இப்படி மனதைப் புண்படுத்துவது, மனதைப் புண்படுத்துவது என்று சொன்னால், அரசியல் அமைப் புச் சட்டத்தில் தரப்பட்டிருக்கிற அடிப்படை உரிமையை, இந்தச் சட்டத்தின் மூலமாக இந்த அரசாங்கம் பறிப்பதற்கு முன்வருகிறது என்பது என்னுடைய நோக்கமாக இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். எங்க ளுடைய மாவட்டத்திலே மட்டும், இதுவரையில், அரசாங்கத் தினுடைய கணக்குப் படியே, 1982 ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்ட முன்னாள் நீதிபதி திரு. வேணுகோபால் அவர் களுடைய கமிஷன் அறிக்கையின் அடிப்படையில் 15 பேர்கள் கடலுக்கு இழுத்துச் செல்லப்பட்டு கடலில் ஆழ்த்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். நடவடிக்கை இல்லை. நட வடிக்கை வேண்டும் என்று கேட்டால், குறிப்பாக இவர்கள்தான் செய்தார்கள் என்று கலவரம் நடக்கிற நேரத்தில், மக்கள் இரண்டு பிரிவுகளாக நின்று ஒரு பிரிவினர் இன்னொரு பிரி வினரைக் கொலை செய்வதும், கடலில் தள்ளி அழுத்துவதும் என்று இருக்கிறபோது, நாங்கள் யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்? எனவே, நடவடிக்கை வேண்டும் என்று கேட்கிறபோது, அதைச் சொல்கிறபோது, அது மத உணர்வுகளைப் புண்படுத்து கிறது என்ற இந்த அரசாங்கம் கருதுமா என்று நான் அறிய விரும்புகிறேன். ஆகவே, ஒரு குறிப்பிட்ட பிரிவு மக்கள் தங் களுடைய கோரிக்கையை வெளியே வைக்க முடியாத நிலைமை யில், நெஞ்சினுள்ளே குமுறிக் கொண்டு இருக்கிற உணர்வுகளை அவனுடைய நெஞ்சுக்குள்ளேயே, அதற்கு சமாதி கட்டுகிற





வகையில் சட்டம் நிறைவேற்றப்படுகிற காரணத்தால், என் னுடைய இயக்கத்தின் சார்பாக இதை எதிர்த்து, அமர்கிறேன், வணக்கம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 5 உறுப்பினர்கள் ஒரு பில்லின் மீது பேசலாம். பில்லின் மீது பேசும்போது கட்சி சார்பு கிடையாது. யார் வேண்டுமானாலும் பேசலாம். ஒரு கட்சி யிலே 4 பேர்கள் வேண்டுமானாலும் பேசலாம்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுடெல்லியிலே நடந்த 14-வது செய்தித் துறை அமைச்சர்கள் மாநாட்டில், சுவரொட்டிகள், பேனர்கள், செய்தித்தாள்கள் மூலம் வெளியிடப்படும் திரைப்பட விளம் பரங்களில் சென்சாரால் அனுமதிக்கப்படாத காட்சிகள் அடிக் கடி இடம் பெறுகின்றன. இவைகளைத் தவிர்க்க வேண்டும் என்றும் என்றும், அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டது. அதற்கு முன்பே, 1974-ல் மேற்கு வங்கத்தில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் இயற்று வதற்கு முன்பு, மத்திய அரசைக் கலந்து, அவர்களுடைய கருத் துக்களின் அடிப்படையில், அமுல்படுத்துவதற்காகத் தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் சொன்னதைப் போல எந்த எதிர்க்கட்சியையும் அல்லது எந்த சுதந்திரத்தையும் பறிக்கின்ற உள்நோக்கத்தில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட வில்லை. ஆபாசம் என்றால் என்ன, என்பதைப் பற்றி அரசு சார்பிலே ஒரு திருத்தத்தை, விளக்கத்தைக் கொண்டு வர இருக்கிறோம். ஆபாசம் எது என்பதை, அதற்காகப் போடப்பட்ட தணிக்கைக் குழு, தீர்மானிக்க வேண்டும். ஆனால், தணிக்கைக் குழுவில், எது ஆபாசம் என்று கருதுகிறார்களோ, அந்த அடிப் படையிலே அந்த உத்தரவு பிறப்பிக்கப்படும். அந்தத் தணிக்கைக் குழு பிறப்பித்த உத்தரவு சரியில்லை என்று கருதுவார்களா னால், பாதிக்கப்பட்டவர்கள் மேல் முறையீடு செய்யலாம். நல்ல பாதுகாப்போடுதான் இந்தச் சட்டம் கொண்டு வரப் பட்டிருக்கிறது. சில சமயத்தில் 15 நாட்கள் இந்தத் தணிக்கைக் குழு, அதனுடைய உத்தரவை, அனுமதியைத் தர காலதாமதம் ஆகாதா ? ஆகவே, குறுகிய காலத்தில் கொடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் சொன்னார்கள். 15 நாள் என்பது அதிக பட்ச நாளே தவிர, ஓரிரு நாளில் கூட இந்தத் தணிக்கைக் குழு, சம் பந்தப்பட்ட விளம்பர அடிப்படையைக் கருத்தில் கொண்டு, நிச்சயமாக வழங்கலாம்.

இந்தச் சினிமாத் துறைக்காக உள்ள தணிக்கைக் குழுவில் பெண்கள் அதிகமாகப் போடப்படுவதில்லை, புரட்சித் தலைவர் தமிழக முதல்வர் அவர்களுடைய கருத்து பிரகாரம், அதிலே பெண்கள் அதிகமாகப் போடப்பட வேண்டும் என்பதுதான். அவர்களைப் போடாததினால்தான், பெண்கள் இழிவுபடுத்தப்

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 மே 11

படுவதாகவும், அவர்களைத் தரம் குறைந்த வர்த்தகப் பொருட் களாக காண்பிக்கிற காட்சிகள் தொடர்ந்து இருந்து கொண் டிருக்கின்றன.

இன்னொரு மசோதாவைப் பொறுத்த வரையில், சினிமா வில் காட்டப்படுகிற விளம்பரங்கள், சினிமாவிலே அனுமதிக்கப் பட்டு, சென்சார் செய்யப்பட்ட படத்தில், சென்சார் செய்யப் படாத காட்சிகள் திடீரென்று உள்ளே காட்டப்படுகின்றன என்று சொன்னார்கள். அதற்கு போலிசார் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். சென்சார் செய்யாத படக் காட்சிகளை வெளியே வைத்திருக்கிறார்கள், முச்சந்தியிலே வைத்து இருக்கிறார்கள். இது மக்களுடைய மனதைத் தூண்டி, அந்த சினிமாவைப் பார்க்க வேண்டும் என்ற வகையில், அந்த சுவரொட்டிகள், விளம்பரங் கள் சொல்லுகின்றன. முச்சந்தியிலே உள்ள விளம்பரப் பலகை யிலே உள்ள படம், சினிமாவிலே கூட இருக்காது. இவைகள் எல்லாம் கண்டிக்கப்பட வேண்டும்.

சினிமாத் துறை என்று மட்டுமல்ல. தையல்காரர் ஒரு கடை வைத்து தைக்கிறார். அந்தத் தையல் கடையில் ஆணும், பெண் ணும் இரு பாம்புகள் இணைந்து இருப்பது போல் ஒரு காட்சியை வைத்திருக்கிறார்கள். தம்ப்ஸ் அப் போன்ற பானங்கள் குடிக்க வேண்டும் என்று விளம்பரம் செய்வதிலும், மற்றுமுள்ள விளம் பரங்களிலும், பெண்கள் ஆண்களுடைய உறவுகளைக் காட்டு கிற முறையிலே விளம்பரம் செய்கிறார்கள். ஆகவே, சினிமாப் படம் திரையிடப்படுகிற காட்சியைப் பொறுத்த வரையில் என்று இல்லாமல், மற்ற விளம்பரங்களில் எல்லாம் ஆபாசம் கூடாது என்று அதைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லி, மாண்புமிகு உறுப் பினர்கள் சொன்ன கருத்துக்களை ஏற்று, தணிக்கைக் குழு எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல் நடக்கும். குறிப்பிட்ட எந்தக் கட்சியையும் அல்லது எந்தச் சுதந்திரத்தையும் பாதிக் கின்ற நோக்கத்திலே கொண்டு வரப்படவில்லை என்று சொல்லி, அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு திரைப்படங்கள் தொடர் பான விளம்பரங்களை கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.



1987 மே 11]

பிரிவு—7.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 7 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

In clause 7, to sub-clause (1), and the following Explanation, namely:

"Explanation: A publicity material shall be daemed to be obscent if it is lascivious or appeals to the prurient interest or if its effect or (where it comprises two or more distinct items) the effect of ane one of its items, is, if taken as a whole, such as to tend to depravy and corrupt persons who are likely, having regard to all the relevany circumstances, to read or see the matter contained or embedied in it, or if it portrays, exhibits or shows a picture, drawing, pointing or figure of a female human being of any age in such posture which is offensive to senses or which is likely to suggest any indecent or impure or immoral ideas in the minds of persons who are likely to read or see the matter contained or embedied in it."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 7, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேறப்பெற்றது.

பிரிவுகள் 8 மற்றும் 9 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 10.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 10 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன் :

"In clause 10, in sub-clause (1), for "six months or with fine which may extend to one thousand rupees", substitute "three years or with fine which may extend to three thousand rupees."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 10, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 11 முதல் 15 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 16.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 16 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

*For* clause 16, substitute the following clause, namely:-

" 16. *Offences by companies* :—(1) Where an offence under this Act has been committed by a company, every person who, at the time the offence was committed, was in charge of, and was responsible to, the company for the conduct of the business of the company as well as the company, shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly.

Provided that nothing contained in this sub-section shall render any such person liable to any punishment, if he proves that the offence was committed without his knowledge or that he had exercised all due diligence to prevent the commission of such offence.

*(2)* Notwithstanding anything contained in sub-section *(1)* where any offence under this Act, has been committed by a company and it is proved that the offence has been committed with the consent or connivance of, or is attributable to any neglect on the part of, any director, manager, secretary or other officer of the company, such director, manager, secretary or other officer shall be deemed to be guilty of that offence and shall be liable to be, proceeded against and punished accordingly.

***Explanation*** : For the purposes of this section.—

(a) "company" means any body corporate and includes a firm or other association of individuals, and [illegible]

(b) "director" in relation to a firm. means a partner in the firm".





திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 16, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 17 மற்றும் 18 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களை கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1987) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

### (ஓ) விளம்பரப் பொருள்களின் கட்டாயத் தணிக்கைச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பொருள்களின் கட்டாயத் தணிக்கைச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 28/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 18 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

---

* 1987 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[1987 மே 11

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி
கிறேன் :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பொருள்களின்
கட்டாயத் தணிக்கைச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை
சட்ட முன்வடிவு எண். 28/1987) நிறைவேற்றப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட
முன்வடிவு, நிறைவேற்றப்பெற்றது.

(பிற்பகல் 12–30)

(ஔ) இந்திய முத்திரைத்தாள் மற்றும் பதிவு செய்தல்
(தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட
தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு இந்தியமுத்திரைத்தாள் மற்றும் பதிவு
செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு* (சட்ட
மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/1987) ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு
மற்றும் மின்துறை அமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தி
யிருக்கிற 1987 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள்கள்
மற்றும் பதிவு செய்தல் சட்டமுன்வடிவு குறித்து ஒரு சில
வார்த்தைகளைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

இந்தச் சட்டமுன்வடிவில் சொத்து விற்பனையின்போது
பதிவு செய்யப்பட்டிருக்கிற ஆவணங்களில் சொத்தினுடைய
மதிப்பு அதாவது 'மார்க்கெட் வேல்யூவை' விடக் குறைவாக
காண்பித்திருக்கிற முத்திரைத் தீர்வையில் இழப்பை திரும்பப்
பெறுவதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கின்ற இந்தச் சட்ட
முன்வடிவிலே, சில குறிப்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன.
இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற காரண நோக்க விளக்கத்திலே.
தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதிலே மார்க்கெட்
வேல்யூ என்பது சாதாரணமாக ஆவணங்கள் பதிவு செய்யப்
படுகின்றபோது, பதிவு செய்யப்படுகின்ற அந்த ஆவணத்தில்
நிலத்தினுடைய மதிப்பு குறைவாக இருக்கின்ற நிலத்தை முதலில்
பதிந்துவிட்டு, பின்னால், அதிகமான மதிப்பு வருகின்ற
நிலத்தை 'கரெக்ஷன்' என்ற பெயராலே சேர்த்து, அதனால்
அரசுக்கு இழப்பு ஏற்படுகின்ற சந்தர்ப்பங்கள் அரசினுடைய

* 1987 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ்
நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது என்று குறிக்கப்
பட்டிருக்கிறது. ஆனால் இது ஒரு காலத்தில் யார் நிலத்தை
வேண்டுமானாலும், எவர் வேண்டுமானாலும், யாருக்கும் எழுதி
வைக்கமுடியும், பத்திரம் பதிவு பண்ணமுடியும் என்ற
நிலைமை இருந்தது. ஆனால் இப்போது அப்படியல்ல. நிலத்தை
விற்கின்றபோது, அந்த நிலத்தினுடைய ஆவணத்திலே
கொடுக்கப்பட்டிருக்கிற நில புல எண்கள் சரியாக இருக்க
வேண்டும். அந்த நிலத்தினுடைய சொந்தக்காரர்கள் யார்
என்று உறுதி செய்யப்பட்டு, பின்னர் தான் அந்த நிலம் பரி
மாற்றம் செய்யப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்களின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே ஒரு நிலப் புல
எண்ணை ஆவணத்திலே காட்டியிருந்து, மீண்டும் அதை
திருத்துவது என்பது நடக்கிறதா என்று எனக்கு ஆச்சரியமாக
இருக்கிறது. அப்படிப்பட்ட ஏதாவது ஒரு நிலைமை இருக்கு
மானால், அப்படிப்பட்ட இடங்களிலே, இந்தக் குறையை
நிவர்த்தி செய்து, அந்தத் தீர்வை வசூலிப்பது என்பதிலே
எனக்கு உடன்பாடு இருக்கிறது. ஆனால் அந்தச் சொத்து
விற்பனையிலே மார்கெட் வேல்யூ எப்படி நிர்ணயிக்கப்
படுகிறது என்பதை மட்டும் இப்போது சொல்ல விரும்புகிறேன்.
இன்றைக்கு 'கைய்டு லைன் வேல்யூ' என்று அரசாங்கத்திலே
நிலத்தினுடைய மதிப்பைப் போட்டிருக்கிறார்கள். 'கைய்டு
லைன் வேல்யூ' என்பது ஏற்கனவே அரசு ஆணையிலே
தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ''it is not a substitute for
the Markat value'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி
யிருந்தாலும்கூட, சென்ற வருடம் பிப்ரவரி அல்லது மார்ச்
மாதம் என்று நினைக்கிறேன். குறிப்பிட்ட 2 ஆம் தேதியிலே
ஏற்கனவே இருந்த கைய்டுலைன் வேல்யூவைக் காட்டிலும்,
நிலத்தினுடைய வேல்யூவைக் காட்டிலும் 200 அல்லது 250
மடங்கு கைய்டுலைன் வேல்யூ உயர்த்தப்பட்டிருக்கிறது
என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது
என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ஏனென்றால் இன்
றைக்கு இருக்கின்ற சந்தைவிலையைக் காட்டிலும், 'கைய்டு
லைன் வேல்யூ' மிக அதிகமாக இருக்கிறது என்பதையும்
தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு நகரங்களில் வேண்டு
மானால், சில இடங்களிலே நிலத்தினுடைய மதிப்பு உயர்த்தப்
பட்டிருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால்
கிராமப்புறங்களிலே, அதிலும் குறிப்பாக கடந்த நான்கு
ஆண்டுகளாக மழையில்லாமல், விளையாமல் இருக்கின்ற
நிலத்தினுடைய மதிப்பு நிச்சயமாக உயரவில்லை என்பதை
அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய
கடமை என்று கருதுகிறேன். ஆகவே அப்படிப்பட்ட நிலங்
களுடைய மதிப்பு, இந்த கைய்டுலைன் வேல்யூவைவிட பல
மடங்கு அதிகமாக இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.
ஆக இந்த விலைக்குத்தான் பத்திரங்களை வாங்கவேண்டு
மென்று இன்றைக்கு பல்வேறு இடங்களிலே வற்புறுத்தப்
படுகிறது அல்லது அதையும் மீறி பதிந்தால், அந்தப் பத்திரங்கள்
அவர்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேர்வதில்லை. இதைப் பற்றி

[திரு. க. பாரமலை] [1987 மே 11

நான் ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பேசும்
போது குறிப்பிட்டு, அவர்களும் அந்தக் குறிப்பிட்ட நிகழ்
வினைக் குறித்து விசாரிப்பதாகச் சொன்னார்கள். விசாரித்
தார்கள். அதனுடைய முடிவு இன்னும் அறிவிக்கப்படவில்லை
என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்திலே நான்
தெரிவித்துக் கொள்வது, நாம் விதிக்கின்ற முத்திரைத் தீர்வை
என்பதில் தொடர்ந்து இந்த நிலைமை நீடிக்குமேயானால், அந்த
கைட்லைன் வேல்யூவைவிட, இன்றைக்கு இருக்கின்ற நிலைமைக்
கேற்ப நாம் சரியாக மதிப்பீடு செய்யவில்லை என்று சொன்
னால், நாம் வசூலிப்பது முத்திரைத் தீர்வையாக இருக்க
முடியாது. சொத்தின் ஒரு பங்காகத்தான் அரசு பெற்றுக்
கொண்டிருக்கிறது என்கின்ற நிலைமைக்குத்தான் இருக்குமே
தவிர, அது முத்திரைத் தீர்வையாக இருக்காது என்று
சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன். ஆகவே, அந்த மார்க்
கெட் வேல்யூவை நிர்ணயிப்பதிலே ஒரு சரியான அணுகு
முறையை அரசு கடைபிடிக்க வேண்டும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன். சென்ற ஆண்டு இருந்ததைக் காட்டிலும் 2½
சதவீதம் இன்றைக்கு அந்த மார்க்கெட் விலை உயர்ந்திருக்
கின்றது என்று சொன்னால் அந்த அடிப்படையில் அந்த
விலை மாற்றப்பட்டிருக்கின்றது. அதற்கு என்ன ஆதாரங்கள்
..........(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே,
திருப்பித் திருப்பி சட்டப்பேரவையிலே அறிவித்துக்கொண்டிருக்
கிறோம். அந்த வழிகாட்டிக் கொள்கை அங்குள்ள பதிவு அதிகாரி
களுக்கே தவிர பத்திரம் பதிய வருபவர்களுக்கு அல்ல.
அவர்கள் அந்த வழிகாட்டி கொள்கையில் உள்ள மதிப்பீடுக்கு
குறைவாக லேபில் ஒட்டிக்கொடுத்தால் பதிவு செய்ய யாரும்
மறுக்க முடியாது. அப்படி மறுத்தால் நிச்சயமாக நடவடிக்கை
எடுக்கப்படலாம். உத்திரவுகள் போட்டிருக்கிறோம். உறுப்
பினர் சொன்ன அந்த சந்தை மதிப்பாக இருந்தாலும் கூட
இன்கம்டாக்ஸ் 1 இலட்சம் இரண்டு லட்சத்திற்கு மேலே
மதிப்பீடு இருக்குமானால் இன்கம்டாக்ஸ் டிபார்ட்மென்டின்
அனுமதி பெற வேண்டும். அந்தச் சட்டத்தை திருத்த வேண்டும்
என்று சொல்லி மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். அதைத்
தான் உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்று நினைக்கின்றேன்.
அந்த பதிவுத் துறை அதிகாரிகள் யாரையும் கட்டுப்படுத்தக்
கூடாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திற்கு நன்றி
கூறிக்கொள்கிறேன். பத்திரத்தை பதிகிறார்கள். ஆனால்
அந்தப் பத்திரத்தை திருப்பி கொடுப்பதில்லை. 50,000
ரூபாய்க்கு மேலே பத்திரத்தின் மதிப்பு இருக்குமானால்
அதுதான் இன்கம்டாக்ஸுக்கு செல்ல வேண்டும் என்று இருக்
கிறது. ஆனால் அதற்கு குறைவாக இருக்கின்ற பத்திரங்கள்
கூட அவர்கள் திருப்பித் தருவதில்லை என்பதைத்தான் உங்க



[1987 மே 11] [திரு. க. பாரமலை]

ளுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இப்படிப்பட்ட
வைகளை நாம் மனதிலே கொண்டு அந்த மார்க்கெட் வேல்யூவை
தீர்மானிப்பதில் கைட்லைனைத் தீர்மானிப்பதில் ஏதாவது
ஒரு அடிப்படையைப் பின்பற்ற வேண்டும். அதற்கு ஒரு
கால நிர்ணயம் செய்ய வேண்டும். இத்தனை ஆண்டுகளுக்குப்
பிறகுதான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நிர்ண
யிப்பதினால் அது எல்லோருக்கும் உதவிகரமாக இருக்கும்
என்பதை தெரிவித்து என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.
வணக்கம்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 1987 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் பதிவு
செய்தல் என்ற சட்டமுன்வடிவு 1899 சட்டத்தையும் 1908
ஆம் ஆண்டு சட்டத்தையும் திருத்தக்கூடிய வகையிலே 33ஆவது
பிரிவிலே 'ஏ' என்ற பிரிவாக ஒரு திருத்தச் சட்டம் கொண்டு
வரப்பட்டிருக்கிறது. இதிலே குறிப்பிடும்போது முத்திரைத்
தீர்வையை வசூலிக்க முடியவில்லை. இப்போது இருக்கக்கூடிய
முத்திரைத் தாளுடைய பதிவுக் கட்டணத்தை வசூலிக்க
முடியாத நிலை இருப்பதால் இந்த 33 ஏ பிரிவு ஒன்று சேர்க்கப்
படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே இந்த
காரண விளக்கங்களிலே குறிப்பிடுவது குறைவுபடுகின்ற முத்தி
ரைத் தீர்வையையும் வசூலிக்க முடியவில்லை என்று சொல்லப்
பட்டிருக்கிறது. எங்களைப் பொறுத்த மட்டில் ஏமாற்றப்படு
வதையோ அல்லது அரசுக்கு வருமானம் வருவதை தடுப்பதற்
கான நடவடிக்கை எடுப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.
இதிலே குறிப்பிட்டிருப்பது ஆவணம் பதிவு செய்யப்பட்ட தேதியி
லிருந்து மூன்றாண்டுக் கால அளவு வரையிலும் மாவட்டப்
பதிவாளர் குறைவுபடுகின்ற முத்திரைத் தீர்வையை வசூலிக்க
லாம் என்றும், குறைவுபடுகின்ற முத்திரைத் தீர்வையை, அத்
தீர்வையைச் செலுத்தத் கடப்பாடுடைய நபரிடமிருந்து
நிலவருவாய் நிலுவையொன்றைப் போன்று வசூலிக்கலாம்
என்றும் வகை செய்கின்ற இந்தத் திருத்தம் இதிலே சேர்க்கப்
படுகிறது. எனவேதான் ஒரு அதிகாரிக்கு மூன்று ஆண்டுகளுக்கு
முன்னாலே பதியப்பட்ட காலத்திலிருந்த மதிப்பை விட கூடுத
லாக இருக்கின்றது, 3 ஆண்டுகள் கழித்து அவர்களுடைய நினை
விற்கு வந்தாலும் கூட திருப்பி அந்த நபரிடமிருந்து வசூலிக்கக்
கூடிய ஒரு ஆபத்தான நிலைமை இந்தச் சட்டத்திலே இருக்
கிறது. இப்போது கூட முன்னாலே பேசிய மாண்புமிகு
உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல இந்த ஸ்டாம்ப் கட்டணம்
என்பது 100 ரூபாய்க்கு 12 ரூபாய் என்ற நிலை இருக்கிறது.
அப்படி 12 ரூபாய் இருக்கின்ற இந்த நேரத்தில், இந்த ஸ்டாம்ப்
கட்டணத்தை 15 ரூபாயோ அல்லது கூடுதலாகவோ உயர்த்தி
யிருந்தாலும் கூட ஸ்டாம்ப் கட்டணம் உயர்த்தப்பட்டது என்பது
தெரிந்திருக்கும், ஆனால் நம்முடைய அரசைப் பொறுத்த
மட்டில் ஸ்டாம்ப் கட்டணத்தை உயர்த்தா
மலேயே 12 ரூபாய் என்று வைத்துவிட்டு அதற்கு பதிலாக
நிலத்தினுடைய மதிப்பை 100 சதவீதமாக உயர்த்தி, 12

ரூபாய்க்கு ஸ்டாம்ப் வாங்கிய அதே நபர் 24 ரூபாய்க்கு வாங்கக் கூடிய அளவிற்கு மிகத் திறமையாக அந்தக் காரியத்தை நம் முடைய அரசு செய்திருக்கிறது.

(பிற்பகல் 12-40.)

இப்படி 100 சதவிகிதம் உயர்த்தியிருப்பது என்பது எந்த வகையிலும் பொருத்தமானது அல்ல. அதிலும்கூட, எந்தெந்த இடத்தில் எந்த அளவிற்கு அந்த நிலத்தின் மதிப்பு உயர்த்தப் பட்டு இருக்கிறது என்ற தகவலை இந்த அவைக்குக் கொடுக்க வேண்டும் என்று கோரிய நேரத்தில் அவைக்குத் தருகிறோம் என்று அமைச்சரவர்கள்கூட, இங்கே வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு, இந்த உயர்த்திய மதிப்பீடு கைட்லைன்ஸ்-க்காக பதிவாளர்களுக்குத்தான் கொடுக்கப் பட்டிருக்கிறதே தவிர, அவைக்குக் கொடுக்க முடியாது என்று அடுத்து ஒரு தகவலைக் குறிப்பிட்டார்கள்.

நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, ஒரு துணைப் பதி வாளருக்குத் தெரியக்கூடிய அந்த கைட்லைன், அந்த துணைப் பதிவாளர் அலுவலகத்திலே இருக்கக்கூடிய அந்த அலுவலர் களுக்குத் தெரியக்கூடிய அந்த விவரம் இந்த அவை தெரிந்து கொள்ளக்கூடாது என்று மறுப்பது எந்த அளவிற்குப் பொருத்த மானதாக இருக்கும், சரியானதாக இருக்கும் என்று நான் மாண்பு மிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நிலத்தினுடைய மதிப்பு உயர்ந்திருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நிலத்தினுடைய மதிப்பு, அதனுடைய விலை உயர்ந்திருக்கிறது. ஆனால், பொதுவாக, நகரம், கிராமங்கள் முழுவதும் அப்படி உயர்ந்திருக்கிறது என்று நீங்கள் வகைப்படுத்துவது என்பது பொருத்தமானது அல்ல; நியாயமானது அல்ல. நகரங்களிலே நிலத்தினுடைய மதிப்பு ஒரு கிரவுண்டினுடைய விலை பல மடங்கு உயர்ந்திருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

ஆனால், கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில், விவ சாயிகள் தங்களிடம் இருக்கக்கூடிய நிலங்களை, கடனுக்காகவோ, குடும்பச் செலவிற்காகவோ, தங்களுடைய பிள்ளைகளுக்கு திருமணம் செய்வதற்காகவோ, நிலத்தை விற்பதற்கு முன் வந்தால்கூட, வாங்குவதற்கு முடியாத நிலையில், அந்த நிலத்தை விற்க முடியாமல், குறைந்த விலைக்கு விற்கவேண்டிய நிலையிலே அந்த கிராமப்புற மக்கள் அவதிக்கு ஆளாகி இருக்கும்போது, நிலத்தினுடைய மதிப்பை இரண்டு மடங்காக உயர்த்தும்போது— சென்னை மாநகரத்திற்கும் அதுதான்; ஒரு கிராமத்தில் இருப் பதற்கும் அதுதான் என்று தீர்மானித்து இருப்பது நியாயம் வழங்கக்கூடியதாக இருக்காது.

எனவே, இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து, அரசு, நகரங்களுக்கு உயர்த்தியிருக்கக்கூடிய விலை மதிப்பு வைத்துக் கொள்ளுங்கள்; கிராமங்களுக்கு உயர்த்தி இருப்பதை



136534
அமைச்சர் அவர்

ரத்துச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு
களை நான் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொண்டு
களுக்குப் பிறகும் கூட, பாக்கி இருப்பதை நிலத்தின் விலை
யாகக் கருதி வசூலிக்கலாம் என்று இதிலே இருப்பது என்பது
மாற்றப்படவேண்டும்; பத்திரம் பதியும்போது என்ன நில
மதிப்பு இருக்கிறதோ, அந்த மதிப்பை வைத்து அதற்குரிய
கட்டண வசூல் என்பதோடு நிறுத்தப்படவேண்டுமே தவிர,
மூன்று ஆண்டுகள் வரையிலும்கூட, அவர்கள் உயர்ந்திருக்கிறது
என்று கருதினால் அந்த ஸ்டாம்ப் வால்யூவை மறுபடியும்
அதிகப்படுத்தி வசூலிக்கலாம், என்ற அந்த முறை மாற்றப்பட
வேண்டும், திருத்தப்படவேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன்,
வணக்கம்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 1987 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் மற்றும்
பதிவு செய்தல் தமிழ்நாடு திருத்தச் சட்டத்தின் மீது ஒரு சில
கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். நமது அமைச்சர்
அவர்கள் கொண்டு வந்திருக்கிற நோக்க காரண விளக்கவுரை
யில்—பத்திரப் பதிவு என்பது, இப்போது அறிவித்திருப்பது,
பொதுவாகவே வாங்குகிறவர்களுக்கு என்னவென்றே புரிய
வில்லை. காரணம் என்னவென்று கேட்டால், முன்பு ஒரு
1,000 ரூபாய்க்கு சொத்து வாங்குவது என்றால், 120 ரூபாய்க்கு
பத்திரம் வாங்கிக் கொடுத்து விடுவார்கள். அதை எழுதிக்
கொண்டு போய் சப்-ரிஜிஸ்டிரார் ஆபிசிலே ரிஜிஸ்தர் பண்ணி
விட்டு வந்துவிடுவார்கள். அதுதான் வாங்குகிறவர்களுக்குத்
தெரியும். அப்படியென்றால் 100 ரூபாய்க்கு வாங்கினால் 12
ரூபாய் என்று தெரியும். இப்போது எப்படி அறிவித்திருக்கிறார்
கள் என்று கேட்டால், அந்த நிலத்தினை ஒரு சர்வே நம்பரிலே
அங்கே இருக்கக்கூடிய தாசில்தார்கள், ரெவினியூ இன்ஸ்பெக்
டரை அனுப்பி அந்த நிலத்தினுடைய சர்வே நம்பரைக் கேட்டு
அந்த இடம் 50,000 ரூபாய் என்று அவர் என்ன சர்டிபிகேட்
கொடுக்கிறாரோ, அந்த 50,000 ரூபாய்க்கும் இப்போது பத்திரம்
வாங்கவேண்டியதாகிறது. 50-ஆயிரம் ரூபாய்க்கும் பத்திரம்
கிடைக்கவில்லையென்றால்—இப்போது பத்திரம் கிடைக்க
வில்லை—கிடைக்கவில்லையென்றால் ஒரு குறிப்பிட்ட தொகைக்
குப் பத்திரம் வாங்கிக்கொண்டு போனால் அதிலே சப்-ரிஜிஸ்
திரார் ரிஜிஸ்தர் பண்ணிவிட்டு, பாக்கித் தொகையைப் பூராவும்,
அங்கேயே, சப்-ரிஜிஸ்திரார் ஆபீசிலேயே கட்டச் சொல்
கிறார்கள்.

இப்போதிருக்கிற நிலவரத்தைப் பார்த்தால், அதிகாரிகள்
எந்தெந்த இடத்திலே எப்படி நினைக்கிறார்களோ அப்படி
எல்லாம் விலையை உயர்த்தமுடியும், குறைக்கவும் முடியும்
என்பது அனுபவத்தில் தெரிகிறது. இப்போது அறிவித்ததற்குப்
பிறகு எங்களுக்கு நடைமுறையிலே அது தெரிகிறது. இப்போது
ஒரு அம்மாள் நிலம் வாங்கி மூன்று வருடம் ஆகிவிட்டது. அவர்கள்
வாங்கியது—36 ஆயிரம் ரூபாய். இப்போது அந்த மார்க்கெட்

ரேட்டை கூடப் போடுகிறபோது, அவர்கள் ஒரு
இலட்சம் ரூபாய் என்று எழுதிவிட்டார்கள். ஒரு இலட்சம்
ரூபாய் என்று எழுதியவுடன்— வாங்கியது ஒரு ஏக்கர் நிலம்—
இப்போது எப்படி திருப்பி அந்தப் பணத்திற்கு பூராவும் பத்திரக்
கட்டணம் அந்த அம்மாளால் கட்டமுடியும்?

ஆகவே, கிராமத்திலே பெரிய குழப்பமான சூழ்நிலை இருக்
கிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வ
தெல்லாம், இப்போது 120 ரூபாய் என்று இருக்கிறது. பத்திரக்
கட்டணத்தை உயர்த்தவேண்டுமானால், இப்போதே எவ்வளவு
ரூபாய் என்று சொல்லிவிடுங்கள். 120 ரூபாய், 130 ரூபாய்,
150 ரூபாய், 160 ரூபாய் என்று நீங்கள் அறிவித்தால்தான்
கிராமத்திலே உள்ள விவசாயிகளுக்கு 'இவ்வளவு
ரூபாய் நாம் கூட கொடுக்கப் போகிறோம், இவ்வளவு
சர்க்காரிலே கூட அறிவித்திருக்கிறார்கள்' என்று தெரியும்.
இப்போது அதிகாரிகள் இஷ்டத்திற்கு விட்டாகிவிட்டது. ஒரு
சர்வே நம்பர் 1 இலட்சம் ரூபாய் என்றால் இன்னொரு சர்வே
நம்பர் ரூபாய் 50,000 என்று இப்போது அவர்கள் சொல்கிறபடி
தான் பத்திரம் வாங்கவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

ஆகவே, முன்பே அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகச்
சொன்னார்கள். இப்போது நான் அமைச்சர் அவர்களைக்
கேட்டுக் கொள்வதெல்லாம் இதுதான் கிராமப்புறத்திலே பெரும்
பகுதி படிக்காதவர்கள். இது ஒரு குழப்பமான சூழ்நிலை. அதிகாரி
கள் யாருக்கு தேவைப்படுகிறது என்று நினைக்கிறார்களோ, அவர்
களுக்குக் குறைத்துக் கொடுக்கலாம், தேவையில்லை என்று
நினைத்தால் கூடப் போடலாம் என்ற அபாயம் இருக்கிறது.
எனவே, அமைச்சர் அவர்கள் இதை உணர்ந்து, எதிர்காலத்தில்
பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று; மூன்று வருடம்—இந்த வருடம்
பதிவுபண்ணியாயிற்று என்று சொன்னால், மூன்று வருடத்திற்குப்
பிறகும் கூட மார்க்கெட் வால்யூ கூடப் போனால் அதை வசூல்
பண்ணலாம் என்று இப்போது உத்தரவு....

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, வசூலிக்கிற கால கட்டத்தைத்தான்
3 வருஷமாக ஆக்கியிருக்கிறோமே தவிர 3 வருஷத்தில் எவ்வளவு
உயர்கிறதோ அதை வசூலிக்கச் சொல்லவில்லை.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவ
அவர்களே, இதிலே 3 வருஷம் லிமிட் என்றிருக்கிறது.
நகரத்தில் நிலம் விற்பவர்களுக்கும் வாங்குபவர்களுக்கும். மேலும்
மத்தில் நிலம் விற்பவர்களுக்கும் வாங்குபவர்களுக்கும், கிரா
இருக்கிறது. நகரத்தில் ஒரு கட்டிடத்தை ரூ. 5 லட்சத்
திற்கு வாங்கி, அதற்கு மேல் 3 லட்சம் ரூபாய் ஆதாயத்திற்கு
விற்கிற நிலைமை இருக்கும். ஆனால் கிராமங்களைப் பொறுத்த
வரையில் 90 சதவீதம் அநேகமாக பல்வேறு காரியங்களுக்காகத்



தான் விற்கிற அல்லது வாங்குகிற நிலைமை இருக்கிறது. எனவே
அரசாங்கம் அவர்கள் நிலைமையைக் கருதிப் பார்க்க வேண்டும்.
எனவே கிராமத்தில் இருப்பவர்கள், அங்கே விற்க, வாங்கக் கூடி
யவர்கள் புரிந்து கொள்ளத் தக்க வகையில் வசதியாக இந்தச்
சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்று
கேட்டு நான் அமைகிறேன்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்திய முத்திரைத்தாள் மற்றும் பதிவு செய்தல்
சட்டமுன்வடிவின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூறுவதற்கு
வாய்ப்பளித்திருக்கிறீர்கள். இந்தச் சட்ட முன்வடிவை
ஆய்ந்து பார்க்கிற நேரத்தில் இதை இரண்டு வகையாகப்
பிரித்திருப்பதைப் பார்க்க முடிகிறது. சென்னை, மதுரை,
கோவை, சேலம், திருச்சி ஆகிய நகரங்களுக்கு 13 விழுக்காடு
கட்டணத்தொகை என்றும் எஞ்சிய பகுதிகளுக்கு 12 விழுக்
காடு என்ற அடிப்படையில் முத்திரைத் தாள் வாங்க வேண்டு
மென்றும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் உங்களை
மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.
எனக்கு முன்னாலே பேசியவர்கள்கூட எடுத்துச் சொன்னார்கள்.
இது ஒரு கட்டணமாகக் கருதப்பட முடியாது. இதைப்
பொறுத்த வரையில் ஒரு பங்காகத்தான் கருத வேண்டும். 12
விழுக்காடு என்றால் 8-ல் ஒரு பங்காகிறது. மொத்த சொத்
தின் மதிப்பில் 8-ல் ஒரு பங்கை பதிவுத் தாள் என்கிற வகையில்
வாங்குவது நியாயம்தானா என்பதை அரசு எண்ணிப் பார்க்க
வேண்டும்.

குறிப்பாக தற்போது நகர்ப்புறங்களில் வாழ்கிறவர்கள் யார்
என்பதைப் பார்த்தால், கிராமப்புறங்களில் சுகாதார முறையில்
வாழ முடியாத நிலையில் அங்கே தங்களுக்கு இருக்கிற சொத்தை
யெல்லாம் விற்றுவிட்டு, கடைசியாக நகரத்திற்கு வந்து சுகமாக
வாழலாம் என்ற அற்ப ஆசையோடு வருகிறார்கள். இங்கே
வந்து ஒரு பிளாட் வாங்குகிறார்கள். அப்படி வாங்கும்போது
அதன் மதிப்பில் 8-ல் ஒரு பங்கை பதிவுத்தாள் கட்டணமாக
வசூலிப்பது என்பது நியாயம்தானா என்பதை நீங்கள் எண்ணிப்
பார்க்க வேண்டும். இப்படி வாங்குகிறவர்கள் யார்? உழைக்
கிற வர்க்கத்தில் இருப்பவர்கள்தான் ஒரு பிளாட் வாங்கு
கிறார்கள். கிராமத்தில் இருக்கிற தங்கள் கொஞ்சநஞ்சம்
சொத்தையும் விற்றுவிட்டு இங்கே நகரத்திற்கு வந்து நன்
றாக வாழலாம் என்ற ஆசையோடு வருகிறார்கள்.
உங்களுக்குத் தெரியாதா? கள்ளப் பணம் வைத்திருப்பவர்கள்,
கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள், மற்றும் வெளிநாடுகளுக்கு
அதிகாரிகளை அனுப்பி ஸ்விஸ் பேங்கில் போடுகிற அரசியல்
வாதிகள், ஆகியவர்கள் எல்லாம் நிச்சயமாக ஒரு பிளாட்
அல்லது ஒரு அப்பார்ட்மென்ட் வாங்குவதில்லை. மொத்தமாக
ஒரு பிளாக்கையே வாங்குகிறார்கள் அல்லது பெரிய பங்களாவை
20 இலட்சம் அல்லது 30 இலட்சம் அல்லது 1 கோடி ரூபாய்,
என்று கொடுத்து வாங்குகிறார்கள். அவர்கள் 10 இலட்சம்,

20 இலட்சம் கட்டணம் செலுத்துவதைப் பார்க்கலாம். ஆனால்
அவர்களுக்கு கட்டணத்தை உயர்த்தாமல், ஏழை எளிய
சாதாரண மக்களுக்கு கட்டணத்தை உயர்த்தியிருக்கிறீர்களே,
அது நியாயம்தானா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.
சாதாரண மக்கள்தான் நகரத்தில் ஒரு பிளாட் வாங்கு
கிறார்கள். அவர்களுக்கு கட்டணத்தை உயர்த்துவது நியாயம்
தானா என்றுதான் கேட்கிறேன். கள்ளப் பணமும், கறுப்புப்
பணமும் வைத்திருப்பவர்கள்தான் இன்றைக்குப் பிழைக்
கிறார்கள். இதை நான் மறைமுகமாகச் சொல்லவில்லை.
ஆனால் அப்பாவித்தனமான, கடைசி கட்டத்தில் இருக்கிற
அரசு ஊழியர்கள், ஓய்வு பெறுகிற நேரத்தில் ஒரு வீடு
வாங்கலாமா என்று எண்ணி ஒரு பிளாட், அல்லது ஒரு அப்பார்ட்
மென்ட்டை வாங்குகிறார்கள். தங்கள் பணியின் கடைசியில்
பெற்ற பணத்தைக்கொண்டு ஒரு பிளாட் வாங்கும்போது
அவர்களுக்குத் தண்டனை அளிப்பதுபோல் இவ்வளவு உயர்த்தி
யிருக்கிறீர்களே, இது நியாயம்தானா என்று எண்ணிப் பாருங்கள்.

குறிப்பாக சென்னை தவிர, மற்ற இடங்களுக்கு 12 விழுக்
காடு அதாவது ஒரு விழுக்காடுதான் குறைத்திருக்கிறீர்கள்.
சென்னை; கோவை, மதுரை, போன்ற இடங்களுக்கு 13 விழுக்
காடு என்று போட்டுவிட்டு, மற்ற இடங்களுக்கு 12 சதவீதம்
என்று போட்டிருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாயவரம், திருவாரூர் போன்ற இடங்களில் மனைக்கு
இருக்கும் விலைக்கும், இங்கே சென்னையில் இருக்கிற விலைக்
கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. அங்கே ஒரு மனையை
ரூ. 5,000 முதல் 6,000-க்குள் வாங்கிவிட முடியும். ஆனால்
சென்னையில் ஒரு இடம் வாங்க ரூ. 5 இலட்சம் செலவாகும்.
சாதாரணமாக 20 மடங்கு சென்னையில் அதிகமாக இருக்கிறது.
எனவே திருவாரூருக்கும், மாயவரத்திற்கும் விதிக்கப்பட்டி
ருக்கிற இந்தத் தண்டக்கட்டணத்தை, நீங்கள் மறுபரி
சீலனை செயய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் (மணி
யடிக்கப் பெற்றது).

அதிகாரிகளாக இருப்பவர்கள் கடைசிக் கட்டத்தில் சென்
னையில் ஒரு மனை வாங்கும்போது, அல்லது ஒரு அப்பார்ட்மென்ட்
வாங்கும்போது அவர்களிடம் தண்டக் கட்டணமாக வசூலித்து
விடாதீர்கள். வாழ்க்கையின் கடைசிக் கட்டத்தில் ஓய்வு
பெற்ற பிறகு 5, 10 ஆண்டுகள் நிம்மதியாக வாழ வேண்டுமென்று
நினைக்கும் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள் ஒரு
பிளாட் வாங்கும்போது, இந்த அளவுக்குத் தண்டக் கட்டணம்
செலுத்தத்தான் வேண்டுமா என்று எண்ணிப் பாருங்கள்.
குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்களும், சமுதாயத்தில் கீழ் மட்
டத்தில் உள்ளவர்களும், வசதி அற்றவர்களும் வீடு வாங்க
நினைத்தால், அவர்களுக்கு 8-ல் ஒரு பங்கு முத்திரைத் தாள்
என்று வாங்குவது நியாயம்தானா? எனவே, தயவு செய்து





உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஒரே ஒரு வீடு அல்லது ஒரே ஒரு அப்பார்ட்மென்ட், அல்லது ஒரு போர்ஷன் வாங்குகிறவர்களுக்கு, தயவு செய்து இந்த முத்திரைத் தாள் கட்டணத்திலிருந்து விதி விலக்குத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், அவர்களின் பொருளாதார நிலையைக் கணக்கில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியத்திலே பேசுவதை திரும்பப் பேச வேண்டுமா? அதையே திரும்பப் பேச வேண்டாம்.

**திரு. மா. மணிமாறன் :** அதை மறுபரிசீலனை செய்யுங்கள். இதைக் கட்டாயப்படுத்துகிறார்கள். உச்சவரம்பு சட்டத்தின் கீழ் எடுக்கும் நிலங்களுக்கு நஷ்டஈடு எவ்வளவு கொடுக்கிறார்கள்? அந்த நஷ்டஈட்டுக் கணக்கை எடுத்துக் கொள்ளுங்கள். இரண்டு பகுதி வேண்டுமென்றாலும் கட்டணம் வசூலித்துக் கொள்ளுங்கள், நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. நீங்கள் நஷ்டஈடு கொடுக்கும்போது ஒரு விலை, ஏழைகள் வாங்கும்போது ஒரு விலை என்று இந்த ஆட்சியில் ஏன் இரட்டை வேடம் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பாரமலை, திரு. வீரய்யன், திரு. மணிமாறன் ஆகியவர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். வழிகாட்டி கொள்கை பற்றியதற்கும், இந்தச் சட்டத்திருத்தத்திற்கும் சம்பந்தமில்லை என்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிவு செய்பவர்கள் தவறான தகவலைத் தந்து கட்டவேண்டிய உரிய கட்டணத்தைக் கட்டாமல் தப்பித்துக் கொள்வதை தண்டிக்க முதலிலே இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. குறைந்த மதிப்புள்ள சொத்து என்று காட்டி குறைந்த கட்டணத்தைக் கட்டிவிட்டு, தப்பித்துவிட்டு பிறகு சாதாரண தவறு என்று திருத்தம் கொடுத்து, ரெக்டிபிகேஷன் என்று சொல்லி கட்டணம் கட்டுவதிலிருந்து தப்பிப்பவர்களை கண்டுபிடித்து தண்டிக்க, இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அது மாத்திரமல்லாமல் நிதித் துறை சாரா முத்திரைத் தாள்களை பயன்படுத்துவதில் உள்ள ஒழுங்கீனச் செயல்களை தடுத்து ஒழுங்குபடுத்த இந்த திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு இடத்தை வாங்கி பல அடுக்கு மாளிகையாகக் கட்டி Flat-டாக கட்டி நிலத்தை வாங்கியவர்கள் இன்றைக்கு தனித்தனியாக வீடுகள் கட்டி உடன்படிக்கை என்ற பெயரால்—உடன்படிக்கை என்றால் 1908 ஆம் ஆண்டு சட்டத்தின்படி பதிவு செய்யப்படத் தேவையில்லை என்பதால்—அதை வைத்துக்கொண்டு உண்மையிலேயே கன்வேயன்ஸ்

செய்து தருகிறார்கள் என்றாலும், உரிமைகளை அவர்கள் இன்னொருவருக்குக் கொடுக்கிறார்கள் என்றாலும் அந்த உரிமை மாற்றத்திலிருந்து உடன்படிக்கை என்ற போர்வையில் தப்பியவர்களை தண்டிக்கவும் இந்தத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது. மேலும் ஏற்கெனவே முறைப்படி ஆவண எழுத்தாளர்கள் பட்டியல் இருக்கும்போது, அந்த பட்டியலில் இல்லாதவர்கள் பதிவு செய்யும் வளாகத்திலிருந்து அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் ஏமாற்றத்தை தடுக்கவும் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

வழிகாட்டு முறை என்பது பரமரகசியமானது அல்ல. அதிகாரிகளுக்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களில் அதனாலே கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இது கொள்கை முடிவாகும். அதைப் பற்றி மாண்புமிகு முதல்வரிடம் தெரிவித்து அது பற்றி இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். நகர்ப்புறங்களில் உள்ள ஏமாற்று நிலைகளைத் தடுக்க பொதுவாக இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை சட்டமாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1987 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் மற்றும் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றன.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் மற்றும் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.





### 1. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஐ) பதவி நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர்களின் மேல் முறையீடு தொடர்பாக உச்ச நீதிமன்றம் அனுப்பியுள்ள அறிக்கையை ஏற்காமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு

I want to inform the Hon. Members of this House that I have received today by post from the Supreme Court of India a notice in regard to the Appeal filed by certain expelled Members of this House against the judgement of the Madras High Court upholding the expulsion of the Members from the House, informing that the application will be listed before the Supreme Court on 20th July 1987.

As per the Constitutional provisions and the conventions followed in this House, I feel that I cannot be and do not propose to be subjected to the authority of any Court in respect of the proceedings of this House. Hence I am not going to respond to the notice.

A similar notice has also been received by the Secretary, Legislative Assembly. I am directing him not to respond to the notice s the matter in question relates to the proceedings of the House.

However, I request the Hon. Minister for Law to instruct the Advocate-General, Tamil Nadu, to apprise the Supreme Court of the correct legal and Constitutional position in the matter.

(ஓ) சென்னை மாநகர் காவல் (மதுரை மாநகருக்கும் கோயம்புத்தூர் மாநகருக்கும் நீட்டிப்பு சட்ட முன்வடிவு, 1987 (அ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1987ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல் (மதுரை மாநகருக்கும் கோயம்புத்தூர் மாநகருக்கும் நீட்டிப்பு) சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

### 2. அரசினர் சட்டமுன் வடிவுகள்—தொடர்ச்சி.

சென்னை மாநகர் காவல் மதுரை மாநகருக்கும் கோயம்புத்தூர் மாநகருக்கும் நீட்டிப்பு சட்டமுன் வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987-ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல் (மதுரை மாநகருக்கும் கோயம்புத்தூர் மாநகருக்கும் நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (*சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

---

*1987 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[1987 மே 11

திரு' அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர
வர்களே, சென்னை நகரில் எப்படி கமிஷனர் அவர்களுடைய
நிர்வாகத்தின்கீழே காவல் துறை இயங்குகிறதோ அதைப்போல
மதுரை, கோவை நகர்களிலும் இருக்க வேண்டுமென்ற விஸ்த
ரிப்புக் கொள்கை வரவேற்கக்கூடிய ஒன்று. திராவிட முன்
னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த மசோதாவை நான் மனப்
பூர்வமாக வரவேற்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு
உங்கள் மூலமாக ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். நம்
சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கத்தான், சரியான நியாயம் வழங்
கத்தான் காவல் துறை சிறப்பாகச் செயல்பட வேண்டும். ஆனால்
பல்வேறு சம்பவங்கள் குறித்து நான் பேச வேண்டுமென்று விரும்
பினாலும், நேரமின்மை குறித்து, ஒன்றிரண்டு சம்பவங்கள் குறித்து
அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்றைக்கு
பல்வேறு புகார்கள் கொடுக்கப்பட்டும்கூட, சில முக்கியமான
பிரச்சினைகள் விசாரணைக்கு எடுக்கப்படவில்லை. என்னு
டைய தொகுதியைச் சேர்ந்தஒரு வாக்காளர், பெயர் ரவி. சிந்தா
திரிப்பேட்டை முத்தியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர்.
19/1 விலாசத்தில் இருக்கிறார். ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த
வர். கீழ்புத்தூர், வட ஆற்காடு மாவட்டம், வந்தவாசி
தாலுக்கா—வீட்டு வேலைக்காக 14—1—1987-ல் ஒருவர் அழைத்
துச் செல்கிறார். 16—1—1987-ல் அவர் கிணற்றிலே விழுந்து,
மருத்துவ மனையிலே சீரியசாக இருப்பதாக அவருடைய தம்பி
மோகனுக்கு தகவல் வருகிறது. ஆனால் அவருடைய சாவில்
சந்தேகம் இருப்பதாக அவருடைய தம்பி மோகன் வேலூர்
எஸ்.பிக்கு 5—2—1987-ல் புகார் கொடுத்துள்ளார். தெள்ளாறு
லோக்கல் போலீஸ் ஸ்டேஷனில் 18—1—87-ல் புகார் கொடுத்
திருக்கிறார். சீப்-செக்ரட்டரியிடமும் புகார் கொடுத்திருக்கிறார்.
இது குறித்து விசாரித்து, இது கொலையா, தற்கொலையா,
குற்றவாளி யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று அமைச்
சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தனஞ்செயன் என்ற ஒருவர். தகப்பனார் கிருஷ்ண
சாமி, எண் 30, எஸ்.பி. எஸ். மூன்றாவது தெரு, இராயப்
பேட்டையில் வசிக்கிறார். அப்பல்லோ மருத்துவமனையில் ஹவுஸ்
கீப்பிங் டிப்பார்ட்மெண்டில் வேலை பார்த்தார். 2—4—87
வேலைக்குப் போனார். 3—4—87 அன்று நுங்கம்பாக்கம்
லேக் ஏரியாவில் பிணமாகக் கிடக்கிறார். பிணம் அடையாளம்
கண்டுபிடிக்கப்பட்டு, போஸ்ட் மார்ட்டம் செய்யப்பட்டு உறவினர்
களிடம் ஒப்படைக்கப்பட்டது. எப் 3 நுங்கம்பாக்கம் ஆய்
வாளர் விசாரணை செய்யாமல், அனாதைப் பிணம் என்று
தாசில்தாருக்கு ரெபர் செய்யப்பட்டதாக என் தொகுதியைச்
சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். இது குறித்து அமைச்சரவர்கள்
சரியான விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கி
றேன்.



1987 மே 11] [திரு. அ. ரகுமான்கான்]

அடுத்து, இன்னும் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.
நம்முடைய அரசாங்கம் சமூக விரோதிகளை தேசிய பாதுகாப்பு
தடைச் சட்டத்தில், குண்டர்கள் சட்டத்தில் கைது செய்வதை
வரவேற்கிறேன். தப்பு செய்பவர்கள் கைது செய்யப்படுகிறார்
கள். ஆனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் திராவிட முன்
னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நகர மன்ற உறுப்பினர், இளைஞர்
அணியைச் சேர்ந்தவர் ராஜா உசேன் என்பவர். அவர் எம்.சி.யாக
இருக்கிறார். போலீசார் அவர்மீது வழக்கைப் போட்டு, காலை
முறித்துவிட்டார்கள். சென்னையிலே மருத்துவம் பார்த்தார்.
திடீரென்று நாங்களெல்லாம், அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள்
எல்லாம் ஆர். டி. ஓ. விசாரணை செய்ய வேண்டும், போலீசார்
வன்முறை செய்திருக்கிறார்கள் என்று சொல்லிய நேரத்தில்,
விசாரணை செய்வதாக ஒத்துக்கொண்டார்கள். ஆனால் அங்கே
நகர மன்ற உறுப்பினராக இருக்கக்கூடியவரை திடீரென்று குண்
டர்கள் சட்டத்தில் கைது செய்திருக்கிறார்கள். இது நியாயமா
என்று பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல தேசிய பாதுகாப்புச் சட்டத்திலே—சதாசிவம்,
இராமசாமி என்று நீதிபதியாக இருக்கிறார்கள் . . . . . . . . . . .

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, கொடுக்கப்பட்டிருக்கின்ற மசோதாவில் மதுரைக்கும்,
கோவைக்கும் போலீஸ் கமிஷனர் நியமனம் நீட்டிக்கப்பட்டிருக்கி
றது. மாண்புமிகு உறுப்பினரவர்கள், இராமநாதபுரம், திரு
நெல்வேலி என்று போய்க்கொண்டே இருக்கிறார்கள். அது
பில்லிலே வருகிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவரை பேசியது
போதும்.

(பிற்பகல் 1-00)

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கோவை நகரத்தை மாநகராட்சியாக அதனுடைய
தரத்தை உயர்த்தி மாநகராட்சியாக ஆக்கப்பட்டு அந்த நகரத்தி
னுடைய வளர்ச்சிக்காகவும் பல்வேறு திட்டங்களை செயல்
படுத்தி வருகின்ற இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்களுக்கு அந்த நகர மக்களின் சார்பிலே நன்றியைத் தெரி
வித்துக்கொள்கிறேன். அந்த மாநகராட்சிக்கு, காவல்துறையின்
பொறுப்பிலே கமிஷனர் அந்தஸ்திலே ஒருவர் நியமிக்கப்படு
கின்ற இந்த சட்டத்தை நான் வரவேற்கின்றேன். இந்த சட்டத்
திற்குட்பட்டு வருகிறபோது நிச்சயமாக நடத்தப்படுகின்ற குற்றங்
கள், வெடிகுண்டு குற்றங்கள், அரசியல் போர்வையிலே ஆர்ப்
பாட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் என்ற பெயரிலே நடக்கின்ற
பல்வேறு வன்முறைகள், இந்த மாதிரி சம்பவங்களைக் கட்டுப்
படுத்த இது வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்த
வகையிலே கமிஷனர், கோயம்புத்தூர் சிட்டி என்று கொண்டு வரு
கின்றபோது, நடைமுறையிலே அதனுடைய எல்லையை வகுக்கிற
போது, நகர் பகுதிக்கு ஒட்டியிருக்கின்ற பகுதிகளை மட்டும்
சிட்டி கமிஷனர் அவர்கள் ஜூரிஸ்டிக்ஷனிலே கொண்டுவரவேண்

[திரு. மா. சின்னராசு] [1987 மே 11

டும். கிராமப் பகுதிகளை இத்தோடு சேர்ப்பதன் காரணமாக பல்வேறு நிர்வாக சிக்கல்கள் ஏற்படும். அந்த வகையிலே நிர்வாக சிக்கல்கள் ஏற்படுத்தாமல் பொதுமக்களுக்கு எந்த அசௌகரியமும் ஏற்படாமல் கோவை சிட்டியிலே புறக்காவல் நிலையங்களை அதே தன்மையிலே விட்டுவிட்டு முழுக்க முழுக்க நகர்ப்பகுதி மட்டும் இந்த சிட்டி கமிஷனர் பொறுப்பிலே கொண்டுவரவேண்டும் என்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவைக்கும் மதுரைக்கும் கமிஷனர்களை நியமிப்பது என்பது நாம் வரவேற்கக்கூடிய விஷயம். இங்கே இன்று கோவை மாநகராட்சியிலே சட்டம் ஒழுங்கை அமுலாக்குவதற்கு பலவிதமான அதிகாரிகள் பிரிவு பிரிவாக செயல்படுத்துவதனுடைய கஷ்டங்களை அங்கே இருக்கின்ற ஜனங்கள் அனுபவிக்கின்றார்கள். இப்படி ரௌடித்தனமும் மக்கள் விரோத சக்திகளும் கடுமையாக செயல்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய நகரம்என்பதைஇங்கேபோலீஸ் மானியத்திலே பேசுகின்றபோது சொன்னார்கள். ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். திருமதி இந்திரா அவர்கள் படுகொலை செய்யப்பட்ட அன்றைக்கு கோவை மாநகரத்தில் நடந்திருக்கின்ற பயங்கரமான அக்கிரமத்திற்கு எந்த விதமான ஈடு இணை கிடையாது அப்படிப்பட்ட ஒரு பயங்கரம் நடந்தது. ஒரு கோடி ரூபாய் சொத்துக்கள் நாசம் செய்யப்பட்டிருக்கின்றன. சென்ட்ரலைஸ்ட் எபக்டிவ் போலீஸ் கன்ட்ரோல் அன்றைக்கு இல்லாததன் விளைவு இந்த ரௌடி கூட்டத்தினுடைய கொள்ளையாகவே இருந்தது. அவர்கள் ஆண்டுகொண்டிருந்தார்கள், சில மணி நேரத்திற்கு என்று சொல்லலாம். ஆனால் ஒரு சென்ட்ரலைஸ்ட் போலீஸ் நிர்வாகம் முறையாக செயல்பட்டிருந்தால் அது நடந்திருக்க முடியாது. இது ஒரு உதாரணம். ஆகவே இப்படிப்பட்ட ஒரு நிலை நல்லது. மற்றபடி தனுடைய எல்லை விஸ்தரிப்பு என்பதெல்லாம் 'ஆடட் ஏரியாஸ்'. ஏழு லட்சம், எட்டு லட்சம் மக்கள் வந்திருக்கும்படியான கோயம்புத்தூர் மாநகராட்சி ஆக இருக்கிறது. அந்த மாநகராட்சி எல்லைக்குள்ளே அவர்களுடைய அதிகாரம் இருப்பது நல்லது. ரூரல் பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்போய், அங்கே போலீஸ் அதிகாரம், அதில் இவர்களுடைய என்க்ரோச்மெண்ட் இருக்க அவசியம் இருக்காது. அந்த முறையில் அதை முறைப்படுத்த வேண்டும். அங்கே போலீஸ் நிர்வாகம் நல்ல முறையிலே நடந்து சமாதானத்தையும் பத்திரத்தன்மையையும் ரௌடிக் கூட்டத்தினுடைய, திருட்டுக் கூட்டத்தினுடைய பயம் இல்லாமல் வழிமுறைகள் வகுக்கப்படும் என்று நம்பி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, கோவை நகரங்களிற்கு கமிஷனர் அளவிலே அதிகார வரம்பை அவர்களுக்கு உயர்த்துகின்ற நோக்கத்தைப் பற்றி இந்த அவைக்குறிப்பிலே தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ஒன்றை சொன்னார்கள். தற்போது இருக்கின்ற கார்ப்பரேஷன் எல்லைக்கு அப்பால் சென்று கிராமப்புறப் பகுதிகளை சேர்க்கக் கூடாது



1987 மே 11] [திரு. சி. பொன்னையன்]

என்று சொன்னார்கள். The jurisdiction falling within the corpora-
tion limits alone will be taken into account. அது ஏற்கனவே முடிவு
செய்யப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை.
மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் கூறுகிறபோது சில
வற்றை சொன்னார்கள். அதைக் குறித்து அரசு கவனிக்கும்.
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சட்ட முன்வடிவை
நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள
கேள்வி :

" சென்னை மாநகர் காவல் (மதுரை மாநகருக்கும்
கோயம்புத்தூர் மாநகருக்கும் நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்ட
மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 27/1987) ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை, அட்டவணை ஆகியவை பேர
வையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின்
முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி
கிறேன் :

" சென்னை மாநகர் காவல் (மதுரை மாநகருக்கும்
கோயம்புத்தூர் மாநகருக்கும் நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்ட
மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 27/1987) நிறைவேற்
றப்பெறவேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்
வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆஆ) அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்)
திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி
கிறேன் :

" 1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு, அங்கீகரிக்கப்பட்ட
தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்
வடிவு*(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1987)
ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும். "

* 1987 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1987 மே 11

திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளை முறைப்படுத்துவது
சம்பந்தமான சட்டத் திருத்தங்களை இங்கே அவையில் மாண்பு
மிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்
திருக்கிறார்கள். இந்தத் திருத்தச் சட்டத்தை நான் வரவேற்
பதோடு முதற்கண் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழை
கின்றேன். இன்றையதினம் தமிழகத்தின் முதலமைச்சர் மாண்பு
மிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏழையெளிய மக்களுக்கு எளிய
முறையில் கல்வி வசதிகள் கிடைத்திட வேண்டுமென்பதற்காக
கல்லூரிப் படிப்பில் இருக்கின்ற பாடத் திட்டத்தை உயர்நிலைப்
பள்ளியிலே கொண்டு வருகின்ற நல்ல நோக்கத்தோடு பிளஸ் 2
பாடத் திட்டத்தை பள்ளிகளிலேயே உருவாக்கி தந்தார்கள்.
அப்படி உருவாக்குகின்ற நேரத்தில் தனியார் மற்றும் சிறுபான்
மையினர் பள்ளிகளைப் பொறுத்தவரையில் அங்கே போதிய
இட வசதியில்லாவிட்டாலும், மைதான வசதிகள் விளையாடு
வதற்காக இல்லாவிட்டாலும், பள்ளிகள் முறையாக பெற வேண்
டிய அனுமதியை பெறாமல் இருந்தாலும் இன்றைக்கு உயர்
நிலைப் பள்ளிகளை எல்லாம் அவர்கள் மேல்நிலைப் பள்ளிகளாக
மாற்றிவிடுகிறார்கள். இப்படி இவர்கள் அனுமதியில்லாமலே
இப்படிப்பட்ட செயல்களை செய்கின்ற நேரத்தில் அரசு இங்கே
சட்டமன்றத்தில் நிதி ஒதுக்குகின்ற நேரத்தில் இவைகளுக்காக
நிதி ஒதுக்கவில்லையென்றாலோ அல்லது இத்தகைய பள்ளிகளை
அரசு எடுத்துக்கொள்ளும் என்றாலோ உடனே நீதிமன்றத்திற்கு
சென்று நீதிமன்றத்தின் டைரக்சனை பெற்றுக்கொண்டு அவர்கள்
செய்கின்ற செயல்களில் அரசு தலையிட முடியாதவாறு செய்து
விடுகிறார்கள். இப்படி அனுமதி பெறாமல் காரியங்களை செய்
கிற நிலையில் நீதிமன்றத்தின் ஆணையை அவர்கள் பெற்றுவிடு
வதன் காரணமாக மற்ற அரசு பள்ளிகளுக்கு அரசு கொடுக்கின்ற
சலுகைகள், நிதி ஒதுக்கீடு மற்றும் வசதிகளை இவர்களுக்கும்
அரசு வழங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு விடுகிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் நீதிமன்றத்திலிருந்து டைரக்
சனை பெறுகின்ற இந்த தனியார் மற்றும் சிறுபான்மையினர்
பள்ளிகள் எத்தகைய நிலையில் செயல்படுகின்றன என்று நாம்
பார்ப்போமானால் அங்கே சரியான இட வசதியில்லாத நிலை
இருக்கிறது. சரியான ஆய்வுக் கூட வசதி, லேபரேட்டரி வசதி
மற்றும் பெசிலிட்டீஸ் ஒன்றும் இல்லாத நிலையில், விளையாட்டு
மைதானம் இல்லாத நிலையில் அவர்கள் இன்றையதினம் உயர்
நிலைப் பள்ளிகளை எல்லாம் அவர்களாகவே மேல்நிலைப் பள்ளி
களாக உயர்த்தி பள்ளிக்கூடங்களை நடத்திக்கொண்டிருக்
கிறார்கள். நீதிமன்றத்தின் டைரக்சனின் காரணமாக அவர்கள்
பெற வேண்டிய அனுமதி, மானியம், உதவித் தொகை மற்றும்
ஆசிரியர்களுக்கான சம்பளம் போன்றவற்றையும் பெற்று விடு
கிறார்கள். அதே நேரத்தில் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான
இட வசதி, கட்டிட வசதி, ஆய்வுக் கூட வசதி போன்ற வசதிகள்
அங்கே சரியாக இருப்பதில்லை. ஆசிரியர் நியமனத்தை எடுத்துக்
கொண்டால் கூட அரசு விதி முறையை அவர்கள் ஏற்றுக்கொள்வ



1987 மே 11] [திரு. பி. என். இராமச்சந்திரன்]

தில்லை. (மணி அடிக்கப்பெற்றது) படிக்கின்றவர்களுக்கு சரியான
வசதிகளை செய்து கொடுக்காமல் தனியார் மற்றும் சிறுபான்மை
யினர் பள்ளிகள் செய்கின்ற தவறுகளை தடுத்து நிறுத்த வேண்டு
மென்ற எண்ணத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்
தலைவர் அவர்களுடைய உத்தரவோடு மாண்புமிகு கல்வி அமைச்
சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கின்ற இந்த சட்டமுன்
வடிவை ஆதரிக்கும் அதே நேரத்தில் ஒரே ஒரு முக்கியமான
வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன். இதிலே சட்டத்தின்
53 (ஏ) பிரிவில், பள்ளிகளைப் பற்றிய பிரிவில், ஸ்கூல்ஸ் கமிட்டி,
பள்ளிக் குழு நியமிப்பது பற்றி ஒரு வாசகம் வருகிறது.

(பிற்பகல் 1-10)

ஆனால் அரசு மானியத்தை, உதவியை, நிதியைப் பெற்று ஆரம்
பிக்கின்ற அந்தத் தனியார் சிறுபான்மையினர் பள்ளிகளில் அரசின்
சார்பில் குழுக்கள், அந்தப் பள்ளியில் எந்தவொரு அங்கத்தினரும்
அரசின் பிரதிநிதிகளாக இடம் பெறுவதில்லை. அப்படி இடம்
பெறுவார்களேயானால் நிச்சயமாக அந்தப் பள்ளியை அங்கே
நிர்வகிக்கின்றபொழுது உள்ள தவறுகளை எச்சுட்டிக்காட்டுவதற்கு
அல்லது செம்மைப்படுத்துவதற்கு வசதியாக இருக்கும்.
ஆகையால் அந்தச் சட்டம் 53 (ஏ) பிரிவில் இதையும் சேர்த்து
இந்தச் சட்டத்தை உருவாக்குவார்களேயானால் மிகவும் நன்மை
பயக்கும் என்பதைச் சொல்லி, இப்படிப்பட்ட நல்ல திருத்தங்
களைக் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டத்தை வரவேற்று
அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர
வர்களே, இந்தத் தனியார் பள்ளிகளை ஒருங்கிணைக்கக்கூடிய
இந்தச் சட்டத்தை 1974 ஆம் ஆண்டு 29-வது சட்டத்தினுடைய
திருத்தமாகக் கொண்டு வருவது, அதற்கு மேல்நிலைப்பள்ளி
களையும் உள்ளடக்குவது என்ற முறையில் கொண்டு வந்திருக்கக்
கூடிய இந்தத் திருத்தம் வரவேற்கத் தக்க ஒன்று. அப்படி,
மேல்நிலைப் பள்ளிகளையும் இதற்குள் உள்ளடக்கி இந்தத் தனி
யார் பள்ளிகளெல்லாம் ஒழுங்குபடுத்தப்படும்பொழுது அதில்
இருக்கக்கூடிய, மூலச்சட்டத்திலே இருக்கக்கூடிய சில குறைபாடு
களையும் போக்குவதற்கும் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள
வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்பு
கிறேன்.

குறிப்பாக 1974 ஆம் ஆண்டு சட்டத்தை நாம் எடுத்துக்
கொள்வோமேயானால் அதிலே ஆசிரியர்களுக்கு இன்னும் முழு
மையான பணிப் பாதுகாப்பு அளிக்கப்படாத ஒரு நிலையிருக்
கிறது. அது நிவர்த்தி செய்யப்பட வேண்டும். அதேபோல் தனி
யார் பள்ளிகளில் நிறுவக்கூடிய அந்தக் கமிட்டியில் மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஆசிரியர்களி
னுடைய பிரதிநிதிகள் மூன்றுபேர் இருக்க வேண்டுமென்று குறிப்
பிடப்பட்டிருக்கிறது. ஆனால் நிர்வாகத்தினுடைய பிரதிநிதிகள்
எத்தனை பேர் என்று எண்ணிக்கையே வரையறை இல்லாமல்

இருக்கிறது. எவ்வளவு பேர்களை வேண்டுமானாலும் அவர்கள் நியமித்துக் கொள்ளலாம் என்ற வாய்ப்பிருக்கிறது. எனவே அந்தக் கமிட்டிகளில் ஆசிரியர்களும், நிர்வாகமும் சம அளவிற் காவது பிரதிநிதித்துவம் இருக்கக்கூடிய வகையிலே திருத்தப்பட வேண்டும்.

அதேபோல்தான், இந்தக் கல்விக் குழுவில் அரசாங்கத் தரப் பினுடைய பிரதிநிதிகளே இல்லாமல் இருக்கிறது. அரசாங்க பிரதிநிதிகள், ஆசிரியர் பிரதிநிதிகள், நிர்வாகப் பிரதிநிதிகள் என்று மூன்று பகுதிகளையும் கொண்ட குழுவாக அது அமைக்கப் படக்கூடிய வகையிலே மூலச்சட்டத்தில் கவனிக்கப்பட வேண்டு மென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த தனியார் பள்ளிகளின் ஆசிரியர் களைத் தற்போது பள்ளி நிர்வாகம் எப்பொழுது வேண்டுமானா லும் சஸ்பென்ஷன் செய்யலாம். கல்வித் துறையினுடைய அனு மதியைப் பெற்ற பின்னர்தான் சஸ்பென்ட் செய்ய வேண்டு மென்று அதைத் திருத்துவதன் மூலமாகத்தான் அந்தத் தனியார் நிர்வாகத்தினுடைய நடவடிக்கைகளைத் தடுக்க முடியும்.

அதே போல் இன்றைக்கு இந்த ஆசிரியர்கள் பிரதிநிதிகளைக் கூட ஆசிரியர்களே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று இல்லை. நிர் வாகமே நியமித்துக் கொள்ளலாம் என்ற அளவிலேகூட அது செல்கிறது.

அதோடு மட்டுமல்லாமல் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒரு ஆசிரியரை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டுமென்று கல்வித் துறையே ஆணை பிறப்பித்தாலும்கூட அதைப் பள்ளி நிர்வாகம் அமல் நடத்த மறுக்கிறது. இப்படிப்பட்ட மூலச்சட்டத்தில் இருக்கக்கூடிய குறைபாடுகளையும் களைந்து திருத்தப்பட்டு இந்தத் தனியார் பள்ளிகளினுடைய நிர்வாகத்தை ஒழுங்கு படுத்துவதற்கான முறையில் மூலச்சட்டமும் சரியான முறையில் திருத்தப்படக் கூடிய முறையில் மாண்புமிகு கல்வித் துறை அமைச் சரவர்கள் கவனிக்க வேண்டும் என்று உங்கள் மூலமாகக் கேட்டு முடிக்கின்றேன், வணக்கம்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவானது மேல்நிலைப் பள்ளிகளையும்—தனியார் துறையில் இருக்கின்ற மேல்நிலைப் பள்ளிகளையும் இதிலே இணைப்பதற்காகக் கொண்டு வரப்பட் டிருக்கிறது. இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன்.

அதே தருணத்திலே, தனியார் பள்ளிகளை நடத்துவது தங் களுடைய இலாபத்திற்காக என்பது இல்லை என்பதைச் சொல் லிக் கொள்ள விரும்புகிறேன். அரசு செய்ய வேண்டிய காரியங் களைத் தனியார் பள்ளிகள், அதாவது தனியார் இல்லை என்று சொன்னால் பல்வேறு கூட்டமைப்புகள் ஒரு சமுதாயத்திலே





யிருந்து பல்வேறு பள்ளிகளை நடத்துகின்றார்கள். அந்தப் பள்ளிகளெல்லாம் மிக நல்லமுறையிலே அதிகமான மாணவ மாணவிகளோடு நடத்துவதை நீங்கள் அறிவீர்கள். உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், நகராட்சி நடத்தும் பள்ளிகள் அல்லது அரசு நடத்தும் பள்ளிகளிலெல்லாம் இருக்கின்ற மாணவர் களைவிட தனியார் பள்ளிகளிலே அல்லது ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நடத்துகின்ற பள்ளியிலே அதிகமான அளவிலே மாணவ மாணவிகள் சேர்ந்து படிப்பதையும், அந்தப் பள்ளி களிலே ஏற்படுகின்ற ஒருசில அதாவது பள்ளியிறுதித் தேர்விலே வருகின்ற ரிசல்டைப் பார்க்கின்றபொழுது தனியார்கள் அல்லது குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நடத்துகின்ற பள்ளி களிலே அதிகமான முறையில் மாணவர்கள் தேர்வு பெறுவதையும் அங்கே படிக்கின்ற மாணவ மாணவிகள் மிக நல்லமுறையிலே பல்வேறு விளையாட்டானாலும் சரி, மற்ற எந்தத் துறையானா லும் சரி, பல்வேறு துறைகளிலே முன்னணியில் இருப்பதையும் நாம் பார்க்கிறோம். அரசு செய்ய வேண்டிய காரியங்களைச் செய்கின்ற அந்தத் தனியார் பள்ளிகளை, நீங்கள் பல்வேறு சட் டங்களைப்போட்டு, சரியான விளையாட்டரங்கம் இல்லை, சரியான வசதிகளில்லை என்று சொல்லி சிரமப்படுத்த வேண்டா மென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் காமராஜ் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அரசினுடைய கல்லூரிகள் கிடையாது. தனியார் நடத்துகிற பள்ளிகள் தான் நல்ல முறை யில் 5,000, 6,000 பேர் படிக்கக் கூடிய முறையில் நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பள்ளிகளில் முறையான விஞ்ஞானக் கூடங்கள் மற்றும் எல்லாவற்றையும் முறையாக வைத்திருக்கி றார்கள். கல்லூரிகளிலும் இப்படி பல்வேறு விதமான முறை யான அமைப்புகளையும், வசதிகளையும் செய்திருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு இன்னும் பல சலுகைகளை, அதிகமான வசதிகளை இந்த அரசு செய்து தர வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். சமுதாயப் பணியை, மக்களுக்காக ஆற்றுகிற பணியை, அரசு செய்ய வேண்டிய காரியத்தை அவர்கள் செய் கிறார்கள். ஆகவே அவர்களுக்கு வேண்டிய வசதிகளை இந்த அரசு அதிகமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**திரு. வை. பாலச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்தச் சட்டமுன் வடிவை நான் மனம் உவந்து வரவேற்கிறேன். வரவேற்பு மாலை சூட்டுகிறபோது ஒரு கோரிக்கை கூட இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்காது என்பதற்காக ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் நான் தர விரும்பு கிறேன். தனியார் பள்ளிகளில் இருக்கின்ற ஆசிரியர்கள் பாது காப்பு இல்லாத நிலைமையில் இருக்கிறார்கள். சான்றாக பத்ம நாபபுரம் தொகுதிக்குட்பட்ட மாடத்தட்டுவிளை என்ற ஊரில் உள்ள புனித லாரன்ஸ் மேல்நிலைப்பள்ளியின் ஆசிரியர் நாக முத்து என்பவரின் வருமானத்திலிருந்து மாதந்தோறும் 200 ரூபாயைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, அதற்கு அவர்

மறுத்த காரணத்தால் அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இன்கிரிமென்ட் கொடுக்கப்படாமல் இருக்கிறார். இது குறித்து மாவட்டக் கல்வி அதிகாரி அவர்கள் பல முறை அறிவுறுத்தியும் கூட அந்தப் பள்ளிக்கூட நிர்வாகம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இன்னும் ஓராண்டில் அவர் ஓய்வு பெற இருக்கிறார். இந்த நிலைமையில் அவருக்கான பென்ஷன் பேப்பர் கூட அனுப்பப்பட முடியாத நிலை இருக்கிறது. இது குறித்து பல முறை இந்தச் சட்டமன்றத்தில் வலியுறுத்தியும் கூட உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. ஆகவே அந்த ஆசிரியருக்குப் பணிப் பாதுகாப்பு கொடுக்க இந்த அரசு முன் வரவேண்டுமென்று கேட்டு இந்தச் சட்டமுன் வடிவை நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன் வடிவினுடைய நோக்கம் பள்ளிகளில் இருக்க வேண்டிய அடிப்படை வசதிகள், மாணவர்களின் நலன் கருதி பெருக்கப்பட வேண்டும், மேம்படுத்தப்பட வேண்டும் என்பது தான். அந்த நோக்கத்தோடு தான் இந்தச் சட்டமுன் வடிவு கொண்டுவரப்பட்டு இருக்கிறது. குறிப்பாக பள்ளிகளில் விளையாட்டு மைதானம் எந்த அளவுக்கு இருக்க வேண்டுமென்ற நியதி முன்பு இல்லாமல் இருந்தது. The extent of the play ground available to the pupils and the adequacy of the play ground with reference to the strength of the pupils என்று புதிதாக ஒரு திருத்தத்தை இப்போது கொண்டு வந்திருக்கிறோம். அதைப் போல் ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வேண்டிய வசதிகளும், எக்விப்மென்ட்ஸ், லேபரேட்டரி, லைப்ரரி போன்ற வசதிகளும் கட்டாயம் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவும் இந்தச் சட்ட முன் வடிவு கொண்டுவரப்பட்டு இருக்கிறது.

ஒரு பள்ளிக்கு அங்கீகாரம் தருகிற போது இது போன்று மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் போதிய அடிப்படை வசதிகளை கல்வியினுடைய தரம் கருதிக் கொண்டு வராமலே ரிகக்னிஷன் கொடுப்பதால் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிற காரணத்தால் இந்தச் சட்டமுன் வடிவு கொண்டுவரப்பட்டு இருக்கிறது. ஆகவே இதை ஏற்க வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 30/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.





பிரிவுகள் 2 முதல் 12 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 30/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## (இ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகள் சம்பந்தப்பட்ட மூன்று சட்ட முன்வடிவுகளையும் ஒன்றாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூவ் பண்ணும் போது, தனித் தனியாக மூவ் பண்ணலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 31/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

(பிற்பகல் 1-20.)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"That the Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1987 (L.A. Bill No.31 of 1987) be referred to the Select Committee of the House consisting of—Members. (List of Members will be given later)."

திருத்தம் முறைப்படி வழி மொழியப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சித்தன் அவர்களும், திரு. எஸ். சிவராஜ் அவர்களும் திருத்தங்கள் கொடுத்துள்ளனர்.

---

* 1987 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ் சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1987 மே 11

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன்:

"That the Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1987 (L.A Bill No.31 of 1987) be referred to the Select Committee of the House consisting of—Members. (List of Members will be given later.)."

திருத்தம் முறைப்படி வழி மொழியப்பெற்றது.

Thiru S. Sivaraj: Sir, I move the following amendment:—

"That the Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1987 (L.A. Bill No. 31/1987) be circulated for eliciting public opinion.

The amendment was seconded.

திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் போதுமான உறுப்பினர்கள் இல்லாத இந்தக் கொடு மையான நேரத்தில் பேசுகிற ஒரு நல்ல வாய்ப்பினை தந்ததற்கு, உங்கள் கருணை உள்ளத்திற்கு நன்றி ........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பின்னாலே பாருங்கள். நிறைய உறுப்பினர்கள் இருக்கிறார்கள். கொஞ்சம் பின்னாலும் அடிக்கடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, உங்களது கருத்துப்படி போதுமான உறுப்பினர்கள் இங்கே இருக்கிறார்கள் என்று நீங்கள் கருதுவீர்களேயானால், அதை மறுப்பதற்கு நான் இங்கே இப்போது இல்லை என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே நமது மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவினைக் கொண்டு வந்து, அதே போல பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் பொருந்தும் என்ற வகையில் திருத்தங் களை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் திராவிட முன் னேற்றக் கழகத்தின் சார்பாக தெரிவிக்க விரும்புவது, இந்தச் சட்டம் ஒரு முரண்பாடுகளின் தொகுப்பு என்பதாகும். அது மட்டுமல்ல, என்னை அனுமதிப்பீர்களேயானால் இன்னொன்றை யும் தெரிவிக்க விரும்புகிறேன். பழி வாங்குகின்ற உணர்ச்சி களும் பதை பதைப்பும் இந்தச் சட்டத்திலே இருப்பதாக நான் கருதுகிறேன். நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள் என்று நம்பி உரிமையோடு தெரிவிக்க விரும்புகிறேன். இவைகளில் காழ்ப் புணர்ச்சியின் கொடுமையும் அதிகமாக வீசுவதையே நான் பார்க்கி றேன். இதிலே மிக முக்கியமான ஒன்று ரைட் டு ரீ கால் என்று திருப்பி அழைப்பதாகும். கொள்கை ரீதியாக எங்களைப் பொறுத்த வரையில் இந்த திருப்பி அழைக்கு உரிமைக்கு நான்



1987 மே 11] [திரு. கி. மனோகரன்]

குறுக்கே நிற்காவிட்டாலும் நான் இந்த அவையில் ஏற்கனவே
பேசிய கருத்து ஒன்றை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.
கீழ் மட்டத்தில் இருக்கிற பஞ்சாயத்திற்கும், ஒன்றியத்
திற்கும், நகராட்சி மன்றத்திற்கும் திருப்பி அழைக்கிற உரிமை
யைக் கொண்டு வருகிற நீங்கள், ஏன் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட
சபைக்கும், நாடாளுமன்றத்திற்கும் அனுப்பப்பட்ட உறுப்பினர்
களை திருப்பி அழைக்கிற உரிமைக்கு அரசியல் சட்டம் திருத்து
வதற்காக மத்திய அரசை கேட்டுக் கொள்வதற்கு தயங்குகிறீர்
கள் என்று கேட்டேன். அப்போது நம்முடைய அமைச்சர் அவர்
கள் பதில் சொல்லவில்லை. அவை முன்னவரும் பதில் சொல்ல
வில்லை. இப்போது அமைச்சர் நிச்சயமாக என்னுடைய
கோரிக்கையை ஏற்று பதில் அளிப்பார்கள் என்று நம்புகிறேன்.
நான் கேட்க விரும்புவது இதுதான்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்
களே, இதே பிரச்சினையை மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள்
மீண்டும் ஒரு முறை எழுப்பியிருக்கிறார்கள். தமிழக முதல்வர்
புரட்சித் தலைவர் அவர்கள் அவையில் இருக்கிற போதும் எழுப்
பினார்கள். அதே கொள்கையில்தான் நாங்கள் இருக்கிறோம்.
அகில இந்திய மட்டத்தில் அல்லது நாடாளுமன்றத்தில் இதே
கொள்கையை வற்புறுத்துவதற்கு அகில இந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது. நிச்சய
மாக இதில் தயக்கமில்லை.

திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, மகிழ்ச்சியான
பதிலை அளித்த அமைச்சர் அவர்களுக்கு எப்படி நன்றி தெரி
விப்பது என்றே தெரியவில்லை. தெரிந்தவரையில் நன்றி
தெரிவிக்க விரும்புகிறேன். இது முரண்பாடுகளின் தொகுப்பு
என்று குறிப்பிட்டேன். அதற்கு சில முக்கிய காரணங்களை
மட்டும் எடுத்து வைக்க விரும்புகிறேன். குறிப்பாக பஞ்சாயத்துக்
களானாலும் சரி, ஒன்றியங்களானாலும் சரி, நகராட்சி மன்றங்
களானாலும் சரி, தலைவர்கள் தவறிழைப்பார்களானால்,
உதவித் தலைவர்கள் தவறிழைப்பார்களானால், உறுப்பினர்கள்
தவறிழைப்பார்களானால் எந்தக் கட்சியின் சார்பாக அவர்கள்
தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அந்தக் கட்சியைச் சார்ந்த
தலைமை அப்படிப்பட்ட தலைவர்களை நேரில் அழைத்து, உங்
களைப் பற்றி இப்படிப்பட்ட செய்திகள் கிடைத்திருக்கின்றன.
நீங்கள் தவறாக, முறைகேடாக நடந்து கொள்வதாக எனக்கு
செய்திகள் வந்திருக்கின்றன. உங்களுடைய கருத்து என்ன
வென்று கேட்டதற்குப் பிறகு, அவரது விளக்கத்தைக் கேட்டு,
அந்த விளக்கம் அவருக்கு சரியாகப் படாமல் இருக்குமானால்,
கட்சியின் தலைமை அவரை கட்சியிலிருந்து தூக்கி எறிகிற
உரிமையைப் பெற்றிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட
விரும்புகிறேன். அந்த நகராட்சி நம்மை விட்டுப் போனாலும்
பரவாயில்லை என்ற முடிவிற்கு வருவதுதான் நியாயமாக இருக்
கும், பொருத்தமாக இருக்கும் என்பதை வலியுறுத்த விரும்பு
கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

[1987 மே 11

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து நாஞ்சிலார் அவர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். கட்சியிலிருந்து தூக்கி எறியலாம். இருந்தாலும் அவர் பதவியில் இருப்பாரல்லவா ? அது தான் இதில் இருக்கக்கூடிய பிரச்சினை.

**திரு. கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, நான் கட்சியிலிருந்து மட்டும் தூக்கி எறிய வேண்டுமென்று சொல்லவில்லை. நகராட்சி மன்றத்தில் நீ இருப்பது எங்களுக்குப் பிடிக்கவில்லையென்று மக்களுக்கு அந்தச் செய்தி சம்பந்தப்பட்ட தலைவர்கள் மூலம் பரப்பப்படுமானால் நிச்சயமாக அதைவிட பெரிய தண்டனை அந்த நகராட்சித் தலைவரோ, துணைத் தலைவரோ பெற முடியாது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஒரே ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். கடலூர் முனிசிபாலிட்டியின் தலைவராக இருப்பவர்—அவருடைய பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அவர் தவறு இழைத்தார் என்பதற்காக, யாரையும் கலக்காமல் தன்னிச்சையாக ' ஸ்டார் நைட் ' என்று வைத்து அதற்கு டிக்கெட் எல்லாம் அச்சடித்து, பணத்தை வசூல் செய்து, அவர்களே அதை வைத்துக் கொண்டிருந்தார் என்ற செய்தி வந்தவுடன்......

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில் கொள்கை ரீதியான விமர்சனத்தைச் சொன்னால் பொருத்தமாக இருக்கும். யாரோ நகரமன்றத் தலைவரைப் பற்றி குற்றச் சாட்டுகளைச் சொல்கிறபோது அவர் இந்த அவையில் இல்லை. ஆகவே பதில்சொல்ல முடியாது. மாண்புமிகு நாஞ்சிலார்அவர்கள் கடலூர் நகர மன்றத் தலைவரைப் பற்றி சொல்கிறார். அந்த கடலூர் நகரமன்றத் தலைவரும் ஒரு அறிக்கையை விட்டார். அது அநேகமாக மாண்புமிகு நாஞ்சிலார் அவர்களுக்குத் தெரிந்திராது என்றே கருதுகிறேன். அருப்புக்கோட்டை, திருநெல்வேலி இடைத்தேர்தலுக்கு இவ்வளவு வசூலிக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பித்து கட்டாயப்படுத்தினார்கள் என்று அவர் ஒரு அறிக்கை விட்டார். எனவே இது இருபுறமும் கூருள்ள கத்தியென்ற காரணத்தால் தனிப்பட்ட பிரச்சினைக்குப் போக வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, இதைத் தனிப்பட்ட பிரச்சினையென்று எடுத்துக் கொள்ளக்கூடாது. இரண்டு முறை அவரை அழைத்துச் சொன்னதற்குப் பிறகு, அவர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்த காரணத்தால், அவரை கழகத்திலிருந்தும், அந்தப் பதவியிலிருந்தும் நீக்குகிறோம் என்று சொல்லி திராவிட முன்னேற்றக் கழகம் அறிவிப்பு செய்ததை இந்த அவை புரிந்திருக்குமென்று நான் நம்புகிறேன்.



1987 மே 11]

(பிற்பகல் 1–30)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர் கள் சொன்னதைப் போல, இரண்டு முறை அழைத்து, அவர்களி டத்திலே வசூல் பணம் கேட்டதாகத்தான் அவர்கள் அறிக்கை விடுத்திருக்கிறார்கள். எனவே இதைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பதிலே நியாயம் இல்லை.

**திரு. கி. மனோகரன் :** தம்பி திருநாவுக்கரசு நல்ல சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி, தவறான வியாக்கியானம் தந்ததற்கு, அவரது வழக்கமான உணர்வுகளை எண்ணி, நான் பூரிப்பு அடைகிறேன் என்பதை அவருக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். 2 முறையும் அவர்களைக் கூப்பிட்டு, அந்தத் தலைவரைக் கூப்பிட்டு, டாக்டர் கலைஞர் அவர்கள் திட்டிய நேரத்தில், எந்தக் காரணத்தைக் கொண்டும்......

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, —எக்ஸ்கியூஸ் மீ—ஏற்கெனவே அவர், தி.மு.க.விலே இருந்தார். இப்போது அண்ணா தி.மு.க.விலே சேர்ந்திருக்கிறார். நீங்கள் நீக்கப்பட்டதற்குக் காரணம் சொல் கிறீர்கள். அவர்கள் கட்சியிலிருந்து வெளியே வந்ததற்கு விளக்கமாக ஒரு காரணத்தைச் சொல்லி, அறிக்கை விட்டிருக் கிறார்கள். இதையே மாற்றி மாற்றி பேசிக் கொண்டிருந்தால் என்ன ஆகும்? இரண்டுமே சபைக்குறிப்பிலே இல்லாமல் இருக்க வேண்டும். இல்லை என்றால் நாங்கள் சொல்கிற இந்த வாசகத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**திரு. கி. மனோகரன் :** தலைவர் அவர்ளே, அப்போது நானும் இருந்தேன். அவர்கள் அறிக்கை விட்டதாகச் சொன் னார்கள். தூக்கி எறியப்பட்டதற்குப் பிறகு, தாக்குதலுக்கு ஆளானவர்கள் விடுகின்ற வேதனையாகத்தான் அந்த அறிக்கை களை கருதிக்கொள்ள வேண்டுமே தவிர, அந்த அறிக்கையில் உண்மை இருப்பதாக நான் நம்பவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** இல்லை, இல்லை. அது உண்மை இல்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, வளர்ச்சி நிதிக்கு பணம் கேட்டார்கள், தேர்தலுக்குப் பணம் கேட்டார்கள், நான் அதற்கு பணம் தர மறுத்தேன். எனவே என் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டது என்று விவரமான அறிக்கையை அவர்கள் விட்டிருக் கிறார்கள். இதுதான் உண்மை, மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்கள் சொல்வது தவறு. நாஞ்சிலாரே இப்படிச் சொன்னால் எப்படி ?

**திரு. கி. மனோகரன் :** நான் தெரிவிக்க விரும்புவது திருநாவுக்கரசு அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது, நான் சொல்வது தான் உண்மை என்று எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பொய் சொல்ல

[திரு. கி. மனோகரன்] [1987 மே 11

வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்ற காரணத்தால், நான்
இந்தக் கருத்தைச் சொல்கிறேனே தவிர, மற்றது அல்ல என்பதை
இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல், ரைட் டு ரீகால் என்ற தத்துவத்தை நாம்
பரப்பவேண்டும் அல்லது கொண்டு வரவேண்டும் என்று விரும்பு
கிற நேரத்தில், ஒரு கட்சியின் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட
ஒரு தலைவர், அந்தக் கட்சியைப் பின்பற்றுகின்ற ஏராளமான
மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவர் சுயநலம்
காரணமாகவோ, மற்ற காரணங்களுக்காகவோ அந்தக் கட்சியை
விட்டு வெளியேறுகிறபோது, அவர்கள் இன்னொரு கட்சிக்குச்
செல்லுகின்ற நேரத்தில், கட்சித் தாவல் தடைச் சட்டத்திற்கு
அவர் இரையாக்கப்பட்டு, ஒரு இயக்கத்திலேயிருந்து கெட்ட
பெயரைச் சம்பாதித்து வந்தது உண்மை. எந்தக் காரணத்தைக்
கொண்டும், நாங்கள் சேர்க்கத் தயாராக இல்லை என்று அரசியல்
கட்சிகள் இலக்கணம் வகுக்குமானால் வழிமுறைகள் வகுக்கு
மானால், இப்படிப்பட்ட திருப்பி அழைக்க வேண்டும் என்ற
திட்டம், அல்லது அற்புதமான கருத்து வரவேண்டிய அவசியமே
இருந்து இருக்காது. இதற்கு உதாரணம் தேவையென்றால்,
நான் சொல்கிறேன் (குறுக்கீடு). நான் முடிக்கும் வரை அமைதி
யாக இருங்கள்.

We are good friends,
நான் தெரிவிக்க விரும்புகிறேன், அதற்கு ஒரு சரியான உதாரணம்
தேவை என்றால், நான் விழுப்புரத்தை அதற்கு ஆதாரமாகக்
காட்டுகிறேன். அவ்வளவுதான். திராவிட முன்னேற்றக் கழ
கத்தின் தலைவரால் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்
களாலே, தலைமையாலே நிறுத்தி வைக்கப்பட்டவர், அந்த
இயக்கத்தோடு நீண்ட நெடுங்காலமாக தொடர்பு வைத்திருந்
தவர், அவர், தலைவராக ஆனதற்குப் பிறகு, அண்மையிலே,
அவர், அந்த இயக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு,
ஆளுகின்ற கட்சியிலே சேர்ந்தார்கள் என்ற புகைப்படத்தோடு
கூடிய அவருடைய படத்தை நான் பார்த்தேன். நான் முத
லமைச்சருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் சொல்
கிறேன், நான் சார்ந்திருக்கிற கட்சியின் தலைவருக்கும் தெரி
வித்துக் கொள்வேன். அதன் மூலம் இந்த அவைக்கும் நான்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்படி ஒரு கட்சி
யினாலே புறக்கணிக்கப்படுகிறவர்களை, நியாயமான காரணங்
களின் அடிப்படையில், வேறு எந்தக் கட்சியும் ஏற்றுக் கொள்
ளாது என்ற முடிவு எடுக்குமானால், அது ஆரோக்கியமான ஜன
நாயகத்தை வளர்ப்பதற்கு உதவியாக இருக்கும் என்று இந்த
நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தாற்போல், நான் இங்கே மிக முக்கியமான
ஒரு செய்தியை இந்த அவையின் கவனத்திற்கு வைக்க
விரும்புகிறேன். முனிசிபாலிட்டி, பேங்க்ரப்ட்சி என்ற அள
விற்கு துரத்தப்படுமானால், அந்த முனிசிபாலிட்டி, Suffers
from financial Bankruptcy என்ற நிலை இருக்குமானால்,



1987 மே 11] [திரு. கி. மனோகரன்]

அந்த முனிசிபாலிட்டியைக் கலைக்கவோ, அல்லது அந்த
முனிசிபாலிட்டி இல்லை என்று அறிவிக்கவோ ஆன உரிமை
அரசுக்கு உண்டு என்று அரசு கொண்டு வந்த திருத்தம் சொல்
கிறது. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், 10, 12
ஆண்டுக் காலமாக நகராட்சி மன்றங்களுக்கு, பஞ்சாயத்துக்
களுக்கு, ஒன்றியங்களுக்கு, தேர்தல்களை நடத்தாமல், ஸ்பெசல்
ஆபீசர்களையும், கமிஷனர்களையும் போட்டு, விவரம் தெரியாத,
முனிசிபல் அட்மினிஸ்ட்ரேசன் ஆக்டைப்பற்றி தெரியாதவர்களைப்
போட்டு, ஒன்றும் தெரியாத அவர்கள் பல தவறுகளைச் செய்
வதற்கு அனுமதித்து, அனுமதிக்கப்பட்டாலும், அவர்கள் அந்த
உரிமையைப் பயன்படுத்தி துஷ்ப்பிரயோகம் செய்த காரணத்
தாலேதான் பல முனிசிபாலிட்டிகள் இன்றைக்கு பண முடைக்கு
ஆளாக்கப்பட்டிருக்கின்றன என்பதை தயவுசெய்து ஆட்சித்
தரப்பிலே இருக்கிற நண்பர்களும், முதலமைச்சர் அவர்களும்,
எனது அருமை மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டியார் அவர்
களும் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நான் நிச்சயமாக
இந்தச் சந்தர்ப்பத்திலே நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் என்று குறிப்
பிடுங்கள்.

**திரு. கி. மனோகரன் :** அதற்குப் பிறகு, இன்னொன்றையும்
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். Bundle of contradictions என்று
குறிப்பிட்டேன். இதற்கு முன்பு நான்கு ஆண்டுக் காலம் என்று
இருந்ததை மூன்று ஆண்டுக் காலமாகக் குறைத்து, குறைத்த
தன் மூலமாக ஒரு efficient administration-க்கு அது
வழிவகை செய்யும் என்ற தீர்மானத்தை நீங்கள் கொண்டு
வந்தீர்கள். அதன்மூலம் நான் கேட்டுத் தெரிந்துக் கொள்ள
வேண்டுமென்று விரும்புவதெல்லாம், ஒரு மூன்று ஆண்டுக்
காலம் இருப்பவர்கள் ஒரு ஆண்டுக் காலமாவது அவர்களுக்கு
விவரங்களைத் தெரிந்துக் கொள்ள நாள் பிடிக்கும். அதற்குப்
பிறகு குறுகிய ஆண்டுக் காலத்திற்குள்ளாக அவர்கள் அதைச்
செய்து முடிக்க முடியும் அல்லது திறமையாகப் பண்ண முடியும்
என்று நீங்கள் வாதாடுவீர்களேயானால் நான் அந்தக் கருத்
தோட்டத்தோடு ஒன்ற மறுக்கிறேன் என்று இந்தச் சந்தர்ப்பத்
திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் ஆரம்பத்
திலே சொன்னேன். இந்தச் சட்டம் இருக்கிறதே, இதை
bundle of contradictions என்று குறிப்பிட்டேன். முரண்பாடு
களின் மொத்தத் தொகுப்பு என்று குறிப்பிட்டேன். என்னிடம்
இருக்கிற அரசு ஆணையை உங்களுக்கு நான் படித்துக் காட்ட
விரும்புகிறேன். இந்த ஆணையைப் பிறப்பித்த நாள் 4—4—1987.
இந்த ஆணையிலே குறிப்பிட்டிருக்கிற கருத்து. உங்களது
கவனத்திற்குச் சொல்கிறேன், படிக்கிறேன்.

Whenever any function is organised
conducted or sponsored.......

[1987 மே 11

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அந்த ஆணைக்கும், இப்போது
அவையின் முன் இருக்கின்ற சட்டங்களுக்கும் சம்பந்தமில்லை.
it is irrelevant. அது பற்றி அவர்கள் மானியத்திலே
பேசினார்கள். நான் அதற்கு பதில் சொல்லியிருக்கிறேன்.
ஆகவே, நான் நாஞ்சிலாரைக் கேட்டுக் கொள்வது தயவு
செய்து நீங்கள் அதைத் திரும்பவும் படித்து, திரும்பவும் நான்
பதில் சொல்லி, ஏற்கெனவே விவாதித்த பொருளை மீண்டும்
விவாதிப்பதற்கு வழி வகுக்க வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே விவாதிக்கப்
பட்டு விட்டது.

திரு. கி. மனோகரன் : ஏற்கெனவே விவாதித்தது என்று
அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதிலிருக்கிற
ரெலவண்ட் போர்ஷனை சுட்டிக் காட்டுவதற்காக நான் இந்தச்
சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விரும்புகிறேன். அது ஏற்றுக்
கொள்ளப்பட.........(குறுக்கீடு)

THE HON. THIRU. S. RAMACHANDRAN : Mr. Speaker, Sir, it is not relevant to the Bills that we are now discussing in the House. Apart from that, it is superfluous.

THIRU K. MANOHARAN: I will explain to you how it is relevant. Please wait and see. Have some patience.

Whenever any function is organised, conducted
or sponsored by the Municipal Council.. ..

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சில கடமைகளைச்
செய்யலாம் என்பதற்காக இதை இப்போது இங்கே படிக்
கிறார்கள். யார் சொல்லி நீங்கள் படிக்கிறீர்கள் என்று எனக்
குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நாஞ்சிலார்
அவர்களுக்குச் சொல்கிறேன், ஏற்கெனவே விவாதிக்கப்பட்டு
பதிலும் இங்கே தரப்பட்டிருக்கிறது. நீங்கள் மசோதா
மீது உங்களுடைய கவனத்தைத் திருப்பவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. கி. மனோகரன் : யார் சொல்லி இவர் படிக்கிறார்
என்று எனக்குத் தெரியும் என்று சொல்கிற மாண்புமிகு
அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்கு நான்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், எனக்கு இன்னொருவர்
சொல்லித் தந்து பேசவேண்டிய அளவிற்கு நான் துர்ப்பாக்கிய
மான நிலையில் இல்லை என்பதை அவர் ஏற்கெனவே உணர்ந்து
இருப்பார் என்று நான் நம்புகிறேன். உணர அவர் மறுத்தால்
அதுபற்றி நான் கவலைப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன்.



1987 மே 11]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தலைவருக்கு
அவர் கட்டுப்பட்டு பேசுவார் என்கின்ற பொருளிலேதான
நான் சொன்னேனே தவிர, வேறு அல்ல. ஆனால் இந்த அரசு,
அதாவது உள்ளாட்சி மன்றங்களின் சார்பாக நடைபெறு
கின்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவேண்டியது குறித்து அரசு
ஆணை, இதுபற்றியெல்லாம் அனைவரும் பேசி, பதில் சொல்லி
யாகிவிட்டது. அதனால்தான் கேட்கிறேன். தயது செய்து
அதை அனுமதிக்க வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மசோதாமீது பேசும்
படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கி. மனோகரன் : மசோதாவின் மேலேதான் பேசு
கிறேன. அதிலே தெரிவித்திருக்கிற கருத்துக்களின் கடைசி
பகுதிகளுக்கு வந்து விடுகிறேன். அது கொஞ்சம் நீளமான
இருக்கும் என்பதற்காக, யார் யாருக்கு வரவேற்பு கொடுக்க
வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் அதிலே பேசியிருக்
கிறார்கள். 4 ஆம் தேதியிட்ட ஆணையில் The Chairman or in his absence the Vice-Chairman of the Municipal Council concerned shall preside over the functions referred to in paragraph (1.)

தலைவர், துணைத் தலைவர், தலைவர் இல்லாத நேரத்
தில் துணைத் தலைவர் தலைமை தாங்கலாம் ஒரு நிகழ்ச்சி
நடைபெற்றால் என்று இருக்கிறது. ஆனால் 13 ஆம் தேதி
வந்து இருக்கிற ஆணையில் எப்படி குறிப்பிடப்பட்டிக்கிறது
என்றால் "The Chairman or, in his absence, the Vice-Chairman of the Municipal Council will make the welcome speech in respect of the functions referred to in paragraph (1)."

(பிற்பகல் 1-40)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அது முரண்பாடு அல்ல.
உள்ளது சிறத்தல். பிரதம அமைச்சர் அல்லது ஜனாதிபதி
வருகிறபோது அமைச்சர்கூட செல்ல வேண்டியிருக்கும்.
சேர்மேன் தான் தலைமை தாங்க வேண்டும் என்றால், அவ
ரோடு உடன் செல்லுகின்ற மத்திய அரசு அமைச்சரோ அல்லது
மற்றவர்களோ என்ன செய்வது என்ற நிலை வருகிறது.
ஆகவே, தலைமை என்பது அந்த நிகழ்ச்சியினுடைய தன்மை
யைப் பொறுத்து இருக்கிறது. பிரதம அமைச்சர் அவர்கள்
வரும்போது, முதலமைச்சர் அவர்கள் போகிறார் என்று வைத்
துக் கொள்ளுங்கள். அல்லது இங்குள்ள அமைச்சர் அல்லது
மத்திய அமைச்சர் போகிறார் என்று வைத்துக்கொண்டால்,
சேர்மனை தலைமை தாங்க வைத்துவிட்டு, இவர்களை
வெளியே நிற்க வைப்பது அவ்வளவு சரியாக ஆகாது. ஒன்றி
லிருந்து இன்னொன்று மேம்பாடே தவிர முரண்பாடு அல்ல,

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். யார் வந்தாலும் சரி, குடியரசுத் தலைவர் வந்தாலும் சரி, துணை குடியரசுத் தலைவர் ஆனாலும் சரி, முதலமைச்சர் ஆனாலும் சரி, தேர்ந் தெடுக்கப்பட்ட நகர ஆட்சி மன்றத் தலைவர்தான் அந்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்க வேண்டுமே தவிர, நீங்கள் சொல்லு கின்ற அந்த ஜனநாயகத்தை என்னால் ஜீரணிக்க முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்ந் தெடுக்கப்பட்ட நகரசபை தலைவர்களை அவமரியாதை செய்யாதீர்கள். அவருக்குத் தகுந்த மரியாதையை தர வேண்டுமே தவிர, குடியரசுத் தலைவர் வந்துவிட்டார், பிரதம அமைச்சர் வந்துவிட்டார், ஆகவே அந்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்குகிற யோக்கியதை இவருக்கு இல்லை என்று சொல்லி, தேர்ந்தெடுக்கப்பட்ட அவரை நீங்கள் உதாசீனம் செய்து விடக்கூடாது என்று இந்த நல்ல நேரத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல நேரத்தில் நான் மாண்புமிகு நாஞ்சிலார் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புவது, மந்திரிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான்.

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மந்திரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல என்று நான் சொல்லவில்லை.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், தேர்ந் தெடுக்கப்பட்ட நகர மன்ற தலைவர்களுடைய நிகழ்ச்சிக்கு, ஜனாதிபதியோ அல்லது பிரதம அமைச்சரோ அல்லது முதலமைச்சரோ வருகிறபோது அந்த இடத்தில் அவர்களுக்கு உரிய மரியாதை இல்லை என்று சொன்னார்கள். இந்த அவைக்கு பிரதம அமைச்சர் வருகிறார் அல்லது கவர்னர் வருகிறார் என்றால், சபாநாயகர் அவர்கள், தங்கள் இருக்கையை விட்டு இறங்கி, அதில் பி.எம். வந்து உட்கார முடியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி அல்ல. குடியரசுத் தலைவர் அவர்கள் வரும்போது இந்த ஆசனத்தில் தான் வந்து அமர்கிறார். நம்முடைய ஆளுநர் அவர்கள் வந் தாலும், இங்கேதான் வந்து அமர்கிறார். நான் பக்கத்தில் இன்னொரு நாற்காலியில் அமருகிறேன். இங்கே அப்படி தான் உட்கார வேண்டும். ஆகவே நம்முடைய நாட்டில் நடை முறை அப்படி இருக்கிறது. மற்ற நாடுகளில் அப்படி கிடை யாது. சபையின் முதல் நாளில், ஆரம்ப நாளில் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தும்போது முதலமைச்சர் அவர்களும்,



பிரதம அமைச்சர் அவர்களும், சபாநாயகர் அவர்களும் ஒன்றாகத்தான் மேலைநாடுகளில் அமர்ந்துகொண்டிருக்கிறார்கள். இங்கே நம்முடைய நாட்டில் அப்படி இல்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. Constitutionally, the Executive is totally different from the Legislature. இது தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. மலர்மன்னன் அவர்களுக்கு விளக்கம்.

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சட்ட அமைச்சர். ஆகவே அவர் கான்ஸ்ட்டிடியூசனுக்கு போயிருக்கிறார். நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புவது, How to recall a Member என்பதற்கு விளக்கம் தருகிறபோது சொல்லியிருக்கிறார்கள். ஒரு தொகுதியிலிருந்து, ஒரு ஒன்றியத்திலிருந்து அல்லது நகராட்சி மன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 25 ஆயிரம் பேர்கள் கையெழுத்துப் போட்டு, அந்த 25 ஆயிரம் கையெழுத்துக்களை ஒரு குறிப்பிட்ட அதிகாரிக்குத் தந்து, ஒரு விழுக்காட்டுக்கு குறையாமல் அந்த எண்ணிக்கை இருக்குமானால், அது ஒருவேளை 25 ஆயிரம் என்பது 50 ஆயிரமாக இருந்தாலும், கிட்டத்தட்ட 500 என்ற அளவுக்கு அந்த கையெழுத்து இருந்தால் போதும், அந்த கையெழுத்தைப் பெறுவது என்பது சுலபமான காரியம். பொதுவாக நமக்குள்ளே பேசிக் கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன், பிரச்சினையை சிக்கலுக்கு இழுக்கக்கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன், இது தொடர் கதையாகுமானால் என்ன ஆகும்? 250 பேரிடம் கையெழுத்து வாங்குவது என்பது சுலபமான காரியம். இன்னும் சொல்லுகிறேன், இது லஞ்ச லாவண்யம் என்ற நீர் ஊற்றின் கண்களை திறந்து வைக்கும் என்பதை அருள்கூர்ந்து நீங்கள் மறந்து விடக் கூடாது. இதை இரண்டு தரப்பினரும் செய்ய முடியும். இன்னும் சொல்லப்போனால் பாதிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சியின் நகராட்சி மன்றத் தலைவரும் இதைச் செய்ய முடியும். நாம் செய்யமுடியும். அதேபோல் அண்ணா தி.மு.க. வினரும் செய்ய முடியும். கையெழுத்து வேட்டையாடுவது என்பது ஒரு பொழுதுபோக்காகப் போகும். அதன் மூலம் பணம் பட்டுவாடா ஆகும். அதற்குப் பிறகு அதை நிர்வகிப் பது ஒரு ஆபிசர், தேர்ந்தெடுக்கப்படாத ஒருவர். அதற்குப் பிறகு 'ரெஃபரெண்டம்'. அதே ஒரு மினி தேர்தலாக மாறும். இத்தனை குழப்பமும் இதிலேயிருக்கிறது என்று சுட்டிக் காட்டுவதற்குத்தான் நான் இதைச் சொன்னேனே தவிர, மற்றபடி ஏட்டிக்குப் போட்டி என்ற அளவிற்கு இதை வளர்த்து விடக் கூடாது என்று நான் அமைச்சரவர்களைப் பணிவோடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கையெழுத்து உண்மையானது தானா அல்லவா? அதற்கு இங்கே என்ன சொல்கிறார்கள் என்றால், "ஆனால் கையொப்பங்கள்

[திரு. கி. மனோகரன்] [1987 மே 11

உண்மையானது தானா என்று சரி பார்ப்பது என்பது அம்
முறையீட்டிலுள்ள மொத்த கையொப்பங்களில் ஒரு விழுக்
காட்டிற்குக் குறைவாக இருக்கலாகாது. மேலும் அத்தகைய
முறையீடு எதுவும் அத்தகைய ஒன்றியத் தலைவரின் பதவிக்
கால அளவு தொடங்கியதிலிருந்து, ஒரு ஆண்டுக் கால அள
விற்குள்ளாகவோ, அல்லது அது முடிவதற்கு 6 மாத காலத்
திற்கு முன்னாலோ செய்யப்படுமேயானால், அதனை ஏற்
றுக்கொள்ளலாகாது.'' அதற்கு இப்போது திருத்தம் கொண்டு
வந்திருக்கிறார்கள். ஒரு ஆண்டுக் காலம் என்பதை ஆறு மாதக்
காலமாக மாற்றியிருக்கிறார்கள். இது காழ்ப்புணர்ச்சியின்
அடிப்படையில் கொண்டுவருவது அல்ல என்று சொல்கின்ற
அதே நேரத்தில், இப்படிப்பட்ட சூழ்நிலையை நீங்கள் ஊக்கு
விப்பீர்களேயானால், கையெழுத்து வேட்டை தொடருமே
யானால், அந்த வேட்டையையொட்டி, பணம் நடமாடுமே
யானால், நிச்சயமாகச் சொல்கிறேன், நிர்வாகங்கள் முடங்கிப்
போகும். நிறுவனங்கள் ஒழுங்காகச் செயல்படாத சூழ்நிலை
உருவாகும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அவர்
களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இதை நான்
சொல்கிறேனே என்ற காரணத்திற்காகவோ, நான் யாரோ
ஒருவரின் கருத்தை எதிரொலிக்கிறேன் என்ற காரணத்திற்
காகவோ—நான் அவ்வளவு குழந்தை ஒன்றுமல்ல, விவரம்
தெரிந்தவன் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்
துக் கொள்கிறேன். நான் இந்தச் சட்டத்தை படித்தவுடன்
எத்தகைய உணர்வுகளை பெற்றேனோ, அந்த உணர்வு
களைத்தான் இங்கே நான் வைத்திருக்கிறேனே தவிர, படித்
தேனே தவிர, மற்றவை அல்ல.

இன்னொன்று. நான் சார்ந்திருக்கின்ற ஒரு கட்சியினுடைய
தலைவர், இன்னின்ன கருத்துக்களைப் பேசுங்கள் என்று
எனக்கு ஆணையிடுவாரேயானால், அதை நிறைவேற்றுகின்ற
ஜனநாயகக் கடமை எனக்கு உண்டு என்பதை இந்த நேரத்
தில் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன், தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல், கடைசியாக நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புவது, ஏற்கனவே அமைச்சரவர்கள் ஒத்துக்
கொண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 'ரைட் டு
ரிகால்' என்பது இத்தோடு நிற்காமல், அது தேர்ந்தெடுக்கப்
பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பொருந்தும். தேர்ந்
தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொருந்
தும். இந்தக் கருத்தை எனக்கு முன்னாலே அவர் சொல்லி
யிருப்பாரேயானால், நான் அதற்காக இந்த நேரத்தை
செலவழித்து இருக்கமாட்டேன். இப்போது நடவடிக்கை
எடுக்கப்படும் என்றும் உறுதியாக அறிவித்திருக்கிறார். நாடாளு
மன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நாடாளு
மன்றத் தொடர்க்கூட்டத்தில் கொண்டுவருவதற்கு முயற்சிக்க
லாம். அதற்கு அடுத்த தடவை நடக்கின்ற கூட்டம் போடும்



1987 மே 11] [திரு. கி. மனோகரன்]

போது, அந்தக் கூட்டத்திலேயாவது இதைக் கொண்டுவந்து—
இன்றைய தினம் முதலமைச்சருக்கு இருக்கின்ற செல்வாக்கு
காரணமாக, ராஜீவ் காந்தி அவர்களிடம் கொண்டிருக்கின்ற
அன்பு, பாசம் காரணமாக, சட்டத்திலே திருத்தம் கொண்டு
வருவது என்பது சிரமமான காரியமல்ல. அதிலே 'ரைட்
டு ரிகால்' என்பது ஏதோ ஒரு புதிய தத்துவத்தைக் கண்டு
பிடித்துச் சொல்கிறோம் என்று அல்ல. 'ரைட் டு ரிகால்'
என்பது உங்களுக்கே தெரியும். சபாநாயகர் அவர்களே,
ரஷ்யன் கான்ஸ்டிட்யூஷனிலே இருக்கிறது. ரஷ்யன் கான்ஸ்
டிட்யூஷனில் 'ரைட் டு ரிகால்' மட்டுமல்ல. 'ரைட் டு செசீட்',
என்று கூட இருக்கிறது. பிரிந்து போகிற உரிமையோடு
கூடிய அதிகாரம் என்றுகூட இருக்கிறது. ஆனால் இவைகளைப்
பயன்படுத்துவது, அதிகாரத்தில் இருப்பவர்கள் நடந்து
கொள்கின்ற முறைகளைப் பொறுத்தது. அவர்கள் முறையாக
இயங்குவார்களேயானால், பழி வாங்குகிற உணர்ச்சி
யோடு அவர்கள் இல்லாமல் இருப்பார்களேயானால், நிச்சய
மாக நான் தெரிவிக்க விரும்புகிறேன், திருப்பி அழைக்கின்ற
உரிமைக்கு இங்கே தேவையே வராது. அதற்குரிய தேவை
யும் இராது. திருப்பி அழைத்ததாக ஞாபகம் இல்லை.
பிரிந்து சென்றதாகவும் ஞாபகம் இல்லை. என்றாலும்
தங்களது அரசியல் சட்டத்தில் இந்த இரண்டையும் அவர்கள்
இணைத்து இருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்
தில் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்து
வைக்க விரும்புகிறேன்.

அதேபோன்று 50 ஸ்டேட்சை உள்ளடக்கிய
அமெரிக்காவிலும், ஏறத்தாழ 13 ஸ்டேட்களுக்கு, 'ரைட் டு ரிகால்'
இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
அதிலே ஒரு ஸ்டேட்டில் மட்டும் ஒருவரை திரும்பி அழைத்
ததாக நான் அண்மையில் ஒரு புத்தகத்தில் படித்தேன்.
இப்படிப்பட்ட சூழ்நிலை அபூர்வமாகத்தான் வரும். ஆனால்
அப்படிப்பட்ட சூழ்நிலையை நீங்கள் உருவாக்குவீர்களே
யானால், அடிக்கடி திருப்பி அழைக்கின்ற அளவிற்கு, பக்குவப்
படுத்தாத அளவிற்கு மக்களை நீங்கள் ஆளாக்கமுடியுமே
தவிர, அவர்கள் பக்குவப்பட்டவர்களாக மாற மாட்
டார்கள். பணம் விளையாட ஆரம்பித்தால், தினம் தினம்
திருப்பி அழைக்கும் ஒரு நாடகம் நடந்து கொண்டேயிருக்
கும். அதை நீங்கள் தவிர்ப்பது நல்லது என்று இந்த நேரத்
தில் நான் அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த
விளக்கத்தை அவர் பெற்றதற்குப் பிறகு, பதில் சொல்கின்ற
நேரத்தில் நான் திரும்பவும் கேட்டுக் கொள்கிறேன்—

[திரு. கி. மனோகரன்] [1987 மே 1

(பிற்பகல் 1-50).

நான் திருப்பியும் கேட்டுக் கொள்கிறேன். இங்கே பேசியாயிற்று
என்று சொன்னீர்கள். என்றாலும் நான் திருப்பியும் கேட்டுக்
கொள்கிறேன். நகராட்சி மன்றத்தில் அல்லது ஒன்றிய மன்றங்
களில் வரவேற்பு பெறுவதற்கு என்று நீங்கள் ஒரு பட்டியலை
வகுத்து இருக்கிறீர்களே முறைதானா என்று மட்டும் நான்
கேட்டு தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எவ்வளவோ பெரிய
தலைவர்கள், நாட்டுக்காக உழைத்தவர்கள் எல்லாம் இருக்
கிறார்கள். அவர்கள் எல்லாம் சாகவில்லை. அவர்களுக்கெல்
லாம் வரவேற்பே கொடுக்கக்கூடாதா? கொடுக்க வேண்டுமென்
றால் குடியரசுத் தலைவருக்கு, மற்றவர்களுக்கு மட்டும்தானா?
அமைச்சர்களுக்கு மட்டும் தானா? தனியாராக ..(குறுக்கீடு).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே.
There is a suitable distinction in that. வரவேற்பை எல்லோ
ருக்கும் கொடுக்கலாம். வரவேற்பை தடுக்கவில்லை. திறப்பு
விழாக்கள், திட்டங்களைத் துவக்குவதற்கு மட்டும் தான்.

திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நான் இன்னும்
சொல்கிறேன். முன்கூட்டியே கற்பனை செய்து கொண்டு ஒரு
காரியத்தில் இறங்காதீர்கள். வரவேற்பு வாங்கிக் கொள்ளலாம்
ஆனால் திட்டங்களைத் தீட்டும்போது, அந்தத் திட்டங்களுக்.
கானச் செலவை அரசே தரும்போது அந்தத் திட்டங்களைத்
துவக்கி வைத்து பேசும்போது, அதிலே அரசியல் பேசக்கூடும்
என்ற அச்ச உணர்வு காரணமாக நீங்கள் இந்தக் காரியத்தை
செய்கிறீர்கள். அந்த அச்சத்தைப் போக்கத்தக்க அளவிற்கு
அனைவரையும் அழைத்துச் செல்லுகின்ற அளவிற்கு இந்த அரசு
இருக்குமானால் நிச்சயமாக சொல்கிறேன் அவர் செல்லுகின்ற
ஒரு பகுதிக்கு அரசின் பணத்தையும் பெற்று அருமையான ஒரு
திட்டத்தை கொண்டுவருவார்களானால் அந்தத் திட்டத்தைப்
பாராட்டி பேசுபவன்தான் மனிதனாக இருக்க முடியுமே தவிர
அந்த திட்டத்தை, இது திட்டமா என்று குறை சொல்லிவிட்டு
வருபவன் மனிதனாக இருக்க மாட்டான், அரசியல்வாதியாக
இருக்க மாட்டான், யோக்கியதை உள்ளவனாக இருக்க மாட்
டான், ஆகவே ஒன்றை எண்ணி, எதிர்பார்த்து..............
(மணியடிக்கப்பெற்றது) அந்தக் காரியத்தில் ஈடுபட வேண்டாம்
என்று நான் மனதார கேட்டுக் கொள்கிறேன்.... (குறுக்கீடு).
எனக்கு ஒன்றும் பதில் தேவையில்லை. அவர் பதில் சொல்வார்.
நான் திருப்பியும் உங்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்
துக் கொள்கிறேன். இங்கே ஏராளமான நோட்டீஸ்கள், தரப்
பட்டிருக்கின்றன. இதை நீங்கள் அமுலுக்கு கொண்டுவருவதற்கு
முன்னால் செலக்ட் கமிட்டிக்கு அனுப்புங்கள் என்று காங்கிரஸ்
கட்சியின் சார்பிலேயும், இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளின் சார்
பிலேயும், ஜனதா கட்சியின் சார்பிலேயும், திராவிட முன்னேற்
றக் கழகத்தின் சார்பிலேயும் இங்கே நோட்டீஸ்கள் கொடுக்கப்
பட்டிருக்கின்றன. அப்படி செலக்ட் கமிட்டிக்கு அனுப்பிவைத்து



1987 மே 11] [திரு. கி. மனோகரன்]

அங்கே அவர்கள் விவாதித்ததற்கு பிறகு இந்த மசோதாவை
நீங்கள் நிறைவேற்றினால் ஜனநாயகத்தை காப்பாற்றுகின்ற
மரபுகளை மதிக்கின்றவர்களாக நீங்கள் கருதப்படுவீர்கள்
என்பதை இந்த நேரத்திலே நான் அமைச்சர் அவர்களுக்கு
சொல்லி அந்த அடிப்படையில் உங்களது பதில் அமையட்டும்
என்று கேட்டு அமைகின்றேன்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின்
சார்பாக இந்தச் சட்டமுன்வடிவின் மீது ஒரு சில கருத்துக்களை
தெரிவிக்க விரும்புகிறேன். முதலாவதாக நான் ஒன்றைத் தெளிவு
படுத்த விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவை காங்கிரஸ்
பேரியக்கம் வன்மையாக எதிர்க்கின்றது. நினைத்துப் பார்க்க
முடியாத பின் விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு முக்கிய
மான சட்ட முன்வடிவு 40 ஆண்டுக்கால ஜனநாயக அமைப்பிலே
முதன் முறையாக தமிழகத்திலே கொண்டுவரப்பட்டிருக்கிறது.
அத்தகைய சட்ட முன்வடிவை இவ்வளவு அவசரமாக நிறை
வேற்ற வேண்டிய அவசியம் உண்டா என்று நான் கேட்க
ஆசைப்படுகின்றேன். இந்தப் புதிய சட்டமுன்வடிவு நிறை
வேற்றப்பட்டு அதன் அடிப்படையில்தான் ஊராட்சி, நகராட்சி
தேர்தல்கள் நடந்து இன்னும் 1½ ஆண்டுக்காலம் கூட
பூர்த்தி பெறவில்லை. இந்த நேரத்திலே, அந்த புதிய சட்ட
முன்வடிவின் அடிப்படையில் நடந்த தேர்தல்களின் முழு விளை
வுகளையும் குறித்து உணர்ந்து செயல்படுவதற்கு அந்தப் பதவுக்
காலம் முடிவடையும் வரையிலாவது காத்திருக்க வேண்டியது
அவசியம் இல்லையா என்று நான் கேட்க ஆசைப்படுகின்றேன்.
ஏற்கனவே இட ஒதுக்கீடு முறை பெண்களுக்கும், ஆதி திராவிடர்
களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கொள்கையை
காங்கிரஸ் பேரியக்கமும் சரி, ஆளும் கட்சியினரும் சரி, மற்ற
அனைத்துக் கட்சிகளும் சரி கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டு
விட்டன. ஆனால் நீதிமன்ற குறுக்கீட்டின் காரணமாக அதை
நாம் அமுல்படுத்த முடியாமல் போய்விட்டது. இந்த நிலையிலே,
அதற்கு பின்னால் அண்டை மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரா
போன்றவற்றில் அந்த இட ஒதுக்கீட்டின் அடிப்படையில்
ஊராட்சி, உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்திருக்கின்றன.
அவை நீதிமன்றங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

எனவே, நமக்கு மீண்டும் இட ஒதுக்கீடு அடிப்படையில் சட்
டத்தைத் திருத்திட வேண்டிய ஒரு வாய்ப்பிருக்கிறது. அப்படி
சட்டத்தை திருத்துகின்ற வாய்ப்பைப் பயன்படுத்துகிற
நேரத்திலே இந்த சட்டத்தையும், திருத்தத்தையும் கொண்டு
வந்தால் நலமாக இருக்கும் என்று நான் கூறமுடியும்.

மேலும் தற்போதுதான் தமிழகத்திலே நகராட்சித் தலைவர்
கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள்
மக்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.
அதன் காரணமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்

கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்குமிடையே ஒரு சுமுகமான அல்லது ஒரு சுமுகமற்ற சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. ஆகவே, அவர்கள் தங்கள் பணியைச் செவ்வனே செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. இந்த நேரத்தில் அதை யும் நாம் பரிசீலனை செய்யவேண்டிய நிலையிலே இருக்கிறோம்.

இந்நிலையில், இதற்கிடையில் இந்தச் சட்ட முன்வடிவினை நிறைவேற்றவேண்டிய அவசியம் இல்லை என்று நாங்கள் கருது கிறோம். உறுப்பினர்களுக்குப் போதிய வாய்ப்பு கூட வழங்க முடியாத நிலையிலே அவசரமாக, வியாழக்கிழமை, வெள்ளிக் கிழமை இந்தச் சட்ட முன்வடிவை கொண்டு வந்துவிட்டு — நாங்கள் மறைந்த நண்பர் சிந்தன் அவர்களுக்கு நன்றி கூற வேண்டும். அவர்கள் மறைவின் காரணமாக எங்களுக்கு மேற் கொண்டு இரண்டு நாட்கள் அவகாசம் கிடைத்தது. ஆகவே, இவ்வளவு அவசரமாக சிந்தித்து அதன் விளைவுகள் பற்றி யோசிக்கக் கூட, ஆராயக் கூட நேரம் இல்லாத நிலையிலே இவ்வளவு அவசரமாக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வரவேண்டிய அவசியம், தேவை இந்த அரசிற்கு என்ன என் பதை அறிய விரும்புகிறேன்.

லஞ்சம், ஊழல், நிர்வாகத் திறமையின்மை காரணமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் அல்லது உறுப்பினர் இருப்பா ரேயானால், அவரைச் சட்ட பூர்வமாக பதவி நீக்கம் செய்ய, தற்போதுள்ள சட்ட அமைப்பிலேயே அரசிற்கு முழு அதி காரம் உண்டு. முனிசிபல் ஆக்ட்-செக்ஷன்-41, பஞ்சாயத்து ஆக்ட்-செக்ஷன் 151 (ஏ)— இவைகளின் கீழ் அரசிற்கு ஏற் கனவே அதிகாரம் இருக்கின்ற நிலையில் இத்தகைய ஒரு சட் டம் கொண்டு வந்து, தனியாக சட்டம் கொண்டு வரவேண்டிய அவசியம் இருப்பதாக நிச்சயமாக நாங்கள் கருதவில்லை.

மற்றொன்றை நான் இங்கே கூற ஆசைப்படுகிறேன். நக ராட்சி, ஊராட்சி, உள்ளாட்சி அமைப்புகள், கட்சி வேறுபாடு இல்லாது அதிக அதிகாரங்களை, அதிக உரிமைகளைக் கோரி கிளர்ச்சி செய்கின்ற ஒரு நிலைமை உருவாகியிருக்கிறது. ஐ.ஆர். டி.பி., என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி., போன்ற திட்டங் களை நிறைவேற்றுவதில் தங்களுக்கு குறுக்கீடு இருக்கிறது என் றும், தங்களுக்கு மேலும் அதிக உரிமைகள் வேண்டுமென்றும் கட்சி வேறுபாடு இல்லாது எல்லாத் தலைவர்களும் கோரிக்கை எழுப்பி வருகிறார்கள். அந்த நிலையிலே 12,000 பஞ்சாயத்துத் தலைவர்களும், 600-க்கு மேற்பட்ட பேரூராட்சித் தலைவர்கள், 382 ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், 98 நகராட்சித் தலைவர் கள் ஆகியவர்களையும் மற்றுமுள்ள பஞ்சாயத்து உறுப்பினர் களையும் கருத்தில்கொண்டு பார்த்தால் ஏறத்தாழ 1½ இலட்சத் திற்கு அதிகமான நபர்கள் மக்களால் நேர்முகமாக ஜனநாயக அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த ஆட்சி பீடத்தை அலங்கரித்து வருகிறார்கள். அவர்களது அதிகாரத்திலும், உரிமைகளிலும் அநாவசியமாகத் தலையிடுவது ஜனநாயகக்





கொள்கைக்கு விரோதமானது. அப்படியே ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமென்று இந்த அரசு கருதுமேயானாலும் கூட, அவர் களது கருத்தை ஜனநாயக முறைப்படி, மக்களால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் உறுப்பினர்களின் கருத்தைக் கோருவது அவசியம்.

அவர்களது கருத்தினைக் கூட நாம் ஆராயாது செயல்படு வது ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு ஏற்றதாக இருக்க முடி யாது. எனவே, இதற்காகவாவது, அவர்களுடைய கருத்துக்களை யும், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் கருத்தையும் நாம் கேட்க வேண்டியது அவசியமாக இருக்கிறது.

அதே நேரத்தில் இந்தச் சட்டத்திலே உள்ள ஒரு விஷயத்தை நான் கூற விரும்புகிறேன். மக்களால் முறைப்படி பெரும்பான் மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதி இன்று அதிகாரி யினுடைய கட்டுப்பாட்டின் கீழ், அதிகாரியினுடைய அச்சுறுத்த லுக்கு ஆளாகி, அடங்கி நடக்க வேண்டிய சூழ்நிலை இந்தச் சட்டமுன்வடிவால் ஏற்படுகிறது.

நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்: 25 விழுக்காடு உறுப்பினர்கள் மக்கள் கையொப்பம் இட்டால் ஒரு அதிகாரி விசாரணை நடத்து வார். அந்த அதிகாரி அந்த விசாரணையின் அடிப்படையில் பொதுமக்கள் கருத்தை அறியவேண்டுமென்று முடிவு செய்வாரே யானால், மக்கள் முன் தீர்வுக்கு விடப்படும்.

(பிற்பகல் 2-00)

ஆகவே மக்கள் முன் தீர்ப்புக்கு விடப்படும் என்கிற முடிவை எடுக்க வேண்டியது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதி யோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** அதிகாரியின் முடிவு மக்க ளுடைய தீர்ப்புக்கு விடப்பட வேண்டும். எனவே அது அதிகாரி யின் முடிவாகிறது. அப்படிப்பட்ட அதிகாரி, தேர்ந்தெடுக்கப் பட்ட மக்கள் பிரதிநிதியை எந்த அளவுக்கு அச்சுறுத்த முடியும் என்பதை தயவு செய்து எண்ணிப் பாருங்கள். ஒரு அதிகாரியின் விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகி அவருடைய அச்சுறுத்தலுக்கு உட்பட்டு மக்கள் பிரதிநிதி செயல்பட வேண்டிய சூழ்நிலை உருவாகுமானால் அதைக் காட்டினாலும் ஜனநாயகத்திற்கு, மக்கள் சக்திக்கு, என்ன அவமரியாதை இருக்க முடியும். எனவே தயவு செய்து அதற்காகவாவது இந்தச் சட்ட முன்வடிவை நீங் கள் திரும்பப் பெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

மக்கள் கருத்துக்கு ஒரு விரோதமான ஒரு முடிவை நீங்கள் கூறுகிறீர்கள். மக்களிடம் வாக்கெடுப்பு நடத்துவோம். அதற்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியைப் பதவி நீக்கம் செய்வோம் என்று, அண்ணாவின் வழியில் வந்தவர்கள் என்று

பெருமையோடு சொல்லுகிற நீங்கள், சொல்லிக் கொள்கிறீர்கள். ஆனால் மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று அண்ணா அவர்கள் கூறினார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் தன்னுடைய கடமையை ஒழுங்காகச் செய்யாவிட்டால் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்கள் பணிகளைச் சரியாகச் செய்யாவிட்டால், தங்கள் பதவியைத் தவறாகப் பயன்படுத்தினால், நிச்சயமாக அடுத்தத் தேர்தலில் அவர் வாக்கு கோர முடியாது. மக்கள் அளிக்கிற மகத்தான தண்டனையே இருக்கும்போது இடையில் இப்படிப்பட்ட ஒரு நிலையை நீங்கள் ஏன் உருவாக்குகிறீர்கள். மாண்புமிகு திரு நாஞ்சிலார் அவர்கள் குறிப்பிட்டபடி ஒரு மினி தேர்தலையே நடத்த வேண்டிய அவசியமில்லை என்றுதான் நானும் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சட்டமுன்வடிவு மக்கள் கருத்துக்கு விரோதமானது (மணியடிக்கப் பெற்றது) ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு விரோதமானது. சுதந்திர ஜனநாயக அரசமைப்புக்கு வேட்டு வைக்கக் கூடிய சக்தி வாய்ந்தது. எனவே நான் சார்ந்திருக்கிற பேரியக்கத்தின் சார்பாக இந்த அரசையும் மாண்புமிகு உறுப்பினர்களையும் நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன் — எங்கள் நண்பர்கள் கொடுத்த திருத்தத்தின் அடிப்படையில் இதை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு விடுங்கள் அல்லது குறைந்த பட்சம் மக்களுடைய கருத்தை அறிய ஒரு வாய்ப்பு ஏற்படுத்தி, அவ்வாறு மக்கள் கருத்தறிந்த பின்னர் இந்த மசோதாவைக் கொண்டு வாருங்கள். மக்கள் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பவர்களானால் நீங்கள் தயவு செய்து பொது மக்களின் கருத்தை அறிந்த பிறகு இந்தச் சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வாருங்கள். எனவே தயவு செய்து இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள் என்பதை மீண்டும் வலியுறுத்தி அமருகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.03 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

[பிற்பகல் 4—00]

பிற்பகல் 4—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை வர





வேற்று ஒரு சில கருத்துக்களை நான் இங்கே எடுத்துச் சொ[illegible]லலாம் என்று கருதுகிறேன். மக்களுக்கு அதிகாரம் வழங்குகிற இந்தச் சட்டத்தை நான் முதலிலே வரவேற்கிறேன். திரும்ப அழைக்கின்ற உரிமையை மக்களுக்குச் கொடுக்கின்ற இந்த 'கான்செப்டை' (conc:pt)—ப் பொறுத்த வரையில் இது அனைவராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்று என்பதை இந்த நேரத்திலே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இதே மன்றத்தில் 29—4 1987-ஆம் தேதி தன்னுடைய கருத்துக்களைச் சொன்ன திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் கொள்கை திட்டத்தை வகுத்தவர்களில் தான் முன்னிலை நின்றவன் என்ற முறையில் நூற்றுக்கு நூறு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அதை நான் வரவேற்கிறேன் என்று சொன்னதோடு மட்டுமல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்ள் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களைத் திரும்ப அழைக்கின்ற உரிமையை மக்களுக்குத் தரத்தக்க வகையில்—Right to recall — இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு இந்த அரசு முற்படுமா என்று கேட்டு தன்னுடைய கருத்தை அன்றைக்கு எடுத்துச் சொன்னார்கள். அது மட்டுமல்ல. இன்றைக்கு அவர் இங்கே பேசுகின்றபோது ஏதோ இந்தச் சட்டத் திருத்தத்திலே முரண்பாடு இருப்பதாகச் சொன்னார். ஆனால் அன்று அவர் சொன்ன அந்தக் கருத்துக்கும் இன்றைக்கு அவருடைய கட்சியின் சார்பாக சொன்ன கருத்துக்கும் முரண்பாடு இருக்கிறதே தவிர இந்தச் சட்டத் திருத்தத்திலே முரண்பாடு இல்லை என்பதை முதலிலே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளபடியே அவர் வாய் அளவிலே இந்தச் சட்டத்தை எதிர்த்தார். உள் மனது இந்தச் சட்டத் திருத்தத்திற்கு என்றும் ஆதரவு தரும் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் சொல்லப் போனால் பல்வேறு வகையிலே இந்தச் சட்டத்திற்கு ஆதரவு வந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு திரு. ஹெக்டே அவர்கள், கடந்த மாதம் பத்திரிகைகளுக்குப் பேட்டி தந்தபோது மக்களுக்கு திருப்பி அழைக்கிற உரிமை வழங்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள்; வெளிநாடுகளில், அமெரிக்கா. ஸ்வீடன், சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் இந்த உரிமைகள் மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

1972—73ஆம் ஆண்டு மக்கள் மனதிலே இந்த எண்ணம் ஏற்பட்டபோது அதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் குரல் கொடுத்தபோது பெரியவர் திரு. கல்யாண சுந்தரம் போன்றவர்கள் இதற்கு ஆதரவு தந்து வரவேற்புத் தந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. செ. செம்மலை] [1987 மே 11

உள்ளபடியே பொது வாழ்க்கையில் தன்னலமற்ற சேவை செய்து வருகிறவர்களுக்கு இந்தச் சட்டம் ஒரு அக்கினிப் பிரவேசம் என்பதை ஒத்துக்கொள்கிறேன். இராமாயணத்தில் கூட சீதை அக்கினி பிரவேசம் செய்தார் தன்னுடைய கற்பை காத்துக்கொள்வதற்காக என்று சொல்வார்கள். அந்த நிலைமையில் அப்படிப்பட்ட பிரவேசத்திற்கு பொது வாழ்க்கையில் ஈடுபடுகிற யாரும் தன்னை ஆளாக்கிக்கொள்ள அஞ்சத் தேவையில்லை என்பதை இந்தச் சட்டமுன் வடிவு நமக்கு வலியுறுத்திக்கொண்டு வருகிறது என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும். குறிப்பாக ஒரு மாணவன் ஆசிரியருக்கு பயப்பட்டாக வேண்டும். ஒரு மகன் தன் தந்தைக்கு பயப்பட்டாக வேண்டும். ஒரு மனைவி தன்னுடைய கணவனுக்கு பயப்பட்டாக !வேண்டும். இந்த உறவுகளில் இல்லாதவர்கள் கடவுளுக்குப் பயந்தாக வேண்டும். கடவுள் நம்பிக்கையும் இல்லாதவர்கள் அரசாங்கம் கொண்டு வருகிற சட்டத்திற்காவது பயந்தாக வேண்டும். ஆனால் கடவுள் நம்பிக்கை கூட இல்லாதவர்கள், பொது மக்களுடைய வாக்குகளை வாங்கி பொறுப்புக்கு வந்தவர்கள் அவசியம் அந்த மக்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்பதை இந்தச் சட்டம் வலியுறுத்தி வருகிறது. இந்தச் சட்டத்தின் மூலம் எத்தனை பேர் நீக்கப்படுகிறார்கள், எத்தனை மறு தேர்தல்கள் வருகின்றன என்பது முக்கியமல்ல. தவறான வழியில் செல்லுகிறவர்கள் திருந்துவதற்கு, தங்களுடைய தவறான பாதையை மாற்றிக்கொள்வதற்கு எச்சரிக்கை செய்கிற சட்ட முன்வடிவாக அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும்.

அதையும் மீறி தவறு செய்தால்தான், இந்தச் சட்டம் தன்னுடைய வேலையைச் செய்கிறது. எனவே இந்தச் சட்டத்தைப் பார்த்து யாரும் பயப்பட வேண்டிய அவசியம் இராது. மற்ற சட்டங்களுக்கும் இதற்கும் உள்ள வேறுபாட்டை உன்னிப்பாகப் பார்க்க வேண்டும். இன்றைக்கு பல்வேறு எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டுவரும்போது, இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்த மாட்டீர்களா, இதை எதிர்க்கட்சிகள் மீது பாய்ச்ச மாட்டீர்களா என்று எல்லாம் வேகமாகப் பேசினார்கள். மற்ற சட்டங்களுக்கும், இதற்குமுள்ள வேறுபாட்டைப் பார்க்க வேண்டும். இந்தச் சட்டத்தைக் கையாளுபவர்கள் மக்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அரசாங்கம் நினைத்தால்கூட முடியாது. மக்களிடம் அதிகாரம் கொடுக்கிறோம். இதிலே என்ன தவறு? எதிர்க் கட்சியிலே இருக்கிறவர்கள், இதிலே என்ன கண்டிருக்கிறார்கள் என்றுதான் புரியவில்லை. ஜனநாயக அடிப்படையில் மக்களுக்கு அதிக அதிகாரத்தை வழங்குகிறோம். நாம் அரசாங்கத்திற்கு அதிக அதிகாரம் வழங்க வேண்டுமென்று கேட்கிறோம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும். மத்தியிலே குவிந்திருக்கும் அதிகாரங்கள் நமக்கு வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.



1987 மே 11] [திரு. செ. செம்மலை]

ஆனால் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு மக்களுக்கு அதிகாரங்கள் வழங்க இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வது, மக்கள் பயன்படுத்தும் இந்தச் சட்டத்தை, மக்கள் கையாளக்கூடிய இந்தச் சட்டத்தை கண்டு ஏன் நீங்கள் அஞ்ச வேண்டும்? மக்கள்மீது கூட உங்களுக்கு நம்பிக்கை இல்லையா என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) தலைவர் அவர்களே, விரைவில் முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு காங்கிரஸ் கட்சி சார்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவீந்திரன் அவர்கள் இதைக் கடுமையாக எதிர்த்தார்கள். இந்த நேரத்திலே பணிவன்போடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சித்தன் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். இதிலே என்ன தவறுகளைக் கண்டார்கள் என்பதை நீங்கள் பேசுகிறபோது விளக்கமாகச் சொன்னால் நன்றாக இருக்கும். நீங்கள் ஆன்ட்டி டிபெக்ஷன் பில் கொண்டு வந்தீர்கள் நாங்கள் ஆதரித்தோம். கிட்டத்தட்ட எல்லோரும் அதை ஆதரித்தார்கள். ஒரு கட்சிக்கு துரோகம் செய்வதைத் தடுக்க வேண்டுமென்று அந்தச் சட்டம் கூறியது அதை நாம் ஆதரித்தோம். கட்சிக்குத் துரோகம் செய்கின்ற ஒரு சட்டமன்ற அல்லது பாராளுமன்ற உறுப்பினரைத் தடுக்கின்ற நீங்கள், மக்களுக்குத் துரோகம் செய்யும் ஒரு பொதுப் பொறுப்புக்கு வருகிறவரை இந்தச் சட்டம் திரும்ப அழைக்கிற உரிமையை ஏன் நீங்கள் மறுக்கிறீர்கள் என்பதை தயவுசெய்து சொல்லியாக வேண்டும்.

பணிவன்போடு காங்கிரஸ் நண்பர்களைப் பார்த்து ஒன்று கேட்டுக்கொள்வேன். 1977ஆம் ஆண்டு புரட்சித் தலைவரவர்கள் இந்த நாட்டு மக்களுடைய முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 2 ஆண்டுக் காலம் சீரிய முறையில், செம்மையான முறையில் ஆட்சி செய்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவீந்திரன் பேசியதால் சொல்கிறேன். அப்படி தவறு செய்தால், அவர்களை விட்டு விட்டு, அடுத்த தேர்தலில் மக்களைச் சந்திக்க வைக்கலாமென்று அவர்கள் சொன்னார்கள். 1977-லே தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை 1979ஆம் ஆண்டு ஏன் நீக்கினீர்கள் ? 5 ஆண்டுக்காலம் பொறுத்துப் பார்க்கக் கூடாதா ? அப்போது ரெஃப்ரண்டம் வைத்தார்கள். இந்த ஆட்சி சரியான பாதையில் போகிறதா என்பதற்கு ரெஃப்ரண்டம் வைத்து, 1980-லே மீண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்கள். 3 முறை மக்களுடைய அங்கீகாரத்தைப் பெற்று வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட உத்தமத் தலைவர், புரட்சித் தலைவர் அவர்கள் மக்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கிற இந்தச் சட்டத்தை,

[திரு. செ. செம்மலை] [1987 மே 11

இன்னும் சொல்லப்போனால் அடிப்படையாக, அஸ்திவாரமாக இருக்கிற உள்ளாட்சி அமைப்புகளில் இருக்கிற மக்களுக்கு அதிகாரம் கொடுக்கும் வகையில் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் உள்ளாட்சி அமைப்பின் அடிப் படை பலமாக இருந்தால்தான் மேலே இருக்கிற சட்ட மன்ற உறுப் பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மேலே பொறுப் புக்கு வருகிறவர்கள் ஒழுங்காக இருப்பார்கள். அந்த அஸ்திவாரத்தைப் பலமாக்கும் அந்தக் காரியத்தில் புரட்சித் தலைவரவர்கள் ஈடுபடும் வகையில் இந்தச் சட்டமுன் வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

எனவே அந்த வகையில் இந்தச் சட்டமுன்வடிவு மக்களுக்கு அதிக அதிகாரம் வழங்கும் வகையில் இருக்கிறது. எனவே எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இதைப் பார்த்து பயப்பட வேண்டியதில்லை. காரணம், மக்கள் இதைப் பயன்படுத்து கிறார்கள். மக்களுக்கு அதிகாரம் வழங்கும் சட்ட முன்வடிவு இது. இந்த ஆட்சி இதைத் தவறாகப் பயன்படுத்தாது. அரசியல் அமைப்புச் சட்டம் ஆர்ட்டிகிள் 124-படி சுப்ரீம் கோர்ட் ஜட்ஜை இம்பீச் செய்யலாம் என்ற செக்ஷன் இருக் கிறது. என்றைக்காவது அதை தவறாகப் பயன்படுத்தி இருக் கிறார்களா என்று பார்க்க வேண்டும். சட்டம் வந்து விட்ட தால், பாதிப்புக்கு உள்ளாக்கப்படுவோம். இது பலர் மேல் பாயும் என்று பயப்பட வேண்டிய தேவையில்லை. தேவைப் படுகின்றபோது, இன்னும் சொல்லப்போனால், பொது வாழ்விலே இருப்பவர்கள் முறைப்படுத்திக் கொள்ள வேண்டும், மக்களுக்குப் பயந்து சேவை செய்வதற்கு இந்தச் சட்ட முன்வடிவு வழி வகுக்கும். அந்த வகையில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சார்பில் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்ட முன் வடிவை வரவேற்று இந்த அளவிலே என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 4—10)

திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர் களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்தச் சட்ட முன் வடிவுகளைப்பற்றி சில முக்கியமான விஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு பூர்வமான விஷயமாக மக்கள் முன் வைக்கப்பட்டு இருக்கின்றது. எதிர்க்கட்சிகள் எல்லாம் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கக்கூடிய விஷயம், 'தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதி ஊழல் புரிந்தால், தன்னுடைய அந்தஸ்து மாறுபட்டு நடந்து கொண்டால், அவரைத் திரும்ப அழைப்பது' என்ற 'ரைட் டு ரிகால்'. இதை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். எங்கள் எல்லோரையும் ஏற்றுக் கொள்ள வேண்டுகிறார்கள் என்பதுதான். முதலாவதாக நான் தன் அடக்கத்தோடு சொல்லிக்கொள்கிறேன். நீங்களும், பேசக்கூடிய கட்சிகளும் தோன்றி சிந்திப்பதற்கு முன்னே 'ரைட் டு ரிகால்; புரோபோஷனல் ரெப்பரசன்டேசன்' விகிதா



1987 மே 11] [திரு. கு. ரமணி]

சார பிரதிநிதித்துவம், திரும்ப அழைக்கும் உரிமை ஜனநாய கத்தில் ஒரு சாதாரண விஷயமாகத்தான் இருக்கிறது. அதைக் கணக்கிலே எடுத்துக் கொள்ளலாம். இன்றைக்கு இருக்கக்கூடிய முதலாளித்துவ வர்க்கத்தினுடைய அமைப்பு, சுரண்டல் வர்க்கத்தினுடைய அமைப்பு உள்ள சமுதாயத்தில், ஜனநாயக உரிமையைக் காக்கக்கூடிய ஒரு ஆரம்ப ஏற்பாடு என்பதை ஒப்புக் கொண்டு அதனுடைய திட்டத்திலே எங்களுடைய கட்சியி னுடைய புரோகிராமிலே இணைக்கப்பட்டிருக்கின்றது. எங்கள் கட்சியின் தத்துவம்தான் அது. ஆகவே எதிர்க்கிறது என்ற பிரச்சினையே இல்லை. அந்த 'ரைட் டு ரிகால்' அது ஏற்றுக் கொள்ளக்கூடிய பிரச்சினை. பிரச்சினை என்னவென்றால், நீங்கள் எங்கேயிருந்து தொடங்குகிறீர்கள் என்றுதான் கேட்கிறேன். இப்போது கொண்டு வந்திருக்கிறீர்களே என்பதுதான். நீங்களே 10 வருடங்கள் அரசாட்சியில் இருந் திருக்கின்றீர்கள். பல தேர்தல்கள் இந்த நாட்டிலே நடந்திருக் கின்றன. காங்கிரஸ் கட்சி 40 ஆண்டுகள் காலம் மத்திய சர்க்கா ரிலே, மாநில அரசுகளிலே இருந்திருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருந்தன. இன்றைக்குக் கொண்டு வந்ததற்கு குறுக்கு வழி கண்டு பிடித்து பதில் சொல்லிவிடலாம் என்று கருத வேண்டாம். அது நடக்காது. இன்றைக்கு தெளிவான அரசியல் அடிப்படையில் இருக்கக்கூடிய விஷயம். இன்றைக்கு இதை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்களே என்பதுதான் பிரச்சினை. ஆகவே கடந்த முனிசிபல் தேர்தல்களிலே ஏற்பட்டிருக்கும்படி யான சில மாற்றங்கள், உண்மையிலேயே உங்களுக்கு பிடிக் காதது. ஆளும் கட்சிக்கும் இந்த அரசாங்கத்திற்கும் பிடிக்காதது என்பது என் கருத்து. பிடிக்காத ஒரு ஏற்பாடு. அது உங்களுடைய கட்சியை விட்டு நழுவி விட்டுப் போனது. அதற்கு உண்மையாகவே ஆத்திரம் இருக்கும். அதை மறுக்கவில்லை. அதற்காக வேண்டி எங்கே இருந்து ஆரம்பிக்கிறார்கள்?

இந்த ரிப்பேர் வேலையை, இந்த அதிகார முறையை உள்ளே புகுத்துகிறீர்கள். இந்த ரிப்பேர் வேலையை எங்கேயிருந்து ஆரம் பிக்கிறீர்கள் என்றால் பஞ்சாயத்திலே இருந்து ஆரம்பிக்கிறீர் கள். நீங்கள் மந்திரி சபையிலிருந்து ஆரம்பிக்கலாமே. மந்திரி சபையில் முடியாது. சட்டசபையிலே இருந்து ஆரம்பிக்கலாமே. அப்படிப்பட்ட ஸ்தாபனங்களிலே இருந்து ஆரம்பிக்கலாமே இல்லையா. நான் கேட்கிறேன். ஒரு கரெக்டான பொலிடிக்கல் அண்டர்ஸ்டாண்டிங் ஒரு சரியான அரசியல் கண்ணோட்டத் தோடு சமுதாயத்தை நாம் அணுகுவதாக இருந்தால் அந்த தவறுகளை போக்குவதற்கு முறையீடுகள் எங்கே? அந்த ரிப்பேர் வேலையை எங்கே இருந்து ஆரம்பிக்க வேண்டும்? கொள்கையும் தத்துவமும் மேல் மட்டம். அங்கே இருக்கிறது. ரிப்பேர் வேலையை அங்கே இருந்து ஆரம்பிக்க வேண்டும். மாற்றங்களை அங்கே இருந்து கொண்டு வர வேண்டும். அப்படி செய்யாமல் கீழ்வேலையாக இருக்கிறது. அரிசி மூட்டை யிலே என்ன அரிசி என்று குத்தூசி போட்டுப் பார்ப்பது போல பஞ்சாயத்திலே கொண்டு போய் விட்டிருக்கின்ற வேலை

[திரு. கு. ரமணி] [1987 மே 11

இது சரியல்ல என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அதற்கு நீங்கள் சொல்ல வேண்டியது என்ன? இதைப்பற்றி நாம் வேறு விதத்திலே சொல்லி பிரயோசனம் இல்லை. இன்னொரு விஷயத்தை நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

கடைசியாக இப்படிப்பட்ட இந்த 'ரைட் டு ரீகால்'' போன்ற ஒரு இடத்திலேதான் நீங்கள் போய் உங்களுடைய பலவீனம் காரணமாக அங்கே போய் சேர வேண்டியிருக்கிறது. உங்களுக்கு வேறு வழியில்லை. அதற்கு நீங்கள் என்ன செய்யவேண்டும்; ஒரு ஆக்கபூர்வமான முறைக்குப் போய் சேர வேண்டும். அது ச த் தியம் இல்லை. அதற்கு அவ்வளவு சுலபத்திலே ஜனங்கள் இண க மாட்டார்கள். இதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றவர்களு கு நாம் நல்ல மெருகு போட்டு சொல்ல முடியும். இது ஒரு அருமை யான ஜனநாயக முறை என்று சொல்ல முடியும். ஆனால் உண்மை யிலே என்ன இருக்கிறது என்றால், மெம்ப ராக இருந்தால் அந்த தொகுதி, தலைவராக இருந்தால் பஞ்சாயத்து முழுவதும், சேர்மனாக இருந்தால் அந்த முனிசிபல் பகுதி முழுவதும், அந்தப் பகுதி மக்களில் 25 சதவிகிதம் பேர் பிராது கொடுத்தால் அதை விசாரிக்கலாம். அதைப் பார்த்து கேட்கலாம், அது பெரிய பிரச்சினையல்ல. ஆகவே, குறிப்பாக அவர் களை மட்டும் ஊழல் பேர்வழிகள் என்று நாம் சொல்லக் கூடாது. ஏனென்றால் ஊழல்தான் எங்கும் நடைபெறுகிறதே. அதை வைத்துப் பார்த்தால் கையெழுத்து போட்டது உண்மை என்ற தன்மையை கண்டு பிடித்தால், அதில் ஒரு சதவிகிதம் சரி என்று அதிகாரி கண்டுபிடித்தால் முதல் பார்வையிலேயே ஊழல் நடந் திருக்கிறது என்று கண்டு பிடித்தால், அதிகார துஷ்பிரயோகம் நடந்திருக்கிறது என்று கண்டு பிடித்தால், உடனே பொது ஜன வாக்கெடுப்பு, மேலும் பொதுஜன வாக்கெடுப்பு, ரெஃபரண்டம் பற்றி ஒன்றுமே இதில் சொல்லவில்லை. அதுபற்றி ஒர்க் அவுட் பண்ணியிருக்கிறார்களா என்பது பற்றியும் தெரியவில்லை. லஞ்ச ஊழலை இவர்கள் செய்தார்கள் என்று ஒரு சாராரும், லஞ்ச ஊழலை நாங்கள் செய்யவில்லை, நீங்கள் தான் செய்தீர்கள் என்று இன்னொரு சாரார் அதை மறுத்தும் பிரச்சாரம் செய்யும் நிலை வரும். அப்புறம் அதுபற்றி மக்கள் ஓட்டுப் போட வேண்டும், அதுதானே ரெஃபரண்டம் என்பது. அப்படி ஒரு பிரச் சாரத்தை புயல் வேகத்தில் நடத்தி, இயக்கத்தை நடத்தி அப்புறம் ஓட்டு போடுகிறபோது மெஜாரிட்டி வேண்டும் அது தானே ரெஃபரண்டம். ஒரு மெக்கானிசமாக 'ரைட் டு ரீகால்' என்று வைத்திருக்கிறீர்களே தவிர ஜனநாயகத்தை நீங்கள் நம்பிக் கொண்டு வந்திருப்பதாக நான் எதிர் பார்க்கவில்லை. பல விஷ யங்களில் நீங்கள் கையாள்கிற முறையை வைத்துப் பார்த்தால் அப்படி இல்லையென்று தான் தெரிகிறது. பல விஷயங்களில் நடைமுறையில் பார்த்தால் காங்கிரஸ் கட்சியின் சில விஷயங் களை நீங்கள் கையாள்கிறீர்கள், அதிக அதிகாரம் வேண்டு மென்று முன்பு கேட்டீர்கள். இப்படி கேட்கின்ற முறை ஒரு காலத்தில் உங்களிடம் ஜாஸ்தி இருந்தது. இன்றைக்கு அந்தத்



1987 மே 11] [திரு. கு. ரமணி]

தன்மை கொஞ்சம் கொஞ்சமாக மங்கி மறைந்து வருகிறது. நீங்கள் கொள்கைகளை தமிழக மக்கள் முன் வைத்து அதன் அடிப்படையில் மக்கள் ஓட்டுப் போட்டு தானே ஜனநாயக தன்மையிலே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தார்கள். ஜன நாயக ஆட்சி முறைக்கும் உங்கள் ஆட்சி முறைக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன. மெஜாரிட்டி, மைனாரிட்டி என்று சொன்னால் பூர்சுவா சுரண்டல் அதிகாரத்தில் எப்படி உருவாக முடியும்? ஆக, 'ரைட் டு ரீகால்' என்பதைப் பொறுத்தவரை, இத்தகைய ஒரு சட்டத்தை பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொண்டு வர வேண்டுமென்று நாங்கள் 20 வருடத்திற்கு முன்பே, 10 வருடத்திற்கு முன்பே சொல்லியிருக்கிறோம். அதை இப்பொழுது சொல்லி பிரயோஜனம் இல்லை. சட்டமன்றத்தில் அது சம்பந்தமாக தீர்மானம் போட்டு மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். நாங்களும் உங்களோடு சேர்ந்து அதற்கு ஆதரவு தருவோம். நாடு முழுவதும் அதுபற்றி பிரச்சார இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும். அதுமட்டும் போதாது, இன்னொன்றை யும் சொல்கிறேன். புரப்போஷனல் ரெப்ரசென்டேசன் என்கிற விகிதாச்சாரத்தையும் இணைத்து இச்சட்டம் வர வேண்டும், ஒரு கட்சி, அமைப்பு எவ்வளவு ஓட்டுகளை பெறுகின்றதோ அதற்கு தகுந்தபடி பிரதிநிதித்துவம் வேண்டும். இதை முதலில் இந்த ஆட்சி செய்தால், இந்த நடவடிக்கையில் முதலில் ஈடு பட்டால் உண்மையிலேயே இந்த ஆட்சிக்கு ஜனநாயகத்தில் பிடிப்பு இருக்கிறது, ஜனநாயகத்தின் பெயரில் லட்சியமாக இருக்கிறது. ஜனநாயகம் ரத்தத்தில் தோய்ந்து இருக்கிறது என்பதை நாங்கள் ஒப்புக் கொள்ள முடியும்.

அதைச் செய்வது கஷ்டம் தான். ஆனால் அதுதான் இங்கே அவசியம். ஆனால் இந்த மாதிரி ஒரு சட்டத்தை நீங்கள் கொண்டு வந்திருப்பதற்கு போன தேர்தலில் உங்களுக்கு ஏற்பட்ட தோல்வி தான் காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன் றைக்கு இதில் ஏன் கால் வைத்திருக்கிறீர்கள் என்று சொன்னால், எதிர்க் கட்சிகள் எங்கெங்கு கவுன்சில் தலைவர்களாக இருக் கிறார்களோ, எங்கெங்கு மெஜாரிட்டி கவுன்சிலைக் கொண்டவர் களாக இருக்கிறார்களோ, அவற்றை எல்லாம் எப்படியாவது உடைப்பது என்கிற காரியத்தில் ஈடுபட போகிறீர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-20)

உண்மையும் அதுதான். அதைத் தெளிவுபடுத்துங்கள். எப்படி நீங்கள் செய்வீர்கள் என்பதுதான் எனக்கிருக்கின்ற சந்தேகம். நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால், அப்படிப்பட்ட இடத்தில் கால் வைக்காதீர்கள், அது சரியல்ல.

ஊழல் செய்தவர்களையும், தப்பு செய்தவர்களையும் மக்கள் மத்தியிலே அம்பலப்படுத்த முடியும்; தைரியமாக அம்பலப் படுத்த முடியும். ஒன்றும் தடுத்து நிறுத்தி விட முடியாது. ஜனங்கள் ஒன்றும் அவ்வளவு ஏமாளிகள் அல்ல. அப்பொழுது

[திரு. கு. ரமணி] [1987 மே 11

நடவடிக்கைகளும், அதே மாதிரி இலஞ்சத்தையும், ஊழலையும் எதிர்க்கக்கூடியவர்கள் ஆகிய அப்படிப்பட்டவர்களும், எல்லோரும் அப்படிப்பட்ட நடவடிக்கை வந்தால் நிச்சயமாக ஜனங்களுடைய ஆதரவைத் திரட்ட முடியும். அப்பொழுது இதிலே ஒரு முடிவு ஒன்றைக் காண முடியும். அந்த முறையிலே நீங்கள் போக வேண்டுமே தவிர, அந்த நிலைமைகளை மாற்றிவிட்டு இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை உடனடியாகப் பஞ்சாயத்திலிருந்து நாங்கள் திரும்பக் கூப்பிட்டு, அதுதான் ஜனநாயம், அதை எதிர்ப்பவர்கள் ஜனநாயகத்திற்கு விரோதிகள் என்றுஎதிர்க்கட்சிகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் நீங்கள் குறை சொல்ல முடியாது. இதை நான் முதலிலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, முனிசிபல் கவுன்சிலில் நீங்கள் என்ன செய்து வைத்திருக்கிறீர்கள்? அந்த முனிசிபாலிட்டியிலே, ஃபைனான்ஷியலாக அந்த முனிசிபாலிட்டி கெட்டுப் போய்விட்டது என்றால், அதற்குப் பணம் இல்லாமல், நிதியில்லாமல் அதனுடைய வேலையைச் செய்ய முடியாமல் அதற்குக் கெடுதல் ஏற்பட்டு விட்டது என்று சொன்னால் அந்த முனிசிபாலிட்டியைக் கலைத்து விடலாம் என்று சொல்வார்கள். அப்படியானால் இந்தக் கலைப்பு ஒரு பெரிய வேலையா என்று நான் கேட்கிறேன்.

பத்து வருஷ காலம் இந்த ஸ்தாபனங்களுக்குத் தேர்தலே நடக்கவில்லையே, அப்பொழுது ஒவ்வொரு பஞ்சாயத்திலும் விளக்குகளுக்குக் கட்டுவதற்குக் காசு இல்லை, மின்சாரத்திற்குக் கட்டணம் கட்டுவதற்குக் காசு இல்லை. குடிநீர்த் திட்டத்திற்குக் காசு இல்லை என்று சொல்லி இங்கே பேசினோம் நாம். அப்பொழுதெல்லாம் சர்க்கார் கடன் கொடுத்து ஸ்பூன் ஃபீடிங் நடந்துகொண்டே இருக்க வேண்டியது. ஏன் அதையும் ஒரு வழியாக ஆக்குவது? ஒவ்வொரு அடிப்படைப் பஞ்சாயத்திலும் தேர்தல் முடிந்தவுடன் ஒரு இலட்சம் இரண்டு இலட்சம் ரூபாய் அவர்களுடைய செலவுக்காக அவர்கள் '' பிளேஸ் பிஃபோர் தி ஹவுஸ் '', அது ஒழுங்காக, தணிக்கை செய்து கணக்கைப் பார்ப்பதைச் செய்வார்கள். அப்படிப் பஞ்சாயத்துக்களுக்கும், மற்றவர்களுக்கும் நிதி இல்லை என்று சொன்னால் அதைக் கலைத்து விடுவது என்று சொன்னால் உங்களுடைய திட்டம் என்ன, அதற்குத்தானா நீங்கள் வருகிறீர்கள்?

அதே மாதிரி, வரி விதிக்கிறார்கள் முனிசிபாலிட்டியிலே, அதற்கு அப்பீல் கமிட்டி என்று வைக்கிறீர்கள். இந்தக் காலம் வரைக்கும் அப்பீல் கமிட்டிகள் எப்படி இருந்தன? இன்றைக்கு என்ன புதிய நிலைமை? அப்பீல் கமிட்டி என்று வந்தால் அந்த சேர்மனோ, மற்றவர்களோ அதனுடைய இறுதி முடிவைச் செய்யக்கூடிய ஜனங்களின் ரெப்ரசென்டேட்டிவ் என்ற அந்த எல்லைக்குள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பண்ணக் கூடாதா? அதற்கு டி.ஆர்.ஓ. தலைவர்; ஆர்.டி.ஓ., கூட இருப்பார்கள், சேர்மனும், இரண்டு மெம்பர்களும் இருப்பார்கள். அப்படி



[8' மே 11] [திரு. கு. ரமணி]

யொரு கமிட்டி. அதற்கு கவர்ன்மெண்ட்டே ரூல்ஸ் வகுத்துக்
கொடுக்கும். அதை வைத்துத்தான் செய்ய வேண்டும். வேறு
இதற்கு வழியே கிடையாது. அப்படிப்பட்ட முறையிலே அப்பீல்
கமிட்டி.

நிதி ஒரு பக்கம் கெட்டுப் போய்விட்டது என்றால் கலைக்கி
றேன் என்று சொல்கிறீர்கள். இன்னொரு பக்கம் நிதி வேண்டிய
தற்கு அவர்கள் வரியைப் போட்டு—அது நீங்கள் நினைக்கிற
மாதிரி வரியில்லாமல் இருக்கலாம். ஒருவிதத்திலே நிதி இல்லை
என்றால் அவர்களும் அங்கே இருக்க முடியாது. அப்படி அவர்
கள் வரியைப் போட்டால் அந்த வரி பற்றாது, அதை அதிகப்
படுத்த வேண்டுமென்றால் அதை மாற்றுவதற்கு இன்றைக்கு
வழி இருக்கிறதா? ஒரு மேலதிகாரத்தை நேரடியாக சர்க்கார்
கையில் எடுத்துக் கொள்ளும் இப்படிப்பட்ட நடைமுறை சரி
யல்ல. இது ஜனநாயகத்தின் நடைமுறை அல்ல. ஆகவே, தான்
சொல்கிறோம்.

இந்த மாதிரி இருக்கக்கூடிய முனிசிபாலிட்டிகள் அப்படி, பஞ்
சாயத்துக்கள் இப்படி, அதே மாதிரி நகரப் பஞ்சாயத்துக்களில்
இருக்கக்கூடியத் தலைவர்கள் இருக்கிறார்களே அவர்களை ரிமூவ்
பண்ணுவது என்ற இப்படிப்பட்ட ஒரு முறையை நீங்கள் கை
யாண்டு வந்து, மீதமுள்ள காரியங்களைச் சமாளித்துவிடலாம்
என்று பார்ப்பது சரியாக இருக்காது. இன்றைக்கும் நான் கேட்
கிறேன். ரைட் டு ரீக்கால் என்று சொல்கிறீர்கள். ஆனால்,
மூன்று மாநகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்தாமல் இருக்கிறீர்
களே, எனவே ரைட் டு ரீக்கால் முதலா, தேர்தல் முதலா?
அதைப் பார்க்க வேண்டாமா? அதே மாதிரி எத்தனை அமைப்
புக்களுக்குத் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கின்றன? கூட்
டுறவு சொசைட்டிகளுக்குத் தேர்தல் நடத்தப்படாமல் இருக்
கிறது. நீங்கள் ரைட் ஆப் ரீக்கால் என்று சொல்கிறீர்கள்.
ஆனால், ரைட் ஆப் ஓட்டிங் கூட பிளாக் பண்ணி வைக்கப்பட்
டிருக்கிறது, தடைப்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதை
யெல்லாம் நடத்த மாட்டீர்கள். ஆகவே, சொல்கிறோம், சொல்
கிற வார்த்தைக்கும், நடக்கின்ற நடைமுறைக்கும் நாம் சொல்லக்
கூடிய நோக்கத்திற்கும், நாம் என்ன செய்யப் போகிறோம் என்று
சொன்னதற்கும் சம்பந்தமில்லாமல், நடைமுறையிலே இருந்து
கொண்டிருக்கிறது. இந்த முறையை மாற்றுங்கள். உண்மை
யான ஜனநாயகத்திற்காக மக்களோடு சேர்ந்து போராடுவோம்.
அப்படிப்பட்ட முறையில்தான் இந்தச் சட்டங்கள் இருக்க வேண்
டும். அதனால்தான் சொல்கிறோம். குறைந்தபட்சம ஒரு
ஜனநாயகத்தை உங்களுக்கு நாங்கள் தரப்போகிறோம் என்று
சொல்லி அந்தப் பிரச்சினையை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு
நாங்கள் கொடுத்திருக்கின்ற தீர்மானத்தை சின்சியராக ஏற்
றுக்கொண்டு, ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புங்கள், உங்
களுக்கு இருக்கக்கூடிய மெஜாரிட்டி பலத்தை வைத்துக்கொண்டு,
எப்படியாவது பாஸ் பண்ணிவிட்டு போகலாம் என்ற நிலைமை
களுக்குப் போகாதீர்கள். அது சரியல்ல. பொறுக்குக் கமிட்

டிக்கு அனுப்புங்கள், ஜனங்களிடத்தில் சொல்வோம். இப்படி யொரு முறையைக் கையாண்டிருக்கிறோம், எப்படிக் கட்சித் தாவலுக்குச் சட்டம் வர வேண்டியிருந்ததோ அந்த மாதிரி ரைட் டு ரீக்காலும், அப்புறம் ப்ரப்போர்ஷனல் ரெப்ரசன்டேஷ னும், அதற்கு ஆரம்பம் இது. இப்பொழுது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாட்சி இப்படிக் கொண்டு வந்திருக்கிறது.

நல்லது—நாம் எல்லோரும் சேர்ந்து சொல்வோம். அப்படிப் பட்ட முறையில் மக்களுக்குக் கொஞ்சம் போகட்டும். பொறுக் குக் கமிட்டிக்கு அனுப்பி, அதிலிருந்து வரக்கூடிய முடிவுகளை வைத்து இந்தச் சட்டத்தை நாம் நிறைவேற்றுவோம், அதுதான் சரியே தவிர, மற்றபடி இந்தச் சட்டத்தை இப்படியே நிறை வேற்றுவது என்பது நீங்கள் சொல்லக்கூடிய ரைட் டு ரீக்கால் என்ற உண்மையான நோக்கத்திற்கு உகந்ததல்ல. உயர்ந்த டெமாக்ரசிக்கு உகந்ததல்ல. போன தேர்தலில் தேர்ந்தெடுக் கப்பட்ட முனிசிபாலிட்டிகளையும், பஞ்சாயத்துக்களையும் பொறுத்த வரையில் உங்களுக்கு பிடிக்காத எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களை வெளியே அனுப்புவதற்குரிய வகையில் இது ஒரு ஏற்பாடு என்று மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாரீசன் மான் வடிவம் பூண்டதுபோல் அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஜனநாயக வடிவம் பூண்டு இருக்கிறது என்பதை குறிப்பிட்டுச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பரந்துபட்ட ஜனநாயகத்தைப் பற்றியும், வாக்களித்த மக்களுக்குத் தங்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகளைத் திரும்ப அழைத்து கொள்கிற உரிமை என்ற அடிப்படையில் சிந்திப்பதன் மூலமும் இது பரந்துபட்ட ஜனநாயகத்தைப்போல் தோற்றம் அளித்திருந்தாலும் கூட இத்தனை ஆயுதங்களையும் எந்த நேரத்தில் எந்தச் சூழ்நிலையில் பயன்படுத்துவீர்கள் என் பதைப் பொறுத்துத்தான் உங்கள் நோக்கம் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இங்கே பொதுமக்களுக்கு தங்கள் பிரதிநிதிகளைத் திரும்ப அழைக்கிற உரிமையைத் தருவது எப் படித் தவறு என்று சொல்லலாம் என்றுகூட ஆளும் கட்சி நண்பர் கள் மாண்புமிகு திரு. செம்மலை போன்றவர்கள் கேட்டார்கள். கேள்வி கேட்பதற்கு ரொம்பச் சுலபம் தான். நீங்கள் இருக்க வேண்டிய இடத்தில் இருப்பதால் அப்படித்தான் கேட்க முடியும். அதுபற்றி ஆட்சேபணை இல்லை.

ஆனால், இங்கே முன்மொழிந்த மூன்று சட்ட முன்வடிவு களிலே உண்மையிலேயே ஜனநாயக உள்ளடக்கம் பொதிந்து இருக்கிறதா, அது உங்கள் நோக்கத்தில் உள்ளடங்கி இருக்கிறதா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். என்ன சொல் லொணாத காலமோ தெரியவில்லை தொடர்ந்து—இந்தச் சட்ட





மன்றக் கூட்டத் தொடர் முழுவதும், அண்ணா திராவிட முன் னேற்றக் கழகத்தின் ஆட்சியில் தொடர்ந்து—ராட்சதக் குழந்தை களை பிரசவித்துக்கொண்டிருக்கின்றன. அதற்கு என்ன காரணம் என்பது புலப்படவில்லை. காலையில் தான் சட்டமுன் வடிவுகள் அறிமுகம் செய்யப்பட்டு இருக்கின்றன. இப்போது மூன்று சட்ட முன்வடிவுகள் பரிசீலனையில் இருக்கின்றன. இவை ஏன் நிகழ்ந்தன? அதிகார பீரங்கி வண்டிகள் முழுவதும் எதிர்க் கட்சிகளை நோக்கியே திருப்பப்பட்டு இருக்கின்றன. மக்களின் பிரச்சினையைத் தீர்க்க அவை திருப்பப்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சோஷலிஸ்ட் நாடுகளின் மீது நம்பிக்கையும், ஆர்வமும், நேச மும் கொண்டவர் என்பதை நான் அறிவேன். முற்போக்குக் கருத்துக்களில் ஈடுபாடு கொண்டவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ற நம்பிக்கையோடு நான் ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். உண்மையிலேயே நீங்கள் ஜனநாய கத்தின் மீது வேட்கை உள்ளவர்கள் என்பது உண்மையானால், கீழ் மட்டத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புக்களில் மக்களின் பிரச்சினைகளைக் காலத்தில் தீர்க்க முடியாத நெருக்கடி இருப்பது எதனால், உள்ளாட்சி அமைப்புக்களில் தீர்மானங்களை நிறை வேற்றியும் கூட அவற்றைச் செயல்படுத்த முடியாமல் தத்தளிப் பதற்கு என்ன காரணம் என்பதைச் சிந்தித்து, அதிகாரம் போத வில்லை என்பது தான் காரணம் என்பதை உணர்ந்து, மக்களின் தேவையைக் காலத்தில் தீர்க்க வேண்டும் என்பதை அந்தரங்க சுத்தமாக நீங்கள் ஏற்றுக்கொண்டது உண்மையானால் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படுவதற்கு அதி கார பற்றாக்குறைதான் காரணம் என்று உணர்ந்து அதற்காக ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருந்தால் உங்களின் உண் மையான ஜனநாயக ஆழத்தை, பரந்துபட்ட தன்மையைப் புரிந்து கொள்ள முடியும். நீங்கள் எப்போது கொண்டு வந்திருக்கிறீர் கள்? கடந்த உள்ளாட்சித் தேர்தலில் மக்கள் கொடுத்த அடி யால் மண்டை கலங்கி, பொறி கலங்கிப் போன நிலையில் ஆத் திரத்திற்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஏற்பட்ட உறவில் பிறந்த அதிசய குழந்தைகள் தான் இந்த அவசர முடிவுகள். சட்ட முன்வடிவுகள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏன் இவ்வளவு தூரம் சிரமப்படு கிறீர்கள்? ஏன் இவ்வளவு தூரம் பதில் சொல்லிக்கொண்டு இருக்க வேண்டும்? நான் அமைச்சரைக் கேட்டுக்கொள்வேன். தயவு செய்து ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வாருங்கள்; தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பீடத்தில் இருக்கிற வரையில் எதிர்க்கட்சிகள் உள்ளாட்சி அமைப்புக்களில் வெற்றி பெற்றால் அவை கலைக்கப் படும் என்று ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து விட்டால் சரியாக இருக்கும். உங்களுடைய நோக்கம் அதுவாக இருந்தாலும் கூட உங்கள் மீது ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடி காரணமாக உங்களால் அவற்றைச் சந்திக்க இயலவில்லை என் பதால்தான் இதைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் தாக்குதல்

கருணாநிதி மீதல்ல. உங்கள் தாக்குதல் எதிர்க்கட்சிகள் மீதல்ல.
உங்கள் தாக்குதல் ஜனநாயகத்தின் இதயத்தின் மீதுதான். அத
னால்தான் இத்தகைய சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வந்
திருக்கிறீர்கள்—நான் திரு. செம்மலை அவர்களைக் கேட்க
விரும்புகிறேன், அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்,
ஜனநாயகத்தைப் பற்றி இவ்வளவு தூரம் குய்யோ முறையோ
என்று கூக்குரல் இடுகிறீர்களே, நீங்கள் போட்டிருக்கிற வரி
அப்பீல் கமிட்டி யார் முடிவு செய்ய வேண்டிய அமைப்பு?

(பிற்பகல் 4-30)

தேர்தலில் வெற்றி பெற்று வந்த மன்றங்களுக்கு இருக்கிற
அதிகாரத்தை பிடுங்கி உங்கள் உத்தரவுகளுக்கு இருக்கிற
பணிகளைச் செய்கிற அதிகாரிகளின் கட்டுப்பட்டு
கிறீர்களே இதுதான் உங்கள் அகராதியில் கையிலே கொடுத்திருக்
தான் உங்கள் அண்ணா தி.மு.க. மாடல் ஜனநாயகமா? இது
தான் நோக்கம் என்று நீங்கள் அறிவிக்கிறீர்களா? ஜனநாயகமா? இது
விரும்புவது மக்களின் பிரதிநிதிகளுக்கு நான் கேட்க
நீங்கள் ஏன் அதிகாரிகளுக்கு இருக்கிற அதிகாரத்தை
சரியல்லவே. இதற்கு பதில் பகிர்ந்து அளிக்கிறீர்கள்? இது
நான் இங்கே குறிப்பாக அளிக்க வேண்டும் என்பதைத்தான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். ஊழல்களும் முறைகேடுகளும் அந்த
உள்ளாட்சி அமைப்புகளுக்குத்தான் உள்ளதா? சட்டமன்ற
உறுப்பினர்களும் அமைச்சர்களும் ஏன் எந்த பாவமும் செய்யாத
வர்களா? நாமெல்லாம் அதாவது நாடாளுமன்ற உறுப்பினர்
கள், மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள், சட்டமன்ற
உறுப்பினர்கள் இவர்களெல்லாம் ஊழல்களும் முறைகேடுகளும்
செய்யாத அளவுக்கு முற்றிலும் எதிர்ப்புச் சூழ்ந்த நிலையில்தான்
வாழ்ந்துகொண்டிருக்கிறார்களா? இல்லை. ஏன் இதை இங்
கிருந்து தொடங்கவில்லை? நம்மை சரி செய்துக் கொள்ளாமல்
நம்மை முறைப்படுத்திக் கொள்ளாமல், இன்னொருவரை முறைப்
படுத்த முயற்சிப்பது எத்தகைய நெறிமுறைகளாலும் ஏற்றுக்
கொள்கிற ஒன்றல்ல என்பதைத்தான் அமைச்சர் அவர்களுக்கும்
மற்றவர்களுக்கும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.
மற்ற மாநிலங்களைப் பற்றி எல்லாம் சொல்லுகிறீர்கள். அடிக்கடி
கேட்கிறேன். கர்நாடகத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக
அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். உள்ளாட்சி அமைப்பு ஒரு
மாநில அரசு போல் நடத்தப்படுகிறது. உள்ளாட்சி அமைப்பு
களுக்கு அப்படி அதிக அதிகாரம் கொடுக்கிற நல்ல முன்
உதாரணங்களை நீங்கள் எடுத்துக்கொள்ள மாட்டீர்களா?
எடுத்துக் கொள்ள மாட்டீர்கள். உங்களை எப்படி உபமானம்
சொல்லலாம் என்று நான் பார்த்தேன். எங்கள் கொங்கு நாட்
டிலே கூட பதநீர் பிடிப்பதற்காக * * * என்ற
ஒன்றை வைத்திருப்பார்கள். அந்த * * பதநீர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றன.





பிடிக்கிறபோது அது என்ன செய்யும் தெரியுமா, ஈ, எறும்பு
அசுத்தங்களையெல்லாம் பிடித்துக்கொள்ளும். நல்ல பதநீரை
கீழே விட்டுவிடும். அம்மாதிரி அண்ணா தி.மு.க. * *
எது தேவையற்றதோ அவற்றை பிடித்துக்கொள்ளும். தேவை
உள்ளதை விட்டு விடும். அதனால்தான் மற்ற மாநிலங்களிலே
இருக்கிற நல்ல முன் உதாரணங்களை எடுத்துக்கொள்ள
மறுக்கிறீர்கள்....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே,
* * * என்றால் கொங்கு நாட்டிலே வேறு
பொருள் இருக்கலாம். ஆனால் இந்தப் பக்கத்திலே எல்லாம்
வேறு பொருள் இருக்கிறது. ஆகவே அதை நீக்கும்படிக் கேட்
டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீக்குகிறேன்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே,
மண்வளம் அதுதான். அந்தந்த மண் வளத்திற்கு ஏற்றபடிதான்
உதாரணங்கள் வரும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மண் வளத்திற்கு
ஏற்றபடிதான் உதாரணங்கள் வரும் என்றார். கொங்கு
நாட்டை அவர்தான் அவமானப் படுத்துகிறார். * *
உதாரணம் இங்குதானா வரவேண்டும்?

திரு. கே. சுப்பராயன்: தன்னுடைய குறையை அடிக்கடி அமைச்சர்
அவர்கள் சொல்லிக் கொள்வார்கள். அதைப்பற்றி எனக்கு ஆட்
சேபனை இல்லை. நான் கேட்க விரும்புவது என்னவென்றால்,
இந்திய ஜனநாயகத்தைப் பற்றி அடிக்கடி பேசுகிற நீங்கள் ஏன்
நல்ல உதாரணங்களை எடுத்துக்கொள்ளாமல் தேவையற்ற
உதாரணங்களை எடுத்துக் கொள்கிறீர்கள் என்பதைத்தான் நான்
இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து ஒரு விஷயம். உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடை
முறையில் இருக்கிற அதிகாரங்களை எல்லாம் அகற்றாமல் அதிக
அதிகாரங்களைக் கொடுக்கலாம் அல்லவா என்றால் அது பற்
றிய சிந்தனை உங்களுக்கு இல்லை. அத்தோடு மேல் முறை
யீட்டு குழுவிலே தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி உறுப்பினர்
களைப் போட்டிருக்கலாம், நகர மன்றத் தலைவர்களைப்
போட்டிருக்கலாம். ஆனால் இல்லை. இந்த மேல்முறையீட்டு
குழுவிற்கு நீங்கள் யாரை தலைவராகப் போட்டிருக்கிறீர்கள்.
சேர்மேனைப் போட்டிருக்கிறீர்களா இல்லை. சேர்மேனைப்
போட்டால் அண்ணா தி.மு.க. சொன்னபடி நடக்க மாட்டார்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப் பெற்றன.

[திரு. கே. சுப்பராயன்] [1987 மே 11

அல்லவா ? தன்னுடைய அதிகாரத்தைச் செலுத்துவதற்கு
அதிகாரி என்ற ஒரு கருவி இருந்தால்தானே சௌகரியமாக
இருக்கும். எப்போதும் அண்ணா தி.மு.க. ஒரு சௌகரியமான
ஜனநாயக அமைப்பு அல்லவா? ஆகவே அதிகாரிகளைக் கைக்
கூலியாகக் கொண்டு, எங்கேயாவது எதிர்க்கட்சி வெற்றி பெற்
றிருக்கிறதா, குடையுங்கள். குடையோ குடை என்று குடைந்
தால், அவர்களுக்கு நெருக்கடி ஏற்படுத்துவதன் மூலம் அவர்
களுக்கு துன்பம் செய்யும் ஒரு விதமான குரூர இன்பத்தை ரசிக்
கிறது இந்த அண்ணா தி.மு.க. இன்றைக்கு நீங்கள் வெற்றி
பெற்றுவிடுவீர்கள், அதிலே ஒன்றும் சந்தேகம் இல்லை. இந்த
சட்டமன்ற பேரவையின் எல்லைக்குள் உங்களுக்கு பெரும்
பான்மை இருக்கலாம் ; நீங்கள் வெற்றி பெறலாம். ஆனால்
ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வரலாற்றில்
என்றுமே நிலைமை அப்படியே நீடிப்பதில்லை.

தயவு செய்து அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன்.
காங்கிரஸ் கட்சி உள்பட, எதிர் தரப்பு அத்தனை கட்சிகளும்
எதிர்க்கிற ஒரு விஷயத்தை நீங்கள் வலியுறுத்தலாமா?
திக்கலாமா ? திணிக்கலாமா ? ஒருபோதும் கூடாது. நிர்ப்பந்
மிகத் தெளிவோடு எந்த வடிவத்தில் கேட்டுக்கொள்ள ஆகவே
டுமோ, அந்த வடிவத்தில் கேட்டுக்கொள்கிறேன். வேண்
இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்புங்கள். தயவுசெய்து
அனுப்பி அவற்றின் ஆலோசனை பெற்றுச் செய்யுங்கள். செலக்ட் கமிட்டிக்கு
தான் நல்லது. உங்களுடைய பார்வையில் தெளிவு இருக்கலாம். அது
நடவடிக்கைகளிலும் தெளிவு இருக்க வேண்டும் அல்லவா ?
ஆகவே நான் உங்களை விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். தயவு
செய்து எதிர்கட்சிகள் முழுவதும் எதிர்ப்பதால் இவற்றை
செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டு உரையை
முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்
கொண்டு வந்திருக்கிற மூன்று சட்டமுன்வடிவுகளின் மீது ஜனதா
கட்சியின் சார்பாக கருத்துக்களைச் சொல்லும்போது, இந்தச்
சட்டங்களை மிக யோசித்து பார்த்து, ஓராண்டு காலம், $1\frac{1}{2}$
ஆண்டுக்காலம் உள்ளாட்சிகளின் ஆட்சி முடிந்தபிறகு முன்
மொழிந்திருக்கிறீர்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.
10 ஆண்டுகாலம் , 11 ஆண்டுக்காலம் உள்ளாட்சி அமைப்புகள்
இல்லாமல் இருந்த போது, அதற்காக சட்டமன்ற உறுப்பினர்
களும், மற்றவர்களும் போராடிய காலத்தில், மாண்புமிகு அமைச்
சர் ப.உ.ச. அவர்கள் பொறுப்பில் இந்தத் துறை இருந்தபோது
தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நடத்தியபோதே இந்தச்
சட்டமுன்வடிவுகளைக் கொண்டு வந்திருக்கலாம். அப்படி
கொண்டு வந்திருந்தால் உங்கள் நோக்கத்தில் யாரும் குறை
காண முடியாது. ஏர்நாடகாவில் அங்கேயிருக்கிற அமைப்பு
களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது மட்டு



1987 மே 11] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

மல்ல, ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் அமைச்சர் அந்தஸ்
தில் அங்கம் வகிக்கிறார். திரும்ப அழைக்கிற உரிமையும் கொடுக்
கப்பட்டிருக்கிறது. அவையெல்லாம் தேர்தல் நடப்பதற்கு முன்
னாலே இயற்றப்பட்ட சட்டங்கள். ஆனால் இங்கே அப்படி
யல்ல. இங்கே நீங்கள் கொண்டு வந்திருப்பது ஏறத்தாழ $1\frac{1}{2}$
ஆண்டுக்காலம் அவர்கள் ஆட்சி முடிந்த பிறகு இந்தச் சட்டமுன்
வடிவுகளை கொண்டு வந்திருக்கிறீர்கள். மூன்றும் மூன்று
விதமான சட்டங்களாக இருக்கின்றன. முதல் சட்டம் நக
ராட்சி நிர்வாகங்கள் தகுதியற்றவையாக அதாவது வருமானத்
தில் தகுதியற்று இருந்தால் அதனை கலைத்து விடுவது என்று
சொல்லியிருக்கிறீர்கள். தகுதியற்று இருப்பதற்கு என்ன கார
ணம் சொல்லியிருக்கிறீர்கள்? வருமானமில்லாத நகராட்சி
என்று சொல்லியிருக்கிறீர்கள். 10, 11 ஆண்டுக்காலம் அந்த
நகராட்சிகள் தனி அதிகாரிகள் கையில் இருந்திருக்கின்றன.
அப்போதெல்லாம் வீட்டுவரி உயர்வுக்கு கூட அவர்களுக்கு
அதிகாரம் கொடுக்கப்படவில்லை. வீட்டு வரி, சொத்து வரி
உயர்வு இல்லாவிட்டால், எந்தவித வருமானமும் இல்லாமல்,
ஆண்டிற்காண்டு அங்கேயிருக்கிற ஊழியர்களுக்கு சம்பள உயர்வு,
பஞ்சப்படி உயர்வு என்று கொடுத்துக் கொண்டு போகிறபோது
பற்றாக்குறை பற்றாக்குறையாகத்தான் இருக்கும். பற்றாக்குறை இருப்
பதை நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். அப்படியிருக்கிற
போது அதை ஏன் கலைக்க வேண்டும் ? ஆகவே பற்றாக்குறை
யாக இருக்கிற காரணத்தால் கலைப்பது என்று சொல்வது சரி
யானதாக இல்லை.

அடுத்து வரி அப்பீல் கமிட்டியெல்லாம் போட்டிருக்கிறீர்கள்.
டி.ஆர்.ஓ., ஆர்.டி.ஓ., பொதுப்பணித் துறை அதிகாரிகள் என்
றெல்லாம் போட்டிருக்கிறீர்கள். இதெல்லாம் சரிதானா ? மக்க
ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சித் தலைவர்கள் இருக்கிற
போது, அரசில் மாத சம்பளம் வாங்குகிற அதிகாரிகளை இந்த
அளவிற்கு நியமிப்பது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து இன்னொரு முறையைச் சொல்லியிருக்கிறீர்கள்.
'ரீ-கால்' பண்ணுவது என்பதை. அதாவது தேர்ந்தெடுக்கப்
பட்ட உறுப்பினர்களை திரும்ப அழைப்பது. 25 சதவீதம் பேர்
கையெழுத்து போட்டு கொடுத்தால் தேர்தலாகச் கொண்டு வரு
வது. 25 சதவீதம் பேர்களிடம் கையெழுத்து வாங்குவது யார் ?
தலைவருக்கு எதிராக இருப்பவர். அப்படியானால் தமிழ்நாட்
டில் ஒரு இயக்கம் வளர்ந்து கொண்டே இருக்கும். வேறு ஒரு
வேலையும் நடக்காது. கையெழுத்து வாங்குகிற வேலை தவறா
மல் நடக்கும். தலைவர் மீது நம்பிக்கையில்லையென்று சொல்லி
ஒருவர் கையெழுத்து வாங்குவார். தலைவர் மீது நம்பிக்கை
யிருக்கிறது என்று இன்னொருவர் கையெழுத்து வாங்குவார்.
இப்படி தமிழ்நாடு முழுவதும் கையெழுத்து வாங்குகிற வேலையை
இந்தச் சட்டத்தின் மூலம் கொண்டு வருகிறீர்கள். 25 சத
வீதம் பேர்களிடம் கையெழுத்து வாங்கி தேர்தலை நடத்த
வேண்டுமென்று உத்தரவு செய்ததையொட்டி கையெழுத்துக்கள்

சரிதானா என்று பார்க்கிறபோது 1 சதவீதம் சரியாக இருந்தால்
போதும் என்று சொல்லப்படுகிறது. இதற்கு என்ன அர்த்தம்
என்று தெரியவில்லை. 1 சதவீதம் சரியாக இருந்தால் தேர்தல்
வரும். தேர்தல் வந்த பிறகு என்ன செய்யப் போகிறீர்கள் ?
அந்த நகராட்சித் தலைவர் வெற்றிபெற்றுவிட்டால் அதற்கு
பிறகு என்ன செய்யப் போகிறீர்கள் ? அதற்கான பிரச்சாரங்கள்
நடைபெறும் அப்போது. இவர்கள் இன்னின்ன ஊழல்களை
செய்தார் என்று ஒரு பிரச்சாரம். நான் தவறே செய்யவில்லை,
எல்லாம் சரியான முறையில்தான் செய்தேன் என்று தலைவர்
பிரச்சாரம். இவைகளையெல்லாம் நீங்கள் எதிர்பார்க்கிறீர்
களா ? இவைகளெல்லாம் நடக்காது என்று நினைக்கிறீர்களா ?
இது தேவைதானா என்று கேட்க விரும்புகிறேன். இந்த நேரத்
தில் இந்த சட்டமுன்வடிவுகளைக் கொண்டு வருவதைப் பார்க்கிற
போது எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சொன்ன
தைப்போல உள்ளபடியே இந்தச் சட்டம் தேவையென்றுதான்
கொண்டு வந்திருக்கிறீர்களா அல்லது மாற்று கட்சிகளின்
நகராட்சி, ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிகளில் இருக்கிற
தலைவர்களை நீக்குவதற்காக திட்டம் போட்டு செய்கிறீர்
களா என்ற சந்தேகம் ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்து,
இந்தச் சட்ட முன்வடிவுகளை அனைத்து தரப்பினரும்,
எதிர்க்கட்சிகளும் எதிர்த்திருக்கிற காரணத்தால் இவற்றை
பொறுக்கு கமிட்டிக்கு அனுப்பி வைத்து பரிசீலனை செய்ய
வேண்டும், மக்களுடைய கருத்துக்களை அறிய வேண்டுமென்று
கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-40)

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அவையின் முன்னால் பிரேரேபிக்கப்பட்
டிருக்கக்கூடிய இந்த 3 திருத்த சட்ட முன்வடிவுகளையும் நான்
எதிர்க்கிறேன். இந்தச் சட்ட திருத்த முன்வடிவுகள் என்று
சொல்வதைக் கூட நான் ஏற்றுக் கொள்வதற்கு இல்லை.
ஏற்கெனவே இயற்றப்பட்ட சட்டத்திற்கு அரசு ஒரு திருத்தம்
கொண்டு வருகிறது என்று சொன்னால், அந்தச் சட்டம் செம்மை
யாக நடைபெறுவதற்கு அல்லது, அந்தச் சட்டம் இயற்றப்பட்ட
காலத்திலே நம்முடைய பார்வைக்குப் படாமல்,
கவனத்திற்கு எட்டாமல் விடுபட்டுப் போன சில நம்முடைய
மேற்கொள்வதற்கு திருத்தச் சட்டங்களை ஒழுங்குகளை
தான் ஒரு அரசினுடைய மரபாக இருந்து கொண்டு வருவது
கிறோம். ஆனால் இப்போது கொண்டு வருவதை நாம் காண்
திருத்தச் சட்டங்கள் அசல் சட்டத்தினுடைய இருக்கக்கூடிய
குலைக்கும் தன்மையிலே இருக்கக்கூடிய அடிப்படையைக்
சட்டம் சம்பந்தப்பட்ட திருந்த சட்ட காரணத்தால், இதை
ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று முன்வடிவாக நான்
குறிப்பிட விரும்புகிறேன்.



இன்று நம்முடைய அரசு நிறைவேற்றுவதற்காக கொண்டு
வந்திருக்கக் கூடிய இந்தச் சட்டம், இந்த அரசுக்கு நீங்காப்
பழியை கொண்டு வந்து சேர்க்குமோ என்று நான் அஞ்சுகிறேன்.
குறிப்பாக உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் வேண்டும் என்று
இந்த அவையிலே எல்லாத் தரப்பினரும் மிகவும் வற்புறுத்தி
அந்தத் தேர்தல் நடந்து முடிந்தது. இந்த நாட்டிலே பல
காலம் விடுபட்டிருந்த ஒரு ஜனநாயகக் கடமை நிறைவேறியதே
என்ற நிம்மதி நமக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் என்ன
காரணமோ, நான் மற்ற எதிர்க் கட்சித் தலைவர்கள் சொல்
வதைப் போல ஆளும் கட்சி தோற்று விட்ட காரணத்தாலே
தான் இப்படிப்பட்ட திருத்த சட்ட முன்வடிவுகள் வருகின்றன
என்று சொல்ல முன் வரவில்லை, ஆனால் அப்படிச் சொல்வது
உண்மையாகிவிடுமோ என்ற சந்தேகத்தை உண்டாக்குவது போல்
அரசு எடுத்து வரக்கூடிய நடவடிக்கைகள் ஒவ்வொன்றாக இருக்
கின்றன. ஏற்கெனவே இந்த நகராட்சிகள், ஊராட்சிகள் பேரு
ராட்சிகளுக்கு எல்லாம் அதன் தேர்ந்தெடுக்கப்பட்ட கால கட்டம்
5 ஆண்டு என்று இருந்ததை 3 ஆண்டுக் காலமாக குறைத்
தோம். பிறகு அவர்களுடைய நிர்வாகப் பொறுப்பிலே இருந்த
கல்வி நலன், ஆரம்ப சுகாதார நிலையங்கள் இவற்றை எல்லாம்
கூட அரசு ஏற்றுக் கொண்டது. அதற்குக் கூட நாம் உடன்
படவில்லை. பல நூற்றுக்கணக்கான பெருந்தலைவர்கள் நம்
முடைய நாட்டிலே இருந்தார்கள். ஒரே ஒரு அரசு உத்தரவைப்
போட்டு, அவர்களை எல்லாம் வெறும் தலைவர்களாக நீங்கள்
ஆக்கிவிட்டீர்கள்.

அதற்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், தாங்கள்
விரும்பக்கூடியவகையிலே, அந்தந்த வட்டாரத்திலே மக்களால்
மதிக்கப்பட்ட பெரும்பான்மை பெற்ற தலைவர்கள் என்ற
முறையிலே, தாங்களும் மதிக்கக்கூடிய தலைவர்களை வரவேற்று
அவர்களுக்கு எல்லாம் ஒரு அந்தஸ்தை தந்து, ஒரு அங்கீகாரம்
அளிக்கக்கூடிய நிலையில், சில காரியங்களைச் செய்வதற்கு உரிய
உரிமைகளைக்கூட நீங்கள் கட்டுப்படுத்தி விட்டீர்கள், இப்போது
எல்லாம் சிறகொடிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு
இருக்கக்கூடிய அந்த உறுப்பினர்களைக் கூட மிச்சம் மீதியிருக்கக்
கூடிய இந்தக் காலக் கட்டத்திலாவது நம்முடைய அதிகாரம்
நீடிக்குமா என்று அஞ்சப்படக்கூடிய அளவிற்கு அவர்களை,
மீண்டும் அழைக்கக்கூடிய ஒரு அதிகாரத்தை பொதுமக்களுக்கு
அளிக்கக்கூடிய இந்தச் சட்டத் திருத்தம் என்று சொல்ல
மாட்டேன், ஒரு புதிய 'Dragonian Law' என்று சொல்லக்கூடிய
ஒரு கொடுமையான சட்டத்தை நீங்கள் கொண்டு வந்து
இருப்பது கொஞ்சமும் பொருத்தமற்றது என்று நான்
சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டிலே நடந்திருக்கக்கூடிய தேர்தல்களின்
முடிவுகளுடைய புள்ளி விவரங்களை எல்லாம் நீங்கள் எடுத்துப்
பார்த்தால், ஏறத்தாழ ஒரு 80 சதவீதத்தினர், விழுந்த வாக்கு
களிலே 51 சதவீதம் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்கள்

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1987 மே 11

என்று நாம் காண முடியவில்லை. 45-லிருந்து 48 சதவீதம்
வாக்குகளைப் பெற்று, பெரும்பான்மை பெற்றவர்கள்தான் இந்த
நாட்டிலே, சட்டமன்றத்திற்கும் சரி, பாராளுமன்றத்திற்கும் சரி,
நகராட்சி ஊராட்சி, பேரூராட்சி மன்றங்களுக்கும் சரி தேர்ந்
தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் தேர்ந்
தெடுக்கப்பட்ட காலத்திலே 55 சதவீத வாக்காளர்களுடைய
ஆதரவைப்பெற முடியாத நிலைமையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்
பட்டது நம்முடைய நாட்டினுடைய அரசியல் அமைப்புக்கு
இணங்க அவர்கள் எத்தனை ஆண்டுக்காலத்தில் அந்தப்
பதவிக்கு உரியவர்கள், எந்தச் சட்டத்தினுடைய அடிப்படை
யிலே தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அந்தக் காலம் வரையிலே
அவர்கள் அந்தப் பொறுப்பேற்று நடத்துவதற்கு உத்தரவாதம்
பெற்றவர்கள் என்ற அடிப்படையை ஏற்றிருக்கக்கூடிய
நமக்கு மத்தியிலே அவர்களுக்கு அந்த காலகட்டமும் இல்லை
என்று இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பது
கொஞ்சம்கூட நன்மையானதல்ல. நான் ஒன்றை மெத்த பணி
வன்போடு இந்த அரசுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இந்திய
நடுவண் அரசு இப்படி பாராளுமன்ற உறுப்பினர்களையும், சட்ட
மன்ற உறுப்பினர்களையும் தவறு செய்பவர்களை திரும்ப அழைப்
பதற்காக ஒரு நிபுணர் குழுவை 10, 15 ஆண்டுகளுக்கு முன்னாலே
நியமித்து, அவர்கள் தீர ஆய்ந்து இப்படி பல்வேறு சிறு நாடு
களில், ஸ்விட்சர்லாந்து போன்ற சிறு நாடுகளில் இருக்கக்கூடிய
இந்தச் சட்டத்தை நம்முடைய நாட்டிலே அமுலுக்குக் கொண்டு
வர முடியுமா என்று ஆய்ந்து அவர்கள் தீர்ப்பு அளித்தபோது
அது நம்முடைய நாட்டுக்கு ஏற்புடைத்தானது அல்ல; அது இந்த
நாட்டு மக்களுக்கு குழப்பத்தை உண்டாக்கும். ஒரு தேர்ந்
தெடுக்கப்பட்ட அரசு, அந்த அரசினுடைய தலைவராக மிகப்
பெரும்பான்மையினருடைய மதிப்பைப்பெற்ற ஒரு தலைவராக
இருந்து நல்லாட்சி புரிந்து கொண்டிருக்கக்கூடிய காலத்தில், மக்கள்
விரோத சக்திகள் ஒன்று சேர்ந்து, ஆட்சியமைத்த அடுத்த நாளே
இந்தக் கையெழுத்து வேட்டையைப் போன்று இவர்கள் ஆரம்பிப்
பார்களேயானால், ஒரு நிலையான ஆட்சி, நிம்மதியான ஆட்சி,
ஒரு சுபீட்சமான ஆட்சி நிலைபெறுவதோ, நீடிப்பதோ முடியாமல்
ஆகிவிடும் என்ற கருத்தை, ஏற்கெனவே நம்முடைய இந்திய
நடுவண் அரசு நியமித்த ஒரு குழு இந்த நாட்டினுடைய அரசி
யலுக்கு பரிந்துரைத்ததை நம்முடைய தமிழக அரசு அன்பு
கூர்ந்து திரும்ப ஒப்பிட்டுப் பார்த்து இந்தக் காரியத்திலே தங்க
ளுடைய மேற்கொண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சுவிட்ஸர்லாந்தைப்
போன்ற நாடுகளில் இப்படிப்பட்ட திட்டம் இருக்கிறது உண்மை.
ஆனால் அது சின்னஞ்சிறு நாடு. தேர்ந்தெடுக்கப்பட்டவர்
களுக்கு வாக்களிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கையும் மிகக்
குறைவானது. சாதாரணமாக நம்முடைய கார்ப்பரேஷன்
தொகுதிக்கு இருக்கக்கூடிய வாக்காளர் கூட அந்த நாட்டு
பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இல்லை.
அதைவிட குறைந்த நிலையிலேயே இருக்கிறார்கள். அந்த
நாட்டிலே மக்கள் படிப்பறிந்தவர்களாக மாத்திரமல்ல. தே ஆர்



1987 மே 11] [திரு. ஆ. கா. அ. அப்துல்சமத்]

பொலிட்டிகலி எஜிகேட்டட். ஜனநாயகம் செம்மை பெற
வேண்டுமானால் எங்கே மக்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக
இருக்கிறார்களோ, அதுமாத்திரமல்ல, எங்கே அரசியல் அறிவு
பெற்றவர்களாக இருக்கிறார்களோ, அங்கே தான் அது செம்மை
பெற முடியும். அந்த நாட்டிலே சாதாரணமாக தெருவிலே
ஒரு விளக்குக் கம்பத்தை நட வேண்டும் என்று சொன்னால் கூட,
அதற்காக ஒரு பொதுஜன வாக்கெடுப்பு நடத்தித்தான், நடத்து
கிறார்கள். அங்கே அதற்கான இயந்திரம் இருக்கிறது. மக்கள்
தெளிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள். காழ்ப்புணர்ச்சி
யின்றி அல்லது எந்தவிதமான பிரச்சாரத்திற்கும் மயங்கி விடா
மல் தாங்களே நிதானித்து வாக்களிக்கக்கூடிய அறிவு பெற்றவர்
களாகவும் இருக்கிறார்கள். நான், நம்முடைய நாட்டு மக்கள்
அத்தனை பேரும் அந்தத் தகுதியைப் பெறவில்லல என்று
சொல்லமாட்டேன். ஆனால் பெரும்பாலும், தேர்தல் நேரத்திலே
நம்முடைய நாட்டில் ஏற்படக்கூடிய அந்த பதட்ட நிலையை
நாம் அறிந்து இருக்கிறோம். நாடு இரு வேறு கூறுகளாக
பிரிக்கப்பட்டு, எதிலே நியாயம் இருக்கிறது என்று கூட நினைத்துப்
பார்க்க முடியாத அளவுக்கு கட்சி மாச்சரியங்களெல்லாம் வளர்க்
கப்பட்டு வாக்களிக்கவும், வாக்களிக்க அழைக்கப்பட்டு அழைத்
துக் கொண்டு போகக் கூடியவர் யாருக்கு வாக்கு அளிக்கப்போகி
றோம் என்று கூட தெரியாமல், ஏதோ மனிதனைப் பார்க்காமல்,
சின்னத்தைக் காட்டி சின்னத்தினுடைய அடிப்படையில் வாக்
களிக்கப்பட்டு தேர்தல் நடத்தக் கூடிய நம்முடைய நாட்டில்
ஏதோ உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்படக் கூடிய அதிகாரம்
தான் ஜயநாயகம் செம்மையாக செயல்படுவதற்குரிய வழி என்று
இன்று கூட பேசிக் கொண்டிருக்கக் கூடிய இந்தக் காலத்தில்
இப்படி அதனுடைய அமைப்புகளையெல்லாம் முற்றாகக்
குறைக்கக்கூடிய இந்தச் சட்டத்தை, இந்தத் திருத்தத்தை நீங்கள்
கொண்டு வருவது கூடாது ; தயவு செய்து இதை நீங்கள் திரும்பப்
பெற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன். இது பெரிய
குழப்பத்தை உண்டாக்கும். இங்கே நம்முடைய நாஞ்சிலார்
அவர்கள், சட்ட மன்றத்துக்கும், பாராளுமன்றத்துக்கும்கூட
இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்குமானால் நான் அதை வர
வேற்கிறேன் என்று அவர்கள் சொன்னார்கள். அது கூட எனக்கு
உடன்பாடானது அல்ல. நீங்கள், அவர் சொல்லிவிட்டார்
என்பதற்காகவோ நீங்கள் செய்யக் கூடிய காரியம் அல்ல என்று
உங்களை நீங்கள் தேற்றிக் கொள்ளாதீர்கள். யார் சொன்னா
லும், அது இந்த நாட்டிலே குழப்பத்திற்கு வித்திடக்கூடிய ஒரு
கருத்துக்குத்தான் ஆதாரமாக அமையுமே தவிர, நீங்கள்
கொஞ்சம் பாரபட்சமற்ற முறையிலே இதை கூர்ந்து பாருங்கள்.

(பிற்பகல் 4-50)

இது விளைவிக்கக் கூடிய குழப்பம் சொல்ல முடியாததாக
இருக்கும். நான் நினைத்துப் பார்க்கிறேன். கற்பனையா
பார்க்கிறேன். இன்று இத்தனை லட்சங்கள் மக்களுடைய
அன்பைப் பெற்று அரசை அமைத்து இருக்கக் கூடிய நம்முடை

முதலமைச்சருக்கு விரோதமாக ஒரு 25 சதவீத வாக்காளர்கள் கையெழுத்துப் போடுவது என்று பல எதிர்க்கட்சிகள் முயற்சிக்குமானால் அது நாட்டில் ஒரு நிலை அற்ற தன்மையை உண்டாக்குவதற்குரிய தன்மையில் முயற்சிக்கப்படுமே தவிர அதனாலே, ஒரு சல சலப்பு, அதிலே பரபரப்பு, அதிலே ஒரு தேவை அற்ற சர்ச்சை, ஒரு பதட்ட நிலை ஆக ஆட்சி என்பது உள்ளாட்சியினுடைய அடிப்படையில் இருந்து இந்த தமிழக அரசினுடைய அடிப்படை வரையிலே ஒரு நிலை அற்ற தன்மையை உண்டாக்குவதற்கு சாதாரணமாக நீங்கள் கொண்டு வரக்கூடிய இந்த திருத்தம் காரணமாகி விடும் என்று நான் அஞ்சுகிறேன். ஆகவே இதை நீங்கள் திரும்பப் பெற வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன். நம்முடைய நாட்டினுடைய தேர்தல் முறையில் ஒரு முழுமையான சீர்திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று ஒரு சட்டத்தை நீங்கள் கொண்டு வருவீர்களானால் அதை வரவேற்க நாங்கள் காத்து இருக்கிறோம். ஏன் இன்னும் சொல்லப் போனால் தனிப்பட்ட மனிதனுக்கு அல்ல வாக்கு, ஒரு தத்துவத்துக்குத் தான் வாக்கு என்று கட்சி ரீதியாக இந்த நாட்டிலே தேர்தல் நடத்த வேண்டும் என்று முடிவு ஆகி தமிழ் நாட்டை ஒரு தொகுதியாக எடுத்துக் கொண்டு அந்த தொகுதியிலே நிற்கக்கூடிய கட்சிக்கு மட்டும் வாக்குகள் அளிப்பது என்று இருக்குமானால் தனிப்பட்டவர்கள் பற்றி தரம் கெட்ட முறையில் விமர்சிக்கக்கூடிய ஒரு தகாத நிலை கூட தமிழகத்தினுடைய பொது வாழ்விலிருந்து தடுத்து நிறுத்தப்படும். அப்படிப்பட்ட ஒரு சீர்திருத்தம் தேர்ந்தெடுக்கப்படுவதிலே ஒரு முன்னப்பாக ஒரு மாறுதலை கொண்டு வருவீர்களானால் அதை நாங்கள் வரவேற்க காத்து இருக்கிறோம். தயவு செய்து இந்த திருத்தத்தை கிடப்பிலே போடுங்கள். அப்படி முடியவில்லை என்றால் நீங்கள் செலக்ட் கமிட்டிக்கு விடுங்கள் என்று கேட்டு அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. அ. ரகுமான்கான்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், நகராட்சிகள் தலைவர்கள், உறுப்பினர்கள் லஞ்சம் வாங்குவார்களானால், தங்களுடைய பதவிகளை தவறாக பயன்படுத்துவார்களானால் தேர்ந்தெடுக்கப்பட்ட வாக்காளர்களே அவரை திரும்பப் பெறுகின்ற உரிமை வேண்டும் என்று வலியுறுத்த இந்தச் சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டு இருக்கிறது. செலக்ட் கமிட்டிக்கு இதை அனுப்பப்பட வேண்டும் என்று நான் சொல்லியிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இதை கடுமையாக நாங்கள் எதிர்க்கிறோம். இது ஜனநாயக விரோதமானது. இன்றைக்கு ஸ்தல ஸ்தாபனத்தில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள் பதவியில் இருக்கின்ற காரணத்தால் அவர்களுடைய பதவிகளை பறிப்பதற்காக கொண்டு வரப்பட்ட சட்டமாகவே இதை நாங்கள் கருதுகிறோம்.



அடுத்து, லஞ்சம் ஒழிக்கப்படவேண்டும் என்பதிலே எந்த விதமான கருத்து வேறுபாடும் இல்லை. நான் உங்கள் மூலம் சொல்லிக்கொள்ள விரும்புவது. Indian Penal Code இருக்கிறது, அதன்படி நடவடிக்கை எடுக்கலாம். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் தப்பு செய்தால் டிஸ்சால்வ் செய்யலாம். அந்த சபையை கலைக்கலாம், சூப்பர்சீட் பண்ணலாம்.

இன்னும் சொல்லப்போனால் சென்னை மாநகராட்சியிலே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்த போது உறுப்பினர்கள் எல்லாம் சர்வ கட்சியைச் சேர்ந்தவர்கள் லஞ்சம் வாங்கினார்கள் என்ற பிரச்சினை வந்தது. திரு ஹண்டே அவர்கள் இப்போது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறார். அன்றைக்கு அவர் இருந்து - அப்போதும் இருந்தார்கள் —அந்த கேள்வியை கேட்ட உடனே எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் சென்னை மாநகராட்சியை கலைத்து கிரிமினல் வழக்கைத் தொடுத்தார்கள். இன்றைக்கும் அந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆக இன்றைக்கு லஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது இவர்கள் மத்தியில் என்று சொன்னால் இது போன்று சூப்பர்சீட் செய்யலாம், டிஸ்சால்வ் செய்யலாம், இண்டியன் பீனல் கோடை பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கலாம். ஆக இன்றைக்கு ரைட் டு ரீகால் எதற்கு என்று விளங்கவில்லை.

இன்னும் ஒன்று. இந்த அரசினுடைய நோக்கம் லஞ்சம் ஒழிப்பு என்று சொல்லப்படுகிறது. ரொம்ப மகிழ்ச்சி. அப்படி என்றால் Public Men Criminal Misconduct Act என்று இருக்கிறது. பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள் மந்திரியாக இருந்தாலும், எம். எல். ஏ. வாக இருந்தாலும் தப்பு செய்தால் அவர்களை தண்டிக்கக்கூடிய சட்டம் Comprehensive Law இங்கே விரைவிலே வரும் என்று அன்றைக்கு திரு. நாராயணசாமி முதலியார் அவர்கள் சட்ட மந்திரியாக இருந்த போது இதே சட்ட மன்றத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வாக்குறுதி கொடுக்கப்பட்டது. அப்படி அந்த சட்டத்தை கொண்டு வந்து தப்பு செய்கிற எம்.எல்.ஏ., தப்பு செய்கிற மந்திரிகள் இவர்களை தண்டிக்கக்கூடிய முயற்சியில் இந்த 10 வருட காலத்தில் நீங்கள் ஈடுபட்டு இருப்பீர்களானால் நீங்கள் லஞ்ச ஒழிப்பிற்கான ரைட் டு ரிகால்க்கு கொண்டு வந்திருக்கிற சட்டம் நியாயம் என்று ஏற்றுக்கொள்ளலாம். இன்றைக்கு கர்நாடகத்திலே Lok Ayukt என்ற சட்டத்தை மாண்புமிகு திரு. ஹெக்டே அவர்கள் எம்.எல்.ஏ.க்கள், அமைச்சர்கள் தப்பு செய்தால் தண்டிக்கின்ற சட்டத்தை வைத்து இருக்கிறார்கள். எனவே இதில் உள்நோக்கம் சந்தேகத்திற்கு உரியதாக இருக்கிறது.

அடுத்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலைமை சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பில்லில் ஒன்றை சொல்லியிருக்கிறார்கள். Financial

stab l y இல்லாமல் போய் விடுமானால், அப்படி அரசு கருதுமானால் கலைத்து விடலாம் என்று சொல்லியிருக் கிறீர்கள். நீங்களே தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். இந்த Financial n sta lity-க்கு யார் காரணம். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனின்கள், நகராட்சிகள் இருக்கின்றன. இவர்களுக்கு நிதி உதவி யார் செய்யவேண்டும். அண்மையில் கல்கத்தாவில் (Mayo 's Conference) நடந்தது. அதிலே ஒரு தீர்மானம் போட்டார்கள். என்ன தீர்மானம் போட் டார்கள் என்று சொன்னால் மத்திய அரசு எப்படி மாநில அரசு களுக்கு F nance Comm ssion வைத்து கிராண்டை புரவைடு பண்ணுகிறதோ அதேபோல் இங்கேயும் ஒரு Finance C mmissi n ஸ்டேட்டில் வைத்து இந்த ஸ்தல ஸ்தாபனங்கள் அனைத்துக்கும் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள், நகராட்சிகளுக்கு எல்லாம் தரவேண்டும்.

அதைப்போலவே 'எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸ்' வெஹிகில்ஸ் டாக்ஸ், சேல்ஸ் டாக்ஸ். போன்ற டாக்ஸ் எல்லாம் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. நேர் கொடுக்கவேண்டும். கொடுத்தால் ஃபினான்ஷியல் ஸ்டெபிளிட்டி இருக்கும் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். கடந்த 10 ஆண்டுகளாக ஸ்பெஷல் ஆபீசர்களைத்தான் போட்டிருக்கிறீர்கள். நீங்கள் தான் இருக்கிறீர்கள். நான் கேட்கிறேன். ஃபினான்ஷியல் இன்ஸ் டெபிளிட்டிக்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? குழந் தைக்கு நோயை உண்டாக்கிவிட்டு, மாத்திரையைக் கொடுப் பதற்குப் பதிலாக, நோய் இருப்பது போல் தெரிகிறது, ஆகவே குழந்தையைக் கொன்றுவிடுகிறேன் என்று சொன்னால், கருணை உள்ள தாய் தானா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

உள் நோக்கம் இருப்பது இங்கே கொஞ்சம் சிக்கலாக இருக் கிறது. நம்முடைய முஸ்லீம் லீக் கட்சியினுடைய தலைவர் கூடச் சொன்னார்கள். ஒரேயொரு உதாரணம். தலைவர் அவர்களே, ஒன்றியத்தலைவர் என்று அழைக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏனென்றால் பெருந்தலைவர் என்று சொல்வது பெரியவர் காமராசர் அவர்களைக் குறிக்கும் என்று சொன்னார்கள். நான் வாதத்திற்காக ஒத்துக்கொள் கிறேன். கிராமங்களிலே இருக்கிற பஞ்சாயத்து யூனியன் பிரசி டெண்டிற்குக் கூட பிரசிடெண்ட் வருகிறார் என்று தான் அவர்கள் சொல்கிறார்கள். பிரசிடெண்ட் வருகிறார் என்று சொன்னால் கவர்ன்மெண்ட் ஆப் இந்தியாவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பிரசிடெண்ட், 'ஜெயில்சிங்' என்றா பொருள்? அங்கேயும் பிரசி டெண்ட், இங்கேயும் பிரசிடெண்ட் எனவே எடுத்துவிடவேண்டு மென்று யாரும் சொல்லவில்லை.

அதுபோன்று முதல்வர் என்றால் கல்லூரி முதல்வரைக் குறிக் கும். நாங்கள் குறிக்கும் மாநில முதல்வருக்குப் பெயர் கூட முதல்வர் தான். ஒரு சினிமாப்படத்தில் கூட முதல்வர் என்ற வார்த்தையைத் தாக்கிச் சொல்லியிருக்கிறார்கள். இது உங்





களுக்குத் தெரியும். நீங்களும் பார்த்திருப்பீர்கள். பார்த்ததினால் தான் ஒரு சட்டமே கூட, பேரவைத் தலைவர் அனுமதியோடு இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

இவைகளையெல்லாம் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், அதிகாரப் பறிப்புகள், அதை ஏதோ பதவிக்கு வந்தவர்கள் என்று, பஞ்சாயத்திலே ஏற்பட்ட தோல்விகள் என்பதை தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு, ஜனநாயகத் தில் அந்த டாலரென்ஸ் இல்லாத காரணத்தால் இந்தச் சூழ்நிலை. நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். 'டாக்ஸ் ஃபிக்சேஷன் கமிட்டி' பற்றி. அந்த அதிகாரம் ஏற்கனவே மக்கள் பிரதிநிதி களிடம் இருந்தது. அதைக் கொண்டுபோய், பி. டபிள்யூ. டி.ஏ.ஈ., அதைப்போலவே டி.ஆர். ஓ., ஆர்.டி.ஓ. அவர்களுக்குக் கொடுத்து அவர்களுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ? மக்களிடம் இருக்கக் கூடிய அதிகாரத்தைப் பறித்து, பி.டபிள்யூ. டி.ஏ. ஈ., ஆர்.டி.ஓ., டி. ஆர்.-ஓவிடம் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், தேர்ந் தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மீது உங்களுக்கு என்ன கோபம்? தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள் கிராமங்கள் தான் இந்தியா வின் ஆத்மா என்று சொன்னார்கள். (De-centralisati n cf powers is the real Swaraj) உண்மையான சுயராஜ்யம் என்பது அதிகாரங் கள் பரவலாக்கப்படுவது என்பது தான். ஆனால் இங்கே அதி காரங்கள் பறிக்கப்படுகின்றன. அதிகாரங்கள் குறைக்கப்படு கின்றன. பதவிகள் இன்றைக்குப் பிடுங்கப்படுகின்றன. அதற்குச் சில காரணங்கள் தவறாகச் சொல்லப்படுகின்றன.

இன்னொன்றைச் சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். ஒரு லட்சம் வாக்காளர்களில் நான்கில் ஒரு பங்கு, 25,000 வாக்காளர்கள் பெடிஷன் கொடுத்து ரெப்ரசெண்ட் செய்தால், உடனே எலக்ஷன் அதாரிட்டி—அவர் யார் என்று கேட்டால் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்—உடனே அந்த ரெப்ரசெண்டேஷனை வாங்கி, அதிலே இருக்கக்கூடிய ஒரு இலட்சம் வாக்காளர்களில் 25,000 மனுக்களை எடுத்து பரிசீலிக்க வேண்டிய அவசியம் கிடையாது. ஒரு சதவீதம் அதாவது 250 மனுக்களை அவர் பரிசீலனை செய்து, 250 மனுக்கள் சரியாக இருக்கிறது என்று முடிவுக்கு வந்துவிட்டால் அது சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன், நகராட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவரும் நீங்கள் இந்த மாதிரி லஞ்சம் வாங்கியிருக்கிறீர்களா? அல்லது உங்களது பதவியைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கிறீர் களா என்று விசாரித்து அவர்களே 'கரெக்ட்' நீங்கள் தப்புசெய்து விட்டீர்கள் என்று பிறகு பஞ்சாயத்தில் ரெஃபரெண்டம் நடத்தி விடலாம். நான் கேட்கிறேன். 250 கையெழுத்து லஞ்சம் வாங் கினார்கள் என்று அவர்களைப்பற்றி சொல்கிறார்கள். நான் சொல்கிறேன். 750 கையெழுத்து அவர்கள் லஞ்சம் வாங்கவில்லை என்று சொல்கிறது. அந்த அதிகாரிகளிடத்தில் பெட்டிஷன் கொடுத்து வாங்குவார்களா ? 250 பெரிசா; 750 பெரிசா? ஜன நாயகத்தில் மெஜாரிட்டியா, மைனாரிட்டியா? ஆக நான் கேட்

கிறேன் ரெஃபரண்டத்தைத் தீர்மானிக்கவேண்டுமென்று சொல்கின்றபோது நான் கேட்கிறேன். அப்படியானால், இந்த அரசாங்கம் சரியான அரசாங்கமா? தப்பு செய்யாத அரசாங்கமா? லஞ்சம் இல்லாத அரசாங்கமா? நாளைக்கு நீங்கள் முன்வந்து இந்த ஆட்சியைக் கலைத்துவிட்டு, மக்களிடத்தில் நியாயத்தை எதிர்பார்க்கிறோம் என்று 'ரெஃபரெண்டம்' வையுங்கள். ஆக நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால்—இன்றைக்கு ஹைதராபாத்தில் ஒரு முஸ்லீம் அமைப்பைச் சார்ந்தவர் மேயராக இருக்கிறார். மாநகராட்சியைக் கைப்பற்றியிருக்கிறார்கள். ஆனால் ராமாராவ் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவில்லை. பம்பாயில் சிவசேனா எதிர்க்கட்சி மாநகராட்சி இருக்கிறது. அங்கேயிருக்கிற காங்கிரஸ்காரர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவில்லை. எனவே இந்தத் தலைமையை, பஞ்சாயத்து, நகராட்சி தலைவர்கள் தேர்தலில் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். அதை உங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே பதவிகளைப் பறிக்கிறீர்கள். லஞ்சத்தை ஒழிக்கிறோம் என்று சொல்வது, சாத்தான் வேதம் ஓதுவது போல் இருக்கிறது என்று சொல்லி, உரையை நிறைவுசெய்கிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுத்துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டு, விவாதத்திற்கு வந்திருக்கின்ற சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். இவைகளை நான் வரவேற்பதற்குக் காரணம் என்னவென்றால், ஜனநாயகத்தில் வாக்காளர்கள் தான் எஜமானர்கள். ஆகையால் ஜனநாயகத்தில் எஜமானர்களாக இருக்கின்ற வாக்காளர்கள் அதிகமாக அதிகரித்துக் கொண்டிருக்கின்ற வகையில் இந்தச் சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன்.

(பிற்பகல் 5-00)

இன்றைக்கு நம்முடைய வாக்காளர்கள் எல்லாம் ஏதோ விவரம் இல்லாதவர்கள் போலவும் அந்த வாக்காளர்கள் வாக்களிக்கின்றபோது எதை எதையோ நம்பி ஏமாந்து வாக்களிப்பது போன்ற ஒரு தோற்றம் இன்றைக்கு உருவாக்கப்பட்டு இருக்கிறது. கடந்த கால வரலாற்றைப் பார்க்கின்றபோது நாடாளுமன்றமாக இருந்தாலும் தமிழ்நாடு சட்டமன்றமாக இருந்தாலும். உள்ளாட்சி அமைப்புக்களாக இருந்தாலும் அவர்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய அந்தப் பாங்கினைப் பார்க்கின்றபோது தமிழ்நாட்டிலே இருக்கின்ற வாக்காளர்கள் சிந்திக்கின்ற வாக்காளர்கள், விவரம் புரிந்த வாக்காளர்கள் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும். விவரம் தெரிந்த வாக்காளர்கள் கையிலே அதிகமான அதிகாரத்தைக் கொடுக்கின்றபோது அது ஆரோக்கியமான ஜனநாயக உணர்வை தமிழகத்திலே உருவாக்கும் என்று நாம் சார்ந்திருக்கின்ற இயக்கத்தின் சார்பாக நாம் இன்றைக்கு நம்பிக்கொண்டிருக்கிறோம். இந்த திருப்பிப் பெறுகின்ற அதிகாரத்தை அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள், தலைவர்கள் இவர்களை



திருப்பி அழைக்கின்ற உரிமை வாக்காளர்களுக்கு கொடுக்கின்ற போது அதற்கு பின்பற்றப்படுவதாக நாம் சொல்லுகின்ற சில ஏற்பாடுகள் அந்த அளவிற்கு திருப்திகரயாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படி திருப்பிப் பெறவேண்டும் என்ற முடிவை எடுத்து அதற்காக குறிப்பிட்ட எண்ணிக்கை வாக்காளர்கள் அதற்கான ரெப்ரசன்டேஷனைக் கொடுத்தால் அதற்குப் பிறகு அங்கு நடைபெறுகின்ற அந்த விசாரணை என்றுச் சொல்லப்படுகின்ற என்கொயரி, (That this only a non-Judicial enquiry). அந்த நான்-ஜுடிஷியல் என்கொயரியின் மீது ஒரு மேல்முறையீட்டிற்கான வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. அதற்குபிறகு அந்த ரெஃபரண்டம் வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டாலோ அல்லது வேண்டாம் என்று முடிவு எடுக்கப்பட்டாலோ அந்த முடிவின்மீது மேல் முறையீடு செய்வதற்கு ஒரு வாய்ப்பும் இங்கே கொடுக்கப்படவில்லை. அல்லது நீதி மன்றத்திற்கு செல்லுகின்ற ஒரு வாய்ப்பும் இங்கே கொடுக்கப்படவில்லை. ஆகவே, சில தவறுகள் நடைபெறுவதற்கு இங்கே வாய்ப்புகள் இருக்கின்றன. உதாரணமாக என்னுடைய பத்மநாபபுரத்திற்கு உட்பட்ட தக்கலை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கப்பிவளை பேரூராட்சிக்கு 14 வார்டுகள் இருக்கின்றன. அந்த 14 வார்டுகளுக்கு தேர்தல்கள் நடைபெற்றபோது இரண்டு வார்டுகளில் வெற்றி பெற்றவரை தோற்றவராகவும், தோற்றவரை வெற்றி பெற்றவராகவும் அறிவித்துவிட்டார்கள். இந்த தோற்றவர்கள் நீதி மன்றத்திற்குச் சென்று இப்போது வென்றவர்களாக தீர்ப்பினை பெற்று வந்திருக்கிறார்கள். ஆக இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுவது இயற்கை, வேண்டுமென்றே என்று இல்லாவிட்டாலும் கூட அவை சில நேரங்களில் நிகழ்ந்துவிடலாம்.

அப்படிப்பட்ட தவறுகள் கூட நிகழ்வதற்கான வாய்ப்பு இந்த விசாரணையின் போது இருக்கிறது. இந்த விசாரணையில் எந்த நகர மன்றத் தலைவரையோ, உறுப்பினரையோ திருப்பிப் பெற வேண்டும் என்று கருதி ரெப்ரசன்டேஷன் கொடுக்கின்றோமோ அவரையும் அழைத்து விசாரிக்கின்ற வாய்ப்பு கொடுத்திருந்தாலும் கூட இந்த முடிவு சில நேரங்களில், சில இடங்களில் உள்நோக்கத்தோடோ அல்லது வேறு காரணத்தோடோ நியாயத்திற்கு அப்பாற்பட்டவையாக இருந்தால் அவை நீதி மன்றத்தாலோ அல்லது மேல்முறையீடு என்ற வகையிலோ ஒரு ஏற்பாடு இங்கே செய்யப்படவில்லை. ஆகவே அந்த அளவிற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்வது என்பது இந்தச் சட்ட முன்வடிவை இன்னும் சற்று சிறப்பாக ஆக்கும் என்று கேட்டுக்கொண்டு வரவேற்று அமர்கின்றேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவசரம் அவசரமாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் நகராட்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் போன்றவர்களை நடவடிக்கை எடுக்கின்ற அளவிற்கு ஒரு சட்டமுன்வடிவினை இங்கே அறிமுகம் செய்திருக்கிறார்கள். எனக்கு இருக்கின்ற வருத்தம் எல்லாம் மற்ற

எதிரிக் கட்சிகளைப்போல் இதற்கு ஏதோ உள்நோக்கத்துடன் இதை கொண்டு வந்திருக்கிறார்கள் அல்டீரியர் மோட்டிவ்ஸ் என்ற அந்த அடிப்படையில் அல்லாமல் தமிழக அரசினுடைய சட்டத் துறை மிகப் புகழ் பெற்ற சட்டத்தை இவ்வளவு ஒரு மட்டமான சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்களே என்று நினைக்கின்றபோது தான் வருத்தமாக இருக்கிறது. It only reflects on the immaturity of the Law department of the Government of Tamil Nadu. ஒன்று சட்டமாவது நன்றாக முழுக்க முழுக்க தெரிந்து இருக்க வேண்டும். அல்லது ஃபேக்ட்ஸ்-நடைமுறையாவது நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். இரண்டுமே தெரியாமல் ஏதோ அவசரம் அவசரமாக புரட்சி கரமான சட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே கொண்டுவந்திருக்கிறோம் என்று ஒரு சட்ட முன்வடிவை கொடுத்து இங்கே நிறைவேற்றித்தரும்படி கேட்டிருக்கிறீர்களே என்று நினைக்கின்றபோது நான் வேதனைக்குரிய விஷயமாக இதை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மூன்று சட்டங்களைப் படித்துப் பார்க்கின்றபோது இதில் மூன்று முக்கியமான அம்சங்கள் ஒன்று, ரைட் டு ரீகால் அதாவது மக்கள் தாங்களே தேர்ந்தெடுத்த உறுப்பினர்களை திரும்பப் பெறுகின்ற, திரும்ப அழைக்கின்ற ஒரு உரிமை.

இரண்டாவது, டேக்ஸேஷன் அப்பீல்ஸ் கமிட்டி, அதிலே ஒரு ஆர். டி. ஓ. அல்லது டி. ஆர். ஓ., ஒரு எக்சிக்யூடிவ் அல்லது அசிஸ்டெண்ட் இன்ஜீனீயர் அவர்களையும், ஊராட்சி ஒன்றியத் தலைவர், இரண்டு கவுன்சிலர்கள்—உறுப்பினர் களையும் கொண்ட 5 பேருள்ள கமிட்டியாகக் கொண்டு வருவது; மூன்றாவது, நிதி ஆதாரங்கள் இல்லாத அந்த நகராட்சி, ஊராட்சிகளைக் கலைத்து விடுவது. இந்த மூன்றே மூன்று முக்கியமான காரணங்களுக்காக இந்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

'டேக்ஸேஷன் அப்பீல்ஸ் கமிட்டிக்கு' நீங்கள் சொல்லி இருக்கிற வாதம்—அதிலே ஒரு டி. ஆர். ஓ. வைப் போட்டால் 'it gets a judicial status'' என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். அது நியாயம்தான். இங்கே சொன்னதைப் போல, 5 பேருள்ள கமிட்டியில் இரண்டுபேர் தான் அரசாங்க அதிகாரிகள். மற்றவர்கள்—3 பேர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர், 2 கவுன்சிலர்கள்; ஆகவே, மெஜாரிட்டி நிச்சயமாக மக்கள் கையிலேதான் இருக்கிறது. அதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

ஆனால், நிதி ஆதாரங்கள் இல்லையென்று சொல்லி ஒரு முனிசிபாலிட்டியைக் கலைத்து விடுகிறோம் என்று சொன்னால் இந்திய அரசியல் சட்டத்திலேயே கிராமங்களை நாம் வாழ வைக்கவேண்டும்; கிராமங்களுக்கு நிதி ஆதாரங்களை, அவர்களே திரட்டிக் கொள்ளக்கூடிய அளவுக்கு உரிமைகள் வழங்கவேண்டும் என்று ஒரு புறத்திலே, மாநில சுயாட்





வேண்டும் என்று எல்லாம் கோஷமிட்டுக்கொண்டு, இன்னொரு புறத்திலே சாதாரண ஊராட்சிகளை, கிராமங்களை எல்லாம் நசுக்குகின்ற இந்த முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறோமோ என்று நினைக்கின்றபோது இது முன்னுக்குப் பின் முரணான வாதம் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்திற்குத் தோன்றவில்லையா என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இது எல்லாவற்றையும் விட மிக வேடிக்கையான நிலைமை என்ன என்று சொன்னால், 'ரைட் டு ரீக்கால்'—அதாவது, அவர்கள் அனுப்பி வைத்தவர்களைத் திரும்பப் பெறுவதற்கு மக்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இது மற்ற நாடு களில் சரியாக வரும். நம்முடைய நாட்டில் சரியாக வருமா என்பதை தயவுசெய்து சட்ட அமைச்சர் கூட, தாழ்மையுடன் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே தேர்தல் நடத்துகின்றபோது, 100-க்கு 100 பேர் கள் வாக்களிப்பதே கிடையாது. எந்தத் தேர்தலிலும், 100-க்கு 100 விழுக்காடு பேர்களும் வாக்களித்து, அதன்மூலம் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதில்லை. 65 சதவீதம் அல்லது 75 சதவீதம் தான் வாக்காளர்களே வாக்களிக்கிறார் கள். வாக்களிக்காத ஒரு 30 சதவிகிதத்தினர் என்றென்றும் இருந்துகொண்டே இருக்கிறார்கள்.

அந்த 30 சதவீதம் வாக்காளர்களிலே, நாம் பட்டியல்படி 25 சதவீதம் வாக்காளர்களுடைய கையெழுத்து வாங்கிக் கொண்டு வந்து, இங்கே திரும்ப பெறவேண்டும் என்று நாம் கொடுத்தால் அது நியாயமா? 70 சதவீதம் பேர்கள் தான் வாக்களிக்கிறார்கள். ஓட்டே போடாமல் 30 சதவீதம் பேர் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். அந்த 30 சதவீதம் பேர்களிடமே போய் கையெழுத்து வாங்கிக் கொண்டு வந்து விட்டு, திரும்ப அழைக்க வேண்டும் என்று சொன்னால் இது நியாயமா, தர்மமா, இது சட்டத்திலே பொருந்துமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பிறகு, அவர்கள் ஓட்டுப் போட்டவர்கள்தானா என்று அதை வெரிஃபை செய்யவேண்டும். கையெழுத்துப் போட்ட வன் ஓட்டுப் போட்டானா? ஓட்டே போடாமல் வீட்டிலே உட்கார்ந்து கொண்டு விட்டு, யாரோ ஓட்டுப் போட்டு, யாரோ தேர்தலில் வெற்றி பெற்று வந்தவர்களை திரும்பி வா என்று சொல்வதற்கு இவனுக்கு என்ன உரிமையிருக்கிறது? அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

100 சதவீதம் எந்தத் தொகுதியிலும் வாக்குப் பதிவு ஆவதே கிடையாது. அந்த அளவுக்கு நாடு முன்னேறவும் இல்லை. ஜனநாயகத்தை பயன்படுத்தவே இல்லை. அந்த நிலைமையிலே தேர்தலிலே வாக்களிக்காத ஒருவன் கை

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1987 மே 11

யெழுத்துப் போட்டுக் கொடுத்தால்கூட 25 சதவீதம் இது செல்லுமேயானால் இது சட்டத்திற்குச் சரியாக வராது என்பதை இங்கே உள்ள, சட்டமன்றத்தில் உள்ளவர்கள், சட்ட அமைச்சர் அவர்கள் எல்லாம் சிந்தித்துப் பார்த்தார்களா என்று கூட எனக்குத் தெரியவில்லை. ஆகவே, இப்படி அவசர, அவசரமாக, அவசரக் கோலத்திலே ஒரு சட்டத்தை உருவாக்கி..............

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ரெஃபரண்டத்திற்கும் அந்த 30 சதவீதம் பேர் வரமாட்டார்கள். ஆகவே, அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : A man who has not voted for me at all has no right to recall me. Again, if you go into the question whether he has actually voted, then, you are violating the secrecy of the ballot. இரகசியமாகப் பாதுகாக்கப்பட வேண்டும் ; ஓட்டுப் போட்டவன் என்று சொல்லி விட்டு, ஓட்டுப்போடாதவன் எப்படி.......

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு சௌரிராஜன் அவர்களுக்கு விளக்கம்தான் சொன்னேன். அவர் வேகப்படவேண்டாம். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், அந்தத் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். He represents the electorate. Whether he has voted for you or not is a different thing. He represents the electorate. அதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடித்து விடுங்கள்.

டாக்டர் கே. சௌரிராஜன் : முடித்து விடுகிறேன்.

The point which I want to highlight is this. A person who has not even voted in an election and who has not participated in an election will also come and sign and will become a signatory for recalling me. Such a person has no right at all to recall me. இப்படிப்பட்ட ஒரு சிக்கலான நிலைமையை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதற்காகத் தான் இந்தக் குழப்பத்திலுள்ள இந்தச் சட்டத்தை முரண்பாடுகள் என்று சொன்னார்கள்; முரண்பாடு அல்ல; மிக குழப்பமான ஒரு சட்டம். It only reflects the immaturity and the inadequate knowledge of law and of actual facts என்பதைச் சொல்லி, இதை ஒரு பொறுப்புக் குழுவிற்கு விடவேண்டும் என்பதை இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் சார்பாக வலியுத்துகிறேன் என்று சொல்லி, அமர்கிறேன், நன்றி வணக்கம்.



1987 மே 11]

(பிற்பகல் 5–10)

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் உணவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவின்மீது ஆட்சிக் கட்சியின் சார்பாக நான் ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க முன்வருகிறேன்.

இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற விவாதங்களை எண்ணிப் பார்க்கிறபோது திருவள்ளுவர் அவர்கள் நமக்கு எடுத்துச் சொன்ன

" தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும் "

என்ற திருக்குறள்தான் நமக்கு நினைவுக்கு வருகிறது. இந்தச் சட்ட முன்வடிவு எதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். வதந்திகள், வயிற்றெரிச்சல்கள், அவதூறுகள் இவைகளையெல்லாம் வடிகட்டி—பில்டெர் செய்து—சமுதாயத்தில் பணியாற்றுகிறவர்களைக் காப்பாற்றக் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவு— மீண்டும் சொல்லுகிறேன், வதந்திகள், வயிற்றெரிச்சல்கள், அவதூறுகள் ஆகியவற்றிலிருந்து அவைகளையெல்லாம் வடிகட்டி பில்டெர் செய்து— காப்பாற்ற இந்தச் சட்டம்—இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது பன்னாடை என்றெல்லாம் கூட குறிப்பிட்டார்—அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதையெல்லாம் வடிகட்டி, சமுதாயத்திற்குத் தொண்டு செய்ய வந்தத் தலைவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகக் கொண்டு வந்திருக்கும் சட்டம் இது..................

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அவர்கள் பொன்னாடை என்றுதான் சொன்னார்கள்........

டாக்டர் கே. சமரசம் : ஆக அவர்களைக் காப்பாற்றக் கொண்டு வரப்பட்ட ஒரு அருமையான சட்ட முன்வடிவே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பலமுறை புடம் போட்டு எடுத்தால் பத்தரைமாற்றுத் தங்கம். பல சோதனைகளுக்கு உட்பட்டு வெற்றி பெற்றால் அவள் பத்தினி தங்கம் என்பதை தமிழ்நாடு நன்கு அறியும்—தமிழ்நாட்டின் இலக்கணம் இது. எனவே, அரசியல்வாதிகளுக்கு சில இலக்கணங்களை நாம் வகுக்கிறோம். அப்படி வகுக்கிறபோது— இது போன்ற சட்ட முன்வடிவுகளை வகுக்கின்றபோது—உண்மையிலேயே அஞ்ச வேண்டியவர்களே ஆட்சிக் கட்டிலிலே இருப்பவர்களே தவிர எதிர்க் கட்சியினர் எதிர்ப்பது என்பது உலக அதிசயம்தான். ஏனென்றால் ஆட்சிக் கட்சியில் இருப்பவர்கள் தான் தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள். கற்பனைக்கு ஆளாகிறார்கள். திரைப்படங்களுக்கான கருப்பொருளுக்கு ஆளாகிறார்கள். எனவே, ஆட்சிக் கட்சியில் இருப்பவர்கள் அஞ்சாத நிலையில் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எதிர்ப்பது என்பது ஒரு உலக அதிசயமாகும்.

[டாக்டர் கே. சமரசம்] [1987 மே 11

இன்னொன்று, ஏதோ உள்ளாட்சித் துறையின் எல்லா இடங்
களும் எதிர்க்கட்சிகளுக்கே வந்து விட்டதைப்போல் எண்ணிக்
கொண்டு ஆளுகிற இடத்திற்கு உள்ளாட்சித்துறையில் நாங்களே
வந்துவிட்டோம் எனவே, எங்களை ஒழிக்க, அடியோடு விரட்ட,
நாங்கள் அங்கே இருக்கக் கூடாது என்பதற்காக இந்தச் சட்ட முன்
வடிவைக் கொண்டு வந்திருக்கிறது இந்தஅரசாங்கம் என்பதெல்
லாம் வெறும் '' மாய்மால '' வேலையே தவிர உண்மையல்ல.
காரணம் கணக்கை எடுத்துப் பாருங்கள். யார் எவ்வளவு இடத்
தில் இருக்கிறோம் என்கிற விளக்கம் உங்களுக்கே தெரியும்.
ஆகவே இங்கே ஒருவர் பேசுகிறபோதுகூட சொன்னார். ஏதாவது
ஒரு உள்ளாட்சித் தலைவர் தவறு செய்தால் அந்தக் கட்சியின்
தலைவருக்கே நீங்கள் சொன்னால் அவரே அந்தத்தவறு செய்யும்
உள்ளாட்சித் தலைவரை திரும்ப அழைத்துக் கொள்ளலாமே
என்றார். இங்கே ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு கொள்கை
இருக்கிறது. அந்த கொள்கையின் அடிப்படையில் பிரதிநிதிகள்
வருகிறார்கள். உதாரணத்திற்கு கொள்ளை அடிப்பது, கொலை
செய்வது என்பது ஒரு கலை என்று ஒரு கட்சியின் சார்பில் வருகி
றார்கள் என்று வைத்துக் கொள்வோம். அல்லது வேறு ஒரு
இயக்கத்தைச் சார்ந்தவர்கள் வருகிறார்கள் என்று வைத்துக்
கொள்வோம். இந்து என்று சொல்லிக்கொண்டு, அல்லது முன்னணி
என்று சொல்லிக் கொண்டு அல்லது சுயேச்சைகள் என்று சொல்
லிக் கொண்டு இங்கே பிரதிநிதிகளாக வந்துவிட்டால் அவர்களுக்
கெல்லாம் எந்தத் தலைவர்கள் இருக்கிறார்கள்? எங்கே
போய் சொல்லி இவர்களுக்குத் தீர்வு காண முடியும் என்பதை
எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே அது நடைமுறைக்கு உதவக்
கூடியது அல்ல. மேலும் இது கட்சிப் பிரச்சினையே அல்ல. இது
ஆட்சிப் பிரச்சினை. மக்கள் பிரச்சினை, சமுதாயப் பிரச்சினை
ஆகும். சமுதாயத்தைக் கட்டிக் காக்க, மக்கள் பிரச்சினை
களைக் கட்டிக் காக்க, நடைமுறைகளை வலியுறுத்த இந்தச் சட்ட
முன்வடிவு இன்றைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது.
அந்த அடிப்படையில்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

சட்ட மறுப்பு இயக்கம், சட்ட எரிப்பு இயக்கம் என்று நடத்து
கிறவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களிடம் போய் சட்டப்
படி குற்றம் செய்திருக்கிறார்கள், எனவே, நீங்கள் நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்றால் நடவடிக்கை எடுப்பார்களா? அது
நடக்குமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். முரண்பாடு,
உடன்பாடு எல்லாம் எங்கே இருக்கிறது என்பதை விவரம் தெரிந்
தவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கி
கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். வரவேற்பு எல்லோருக்
கும் கொடுக்கிறார்கள். யார் யாருக்கு விருப்பமோ அவர்கள்
கட்சிக்கு அல்லது பொதுவாக இருக்கிற எந்த ஒரு துறையில் இருப்ப
வர்களுக்கும், தங்களுக்கு விருப்பம் உள்ளவர்களுக்குக் கொடுக்க
வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதிலே யாரும் கை வைக்கவில்லை.
ஆனால் திட்டங்களைத் துவக்குபவர்கள் அவர்கள்தான் என்றால்



1987 மே 11] [டாக்டர் கே. சமரசம்]

மக்கள் என்ன நினைப்பார்கள்? எந்த அரசாங்கம் நடக்கிறது?
யார் பணம் ஒதுக்குகிறார்கள்? யார் வந்து திறந்து வைப்பது?
ஜோசியக்காரன் இந்த வீட்டில் ஆண்
வழியில் செல்லுகிற ஜோசியக்காரன் இந்த வீட்டில் ஆண்
குழந்தை பிறக்கும் என்று சொல்லலாம். அப்படி ஜோசியம் சொல்
வதற்குத்தான் அவன் வரலாமே தவிர அந்தக் குழந்தைக்கு நான்
தான் தகப்பன் என்று சொன்னால் அது எவ்வளவு முட்டாள்
தனமாக இருக்குமோ அந்த அளவுக்குத்தான் முட்டாள்தனமாக
இருக்கும் யாரோ நிறைவேற்றுகிற திட்டங்களையெல்லாம் நான்
துவக்கி வைக்கிறேன் என்று சொல்வது. அப்படிப்பட்டவர்களுக்கு
வரவேற்பு கொடுத்து திட்டங்களைத் துவக்க வேண்டும் என்று
சொல்லுகிற நிலையும் அப்படித்தான் இருக்கும் என்று நான்
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். 25 சதவீத
வாக்காளர்கள் புகார் செய்தால் விசாரணை நடத்தலாம் என்
பதைக்கூட மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மாண்புமிகு
அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.
காரணம், இது தேவையற்ற பிரச்சினை (மணியடிக்கப் பெற்றது).

ஒரு தொகுதியில் ஒரு இலட்சம் வாக்காளர்கள் இருக்கிறார்கள்.
அந்தத் தேர்தலில் 4 பேர் போட்டியிடுகிறார்கள். 65 சதவீதம்
பேர் வாக்காளர்கள்தான் வாக்களிக்கிறார்கள் என்று வைத்துக்
கொள்வோம். அதில் 5,000 வாக்குகள் இன்வாலிட் என்றால்
60,000 வாக்குகளை 4 பேர் பெறுகிறார்கள். ஆளுக்கு 15,000
வாக்கு என்று வைத்துக் கொள்வோம்.

ஒருவர் மட்டும் 15,200 வாங்கியிருந்தால் 15 சதவீதம் பேர்
வாக்குகளைப் பெற்று அவர் வெற்றி பெற்றார் என்று அறிவிக்கி
றோம். அப்படி இருக்கும்போது 25 சதவீத மக்கள் புகார் கொடுத்
தால்தான் விசாரிக்க வேண்டும் என்று சொல்வதன் அவசியம்
என்ன? அவருடைய பதவிக் காலத்தில் எந்தக் குற்றத்திற்கு
ஆளாகிறாரோ, பதவிக் காலத்தில் எந்தப் புகாருக்கு ஆளாகி
றாரோ எந்தப் பதவிக் காலத்தில் பொதுமக்களிடம் எப்படிப்
பட்ட புகார் மனு பெறப்படுகிறதோ அந்த அடிப்படையில்
விசாரித்து தீர்ப்பு அளிக்கக்கூடிய வகையில் இருந்தாலே போதும்.
அதுவே சாலச்சிறந்தது என்று இந்த நேரத்தில் சொல்லிக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே ஒருவர் பேசுகின்றபோது, அ.தி.மு.க. அரசாங்கம்
அசுரர்களை வெட்டிக் கொண்டிருக்கிறது, அப்படிப்பட்ட சூழ்
நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்.
இது ஒரு இராட்சசன் என்று சொன்னார். உலக விதிக்கு தேவர்,
அசுரர் இரண்டும் ஒன்றுதான். யாராக இருந்தாலும் நன்மை
செய்பவர்கள் நன்மை அடைவர், தீமை செய்தால் தீமையை
அடைவார்கள். இதிலே தேவர், அசுரர் என்று கிடையாது.
இராவணக் காவியத்தைப் படைக்க வேண்டும் என்று சொன்னால்
அதற்கு அரசாங்கம் எப்போதும் தயாராக இருக்கிறது.
வேறு எந்த நிலையிலும் இல்லை, பொது மக்களை பொது

வாழ்க்கைக்கு வந்தவர்களை, சமுதாயத்தில் பாடுபட வந்தவர்களை காப்பாற்ற வந்துள்ள இந்தச் சட்டத்தை ஆட்சிக் கட்டிலின் சார்பாக வரவேற்று அமைகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலே இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவின் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசியகாங்கிரஸ் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்ட திருத்தங்கள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சட்டமுன்வடிவின்மீது விவாதம் நடைபெறுகின்ற இந்த நாள் இந்திய ஜனநாயகத்தில் ஒரு முக்கியமான நாளாக நான் கருதுகிறேன். வேறு எந்த சட்ட மன்றங்களிலோ, பாராளு மன்றத்திலோ இல்லாத ஒரு தீர்மானத்தை இன்றைக்கு தமிழ்நாடு சட்டமன்றம் விவாதித்துக் கொண்டிருக்கிறது. '' ரைட் டு ரீகால்' என்று சொல்வது, திரும்ப அழைக்கின்ற உரிமை என்ற சொற்றொடர் காதுக்கு வேண்டுமானாலும் நன்றாக இருக்கலாமே தவிர காரிய சாத்தியமாக இருக்குமா என்று எண்ணிப் பார்த்தால், இல்லையென்றுதான் என்னாலே சொல்ல முடிகிறது. திரும்ப அழைப்பது என்பது ஒரு நல்ல ஜனநாயக தத்துவம். பொறுப்பிலே இருக்கிறவர்கள் நேர்மையானவர்களாக, தூய்மையானவர்களாக, நல்லவர்களாக, வல்லவர்களாக மக்களுக்கு நல்ல பணியாற்றுபவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமே. ஆனால் அதே நேரத்தில் Caeser's wife must be abo ve su picioı. என்று சொல்லுவார்கள். அதைப் போலவே பொது வாழ்க்கையில் உள்ளவர்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லுவதும், பல்வேறு தவறுகளுக்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பதிலும் நியாயம் இருக்கிறது.

ஆனால் சட்டமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவு உள்ளாட்சி மன்றங்களில் பிரதிநிதித்துவம் வகிக்கின்றவர்கள் தவறு செய்தால் அவர்களைத் திரும்ப அழைப்பதற்கு வகை செய்யும் மசோதாவாக இருக்கிறது. இந்த வரிசையில் பேசிய பல்வேறு உறுப்பினர்கள் சொன்ன கருத்தைப் போலவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இல்லாத ஒரு நிலை உள்ளாட்சி மன்றங்களின் பொறுப்பிலே இருக்கின்றவர்களுக்கு ஏற்படுத்துகிற நிலை இந்த மசோதாவின் மூலம் ஏற்படுகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். உள்ளாட்சி நிறுவனங்களின் பொறுப்பிலே இருக்கின்றவர்கள் தவறு செய்தால், அப்படி தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க உள்ளாட்சி மன்றச் சட்டம், நகராட்சி மன்றச் சட்டம் ஆகியவற்றில் விதிகளில் அதிகாரம் இருக்கிறது. நம்முடைய சட்ட மன்றத்திலே இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் நிறைவுபெறும் இந்த நாளில் இந்த மசோதாவை இவ்வளவு அவசர அவசரமாக கொண்டு வரப்படுவதன் அவசியம் என்ன ஏற்பட்டிருக்கிறது? இரண்டு





மாதங்களாக சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்
போது முன்னதாகவே அறிவிப்புகள் கொடுக்கப்பட்டிருந்தால்
சம்பந்தப்பட்டவர்களுடைய கருத்துக்களை அறிவதற்கு நமக்கு
வாய்ப்பு இருந்திருக்கும். மாண்புமிகு அவைத் தலைவர்
அவர்களே, நாடாளுமன்றத்திலே ஒரு சட்டம் வருகிறது
என்றால், நாடாளுமன்றத்திலே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி
ஒரு நடவடிக்கை எடுக்கிறது என்று சொன்னால்....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
உள்ளாட்சி மன்றத் துறைக்கான மானிய விவாதம் நடைபெற்ற
போது மாண்புமிகு உறுப்பினர் இல்லையென்று நினைக்கிறேன்.
அப்போதே பதில் சொல்லுகிறபோது, இதைப் போல திரும்ப
அழைக்கிற உரிமையைக் கொடுக்கிற சட்டம் பரிசீலனையில்
இருக்கிறது என்று சொன்னேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அவைத் தலைவர்
அவர்களே, பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்,
ஒத்துக்கொள்கிறேன். இந்த விவரங்களை முன்னாலேயே
கொடுத்திருக்கலாமே. முன்னாலேயே அறிவிப்புக் கொடுத்திருந்
தால் இதைப் பற்றி சம்பந்தப்பட்டவர்களை விசாரிக்க நமக்கு
வாய்ப்புக் கிடைத்திருக்கும். நாடாளுமன்றத்திலே சட்டத்
திருத்தத்தைக் கொண்டு வரும்போது எதிர்க் கட்சியில் உள்ள
தலைவர்களை அழைத்து நாடாளுமன்றத் துறையின் அமைச்ச
ரோ அல்லது பிரதம அமைச்சரோ கலந்து பேசி அதற்குப் பிறகு
ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கி மசோதாக்கள் கொண்டு
வரப்படுகின்றன என்று நான் கேள்விப்படுகிறேன். அப்படிப்
பட்ட முறையை தமிழகத்திலே நாமும் கொண்டு வந்தால் எதிர்க்
கட்சி சார்பில் கருத்துக்களைப் பெற்று, கிட்டத்தட்ட எல்லோ
ருக்கும் ஒத்த கருத்தாக வைத்து சட்ட முன்வடிவைக் கொண்டு
வந்தால் இந்தச் சட்ட முன்வடிவை விவாதிப்பது எளிதாக இருக்
கும். அரசாங்கம் வருகிற காலத்திலேயாவது இதை கவனத்
திலே கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5—20)

இன்னொரு கருத்து நான் சொல்ல விரும்புவது, இங்கே இந்தக்
காரண காரிய விளக்கத்திலே ஒரு வரியைப் பார்க்கிறேன். பதவி
யிலிருந்து திரும்ப அழைப்பதற்கான முடிவானது வாக்காளர்
களாலே செயல்படுத்த வேண்டுமென்று முடிவு செய்யப்பட்
டுள்ளது என்று சொல்லுகிறார்கள். எந்த வாக்காளர்களால்
முடிவு செய்யப்பட வேண்டுமென்று காரண காரிய விளக்கத்தில்
சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த வாக்காளர்களைக் கேட்காமல்
இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதிலே நாம் முனைந்திருக்
கிறோமே, இது நியாயம்தானா? இது என்ன ஜனநாயகப்
படுகொலை என்று நான் கேட்க விரும்புகிறேன். எங்கள் கட்சி
சார்பிலே கொடுக்கப்பட்டுள்ள திருத்தத்திற்கு இதுதான்
அர்த்தம். பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டும் அல்லது
மக்களுடைய கருத்துக்களை அறிய வேண்டுமென்று சொல்லு

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மே 11

வதன் முக்கிய நோக்கமே யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ
அந்த வாக்காளர்களுக்கு முன்னாலே தெரிவித்து, அவர்
களுடைய கருத்தை தெரிந்த பின்பு, இதை நிறைவேற்ற முயற்சி
எடுத்தால் அது நல்லதாக இருக்கும் என்ற கருத்தைத்தான் இந்த
நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு உள்ளாட்சி
மன்றங்களுக்குத் தேர்தல் நடந்து கிட்டத்தட்ட ஓராண்டு, மூன்று
நான்கு மாதங்கள் ஆகின்றன. இதிலே 6 மாதங்களுக்குப் பிறகு
திரும்ப அழைக்கும் உரிமையைக் கொண்டு வரலாம் என்றால் 6
மாதங்களுக்குப் பின்னாலே ஒரு மாதம்கூட, ஒரு உள்ளாட்சி
மன்றம் கூட சரியாக நடக்காது என்பது என்னுடைய தெளிவான
கருத்து.

இன்னும் சொல்ல வேண்டுமானால் உள்ளாட்சி மன்றங்
களிலே தேர்தல் நடக்கும்போது தலைவர் தேர்தலுக்கு போட்டி
யிட 5 அல்லது 10 வேட்பாளர்கள் இருக்கிறார்கள். அப்படி
வேட்பாளர்கள் இருக்கும் நேரத்தில், ஒருவர் மட்டும் குறைந்த
வாக்கு வித்தியாசத்தில், எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்
குறிப்பிட்டதுபோல, வெற்றி பெற்றுவிடுகிறார். ஆகவே,
அவருக்கு எதிரான வாக்குகள் நிறைய இருக்கும் சூழ்நிலையிலே
இன்றைக்கு 25 சதவிகிதம் வாக்காளர்கள் கையெழுத்துப்
போட்டுக் கொடுத்தால் போதுமென்று சொன்னால், எப்படி
அவர் பதவியில் இருக்க முடியும்? இன்னும்கூட எண்ணிப் பார்க்
கிறேன், 25 சதவிகிதம் வாக்காளர்கள் கையெழுத்துப் போட்
டால் போதும் என்ற முறை வந்தால், அது இந்த அவையிலே
உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வருகிறதென்றால்,
யாருமே உறுப்பினராக இருக்க முடியாது என்ற நிலை வருகிறது
என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டு
கொள்கிறேன். 25 சதவிகிதம் வாக்காளர்களிடம் கையெழுத்து
வாங்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். நம்முடைய நாட்
டிலே படிக்காதவர்கள் எண்ணிக்கை நிறைய இருக்கிறது. மொத்த
வாக்காளர்களில் மிக அதிகமான வாக்காளர்கள் படிக்காதவர்
களாக இருக்கிற காரணத்தால், வாக்குச் சீட்டிலே கூட வாக்
காளர் பெயரோடு சின்னத்தைப் போட்டு, சின்னத்திற்கு வாக்கு
போடுங்கள் என்று சொல்லுகிறோம்.

ஆக அத்தகைய சூழ்நிலையிலே எத்தனை வாக்காளர்கள்
இதைப் புரிந்துகொண்டு கையெழுத்திடுவார்கள்;
கையெழுத்திட்டால் அவருடைய கையெழுத்துதானா என்று அப்படி
அட்டெஸ்ட் செய்வது யார்? அல்லது கைரேகை பதிக்கப்படு
மானால் அதற்கு யார் சர்ட்டிபிகேட் கொடுப்பது? இப்படிப்
பட்ட பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. ஆகையால்தான் இந்த
மசோதாவைக் கொண்டு வருவதிலே அவசரம் காட்டக் கூடாது
என்று இந்த வரிசையிலிருந்து சொல்லுகிறோம் என்பதைத்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1987 மே 11] [திரு. என். எஸ். வி. சித்தன்]

இந்த மன்றத்திலே பல்வேறு நாடுகளைப் பற்றிச் சொன்
னார்கள். உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளிலே, ஜனநாயகம்
முன்னணியில் இருக்கும் நாடுகளிலேகூட திரும்ப அழைக்கும்
உரிமை இருக்கிறதென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நாடு
களிலேகூட திரும்ப அழைக்கும் முயற்சி வெற்றி பெறவில்லை.
ஏதோ ஒன்றிரண்டு உதாரணங்களைத்தான் சொல்ல முடியும்.
முழுமையாக வெற்றி பெற்றதாகச் சொல்ல முடியாது. அப்படி
யும்கூட எண்ணிப் பார்க்கிறேன். அந்த நாடுகளிலேகூட நாடாளு
மன்றம் அல்லது சட்டமன்றத்திலிருந்து திரும்ப அழைக்கும்
உரிமைதான் இருக்கிறதே தவிர ஜனநாயக ஆணிவேர்களாக உள்ள
உள்ளாட்சி மன்றங்களிலே—கவுன்டீஸ் என்று சொல்லுவார்கள்
—திரும்ப அழைக்கும் முறை இல்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவ
ரவர்களே, கவுன்டீசுக்குத்தான் இருக்கிறது. பெரும்பாலும்
அவர்கள் பயன்படுத்துவதும் கவுன்டீசுக்குத்தான்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, அந்த நாடுகளிலே இருந்தாலும்கூட, நம்முடைய
நாட்டுக்கு அது பொருந்தாது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.
இப்படி இந்த மசோதாவிலே அரசாங்கம் அவசரம் காட்டக்
கூடாது என்று திரும்ப வலியுறுத்த விரும்புகிறேன். இப்போது
தேர்தல் நடைபெறுகிறதென்று வைத்துக் கொள்வோம். ஒருவர்
வெற்றி பெறுகிறார். 3 மாத காலம், 6 மாத காலம், 1 வருட
காலம் அந்தத் தேர்தல் பகை இருந்து கொண்டிருக்கிறது. பின்
னாலே கோபங்கள், மாச்சரியங்கள் எல்லாம் தளர்ந்து, மறைந்து
நீர்மீது எய்த வடுப்போல மாறுமே சான்றோர் சினம் என்று
சொல்லுவார்களே, அதைப்போல பின்னாலே ஒருங்கிணைக்கக்
கூடிய, ஒற்றுமையாகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால்
இன்றைக்கு 25 சதவிகித வாக்காளர்கள் கையெழுத்து போட்டு
திரும்ப அழைக்கலாமென்றால், அந்த முறை வருமானால்,
சண்டை, சச்சரவு நிரந்தரமாக இருக்கும். தேர்தல் காலத்தில்
ஏற்பட்ட சண்டை மாச்சரியங்கள் மறையாமல் தொடர்ந்து
இருக்கும் முறையில்தான் வாய்ப்புகள் இருக்கும் என்பதைச்
சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல இன்னும் பயப்படுவது, இங்கே அதிகாரங்கள்—
நிர்ணயிப்பது, கையெழுத்து போடுவது—எல்லாம் மீண்டும் அதி
காரிகள் கைக்குப் போகிறது. ஏற்கனவே இருக்கும் அதிகாரங்கள்
உள்ளாட்சி மன்றங்களிலே குறைக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு
கல்வி இல்லை, கூட்டுறவு இல்லை, விவசாயம் இல்லை. ஆக,
மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கும் நாம்
உள்ளாட்சித் துறை அதிகாரங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக
பறித்துக் கொண்டிருக்கிற நிலையில், இருக்கும் கொஞ்சநஞ்ச
அதிகாரமும் போகுமானால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட
பிரதிநிதிகள் என்ன நன்மை செய்ய முடியும் என்பதை இந்த
நேரத்தில் கேட்க விரும்புகிறேன். அதைப்போலவே இன்றைக்கு

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மே 11

இந்தத் துறையிலே போட்டியிடுகின்றவர்களைப் பொறுத்த
அளவில், நலிந்தோர்களுக்கும் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு
செய்ய வேண்டுமென்று இந்தச் சட்டமன்றத்திலே சொன்னோம்.
அது இன்றைக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது. பக்கத்தி
லுள்ள ஆந்திர, கர்நாடக மாநிலங்களிலே எல்லாம் மிக
நல்ல முறையிலே அந்த வாய்ப்புகளை அளித்து, இந்தத்
தேர்தல்களை நடத்தியுள்ளதாக அறிகிறோம்.

மக்கள் மத்தியிலே ஒரு காம்ப்ரிஹென்சிவ் ஸ்கீம் என்று
சொல்லக்கூடிய அளவில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அதன்
மூலம் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்று
கேட்டுக்கொண்டு, நம்முடைய பக்கத்திலே எதிர் வரிசையிலே
பெரும்பாலும் அனைத்துக் கட்சிகளுமே இந்த சட்ட
முன்வடிவைக் கொண்டு வருவதிலே அவசரம் தேவையில்லை.
அந்த பொறுப்பிலே உள்ளவர்கள் வாக்காளர்கள் அத்தனை
பேர்களுக்கும் அறிய செய்யவேண்டும், இதை பொறுக்குக் குழு
விற்கு வைக்கவேண்டும் என்ற கருத்தை வைத்திருக்கின்றார்கள்.
அது ஒரு நியாயமான கோரிக்கை. அரசாங்கம் ஏற்றுக்கொள்வத
னாலே அரசாங்கத்தினுடைய பெயருக்கு எந்தவிதமான
இழுக்கும் வந்துவிடப்போவதில்லை. இன்னும் கொஞ்சம் நல்ல
முறையிலே சுற்றுக்கு அனுப்புவோமானால் மக்களுடைய கருத்
துக்களை நாம் சரிபார்த்து, அந்த மக்களுடைய கருத்துக்களை
ஏற்றுக்கொண்டு செய்யலாம். டாக்டர் சமரசம் அவர்கள்
ஒரு யோசனை சொன்னார்கள். எப்படி? அவர்களுடைய
கருத்துக்கள் வந்தால், இன்னும் நல்ல முறையிலே நிறை
வேற்றுவதற்கு, இந்த சட்ட மசோதா வருவதற்கு உறுதுணை
யாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகையால்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்திலே
பொறுக்குக் குழுவிற்கு விடப்படும் என்ற நல்ல செய்தியை அறி
விக்க வேண்டும் என்று சொல்லி காங்கிரஸ் கட்சியின் சார்பில்
கொடுக்கப்பட்டிருக்கின்ற திருத்தங்களை வலியுறுத்தி அமரு
கிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை சம்பந்த
மான மூன்று சட்ட முன்வடிவுகள் அவை முன் விவாதத்திற்கு
எடுத்துக்கொள்ளப்பட்டு பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்
களும் தங்களது மேலான கருத்துக்களை எல்லாம் எடுத்துச்
சொல்லியிருக்கின்றார்கள். அதிகமாக இதிலே சூட்டை
ஏற்றுவதைவிட ஒளியைக் கொடுப்பது கொஞ்சம் பொருத்த
மாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்த சட்ட முன்வடிவுகளை
ஒட்டு மொத்தமாக பார்க்கிறபோது, ஒரு அடிப்படை கண்
ணோட்டத்தை இந்த மன்றம் பெறவேண்டுமென்று விரும்பு
கிறேன். இந்த சட்டமுன்வடிவுகள் இன்றைக்குள்ள சூழ்
நிலைகளுக்காக கொண்டுவரப்படவில்லை. அரசியல் கட்சிகள்
உள்ளாட்சி மன்றங்களில் போட்டியிட்டு தேர்தல் மூலம் இன்றைய
தினம் பல்வேறு பொறுப்புக்களை பெற்றிருக்கின்றார்கள்.



1987 மே 11] [திரு. ச. இராமச்சந்திரன்]

ஆகையினால் அரசியல் கட்சிகள் என்கின்ற அடிப்படையிலே இது
நோக்கப்படவில்லை. அரசியல் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டு
நிர்வாகம் என்ற பொது நோக்கோடு இதை பார்க்கவேண்டிய
வர்களாக இருக்கிறோம். அடுத்து இங்கே தேவர்கள், அசுரர்கள்,
இராட்சதர்கள் எல்லாம் பற்றி சொன்னார்கள். அதையெல்லாம்
நான் நம்புவதில்லை. வாழ்க்கையில் நல்லது கெட்டது என்று
உண்டு. வாழ்கின்றவர்களில் நல்லவர்கள் கெட்டவர்கள்
என்று உண்டு. ஆகையால் நிர்வாகத்திற்கு வருகின்ற நல்ல
வர்கள் ஊக்கப்படுத்தப்படுவதிலேயும், கெட்டவர்கள் கெடுதல்
செய்யாமல் தடுக்கப்படுவதிலேயும் இந்த சட்ட முன்வடிவுகள்
அமையவேண்டும். ஆகவே இந்த சட்ட முன்வடிவுகளை நோக்கு
கிறபோது, ஒன்று தமிழகத்திலே இருக்கக்கூடிய உள்ளாட்சி
நிறுவனங்களுக்கு இது பொருத்தமா என்று பார்ப்பது.
இன்னொன்று கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு மக்களுக்கு
நன்மை செய்கின்ற அளவுக்கு உள்ளாட்சி மன்றங்கள் இயங்
குமா என்று பார்க்கவேண்டும். மூன்றாவது நல்லவர்களுக்கு
இதிலே ஏதாவது கெடுதல் செய்திருக்கிறார்களா என்று
பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கிறபோது, நான் ஒவ்
வொன்றாக குறிப்பிட விரும்புகிறேன். முதலாவதாக நகர
மன்றங்களைக் கலைப்பதற்கு நிதி நெருக்கடியைக் காரணம்
காட்டலாமா என்று ஒரு கேள்வி எழுப்பப்பட்டது.

''ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை''

மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமது அவர்கள் சொல்கின்ற
போது நல்ல செந்தமிழிலே சிறப்புரையாற்றினார்கள். திரு
திருவள்ளுவர் அவர்கள் சொல்கின்றார் 'வருகிற வழி சின்னதாக
இருந்தாலும் பரவாயில்லை, போகிற வழி மிகவும் பெரிய
தாக, அகலமாகப் போய்விடக்கூடாது' என்று சொன்னார்கள்.
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இதே கருத்தை இன்
னொரு விதமாக சொல்வார்கள். மாதத்திற்கு 10 ஆயிரம்
ரூபாய் வருமானம் வந்து 11 ஆயிரம் ரூபாய் செலவு செய்பவன்
ஏழை. நூறு ரூபாய் வருமானம் வந்து 90 ரூபாய் செலவு செய்து
10 ரூபாய் மிச்சம் பிடிப்பவன் பணக்காரன் என்று சொல்
வார்கள். ஆகவே ஊராட்சி மன்றங்கள், நகர மன்றங்
களுக்கு கொடுக்கின்ற பணத்தை செலவு செய்வதை
எப்படி கண்காணிக்கின்றார்கள், எப்படி கவனிக்கிறார்கள்
எப்படி கருத்தை செலுத்துகிறார்கள் என்பதற்காக அது
கொண்டுவரப்படுகிறதே தவிர வேறல்ல. நிதி நெருக்கடி என்று
காரணம் காட்டி நினைத்த நகர மன்றங்களை எல்லாம் கலைப்
பது நமது நோக்கமல்ல. அதேநேரத்தில் நிதி வருவாயைப்
பெருக்காமல் வீண் செலவுகளை, வேண்டுமென்றே உள்ளாட்சி
மன்றங்களிலே இருந்து கொண்டு, அதிலே புகுந்துகொண்டு
செய்வார்களானால் மக்கள் பணம் விரையம் ஆகிக்கொண்டிருக்
கின்றபோது, நாம் வெறுமனே இருக்கமுடியாது. அதற்கு
என்றுதான் இந்த விதி 41(1)-ல் அந்த திருத்தம் மேற்கொள்ளப்
பட்டிருக்கிறது. இச்சட்டப் பிரிவில் போடப்பட்டுள்ள

(பிற்பகல் 5–30)

வார்த்தைகள், அரசியல் சட்டத்தில் 360-வது பிரிவில் எந்த வார்த்தைகளைப் போட்டிருக்கிறதோ, அதே வார்த்தைகளைப் போட்டிருக்கிறோம். மாநில அரசு நிதி நெருக்கடிக்கு ஆளாகும் போது அதைக் கலைப்பதற்கு என்று ஒரு அதிகாரத்தை மத்திய அரசுக்கு கொடுத்திருக்கிறார்கள். அதுபோல்தான் இதுவும். ஆகவே, முதலில் உள்ளாட்சி மன்றங்கள், நகர மன்றங்கள் செவ்வனே நடப்பதற்குச் செலவில் அவர்கள் கண்காணிப்பு வேண்டும், கருத்து வேண்டும் என்பதற்காகத்தான் அந்தப் பிரிவே தவிர, இதை வைத்து நினைத்தபோதெல்லாம் உள்ளாட்சி மன்றங்களைக் கலைப்பதற்கு அல்ல என்ற உறுதியை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நான் இன்னொன்றை சொல்ல விரும்புவது, வருவாயைப் பெருக்குகிற வழி, இங்கே மாண்புமிகு டாக்டர் சௌரி ராஜன் பேசுகிற போது ஒரு கருத்தை நன்றாகச் சொன்னார்கள். வரி விதிப்புமேல் முறையீட்டுக் குழு என்பது தற்போது கவுன்சிலோடு இருக்கிறது. அதனால் பல சங்கடங்கள், அதுவும் குறிப்பாக சொத்து வரியாக இது வருகிறது. நகரமன்றத் தலைவர்களின் நிலைமை என்னவென்றால், ஒன்று பெரும் சொத்து உடையவர்களே நகரமன்றத் தலைவர்களாக வந்து விடுகிறார்கள். இல்லை என்றால், ஆட்டிப்படைக்கின்ற அளவிற்கு நகரமன்றத் தலைவர்கள் அடிமை ஆக்கிக்கொள்வார்கள். அப்படி மீறி நகரமன்றத் தலைவர்கள் செயல்படுவாரானால் அவர்களை எதிர்த்து வீழ்த்துவதற்கு சக்தியை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். உண்மையிலேயே நாம் போட்டிருக்கிற அந்த வரி விதிப்பு மேல் முறையீட்டுக்குழு அத்தகைய நகரமன்றத் தலைவர்களைக் காப்பாற்றும். சென்னை மாநகராட்சியானாலும் சரி, கோவை மாநகராட்சியானாலும் சரி, மதுரை மாநகராட்சியானாலும் சரி, வரி விதிப்பு மேல்முறையீட்டுக் குழு என்பது ஒரு துணை நீதிபதியின் தலைமையில் இயங்குகிறது. இக்குழுவில் அலுவலாளர்கள் இரண்டு பேர்தான். மீதி மூன்று பேர் மக்கள் பிரதிநிதிகள். ஒருவர் நகர மன்றத் தலைவர். இருவர் நகரமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள். ஆகவே, பெரும்பான்மை மக்கள் பிரதிநிதிகளே, ஏன் இரு அலுவலர்களைப் போட்டோமென்றால், சொத்து வரி என்கிற போது ஒரு கட்டடமோ அல்லது ஒரு கடையோ என்றால், அந்த இடத்தின் மதிப்பு வருவாய்த் துறைக்குத்தான் தெரியும். அந்தக் கட்டடத்தின் மதிப்பு பொதுப் பணித் துறைக்குத்தான் தெரியும். எந்த அளவில் அந்தச் சொத்து மதிப்பு வாய்ந்தது என்பதை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அதாவது ''எக்ஸ்பர்ட்டீஸ் நாலெஜ்'' என்று சொல்வார்களே, அந்த நிபுணத்துவத்தைப் பற்றிய தகவல் தருகிற வகையில் தான் அந்த இருவரும் அந்த மன்றத்திற்கு உதவி செய்வார்கள். இன்னும் சொல்லப்போனால், நகர மன்றத்திற்கு வரவேண்டிய வருமானம் பெரும் சொத்து உடையவர்களிடமிருந்து



முறையாக வருவதற்கு இது துணை செய்யும். இன்னும்கூட ஒரு படி மேலே போய் சொல்லப்போனால் நகரமன்றத் தலைவர்கள்கூட நான் என்ன செய்யமுடியும்; ஆர்.டி.ஓ. ஒத்துக்கொள்ளவில்லை, அசிஸ்டென்ட் எஞ்சினியர் ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்லிவிட்டு, மக்களிடத்தில் சென்று தங்களை காப்பாற்றிக்கொள்ள உதவும், அதேநேரத்தில் நகர மன்றத்திற்கு உரிய வருவாயும் வரும் என்கிற காரணத்தால் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நகரமன்றத்திற்கு இது உதவி செய்யும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் இந்த வரி ஏய்ப்பைப் பற்றி சொல்கிறபோது மிகவும் அழகாகச் சொன்னார்கள்: "The real complaint of the public is that while small men are often troubled quite unnecessarily, tax evaders whose assessments run into lakhs, seem to escape." சின்னஞ்சிறு வியாபாரிகள், அல்லது வீட்டுக்காரர்களை பிடித்து கசக்குகிறார்கள். ஆனால் பல லட்ச ரூபாய் வரி கட்ட வேண்டியவர்கள் எப்படியோ தப்பித்துக் கொள்கிறார்கள். மேலும் அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது "The ease with which the most blatant tax evaders seem to be able to manage their affairs undisturbed, has caused a very widespread belief in the impotence of the Government that is pitted against the influential and wealthy people" ஆக செல்வமும், சொல்வாக்கும் நிறைந்தவர்களோடு அரசாங்கம் மோதுகிறபோது அரசாங்கத்திற்கு ஆண்மை இல்லையோ என்ற ஒரு உணர்வுதான் இத்தகைய வரி ஏய்ப்பவர்கள் மூலம் மக்களிடையே ஏற்படுகிறது என்று சொல்லிவிட்டு அறிஞர் அண்ணா அவர்கள் மேலும் சொல்கிறபோது. "Therefore I would like to see some more potency and vitality in the administrative set up." ஆகவே நிர்வாகத்தில் இன்னும் கொஞ்சம் ஆண்மை, இன்னும் கொஞ்சம் சக்தி அதாவது potency and vitality இருக்கவேண்டும் என்றார். சொத்து உள்ளவர்கள் உரிய வரியைச் செலுத்துவதற்கு வழிவகை காணவேண்டுமென்று அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொல்லிய கருத்தின் அடிப்படையில்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மூன்றாவதாக, திருப்பி அழைக்கும் உரிமை திருப்பி அழைக்கும் உரிமை என்பது மிகப் பெரிய தத்துவார்த்த விளக்கமாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் நிச்சயமாக இல்லை. ஒன்றே ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நகராட்சி மன்றங்களிலும், ஊராட்சி மன்றங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் நீக்குவது இல்லையா? அதை நாம் கடந்த காலத்தில் பார்த்ததில்லையா? இன்னும் சொல்லப்போனால் நகரமன்றத் தலைவர்களுக்கு நித்திய கண்டம் பூர்ணாயிசு என்ற நிலைதான் முன்பு இருந்தது. அந்த மன்றத்து உறுப்பினர்களையெல்லாம் சரிக்கட்டிக் கொண்டு போகவேண்டிய மிகக் கஷ்டமான நிலையில் அவர்கள் இருந்தார்கள். அதை மாற்றி, இன்றைய தினம் அவர்களை மக்களே தேர்ந்தெடுக்க வழிவகை

[திரு. ச. இராமச்ச திரன்] [1987 மே 11

செய்திருக்கிறோம். மக்கள் தேர்ந்தெடுக்கின்ற முறையினை அமல் செய்கிறபோது, அந்த மக்களுக்கு அப்படித் தேர்ந்தெடுக்கப் பட்டவர்மீது நம்பிக்கை இல்லையென்றால் அவரைத் திரும்ப அழைக்கிற உரிமையைக் கொடுப்பதில் என்ன தவறு?

ஏற்கனவே 20 நகர மன்ற உறுப்பினர்கள் செய்த காரியத்தை இன்றைக்கு மக்கள் செய்யக்கூடாதா? இதிலே என்ன கம்ப சூத்திரம் இருக்கிறது? இதிலே என்ன கஷ்டம் என்று எனக்கு உண்மையிலேயே தெரியவில்லை. இந்த உரிமை ஏற்கனவே இருந்தது.

மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அரசாங்கத்திற்கு கலைப்பதற்கு அதிகாரம் இருக்கிறது. நீக்கு வதற்கு அதிகாரம் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது என்றால் எந்தக் குற்றச் சாட்டின் அடிப்படையில் நடவடிக்கை என்று அவர்கள் நிரூபிக்க வேண்டும். அதோடு மட்டுமல்ல அது நீதிமன்றத்திற்குப் போக வேண்டும். அப்படி அரசாங்கம் ஏதாவது செய்தால், இப்போது வெறும் சட்டத்திற்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அரசியல் உள்நோக்கம் என்று சொல்கிறபோது, எங்கேயாவது ஒருவர் தவறு செய்துவிட்டால், ஊழல் செய்து விட்டார் என்று ஒருவரை நீக்குமானால், இன்னும் எவ்வளவு சொல்வார்களோ தெரியாது.

மீண்டும் அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதையே நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். Corruption, it is said, is often difficult to p.ove. ஒருவர் தவறு செய்கிறார் அல்லது ஊழல் செய்கிறார் அல்லது பணம் வாங்குகிறார், அல்லது லஞ்சம வாங்குகிறார் என்றால் அதை நிரூபிக்க முடியாது. காற்று அடித்தால் உணரமுடியும், கையில் பிடித்துத்தர முடியாது. அதே போல், மக்களால் உணரமுடியும். இவருக்கு தகுதியில்லை, இவர் தப்பு செய்கிறார், ஆனால் ஒன்றும் செய்யமுடியவில்லையே என்று எண் ணுகிற அந்தநிலையில் விட்டு வைக்கக்கூடாது. ஆகவே உணர்கின்ற மக்கள் திரும்ப அழைக்கும் உரிமையை பயன்படுத் தட்டும் என்று அந்த வகையிலேதான் நாம் இதைச் செய்கிறோம். நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் நல்லவர்கள் நிச்சயமாக இதைக்கண்டு அஞ்ச வேண்டியதில்லை. அவர்களுக்கு பாதுகாப்பு இருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது திரும்ப, திரும்ப எடுத்துச் சொன்னார்கள், இதிலே பாதகம் வரும் என்று. அரசியல் கட்சிக் கண்ணாடியைப் போட்டுப் பார்த் தால் எல்லாம் தப்பாகத்தான் தெரியும். அரசியல் கட்சிகளுக்கு அப்பால் நின்று உள்ளாட்சி மன்றங்கள் செய்யவேண்டிய நிர்வாகத்தைச் செய்கிறபோது நிச்சயமாக 'திரும்ப அழைக்கின்ற உரிமை' என்பது எந்த விதத்திலும் பாதகம் தராது.



1987 மே 11] [திரு. ச. இராமச்சந்திரன்]

[பிற்பகல் 5-40]

அதோடு மட்டும் அல்ல. மாண்புமிகு நாஞ்சிலார் அவர் களுக்குத் தெரியும், ஜனநாயகத்திலே இரண்டு முறைகள் உண்டு. ஒன்று மக்கள் பிரிதிநிதிகள் மூலம் ஆட்சி செய்வது அல்லது சட்டங்களை உருவாக்குவது. இன்னொன்று, தாங்களே நேரடி யாக செய்வது. Right to 1ec ll என்பது D'rect Democ cy ''ரெப்ரசன்டேட்டிவ்ஸ்'' மூலம் செய்வது ரெப்ரசென்டேட்டிவ் டெமாக்ரசி. ஆகவே, இதை அரசாங்கம் அந்த உரிமையை வைத் துக்கொண்டால் குற்றம் சொல்வார்கள். நீங்கள் வேண்டுமென்றே செய்கிறீர்கள் என்று சொல்லலாம். ஆனால் இதைப் பொறுத்த வரையில் நேரடியாக மக்கள் ஆட்சி முறை. அதோடு மட்டுமல்ல. வேட்பாளர்களைப் பொறுத்த வரையில் இது அந்த மக்களுடைய நல்ல எண்ணம் இருக்கிற வரையில் அந்தத் தொகுதிக்கு நல்ல முறையில் பணியாற்றுகிற வரையில் அரசாங்கம் ஆனாலும் சரி, எந்த சக்தியானாலும் சரி, அவர்களை அசைக்க முடியாது. தொகுதியைப் புறக்கணித்து விட்டு, தொகுதி மக்களைப் புறக் கணித்து விட்டு, ஒருவர் தன்விருப்பத்திற்கு காரியம் ஆற்றுவாரே யானால் அப்போதுதான் இது அவர்களைப் பாதிக்கும். அத் தகையோர் நிச்சயமாக அந்தப் பொறுப்பிலேயிருந்து விடுவிக்கப் கப்பட வேண்டியவர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசுகிறபோது எல்லோரும் இன்னொன்றைச் சொன் னார்கள். சட்டமன்றத்திற்கு இப்படிக் கொண்டு வருவீர்களா, நாடாளுமன்றத்திற்கு இப்படிக் கொண்டுவருவீர்களா என்று கேட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவாகள் 1972-ம் ஆண்டு துவக்கியபோதே இந்தக் இயக்கத்தை கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினாலே அன்றைக்கு ஒன்று, இன்றைக்கு ஒன்று என்று சொல்கிற பழக்கம் நிச்சயமாக புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே இல்லை. ஆனால், அதே நேரத்திலே சட்டமன்றத்திற்கும், நாடாளுமன் றத்திற்கும் வந்தபிறகுதான் இங்கே செய்ய வேண்டும் என்பது அல்ல. நம்மால் முடிந்ததை நாம் செய்கிறோம். நம்மால் செய்ய முடியாததை சம்பந்தப்பட்டவர்களிடத்தில் சொல் கிறோம். இதிலே என்ன தப்பு. ஆகையினாலே சட்டமன்றம், நாடாளுமன்றத்திற்கெல்லாம் வருகிற வரையில் நாம் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று நிச்சயமாக நாம் நினைக்க வேண் டியதில்லை.

இன்னொன்றையும் நான் நிச்சயமாக கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ தேர்ந்தெடுக்கப்பட்டஉடன் நேரடியாக நிர்வாகப் பொறுப்புக்கா வருகிறார்கள்? அல்லவே அல்ல. அவர்களுக்கு எங்கே செக் கிழிக்கிற அதிகாரம் இருக்கிறது? மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்னார் கள், 'குடியரசுத் தலைவரை'—யும் 'பிரசிடென்ட்' என்றுதான் சொல்கிறார்கள். ஊராட்சித் தலைவர்களையும்

'பிரசிடென்ட்' என்றுதான் சொல்கிறார்கள்." அவருக்கு இன்னொரு தகவலைச் சொல்ல விரும்புகிறேன். குடியரசுத் தலைவருக்கு 'செக்' கிழிக்கிற அதிகாரம் கிடையாது. ஊராட்சி மன்றத் தலைவர்களுக்குத்தான் 'செக்' கிழிக்கிற அதிகாரம் உண்டு. ஆகையால் அந்த வகையிலே பார்க்கிறபோது மிக உயர்ந்த தலைவர்களாகத்தான் ஊராட்சி மன்றத் தலைவர்கள் காணப்படுகிறார்கள். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அவர்கள் நேரடியாக நிர்வாகத்திற்கு வருகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ அத்தகைய நேரடி நிர்வாகத்திற்கு வருவது இல்லை. ஆனால், அந்தக் காரணத்திற்காக மக்களுக்கு இருக்கிற உரிமை மறுக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாகப் பெற்றிருக்கவில்லை என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். The right to rec.ll இந்த 'திரும்ப அழைக்கும் உரிமை' என்பது .t is neither imp. chment nor conv ct ion by the Judic ary; nor is it an executive ction. There is no stigma attached to it. 'இம்பீச்மென்ட்' என்றால் விசாரித்து செய்த செயலுக்கு தண்டனை கொடுக்கிறோம். ஆனால் இந்த 'திரும்ப அழைக்கின்ற உரிமை' என்பது அப்படி அல்ல. ஊழல் வழக்கு என்றெல்லாம் இங்கே சொன்னார்கள். 'பிரிவின்ஷென் ஆஃப் கரப்ஷன்' என்று சொன்னார்கள். அதை நீதிமன்றம் விசாரித்து தண்டனை கொடுக்கிறது. அதே மாதிரி அரசாங்கமே எக்சிக்யூட்டிவ் அதிகாரத்தைப் பயன்படுத்தி நீக்குகிறது. அதிலே எல்லாம் 'ஸ்டிக்மா' உண்டு. ஆனால், இதிலே 'ஸ்டிக்மா' கிடையாது. அத்தகைய வழக்குகளில் எல்லாம் அவர்கள் தண்டனை பெற்றால், அதன்பின் அவர்கள் எந்தப் பதவிக்கும் போகமுடியாது. இதிலே there is no permanent dis bility. அவர்கள் அடுத்த தேர்தலில் எம்.எல்.ஏ. பதவிக்குக்கூட போட்டியிடலாம். Therefore, there is no permanent dis bility and there is no stigma attached to it. மக்களைப் பொறுத்தவரையில் ஒருவர் தங்களுடைய பிரதிநிதியாக இருக்கத் தகுதியற்றவர், இவர் தங்கள் கருத்தைப் பிரதிபலிக்கவில்லை, தங்களுடைய எண்ணம் போல் செயல்படவில்லை என்று எண்ணுவார்களானால் திரும்ப அழைத்துக் கொள்கிற உரிமை இங்கே தரப்பட்டிருக்கிறதே தவிர வேறு எந்த வகையான நிலைமையும் இல்லை. குற்றச்சாட்டோ, தண்டனையோ, நிரந்தர முடக்கமோ எதுவும் இதிலே இல்லை என்பது நாம் தெளிவாகப் பார்த்தால் புரியும்.

அதோடு மட்டுமல்ல, சட்டமன்றத்திலோ, நாடாளுமன்றத்திலோ ஒரு உறுப்பினர் சரியாக நடக்கவில்லையென்றால், நாடாளுமன்றத்தை விட்டு, சட்டமன்றத்தைவிட்டு வெளியே அனுப்பி விடலாம். அவரை அவ்வாறு வெளியே அனுப்புகிற உரிமை உண்டு. இல்லையென்று சொல்ல முடியுமா? நாடாளுமன்றத்திலே அப்படி வெளியே அனுப்பி விடவில்லையா. The right to expel is therefore the P liment s well as for the Legislature மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கே தெரியும், 10 சட்டமன்ற உறுப்பினர்களை வெளியே வீசி இருக்கிறோம்.





The rightof expulsion is there and it has been upheld by the High Court. அதே மாதிரி உரிமை நகரமன்றத்திற்கு உண்டா? ஊராட்சி ஒன்றியத்திற்கு உண்டா? ஊராட்சி மன்றங்களுக்கு உண்டா? (குறுக்கீடு) உறுப்பினர்களுக்குத் தெரியும் என்று சொன்னேன். நான் பேசுவதை கூர்ந்து கவனியுங்கள். The right of expulsion is n t there for the.. (குறுக்கீடு).

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது there is no stigma attached to it என்று கூறினார்கள். ஆனால், இதிலே, the provision is this ; "The chairman or the councillor who stands recalled under this section shall not be eligible for lection to the office of such chairman or councillor for a period of six years from the date of such declaration under sub-section (3)." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பொறுப்புக்கு வருவதிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பெற்றிருக்கிறார். அடுத்து எம்.எல்.ஏ. எலெக்ஷன் வந்தால் அவர் நிற்கலாம். ஆகவே, இது நீதிமன்றமதின் மூலமோ, மற்ற எவ்வகையிலோ தண்டனை கொடுப்பது போல இல்லை. 'ஹி ஈஸ் கெப்ட் அவுட்'. இதிலே அவ்வளவுதான் சாராம்சம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது சட்டமன்ற உறுப்பினர்கள் நேரடியாக நிர்வாகத்திலே இடம் பெறுவது இல்லை. ஆனால், ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் நகராட்சி மன்றத் தலைவர்கள் நேரடியாக நிர்வாகத்திலே இடம் பெறுகிறார்கள் என்று சொன்னார்கள்.

எனவே இலஞ்சம் போன்ற தவறுகள் செய்வதற்கு வாய்ப்பு என்று சொன்னார்கள். எனவே, அமைச்சர் பொறுப்புகளில் இருந்தால்தான், இலஞ்சம் போன்ற தவறுகளை நிர்வாகக் காரியங்கள் இருந்தால்தான் செய்ய முடியும் என்ற ஒரு தவறான கருத்து வரக் கூடாது என்பதற்காக அமைச்சரவர்களிடமிருந்து ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன். இன்னும் நான் ஒன்றைக் குறிப்பிட்டு அமர்கிறேன். Right of expulsion என்று சொன்னார்கள். இந்தப் பேரவைக்கு right of expulsion பற்றி அவர்கள் சொன்னார்கள். ஒரேயொரு விளக்கம் மட்டும் சொல்லி விடுகிறேன். ஏனென்றால், students of law என்ற முறையிலே ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன். 1964 ஆம் ஆண்டு இதுவரைக்கும் இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனதே கிடையாது. கேசவசிங் வழக்கிலே மிகத் தெளிவான ஒரு .. .. .. ..

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மே 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதிலே பிரச்சினை
இல்லை. அது ஒரு பாசிங் ரிமார்க் தான், வேறொன்றுமில்லை.
(குறுக்கீடு) ஒன்றும் ரிக்கார்டு இல்லை. உலகத்திற்குத் தெரிந்தது
தான். நீங்கள் சொன்னதும் தெரியும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு
தலைவர் அவர்களே, நான் வேறு அடிப்படையிலே
சொன்னேன். அதைப் போல அந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு
இல்லை என்பதற்காக அதைச் சொன்னேன். இந்த கேசைப்
பற்றித் தனியாக நீங்கள் பேசிக் கொள்ளலாம். அது வேறு.
ஆகையினாலே, திரும்ப அழைக்கும் உரிமை என்பது பதவிக்
காலத்தில் தவறு செய்கிறார்கள், நாம் ஒன்றும் செய்ய முடிய
வில்லையே என்று கையறு நிலையிலே இருக்கக் கூடிய வாக்கா
ளர்கள் நினைத்தால் பயன்படுத்தலாம் என்பதுதான். அதுகூட
ஒரு குறிப்பிட்ட பகுதியினர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரண
மாக அல்லது ஒரு குழுவாகச் சேர்ந்து கொண்டு அல்லது ஒரு
தனிப்பட்ட முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினருக்குத்
தொந்தரவு கொடுக்கலாம் அல்லவா என்கின்ற கேள்வி எழ
லாம். அதனாலேதான் நாம் அவர் எந்தத் தொகுதியின் சார்
பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரோ அந்த வாக்காளர்கள்
25 சதவீதம் என்று போட்டோம். மாண்புமிகு உறுப்பினர்
சமரசம் அவர்கள் பேசும்பொழுதும் அதை இங்கே விளக்க
மாகச் சொன்னார்கள். 25 சதவீதம் என்பது, பலபேர்
20 சதவீதத்திலே கூட வெற்றி பெற்றிருப்பார்கள், பல
பேர் நின்றிருக்கக் கூடிய சூழ்நிலையிலே கூட. ஆகையி
னாலே 25 சதவீதம் கையெழுத்துப் போட வேண்டும். அந்த
ஒரு பர்சென்ட் அப்பொழுது கையெழுத்தைப் பார்க்க வேண்டு
மென்பது, it is something like a sample test. இதிலே 25 சதவீ
தத்தையும் போய்ப் பார்க்க வேண்டுமென்பது கூட அல்ல.
இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்றாலும் அரசாங்கம்
அதற்குத் தயாராய் இருக்கிறது. நாங்கள் அதைப் பொறுத்த
வரையிலே திறந்த உள்ளத்தோடு தான் இருக்கிறோம். ஒரு
பர்சென்ட் வேண்டாம், 5 பர்சென்ட் நீங்கள் செக் பண்ண
வேண்டுமென்று சொன்னாலும் நாங்கள் உயர்த்திக் கொள்ளத்
தயார். அது வேறு. இது நடை முறையிலே எப்படி வருகிறது
என்று பார்ப்போம்.

ஆனால் நோக்கம், ஒரு சிலர் சேர்ந்து கொண்டு, தேர்ந்
தெடுக்கப்பட்டவருக்கு எந்தவிதத் தொந்தரவும் செய்யக்
கூடாது என்பதற்காக 25 சதவீதம்—மற்ற நாடுகளிலே கூட 25
சதவீதம் என்று இருக்கிறது. அதோடு மட்டுமல்ல ; அதற்குப்
பிறகு அதிகாரியும் பார்த்து, ஏனென்றால் வேண்டுமென்றே
ஏதேனும் புகார்கள் கொடுப்பார்களேயானால் அந்தப் புகார்
களிலே உண்மையிருக்கிறதா இல்லையா என்று அவரும் பார்க்க
வேண்டும். சம்பந்தப்பட்டவரை அழைத்தும் கேட்க வேண்டும்.
கேட்டு, இரண்டையும் பரிசீலித்து பிறகு, சரி என்று,
உண்மை இருக்கிறது என்று அவர் கருதுவாரேயானால், அந்த



1987 மே 11] [திரு. ச. இராமச்சந்திரன்]

கைய தேர்தலை அல்லது கருத்துக் கணிப்பை நடத்துகின்ற
பொழுது 50—அதாவது பாதிக்கு மேல் அவர் வேண்டாமென்று
சொன்னால்தான் அவர் அந்தப் பதவியிலேயிருந்து நீக்கப்படுவார்.

மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் சொன்னார்கள். நம்
முடைய நாட்டு மக்கள் ரொம்பப் படிக்காதவர்கள். அவர்
களிடத்திலே இதெல்லாம் நடக்குமா? மற்ற நாடுகளிலே
யெல்லாம் படித்தவர்கள் ; ரொம்ப விபரம் தெரிந்தவர்கள்
என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் ஒன்று மட்டும்
சொல்ல விரும்புகிறேன். படிப்பு என்பது ஒன்று. அறிவு
என்பது ஒன்று. படிப்பாளிகளெல்லாம் அறிவாளிகள் என்று
சொல்வதற்கில்லை. அறிவாளிகள் சில நேரங்களில் படிப்பாளி
களாக இருக்கலாம். நம்முடைய நாட்டு மக்கள்— தமிழ்நாட்டை
எடுத்துக் கொண்டாலும் சரி, இந்தியாவை எடுத்துக் கொண்
டாலும்—சரி, அரசியல் ரீதியாகப் பார்க்கின்றபொழுது மிகுந்த
அறிவும் ஆற்றலும் நிரம்பியவர்கள் என்பதைக் கடந்த காலத்
தேர்தல்களிலேயெல்லாம் பார்த்திருக்கிறோம். மூன்றே
மாதத்தில், 1980 இல் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு
ஒரு தீர்ப்பைத் தந்தது. மூன்று மாதங்கள் கழித்து புரட்சித்
தலைவரவர்கள் அரசு கலைக்கப்பட்டவுடன், அதே தமிழ
கத்து மக்கள் புரட்சித் தலைவருடைய அரசை இங்கே கொண்டு
வந்தவர்கள் என்பதைக் கண்கூடாக நாம் பார்த்தோம். ஆகை
யினாலே மக்களை நாம் ஏமாளிகள் என்று கருதுவோமேயானால்
அது தவறு. ஆனால் இன்றைக்கு அவர்களுக்கு எந்தவிதமான
பொறுப்பும், அதிகாரமும் இல்லாமல் எது நடந்தாலும்
பார்த்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. மீண்டும் ஒரு
தேர்தல் வருகின்ற வரையில் அவர்கள் காத்துக் கொண்டிருக்க
வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதிலும், நேரடி நிர்வாகத்திலே
இருக்கின்றவர்களிடத்திலே இந்த நிலைமை இருக்கிறது.
ஆகவேதான் இந்த அதிகாரம் தர வேண்டுமென்று நாம்
விரும்புகின்றோமே தவிர நிச்சயமாக வேறு அல்ல.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசுகிற
பொழுது ஒன்றைச் சொன்னார்கள். ஏதோ அழுக்கு கிழுக்கை
யெல்லாம் கொண்டு வந்து நாங்கள் இங்கே அண்ணா தி.மு.க.
அரசு ஈர்த்துக் கொள்கிறது என்று. அறிஞர் அண்ணா அவர்கள்
ஒரு முறை அழகாகச் சொன்னார்கள், நான் துப்புரவுத் தொழி
லாளி, இருக்கின்ற குப்பைகளையெல்லாம் சுத்தம் செய்து
வெளியே போடுகிறவன் ; ஆகவே என்னைப் பார்த்தால் நான
அழுக்குச் சட்டையாகத்தான் இருப்பேன். நான் அழுக்காக
இருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் நான் செய்யும் துப்பு
ரவுத் தொழில், அதன் மூலம் சமுதாயம் நன்றாக இருக்கிறது
என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதைப்
போல் சில நேரங்களிலே எங்களைப் பார்க்கின்ற பொழுது
அப்படி இந்த வண்டல் கிண்டல் இதையெல்லாம் நாங்கள்
வைத்துக் கொண்டிருக்கிறோம் என்றால், அதன் மூலம் நல்ல
சட்டங்களை, உள்ளாட்சி மன்றங்கள் நல்ல முறையிலே

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 மே 11

இயங்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தை நிறைவேற்றுகின்ற
வகையில் நல்லதை உங்களுக்குக் கொடுத்து அழுக்கை வேண்டு
மானால் நாங்கள் அப்புறப்படுத்தியிருப்போம்.

(பிற்பகல் 5 50)

ஆகவே, வேறு எதற்காகவும் அல்ல என்பதை நான் மாண்பு
மிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுக்கும் அவரைப்
போன்று நினைக்கின்றவர்களுக்கும் பதிலாக இந்த நேரத்தில்
தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 'ரைட் டு ரீகால்' என்பது,
திரும்ப அழைக்கும் உரிமை என்பது இன்றைக்கு எல்லா நாடு
களிலும் இருக்கிறது. குறிப்பாக, உள்ளாட்சி மன்றங்கள் செயல்
படுகின்ற இடங்களிலே எல்லாம் செயல் படுத்தப்படுகின்றன
ரஷ்யா, சிவிட்சர்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் எல்லாம்
உள்ளாட்சி மன்றங்கள் செயல் படுகின்ற நாடுகளில் எல்லாம்
இந்த முறை பயன்படுத்தப்படுகின்றது என்பதை நான் மாண்பு
மிகு உறுப்பினர் திரு. நாஞ்சிலார் அவர்களுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன். கட்சி, காழ்ப்புணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டு
நல்லவர்கள் நல்ல முறையில் நிர்வாகம் நடத்திக் கொண்டு வந்
தால் அவர்களுக்கு முழு உதவியும், மானியமும் அரசு தரலாம்.
நன்றாக அவைகள் செயல்படும்போது அரசு எல்லா உதவியும்
தரலாம். தேவையான நிவாரணம் தரலாம். அதில் சந்தேகத்
திற்கு இடமில்லை. உள்ளாட்சி மன்றங்கள் இன்னும் வலுவாக
வேண்டுமென்பதற்காகத் தான் இந்த அரசு இச்சட்டத்தை
கொண்டு வந்திருக்கிறது. ஆகவே, இச்சட்டத்தைப் பொறுத்த
வரையில் உள்ளாட்சி மன்றங்களில் இருக்கின்றவர்கள் எல்லாம்
நல்லவர்களாக, வல்லவர்களாக நிர்வாகத்தை சிறந்த முறையில்
நடத்துகின்ற போக்கு கொண்டவர்களாக, அந்தப் போக்கிலே
அவர்களைக் கொண்டு போகக் கூடிய ஒரு சிறந்த சட்டமாக
இச்சட்டம் அமைந்திருக்கிற காரணத்தாலே மாண்புமிகு உறுப்
பினர்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இதிலே
ஐயத்திற்கு இடமில்லை, ஒன்றை மாற்றி மற்றொன்றாக கருதும்
திரிபுக்கு இடமில்லை, எல்லாம் வெளிச்சமாக இருக்கிறது,
எங்கேயும் இருட்டு கிடையாது. It is a bundle of contradictions
என்று சொன்னார், But, it is a bundle of convictions
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, கொள்கை
ரீதியில் நல்ல முடிவுகளை எடுத்து, நல்ல உள்ளாட்சி நிர்வாகத்தை
தமிழ்நாட்டில் நடத்துவது என்கின்ற வரலாற்று சிறப்பு மிக்க
பெருமையை உருவாக்குகின்ற இந்த மாபெரும் சட்டத்தை
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உங்கள் அனுமதியோடு
நிறைவேற்ற வேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறார்கள்.
மக்கள் கருத்தை அறிய வேண்டும், மக்கள் கருத்தை அறிந்து
தான் மக்களுக்கு அதிகாரம் கொடுக்கப் போகிறோம், என்று
எதிர்க்கட்சிகள் கூறுமானால் 'இதற்கு ஏன எங்கள் கருத்தை
கேட்க வந்தீர்கள்' என்று மக்கள் எதிர்க்கட்சிகள் மீது கோபித்துக்
கொள்ளாமல் இருக்க நீங்கள் ஒத்துழைக்கும் வகையில் இச் சட்ட
முன் வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)



1987 மே 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருத்தத்தை வலியுறுத்து
கிறீர்களா ?

**Thiru J. HEMACHANDRAN :** I am not convinced even afte the reply of the Honourable Minister. I have got a right to explain my position.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் திருத்தத்தை வலியுறுத்துகிறீர்களா இல்லையா என்று மட்டும் தான் சொல்ல வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** வலியுறுத்துகிறேன்.

திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், என் எஸ்.வி. சித்தன், சு. சிவராஜ் ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

'' தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 31/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஊராட்சி மன்றத் தலைவர்கள் தவறு செய்தால்
அவர்களை திரும்ப அழைக்க வேண்டுமென்ற தங்களின் மசோ
தாவை இன்னும் தீவிரமாக பரிசீலிக்க செலக்ட் கமிட்டிக்கு
விட வேண்டும் என்பதோடு மக்கள் கருத்தையும் அறிய வேண்
டும் என்ற எங்களுடைய கருத்தினை வலியுறுத்தும் வகையில்
காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரும் வெளி
நடப்பில் ஈடுபடுகின்றோம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

**திரு. கி. மனோகரன் :** அன்புக்கும் மரியாதைக்கும் உரிய
மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு
அமைச்சர் அவர்களின் பேச்சைத் தெளிவாக கேட்க வேண்டு
மென்ற எண்ணத்தோடு நான் இங்கே வந்தேன். அதிலே
தெளிவு இருக்கும் என்று எதிர்பார்த்தேன். குழப்பம் மேலோங்கி
யிருப்பதை நான் தெரிந்து கொண்டேன். இதை ஒரு செலக்ட்
கமிட்டிக்கு விட வேண்டுமென்ற சாதாரணமான இந்த கோரிக்
கையைக் கூட இந்த அரசு ஏற்றுக் கொள்ளவில்லையென்றால்
இந்த அரசு ஜனநாயகத்திற்குத் தருகின்ற மரியாதை அவ்வளவு
தான் என்கிற முடிவுக்கு எங்களைப் போன்றவர்கள் வர

வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறோம். எடுத்து வைத்திருக்கிற ஒரு வாதத்திற்குக் கூட அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டாவது ஸ்பீச் வேண்டாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :; பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு உரிமை தருவது ஜனநாயகம் இல்லையா ? அது ஜனநாயக மறுப்பா ?

திரு. கி. மனோகரன்: மக்களுக்கு நீங்கள் உரிமை கொடுக்க வேண்டிய அவசியம இல்லை. அவர்களே, உரிமையைப் பெற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டென்பது....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களே உரிமையைப் பெறுவது என்பது தேர்தல் வருகிறபோது. நாமாகத் தருவது சட்டத்தின்மூலம். மாநில சுயாட்சிக்காரர்கள், மக்கள் சுயாட்சியை ஏன் மதிக்கமாட்டேன் என்கிறார்கள் என்பது புரியவில்லை.

திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மக்களைப் பற்றிச் சொல்கிறபோது, இந்த விஷயத்திற்கு இப்படி ஒரு விளக்கமும், மற்ற விஷயத்திற்கு இன்னொரு விளக்கமும் தருகிறார்களே தவிர எங்களுடைய நியாயமான கோரிக்கைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டு, சரி, செலக்ட் கமிட்டிக்கு விடுவோம், அவர்கள் இதைப் பற்றி ஆராயட்டும், அவர்கள் இதைப்பற்றி அறிக்கை தரட்டும், அதற்குப் பின்னால் இந்த ரைட் டூ ரீகால் என்பதில் ஒரு முடிவுக்கு வருவோம் என்று எடுத்துக் கொள்கிற பெருந்தன்மையை அவர் பெற்றுக்கொள்ளாத காரணத்தாலும், இந்த சர்க்காரின் கருத்து....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு பிரிவுதான். ஒரு செக்ஷன்தான். சட்டம் கூட அல்ல. இதிலிருந்து குழப்பம் யாருக்கு என்பது எல்லோருக்கும் புரிந்து இருக்கும்.

திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வார்த்தைக்கு வார்த்தை பேசிக் கொண்டிருப்பதில் பலன் இல்லை. திருப்பித் திருப்பிக் கேட்டும் எங்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாததைக் கண்டித்து எங்களுடைய கட்சி வெளிநடப்பு செய்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, எங்களுடைய கட்சி உறுப்பினர்களோடு நான் வெளி நடப்பு செய்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)





திரு. சு. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, எதிர்க் கட்சிகள் சார்பில் கேட்டதெல்லாம் ஒரே ஒரு விஷயம்தான். இவ்வளவு தூரம் மக்களைப் பற்றிச் சொன்ன நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு இந்தச் சட்ட முன்வடிவை அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. இன்றைக்குத்தான் உண்மையாகவே அமைச் ருடைய விளக்கத்தை கூர்மையாக, பரிபூரணமாக நான் கேட் டேன். சமுதாய மாற்றத்திற்குத் தேவையான ஒரு நல்ல அடிப் படையான கருத்து இந்த ரைட் டூ ரீகால் என்பது. அதற்கா இவ்வளவு ரீயாக்ஷனரி ரிப்ளை ? ஒரு பிற்போக்குத் தரமான பதில். அந்த வகையில் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள் என் பதைச் சொல்லி எங்களுடைய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெளிநடப்பு செய்கிறது.

[கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ''பவர் டு தி பீப்பிள்'' என்பதுதான் மார்க்ஸிஸம். ஆனால் அவர்கள் ஏனோ அதை 'ரீயாக்ஷனரி' .என்று சொல்லி விட்டுப் போகிறார்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர் களே, ஜனதாக் கட்சி சார்பாக எடுத்துக் கூறப்பட்ட கருத்தை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. குறைந்தபட்சம் பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டும் என்ற கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டு இருக்கலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக முதல்வர் திரு. இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் உள்ளாட்சி மன்றத் தேர்தல் நேரத்தில் ஊர், ஊராகச் சென்று பேசியது ரைட் டு ரீகால் தரப்போகிறேன் என்பதுதான். அந்தத் தேர்தலுக்குப் போகவில்லையா ? அவ்வாறு பேசியதைப் பத்திரிகையில் பார்க்கவில்லையா ? அல்லது அங்கே இருப்பது வேறு ஜனதாவா, இங்கே இருப்பது வேறு ஜனதாவா?

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதாவது அவர்கள் தேர்தல் காலத்தில் சேர்த்தே சொன்னார்கள். ஆனால் நீங்கள் தேர்தலுக்குப் பிறகு உள் ளாட்சி மன்றங்கள் வந்ததற்குப் பிறகு இந்தச் சட்ட முன்வடிவை கொண்டு வருகிறீர்கள். அதனால்தான் எதிர்க்கிறோம். வேண்டு மென்றே கொண்டு வந்து. . (குறுக்கீடு).... நான் வெளிநடப்பு செய்கிறேன்.

(ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது சட்ட மன்ற உறுப்பினர்களை மக்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்ற முதலமைச்சரின் கொள்கையைப் பொறுத்த வரையில் அவர்கள் அன்றைக்கே சொன்னார்கள் என்று சொன்னார்கள். அன்றைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்றாகச் சேர்ந்து செயல்படுகிறபோது திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி சட்டமன்ற உறுப்பினர்களைத் திரும்பப்பெற வேண்டும் என்று மக்களைத் திரட்டி போராடினோம். ஆகவே, அந்தக் கொள்கை படைத்த கட்சி இந்தச் சட்டமன்றத்தில் உள்ள உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் திரும்பப் பெறக்கூடிய வகையில் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருந்தால் மனப்பூர்வமாக நாங்கள் அதை ஆதரித்திருக்கலாம். அதை விட்டுவிட்டு உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களைத் திரும்பப் பெற்றுக் கொள்கிற வகையில் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதனை பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டுமென்று கேட்டுக் கொண்டதைக் கூட அமைச்சர் அவர்கள் பரிசீலிக்காத காரணத்தால் அதைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெளிநடப்பு செய்கிறது.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

(பிற்பகல் 6-00)

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் 3 ஆண்டுக் காலம் பதவியில் இருப்பார்கள் என்ற நிபந்தனையோடு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய காலக் கட்டம் குறைக்கப்படக் கூடிய முயற்சியில்....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். 3 ஆண்டுக்காலம் நல்லவர்கள் இருப்பார்கள். மோசமானவர்களை மக்கள் விட மாட்டார்கள். நாங்கள் என்ன செய்வது ?

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : நல்லவர்கள் என்பதற்கு இலக்கணம் யார் வகுப்பது என்பதுதான் கேள்வி. ஆனால், ஜனநாயகத்திலே இப்படிப்பட்ட சட்டமன்றங்களில் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு விழுமிய மரபு. குறைந்தபட்சம் அளவு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டும் என்றால், அதை மனம் திறந்து ஏற்றுக் கொள்வதுதான் நல்ல மரபு. அந்த மரபைக் கூட இன்று அமைச்சர் அவர்கள் கடைபிடிக்க வில்லை என்ற காரணத்தால் நான் வெளியேறுகிறேன்.

(இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உறுப்பினர் வெளிநடப்புச் செய்தார்).





பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக் ஆக்கப் பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

In clause 2 in the second proviso to new section 149-B (*1*) *for* the expression "within one year from the commencement of or, before six month of he expiry of", *substitute* the expression, "within six months from the commencement of, or within six months before the expiry of".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு-3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

In clause 3, in the second proviso to new section 151-B(1), *for* the expression "within one year from the commencement of, or before six months of the expiry of", *substitute* the expression "within six months from the commencement of, or within six months before the expiry of,".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 31/1987) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(௨௧) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.33/1987) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

* 1987 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



(௨௨) மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன் வடிவு. 1987.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 34/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

''In clause 2, in the second proviso to new section 40-C(1), *for* the expression "witnin one year from the commencement of, or before six months of the expiry of'', *substitute* the expression "within six months from the commencement of, or within six months before the expiry of''.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 2, திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

*1987 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1987 மே 11

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 34/1987) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(3) அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றை தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132-ஐ தளர்த்தி கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை இன்றே ஆய்விற்கு எடுத்துக் கொள்ளவேண்டும்:

1. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 35/1987).

2. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/1987).

3. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 37/1987).

4. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை (சட்ட முன்வடிவு எண். 38/1987).

5. 1987—ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1987).

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.



1987 மே 11]

2. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி).

(அ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1987—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றன.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 35/1987) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1987—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

* 1987 ஆம் ஆண்டு மே திங்கள் 11 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(இ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1987—(தொடர்ச்சி)

மாண்புமிகு திரு. த. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 37/1987 ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

(பிற்பகல் 6—10)

பிரிவுகள் 2 முதல் 4 வரை மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1987) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

*1987 ஆம் ஆண்டு மே திங்கள் 11 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





(ஈ) திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1987—(தொடர்ச்சி).

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு; *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த அவையிலே 38/1987 ஆக கொண்டுவரப்பட்டு இருக்கக்கூடிய இந்தச் சட்டத்தை நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகவும், என்னு டைய சார்பாகவும் கடுமையான ஆட்சேபங்களோடு என்னுடைய உரையை நான் தொடங்குகிறேன். சில நாட்களுக்கு முன்னாலே இந்த அவையிலே நடந்த சில சம்பவங்களைத்தொடர்ந்து இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கவேண்டும் என்பதற்கான ஆதா ரம், இந்தச் சட்டம் வழக்கமாக அச்சடித்து தரப்படாமல், சைக் ளோஸ்டைல் செய்யப்பட்டு இன்றைக்கு உறுப்பினர்களுக்கு தரப் பட்டதிலிருந்தே, அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்த கோல மாக, அவலை நினைத்துக் கொண்டு, உரலை இடித்த கதையாக, இன்றைக்கு இந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டு இருக்கிறது.

இன்றைக்கு ஆனந்த விகடன் பத்திரிகையைப் பற்றிய விவரங் களை எல்லாம் நான் சொன்னால், அதை நீங்கள் நீக்கிவிடு வீர்கள் என்பதற்காக அதைப் பற்றி நான் சொல்ல விரும்ப வில்லை. ஆனந்த விகடன் பிரச்சினையில் எனக்கு எத்தனையோ கருத்துக்கள் உண்டு. இருந்தாலும் கூட, சமீபத்திலே வந்த அந்த பத்திரிகையிலே இது தொடர்பான சம்பவங்களை எல்லாம் குறிப் பிட்டுவிட்டு, அந்தப் பத்திரிகையிலே ஒரு செய்தியைப் போட்டு இருக்கிறார்கள். அரசியல்வாதிகளைப்பற்றி நீங்கள் ஜோக் எழுதினால் கூடுதலான விசேஷ சன்மானம் தரப்படும் என்று சொல்கிற ஒரு சிறுபிள்ளைத்தனமான செய்தி வந்து இருக்கிறது. ஆனந்த விகடனிலே வந்த செய்தியை நான் எவ்வளவு சிறு பிள்ளைத்தனம் என்று கருதுகிறேனோ அதைவிட சிறுபிள்ளைத் தனமாக நான் கருதக்கூடிய அளவிற்கு இன்றைக்கு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களையும், சட்டமன்றத்தையும், இழிவுபடுத்தியோ, அல்லது மாசுபடுத்தியோ ஒருவர் படம் எடுக்கிறார், அல்லது

* 1987 ஆம் ஆண்டு மே திங்கள் 11 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

செய்தியைப் போடுகிறார் என்று சொன்னால், இதை மாற்றுவதற்கான சிறந்த வழி, நாம் நல்லவர்களாகவும், பாராட்டுக்குரிய அளவிலே நடந்து கொண்டு, இந்தச் சமுதாயத்திலே நமக்கு ஒரு மரியாதையும் மதிப்பும் வரக்கூடிய அளவிலே நாம் நடந்து கொள்ள வேண்டுமே தவிர, நீ யார் என்னைப் பற்றிச் சொல்வதற்கு, நீ யார் என்னை கேலி செய்வதற்கு என்ற பாணியில், இன்றைக்கு இங்கே சில சம்பவங்கள் நடந்து கொண்டு இருக்கின்றன என்பதைச் சொல்லி, நான் முதலிலே என்னுடைய வேதனையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சட்டப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால், இன்றைக்கு இந்தியாவிலே, எந்தப் படங்களைத் திரையிட வேண்டும், அந்தப் படங்களிலே என்ன இருக்கவேண்டும். என்ன நீக்கப்படவேண்டும் என்பதைச் சொல்ல, சென்சார்சிப் ஆக்டின்படி, சென்சாருக்கு முழுமையான அதிகாரங்கள் தரப்பட்டு இருக்கின்றன. கான்ஸ்டிடியூசனிலே, யூனியன் லிஸ்ட் என்று சொல்லக்கூடிய, மைய அரசுக்கு உள்ள அதிகாரத்தின்படி, பாராளுமன்றத்திற்கு சட்டம் இயற்றுகின்ற அந்த உரிமைகளின் அடிப்படையிலே சென்சார்சிப் இன்றைக்கு இயங்கிக்கொண்டு இருக்கிறது. ஆனால் இன்றைக்கு சென்சார்சிப்பிலே சென்சார் செய்யப்பட்டு, தியேட்டர்களிலே எந்தப் படங்கள் நடைபெறுமோ, அந்தப் படங்களை நடத்தக்கூடாது என்று நீங்கள் சொல்வதற்கான ஒரு சூப்பர் சென்சார்சிப்பாக, சட்டத்திற்குப் புறம்பாக, அரசியல் நிர்ணயச் சட்டத்திலே சொல்லப்படாத ஒரு விஷயமாக அந்த சூப்பர் சென்சாராக நீங்கள் இதைக் கொண்டு வருகிறீர்கள். It is a colourable exercise of the powers under the provisions of the Constitution. என்று சொல்லி, முதலிலே ஆரம்ப நிலையிலே, என்னுடைய கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். பாராளுமன்றத்திலே இயற்றப்பட்ட சட்டத்தினுடைய அடிப்படையிலே, இந்திய அரசால் நியமிக்கப்பட்ட சென்சார், சிப்பிலே எந்தப் படத்திற்கு சர்டிபிகேட் தரப்பட்டு இருக்கிறதோ அந்தப் படங்களைத் திரையிடக்கூடாது என்று சொல்வதற்கான சூப்பர் சென்சார்சிப்பாக, இந்தச் சட்டத்திலே செக்சன் 7-ஏ வந்திருக்கிறது, என்று நான் சொல்ல விரும்புகிறேன். இந்த செக்சன் 7 என்ன சொல்கிறது என்றால், சட்டமன்றத்திலே போடப்படுகிற ஒரு ரெசல்யூசன் ஒரு தீர்மானத்தின் மூலமாக ஒரு சினிமாவைத் தடுக்கலாம் என்று சொல்கிற அளவிற்கு இருக்கிறது. இதன் மூலம் உங்களுடைய உள்நோக்கத்தை எங்களால் புரிந்து கொள்ள முடியும். அதற்குப் பின்னாலே, சட்டமன்றம் கூடாவிட்டால் என்ன செய்வது என்று சொல்லி, அதற்கு ஒரு வழியை வைத்து இருக்கிறீர்கள். நம்முடைய மரியாதைக்குரிய—என்றைக்குமே ஸ்பீக்கர் என்பவர் Caesar's wife must be above suspicion என்றுசொல்வார்களே, அதைப்போல எந்தவிதமான விவாதத்திற்கும் உரிய பொருளாகவோ, எந்த விதமான கான்ட்ரவர்சியலுக்கும் உட்படாத ஒரு நபராகவோ



இருக்கவேண்டிய ஸ்பீக்கரை, நீங்கள் முதன் முதலாக ஒரு சட்டத்தின் மூலமாக இங்கே கொண்டு வந்து, அவர்கள் சொல்கிற அந்த ஆர்டரின் மூலமாக படத்தை தடை செய்யலாம் என்று சொல்லி You are bringing the office of the Speaker into a controversy என்பதைச் சொல்லி, இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். பாராளுமன்றத்தை நீங்கள் பாதுகாக்கவேண்டும் என்று சொல்வீர்களேயானால், பாராளுமன்ற முறைகளை நியாயப்படுத்த வேண்டும் என்று நீங்கள் கருதுவீர்களேயானால் எப்படி நீங்கள் ஒரு சட்டசபையினுடைய, எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவராக இருக்கக்கூடிய ஒரு சபையினுடைய நாயகர் அவர்களே, நீங்கள் இதுபோன்ற வம்புக்கு, நானே சொல்லிக் கொள்கிறேன்; ஸ்பீக்கர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், இதை நீங்களே அனுமதிக்கக்கூடாது. தங்களுக்குத் தெரியாமலேயே உங்களுடைய கையை எடுத்து உங்களுடைய கண்ணைத் குத்திக்கொண்டிருக்கிறார்கள் தெரிந்தோ, தெரியாமலோ அனுமதித்து விட்டீர்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள் சொல்கிறேன். சபை உறுப்பினர்களைப் பற்றி யாராவது எழுதினாலோ, பேசினாலோ இல்லாவிட்டால் படமெடுத்தாலோ, அதிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக வரக்கூடிய சட்டம்; உங்களையும் சேர்த்துத்தான். தனிப்பட்ட எந்தவொரு எம்.எல்.ஏ-வையும் பாதுகாப்பதற்கு அல்ல. அரசியல் சட்டத்தில், நீதி மன்றத்தில் ஏதாவது ஒரு அவதூறு ஏற்பட்டிருக்குமேயானால் அவர்களைப் பாதுகாப்பதற்கு அது எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் அன்றைக்கு, இப்படிப்படம் எடுப்பார்கள் என்று அவர்கள் நினைக்கவில்லை. ஆகவே இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்தச் சட்டம் இன்றைக்குத் தேவைதான்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெத்த பணிவோடு, உங்களுடைய கருத்தோடு நான் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : You want a certificate from a producer இல்லை, நீங்கள் அமருங்கள், நான் சொல்கிறேன். நீங்கள் சொன்னீர்களே அந்தப் படத் தயாரிப்பாளர்களெல்லாம், உங்களை, சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று அவர்கள் சொல்லக்கூடிய அளவிற்கு நடந்து கொள்ளவேண்டும். It is very disgraceful.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை நீங்கள் தவறுதலாக புரிந்துகொண்டு விட்டீர்கள் என்று நினைக்கிறேன். Film producer-யிடமிருந்தோ, வேறு யாரிடமிருந்தோ சர்டிபிகேட் வாங்கக்கூடிய நிலையில் சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லை

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1987 மே 11

அவர்கள் ஏன் குறை சொல்கிறார்கள். அவர்கள் குறை சொல்
லாத அளவுக்கு நீங்கள் நடந்து கொள்ளவேண்டும் அல்லது நாம்
அந்தத் தவறு......(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் அதைத்தான்
சொல்கிறேன், உட்காருங்கள். ஒரு நிமிஷம் இருங்கள், சொல்
கிறேன். I will make it clear அதாவது M.L.As. and Ministers are
all popular. (குறுக்கீடு) They are popular among the public. Film
producer, by making some propaganda against popular
men, is getting money. He is getting money. He is not doing
any social service.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மீண்டும் நான் என்னுடைய கருத்தை வலி
யுறுத்துவது, தவறு செய்து படம் எடுபார்களேயானால் அவர்
களைத் தண்டிப்பதற்கான வழி, பிரிவிலெஜ் கமிட்டி என்று ஒன்று
இருக்கிறது. அந்த பிரிவிலெஜ் கமிட்டியிலே கொண்டுவந்துதான்
நாம் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர அல்லது
இந்தச் சட்டமன்றத்திலேகூட நீங்கள் ஒன்றைக்கொண்டு வர
லாம். தமிழக சட்டமன்றத்திலே இனிமேல் பிரிவிலேஜ் கமிட்டி
என்று ஒன்று இருக்காது. 'Privileges Committee hereby stands
dissolved.' என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்துவிட
லாம். எடுத்தவுடனே ரெசல்யூஷனைப் போட்டுதான் எல்லா
வற்றையுமே செய்யவேண்டும் என்று சொன்னால்.............
(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: : ரெசல்யூஷன் போடுவது
அவையிலே. The House is more than the privileges Committee.
They are only about 2 members. Here we are 224 members.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன், இது உள்
நோக்கத்தால் கொண்டுவரப்பட்ட சட்டம் என்றும், அச்சப்
படுவதற்கான ஒரு காரணம் இருக்கிறது என்பதையும் இங்கே
நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பக்கம் 2 லே
எக்ஸ்பிளனேஷன் என்று கொடுத்து விட்டு நீங்கள் அதிலே
சொல்லியிருக்கிறீர்கள்.

Explanation I.—The expression "Members of the Legislative
Assembly" includes the Chief Minister or any other Minister of the
state and the Speaker and Deputy Speaker of the Legislative Assembly
என்று நீங்கள் சொல்வீர்களேயானால், 'Office of the Leader of the
Opposition'-ஐப் பற்றி ஏன் நீங்கள் தெளிவாகச் சொல்லவில்லை?
எந்தவொரு சட்டம் கொண்டு வந்தாலும் லெஜிஸ்லேட்டிவ்
அசெம்பிளியில் இருக்கக் கூடிய ஸ்பீக்கர், டெபுடி ஸ்பீக்கர்—
மினிஸ்டர்ஸ், மினிஸ்ட்டர் என்று சொன்னால் சீப் மினிஸ்ட்டர்,
ஐயும் சேர்த்துதான். ஆனால் நீங்கள் சீப் மினிஸ்ட்டர் என்று



[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1987 மே 11

சொல்லி விட்டு, மினிஸ்ட்டரைத் தனியாகச் சொல்லி இருக்கிறீர்
கள். அப்படியென்றால் Leader of the Opposition-ஐ ஏன் சேர்க்க
வில்லை. அதனால்தான் சொல்கிறேன். நீங்கள் அவசரக்
கோலத்திலே அள்ளித் தெளித்த கோலமாக, ஒரு கறுப்புச் சட்டத்
தைத் தான் நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று சொல்லி,
இந்தச் சட்டத்தை நான் கடுமையாக கண்டிக்கிறேன். (குறுக்
கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கறுப்புப் படம் எடுப்ப
வர்களைக் கண்டியுங்கள். They are not doing service to the people.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள்,
பேரவைத் துணைத் தலைவர் இவர்களுடைய நடத்தையைப்
பற்றி விமர்சிக்கக் கூடிய திரைப் படங்களை திரையரங்கு
உரிமையாளர்கள் திரையிடக் கூடாது, அப்படிப்பட்டப் படங்
களுக்குச் சட்டத்தின் மூலமாக 5 ஆண்டு வரைக்கும் தடை விதிக்க
லாம் என்றும், தடை மீறப்பட்டால் 3 ஆண்டுக்கால சிறைத்
தண்டனையும், 5 ஆயிரம் ரூபாய் அபராதமும் என்று சொல்லு
கின்ற விதத்திலே இந்தச் சட்டம் இங்கே கொண்டுவரப்படுகிறது.
பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு வழக்கறிஞர்,
எனவே உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், இங்கே
கொண்டு வந்திருக்கக் கூடிய சட்டத்தை முதலிலே அன்-
கான்ஸ்டிடியூஷனல் என்று சொல்ல விரும்புகிறேன். This
House has no competence to bring this Bill. இந்த
மசோதாவைக் கொண்டு வருவதற்கு இந்த சபைக்கு காம்பிடன்ஸ்,
அதிகாரம் இல்லையென்றும், இது அரசியல் சட்டத்திற்கு
விரோதமானது என்றும் நான் சொல்ல விரும்புகிறேன்.

[பிற்பகல் 6-20]

தாங்கள் வழக்கறிஞர் என்ற முறையில் கொஞ்சம் அனுமதிக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு உங்
களுக்கு எல்லாம் தெரியும்—அரசியல் சட்டத்தினுடைய
246 வது பிரிவு தெளிவாக சொல்கிறது மத்திய அரசினுடைய
பட்டியல் இது என்றும், மாகாண அரசினுடைய பட்டியல் இது
என்றும் அது போல "கண்கரண்டு" பொதுவான பட்டியல் இது
என்றும் இருப்பதை நாம் எல்லாம் அறிவோம்.

அதிலே குறிப்பாக அரசியல் சட்டத்தினுடைய 240-வது பிரிவு
7-வது அட்டவணை, ஐட்டம் 60-ல் மிகத் தெளிவாகச் சொல்லப்
பட்டிருக்கிறது இந்த தணிக்கை உரிமை மத்திய அரசினுடைய
பட்டியலுக்கு உட்பட்டது என்று. அதைப் போலவே இன்னும்
ஒன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு சினிமாப் படங்
களை தணிக்கை செய்யக் கூடிய அதிகாரம் முழுக்க முழுக்க
மத்திய அரசுக்கு உண்டு. ஆகவே தான் மத்திய அரசு இன்

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மே 11

றைக்கு ஒரு சென்சார் போர்டை உருவாக்கி அதில் உறுப்பினர்
களையும், தலைவரையும் நியமித்து இந்தப் படங்களில் இந்தக்
காட்சிகள் இருக்கலாம் இந்தக் காட்சிகள் இருக்கக் கூடாது என்றும்
இது Conte upt of Court, defamation, decency, morality ஆபாசமா
இவைகளை எல்லாம் பரிசீலித்ததற்குப் பிறகு தான் அந்த காட்சி
கள் இடம் பெறக் கூடாது அல்லது இடம் பெறலாம் என்று
மத்திய சர்க்காரின் அதிகாரத்திற்கு உட்பட்டு இந்த விதத்தில்
அமைக்கப்பட்ட அந்த சென்சார் போர்டு முடிவு எடுத்து "ஏ"
சர்ட்டிபிகேட், அல்லது "யூ" சர்ட்டிபிகேட் தருகிறார்கள்.
அப்படி அவர்கள் தணிக்கைக்குப் பிறகு அவர்கள் வெளியிட
லாம் என்று அந்தப் படத்தை அனுமதித்து விட்டால் அது 10
ஆண்டுக் காலத்திற்கு அந்தப் படம் எங்கேயும் Unrestricted exhi-
bition யாராலும் தடைப்படுத்த முடியாத அளவுக்கு அது வெளி
யிடப்படலாம் என்று இருக்கிறது.

அடுத்து, தாங்கள் வழக்கறிஞர் என்ற முறையில் கவனிப்பீர்
கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மிகத் தெளிவாக
சொல்லப்பட்டிருக்கிறது, மாநில சர்க்கார், மத்திய சர்க்கார்
என்ற முறையில் மத்திய அரசினுடைய இந்த அதிகாரத்தைப்
பொறுத்த வரையில் மாநில அரசு சட்டம் இயற்றலாம். ஆனால்
சட்டம் இயற்றலாம் என்று சொல்லுகிறபோது subject to the
provisions of the Central Act மத்திய அரசு என்ன சட்டம்
கொண்டு வருகிறதோ அந்தச் சட்டத்திற்கு உட்பட்டு தான்
இந்த மாகாண அரசு சட்டம் கொண்டு வர முடியும். அதை
மீறி செய்ய முடியாது என்பது தெளிவாக அதே அரசியல் சட்டத்
தினுடைய 246-வது பிரிவின் 7-வது பட்டியலில் ஐட்டம் 33
தெளிவாகச் சொல்கிறது. ஆகவே இதிலிருந்து நமக்குத் தெரிவது
என்ன என்று கேட்டால் இந்த தணிக்கைச் செய்கின்ற அதிகாரம்
மத்திய அரசுக்கு உட்பட்டது. மத்திய அரசு அது சம்பந்தமாக
சட்டம் கொண்டு வந்தால் அரசியல் சட்டத்தினுடைய 254 வது
பிரிவின்படி நீங்கள் கொண்டு வருகிற சட்டம் ஏற்கனவே மத்திய
அரசு ஒரு சட்டம் கொண்டு வந்து இருக்கிற காரணத்தால்
சென்சார் போர்டு, தணிக்கைக் குழு தீர்மானித்த பிறகு சர்ட்டி
பிகேட் கொடுத்ததற்குப் பிறகு அந்த அதிகாரம் எங்களுக்கு
உண்டு என்று நீங்கள் ஒரு சட்டம் கொண்டு வந்தால் அந்தச்
சட்டத்தின் முன்னால் இந்தச் சட்டம் செல்லாது. அந்த அதி
காரம் இந்தச் சபைக்கு இல்லை. கோர்ட்டுக்குப் போனால் இது
வெற்றி பெறாது என்பதை முதலில் சட்டத்தை உருவாக்குபவர்
கள் என்ற முறையில் உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வர
விரும்புகிறேன்.

அடுத்து இன்னும் ஒன்றை உங்களுக்கு தெரிவிக்க விரும்பு
கிறேன். வருமான வரி, கஸ்டம்ஸ் டூட்டி இவைகள் எல்லாம்
மத்திய அரசு தான் விதிக்க முடியும். மாநில அரசு விதிக்க
முடியாது. ஏன் என்றால் இது மத்திய அரசின் அதிகாரத்திற்கு



1987 மே 11] [திரு. அ. ரகுமான்கான்]

உட்பட்டது. சேல்ஸ் டாக்ஸ் மாநில அரசின் அதிகாரத்திற்கு
உட்பட்டது. எனவே நாம் விதிக்கலாம். ஆகவே இந்த அதி
காரம் என்பது தவறாக எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது
என்பது என்னுடைய அபிப்பிராயம்.

அடுத்து இன்னும் ஒன்றையும் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். The Madras Cinemas Regulation Act, 1955 இதன்படி
உங்களுக்கு எல்லாம் தெரியும். இன்றைக்கு 7 என்ற ஒரு பிரிவு
அதில் இருக்கிறது. அந்த 7 என்ற பிரிவில் ஒரு படத்தை தடை
செய்கின்ற அதிகாரம் ஏற்கனவே இங்கே இருக்கக் கூடிய அரசாங்
கத்துக்கு உண்டு. கலெக்டருக்கு உண்டு. Breach of peace.
என்ற காரணம் காட்டப்பட்டு, அது உண்மையாக இருந்து விட்
டால் தடை செய்யலாம். அதன் மேல் பாதிக்கப்பட்டவர்
கோர்ட்டுக்குப் போய் நியாயங்கள் பெற முடியும். ஆகவே அதை
வைத்து அமைதியை உண்டாக்குகிறோம் அல்லது நியாயத்தை
உண்டாக்குகிறோம் என்று சொல்லி ஒரு படத்தை தடைப்படுத்து
வதற்கு அதிகாரம் உங்களுக்கு 7-ல் தரப்பட்டு இருக்கிறது.
ஆனால் புதிதாக இந்த திருத்தத்தை நீங்கள் கொண்டு வருகிறீர்
கள், இதிலே ஒரு பிரச்சினை என்னவென்று கேட்டால் இதிலே
இருக்கக் கூடிய இந்தச் சட்டத்திலே இன்னும் சொல்லப்
போனால் மாநில அரசுக்கு என்ன அதிகாரம் இந்த சட்டத்தில்
என்று கேட்டால் Suitability of site. ஒரு இடத்திலே
தியேட்டர் கட்டலாமா? அதுபோலவே லைசன்ஸ் வழங்கக்
கூடிய அதிகாரம் அல்லது மறுக்கக்கூடிய அதிகாரம், ஒருவர்
எண்டர்டெயின்மெண்டு டாக்ஸ் கட்டாமல் அரியர்ஸ் இருக்கு
மானால் அதற்கு நீங்கள் லைசன்ஸ் வழங்காமல் இருக்கலாம்.
சுகாதார வசதி, மின் வசதி, கன்செண்ட், கன்வினியன்ஸ் இவை
கள் சம்பந்தமாக லைசன்ஸ் வழங்குகின்ற அதிகாரம் சினிமா
சட்டத்தைப் பொறுத்தவரையில் உங்களுக்கு உண்டு. மன்னிக்க
வேண்டும். இப்போது நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய
சட்டம் அமைச்சர்கள் அது போலவே எம்.எல்.ஏக்கள், அது
போல சபாநாயகர், துணை சபாநாயகர் இவர்களை சினிமா
படங்களில் நடத்தைப் பற்றி விமர்சிக்கக்கூடிய படங்களை திரை
யிடக் கூடாது என்று சொல்லுகிற போது தயவு செய்து நீங்கள்
கோபப்படக்கூடாது. நான் நியாயம் கேட்க விரும்புகிறேன்.
அரசியல் சட்டத்தினுடைய 14-வது பிரிவு என்ன சொல்கிறது,
Equality of law சட்டத்தின் முன்னால் நாம் எல்லோரும் சமம்.
எம்.எல்.ஏக்கள் எம்.பி-க்கள், மந்திரிகள் யாராக இருந்தாலும்,
We are subordinate to the people. நாம் மக்களுக்கு உட்
பட்டவர்கள், மக்களுக்கு கட்டுப்பட்டவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ' புரொட்யூசருக்கு '
உட்பட்டவர்கள் அல்ல.

திரு. அ. ரகுமான்கான் : தாங்கள் சொல்கிற கருத்தை
நான் ஒப்புக்கொள்கிறேன். We are subject to the People,
We are subordinate to the people, We are servants of the
people.

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மே 11

நம்முடைய நடத்தையைப் பற்றி விமர்சிக்கின்ற அதிகாரம் மக்களுக்கு உண்டு. நாம் சிறப்பாக இருக்கவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்ப்பதற்கு நியாயமுண்டு. அந்த அடிப்படை யில் 'ஈக்குவாலிட்டி' என்று கூறலாம் என்று சொல்லுகின்ற போது ஒட்டு மொத்தமாக எல்லா அமைச்சர்களையும், எம். எல். ஏக்களையும் பற்றி ஒரு படம் எழுதப்பட்டு, அந்த சமுதாயத் தையே கேவலம் என்று சொன்னால், அது தவறில்லை. எங்கோ சிலர் தவறுகள் செய்கிறார்கள் என்பதை நீதிபதிகளில் சிலர் தவறு கள் செய்கிறார்கள். கலெக்டர்களிலே சிலர் தவறுகள் செய்ய லாம். அதிகாரிகள் தவறு செய்யலாம். மடாதிபதிகள் தவறு செய்யலாம். அண்ணா அவர்கள் 'சொர்க்கவாசல்' எழுதினார் என்று சொன்னால், மடாதிபதிகள் எல்லோரும் ஏன் கோபப் படுகிறார்கள்? அதுபோன்று வேலைக்காரி படத்தில், வேதாச் சல முதலியார் பாத்திரம் வருகின்றபோது, ஊரில் இருக்கிற எல்லா வேதாச்சல முதலியார்கள் எல்லாம் நம்மைப் பற்றித்தான் சொல்கிறார்கள் என்று கருத வேண்டிய அவசியம் இல்லை. எனது நோக்கம் என்னவென்று கேட்டால், இந்தத் துறையைப் பொறுத்தவரையில் அது தூய்மையாக இருக்க வேண்டுமென்று மக்களுடைய தொண்டன் என்பதாலே, தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதியோடு சொல்கிறேன்.

இன்றைக்கு இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அரசியல் சட்டத்தினுடைய 19-வது பிரிவு Freedom of expression பற்றி உங்களுக்குத் தெரியும். நாம் ஒரு கருத்தைச் சொல்வதற்கு உரிமையுண்டு. ஜனநாயக நாட்டிலே ஒரு அரசாங்கத்தை விமர்சிக்கலாம், இன்னும் சொல்லப் போனால் அமைச்சர்களை விசாரிக்கலாம். எம். எல். ஏ. க்களை விமர்சிக்கலாம், அதிகாரிகளை விமர்சிக்கலாம். நான் கேட்கிறேன், சினிமாப் படங்களை..............(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இலவசமாக விமர்சிக்க லாம். பணத்தை வாங்கிக் கொண்டு விமர்சிக்க முடியாது, பணம் வாங்கிக் கொள்ளக் கூடாது. பணக்காரர்களாக ஆகக்கூடாது.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர் களே, நான் சொல்வதை தயவு செய்து நீங்கள் தப்பாகப் புரிந்து கொள்கிறீர்கள். இன்றைக்குத் தொழில் நடத்தப்படுகிற இந்தப் பிரச்சினைக்கு நான் வரவில்லை. நான் இங்கே சொல்ல விரும்பு வது, இப்போது சினிமா படங்களில் எம். எல். ஏ.க்கள், மந்திரி களைப் பற்றி, அவர்களுடைய நடத்தையைப் பற்றி கேட்டால், பிரதிபலிக்கிறார்கள். நான் உங்களைக் கேட்கிறேன். பொதுக் கூட்டங்களில் மாலை 7 மணிக்கு மேல் பேசுகிறார்கள், அதற்கு என்ன தடை?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கூட்டங்களில் பணம் வாங்குவதில்லை. எல்லோரும் ஃப்ரீ என்ட்ரண்ட்ஸ். ஆனால் இதிலே நீங்கள் பணம் வாங்குகிறீர்கள். புரோட்யூச ருடைய கணக்கைப் பார்க்கிறோம்.



1987 மே 11]

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, இதில் பணம் வாங்குகிறோமா, வாங்கவில்லையா, தொழிலா, தொண்டா என்பது அல்ல. கலைத்துறை. அண்ணா அவர்கள் இருந்தார்கள். முதல்வரும் இருந்தார்கள். எங்களுடைய தலைவர் கலைஞரும் இருக்கிறார்கள். நான் அந்தப் பிரச்சினைக்கு போக விரும்ப வில்லை. நான் கேட்க விரும்புகின்ற பிரச்சினையே வேறு. பொதுக் கூட்டங்களில் நாம் விமர்சிக்கின்ற உரிமையை நீங்கள் தடுக்க முடியாது. அதுபோன்று நாடகங்களில் விமர்சிப்பதைத் தடுப்பதற்குச் சட்டம் உண்டா? கதைகளில் அவர்களைப் பற்றி எல்லாம் விமர்சிக்கின்றபோது, தடுப்பதற்குச் சட்டம் உண்டா? தெருக் கூத்து போட்டு பேசுகிறார்கள். இதைத் தடுக்க முடியுமா? ஆக இன்றைக்குக் கொண்டு வந்திருக்கக்கூடிய 'Violation of fundam ntal rights' ஜீவாதார உரிமையைப் பறிக்கக் கூடியதாக இருக்கிறது. கடைசியாக நான் கேட்கிறேன். ஜனநாயகத்தில் விமர்சனம் என்பது தவிர்க்கமுடியாதது. குறைகளும், நிறை களும் சொல்லப்பட வேண்டியதுதான்.

நல்லவேளை வள்ளுவன் உயிரோடு இல்லை. இல்லை யென்று சொன்னால்—" தூங்காமை கல்வி துணிவுடைமை இம் மூன்றும் நீங்கா நிலனாள்பவர்க்கு " என்று வள்ளுவர் சொன்னார் கள். எங்களைப் பார்த்து துணிவு வேண்டுமென்றும், எங் களுக்குக் கல்வியறிவு வேண்டுமென்றும், தூங்காமை வேண்டு மென்றும் இந்தக் கிழவன் வள்ளுவன் எப்படிச் சொல்லலாம்? என்று சொல்லக்கூடிய நிலைமை, ஜனநாயக நாட்டிலே வரக் கூடிய அபாயம் இருக்கிறது. நல்லவேளை அவர் போய்ச் சேர்ந் தார். தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகச் சொல்ல விரும்புகிறேன். விமர்சனங்களை நாம் சிந்திக்க வேண்டும். ஆந் திராவிலே........(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும். இவ்வளவு நேரம் பேசினீர்களே, கேட்டுக் கொண்டு இருந்தேன். இதை எப்படித் தடுப்பது? படம் எடுப்பவர்களை எப்படித் தடுப்பது? எம். எல். ஏக்களை குறை சொல்பவர்களை எப்படித் தடுப்பது என்பதைப் பற்றிச் சொல்லுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டது. உள் நோக்கத்தில் இப்படிப் புண்படுத்துவதை எப்படித் தடுப்பது என்று கேட்கிறார். அதற்கு ஒரு உதாரணத் தைச் சொல்கிறேன். ஆந்திராவிலே முதல்வராக இருக்கிற திரு. என். டி. ஆர் அவர்களைப் பற்றி இந்திரா காங்கிரஸ் கட்சி கிருஷ்ணா அவர்கள் ஒரு படம் வெளியிட்டார். ஆனால் அவர் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. காரணம் என்னவென்று கேட்டால், நான் சரியாக இருக்கிறபோது, மக்களும் சரியாக இருக்கிறபோது, அவர் படம் கொண்டுவந்து, என்ன செய்துவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்று சொன்னா. அதுபோன்று இன்னொன்றைச் சொல்கிறேன். ஈ நாடு என்ற

படம் கேரளாவிலே வந்தது. எம். எல். ஏக்களை எல்லாம்
விமர்சனம் செய்து படம் வெளி வந்தது. அதற்கு ' Tax
Exemption ' கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அதைப் பற்றி
கவலைப்படவேயில்லை. காரணம் ஜனநாயகத்திலே எதிர்க்கட்சி,

(பிற்பகல் 6–30)

நாம் எதிர்த்து பேசலாம். குறை சொல்லலாம். அவர்களை
நாம் சந்திப்போம். கூட்டங்களிலே பதில் சொல்வோம். நாங்
களும் சினிமாவிலே பதில் சொல்வோம். கதைகளிலும் பதில்
சொல்வோம். இது பொது வாழ்க்கை என்று அவர்கள் கருது
கிறார்கள். அதே மாதிரி உங்களுக்குத் தெரியும். பி.பி.சி.யிலே
எஸ். மினிஸ்டரில் தாட்ச்சரைப் பற்றி வந்தது. அந்த அம்மா
சொன்னார். I appreciate this picture என்று சொல்
கிறார்கள். இன்னொரு படத்தில் இந்திரா காந்தி அம்மையார்
மாதிரி வேஷம், அந்த அம்மா காலையிலே பார்த்தால் சில
நல்ல காரியங்களைச் செய்வார்கள். இரவு நேரத்திலே பார்த்
தால் இன்னும் சொல்லப் போனால் குடிப்பது போன்ற காட்சி
களை பகிரங்கமாகக் காட்டினார்கள். அந்தப் படத்தைப் பற்றி
சொன்னபோது அந்த அம்மையார் சிரித்துக் கொண்டே
சினிமாவிலே எப்படி வேண்டுமானாலும் அவர்கள் எழுதட்டும்.
அதைப்பற்றிக் கவலையில்லை. I would like to see the picture
என்று இந்திரா காங்கிரஸ் நண்பர்களுக்கு சொல்லியதாக
இந்தப் பிரச்சினை பற்றி பேசுகின்றபோது நான் தகவல் அறிந்
தேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே,
அந்தப் படம் தடை செய்யப்பட்டது என்பதை மாண்புமிகு
உறுப்பினருக்கு நான் நினைவூட்டுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, அதைப்
போலவே ஆஜ்கா எம். எல். ஏ. என்ற படத்தில் ராஜேஷ்
கன்னா முதலமைச்சராக நடிக்கிறார். அந்தப் படம் ஸ்டார்
டாக்கீஸிலே ஓடியது. தேர்தலுக்கு முன்பாக நான் ஆட்சிக்கு
வந்தால் 300 பேர்களுக்கு இலவச மொட்டை போடுவேன் என்று
சொல்கிறார். காரணம் அவர் அந்த சமுதாயத்திலிருந்து
வந்தவர். வந்தவுடனே வீட்டு முன்னாலே அவர் இலவசமொட்டை
போடுகின்றார். அந்தக் காட்சி தடைப்படுத்தப்படவில்லை.
அதைப் போன்று பாலைவன ரோஜாக்கள் என்ற படம் நடக்கிறது.
கடைசியாக உங்களுக்குச் சொல்கிறேன். மைய சர்க்கார் மந்திரி
கொலை வழக்கிலே பொய் சாட்சி சொல்வதாகவும் லஞ்சம்
வாங்குவதாகவும் தேங்காய் சீனிவாசன் அவர்கள் நான் சிகப்பு
மனிதன் என்ற படத்திலே நடிக்கிறார். இதுவரைக்கும் மத்திய
அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. நான் கடைசியாக......
(குறுக்கீடு).





மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாவற்றையும்
எழுதிக் கொடுங்கள். நடவடிக்கை எந்த வழியிலே எடுக்க
லாமோ அந்த வழியிலே எடுக்கலாம். இந்த பில் இல்லாமலே
தீர்மானம் போட்டு எடுக்கலாம். அதற்கு இந்த பில் தேவையே
இல்லை. பில் இல்லாமல் எடுக்கலாம். இருந்தாலும் ஒரு வடிவு
வேண்டும் என்பதால்தான்..................(குறுக்கீடு) இந்த
அவைக்கு அதிகாரம் இல்லை என்று சொல்கிறீர்கள். இந்த
அவைக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது. நாஞ்சிலார் அன்
றைக்கே சொன்னார்கள். சுப்ரீம் என்று, நீங்கள் இப்போது
இப்படிச் சொல்கிறீர்கள்..............(குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, உங்களுடைய
உணர்வுகளை நான் புரிந்து கொள்கிறேன். ஆனால் தயவு
செய்து நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். தண்ணீர், தண்ணீர்
என்ற படம் எடுத்த போது யாராவது இப்படி ஒரு சட்டம்
கொண்டு வந்தோமா ? காளிமுத்து அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தண்ணீர், தண்ணீர் என்ற
படம் எடுத்தது போய் ஊருக்கு தண்ணீர் கொடுத்து இருக்க
வேண்டும், சம்பாதித்த பணத்திலிருந்து. படத்தை எடுத்தவர்
நாட்டினுடைய பொறுப்பானவர் அல்ல பொறுப்பானவர் படத்தை
எடுக்கவில்லை. எங்கேயோ ஒரு சிறிய தவறு நேருமானால் அதை
பெரிதுபடுத்தி நாடு முழுவதும் காட்டுவதா பொறுப்பு? ஏதோ
ஒரு வீட்டிலே சிறிய தவறு ஏற்படுமானால் அந்த சிறிய தவறை
நாடு முழுவதும் காட்டுவதா ஒரு ஜனநாயகம்.... (குறுக்கீடு)
ஒரு சிறிய தவறை ெனரலைஸ் பண்ணக்கூடாது.
You should not propagate the evil. You should rectify the evil You.
should avoid the evil. (கூச்சல்-குழப்பம்)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : you have walked out
of the House. You have no opportunity now. நீங்கள்,
கூப்பிடும்போது இல்லை. நான் பில் எடுக்கும்போது நீங்கள்
இல்லை. Discussion முடிந்து போய்விட்டது. நான்
ரகுமான்கானை அழைக்கும்போது நீங்கள் இல்லை.
திடீரென்று உங்கள் வசதிக்கு நான் கூப்பிட முடியாது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே,
அண்மைக்காலத்தில் வெளிவரும் திரைப்படங்களில் சிலர்
வேண்டுமென்றே அரசியல் நோக்கத்துடன் எடுக்கப்படுவதும்
சட்டமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர், அமைச்சர்கள்
போன்றவர்களை, ஜனநாயகத்தில் இன்றியமையாதவர்களை,
சட்டப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்புக்களை
வகிக்கின்றவர்களை தரக்குறைவாகவும், ஏளனமாகவும் குறிப்
பிடுவது வழக்கமாகி வருகிறது. நகைச்சுவை என்ற பெய
ராலும், உண்மையை பிரதிபலிக்க விரும்புவதாகவும் சொல்லி

[மாண்புமிகு திரு.வி. வி. சுவாமிநாதன்] [1987 மே 11

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை
யும் அவர்களைக் கொண்ட சட்டமன்றம் இது போன்ற
வற்றை திரைப்படங்கள் இழிவுபடுத்தி வருகின்றன. இந்தத்
திரைப்படங்கள் மத்திய அரசின் நிறுவனத்தால் தணிக்கை
செய்யப்படுவது உண்மைதான். அவ்வாறு தணிக்கை செய்யப்
பட்ட பிறகுதான் அவைகள் வெளியிடப்படுகின்றன. எனினும்
அவை வெளி வந்த பிறகுதான் எந்த அளவிற்கு இந்தப் படங்
கள் மக்களிடையே சட்டமன்றம் மீதும், உறுப்பினர்கள்
மீதும், அமைச்சர்கள் மீதும் கசப்புணர்ச்சியையும், அருவெறுப்
பையும் உருவாக்குகின்றன என்பது வெளிப்படுகிறது. இவ்
வாறு இந்த கசப்புணர்ச்சி உருவாக்கப்படுவது மூலமாக
பொதுவாக மக்களிடையே கொந்தளிப்பு ஏற்படுவதற்கான
சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்
பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் ஜனநாயக அமைப்புக்கள்,
சின்னங்கள் மீது ஒரு அவநம்பிக்கையை உருவாக்கி சமுதாயத்
தில் உள்ள தீய சக்திகள் இதைப் பயன்படுத்தி சட்ட ஒழுங்
கிற்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது.
மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் இந்த சுதந்திரத்தைப்
பற்றிப் பேசினார்கள்.

இது சுதந்திரத்தைத் தடை செய்வது அல்ல. சுதந்திரத்தை
ரெகுலேட் செய்கிறது. ஒழுங்குபடுத்துகிறது. அவ்
வளவுதான். முழுமையாகத் தடை செய்வது இல்லை. மாண்பு
மிகு ரகுமான்கான். அவர்கள் அவர்களே கேள்வியையும்
போட்டு, அவர்களே பதிலும் சொல்லி விட்டார்கள். இந்தச்
சட்டம் வராமல் இருக்கிறபோதே 7-வது ஷெடியூலில்
ஒன்றாவது லிஸ்ட்டில் மத்திய சர்க்காரே சட்டம் இயற்றக்
கூடிய 60-வது விதியைப் பற்றிச் சொன்னார்.
மாநில அரசு விதி 33-ஐப் பற்றிச் சொன்னார்.
ஆனால் இவைகளெல்லாம் இருக்கிறபோதே, 'தமிழ்
நாடு சினிமா ரெகுலேஷன் ஆக்ட்—1955'-ல் விதி 7-ன் கீழ்
மாநில அரசோ, மாவட்ட ஆட்சித் தலைவரோ—டிஸ்டிரிக்ட்
மாஜிஸ்திரேட்—இந்த ஒரு படம் திரையிடப்படுவதன் மூலம்
—முழுத் திரைப்படமோ அல்லது ஒரு பகுதியோ திரையிடப்
படுவதால் பொது ஜன அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்று
சொன்னால், 15 நாளுக்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டு, நோட்
டீஸ் கொடுக்க நேரம் இல்லை, மிக அவசரமாக இருக்கிற
தென்று சொன்னால், நோட்டீஸ் கொடுக்காமலேயே இன்
றையதினம்கூட, அந்தப் படங்களைத் திரையிடுவதை
நிறுத்தி வைக்கலாம்; அது தடை அல்ல. தற்காலிகமாக
நிறுத்தி வைப்பதுதான். இந்தச் சட்டம் இப்போதே இருக்
கிறது. ஆனால் அது உபயோகப்படுத்தப்படவில்லை. ஆனால்,
தொடர்ந்து ஜனநாயக அமைப்புகளின் சின்னமாக விளங்கு
கிற சட்டப் பேரவை உறுப்பினர்கள், அமைச்சர்கள்,
முதலமைச்சர்கள் போன்றவர்களை இழிவு படுத்துவதற்
காகக் காட்டப்படுகிற திரைப்படத்தை, அதனால் விளைகிற
விளைவைத் தடுப்பதற்காக ..........(குறுக்கீடு, கூச்சல்)



1987 மே 11]

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, அமைச்சர்
அவர்கள் இங்கே சொல்கிறபோது, நான் சொல்லிய அரசியல்
சட்டப் பிரிவை எல்லாம் ஒத்துக்கொண்டார்கள்: ஏற்கனவே
ஒரு படம் எடுக்கப்பட்டு, திரையிடப்படுகிறபோது 'பிரீச்
ஆப் பீஸ்'—பொது அமைதிக்குப் பாதகம் இருக்குமேயானால்
அந்தப் பிரிவைப் பயன்படுத்தலாம் என்று சொல்கிறார்.
(குறுக்கீடு) உபயோகிக்கவில்லை என்று சொல்கிறார்.
(குறுக்கீடு) உபயோகிப்பதில் என்ன தவறு..............
(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையும் சேர்த்தே
எடுத்துக்கொள்ளலாம். இரண்டும் இருக்கும்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு
சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்
பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த புதிதாகக்
கொண்டு வரப்பட்ட சட்டத்தில், அதை நாங்கள் இணைத்
திருக்கிறோம். நான் எதற்காக உதாரணமாகக் காட்டு
கிறேன் என்று சொன்னால், உள்நோக்கம் எதுவும் இந்தச்
சட்டத் திருத்தத்தில் இல்லை என்பதற்காகக் கொண்டு
வருகிறேன். யாரோ எடுக்கிற ஒரு படத்தை அல்லது எடுக்கப்
போகிற ஒரு படத்தைத் தடை செய்யும் நோக்கத்துடன்
இந்தச் சட்டம் வருகிறது என்று சொல்லக்கூடாது. அப்படி
உள்நோக்கம் இருந்தால் இப்போதுகூட விதி—7-ன் கீழ்,
15 நாட்களுக்குத் தடை செய்யலாம். அரசு விரும்பினால்
மேலும் தொடர்ந்து தடை செய்யலாம். ஆகவே, இந்தச்
சட்டம் கொண்டு வரப்படுவது, சட்டப் பேரவை உறுப்பினர்
களுடைய பொது நலன், கௌரவம் ஆகியவைகளைப் பாது
காக்கக் கொண்டு வரப்படுகிறது என்று கூறி, இது எந்த
சுதந்திரத்தையும் தடை செய்யவில்லை, அதை ஒழுங்கு
படுத்துகிறது என்று சொல்லி, இந்தச் சட்டத்தை நிறை
வேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு,
கூச்சல்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களே அவை
யினுடைய உரிமையை 'லெட் டவுன்' பண்ணினால் எப்படி?
வேண்டாம். (குறுக்கீடு) 224 உறுப்பினர்களுக்கும் ஒரு நல்ல
மரியாதை வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டம் வந்திருக்
கிறது. (குறுக்கீடு) வேறு யாருக்கும் அல்ல. படம் எடுப்ப
வர்கள் உங்களைப் பற்றி சிந்திக்கவா செய்கிறார்கள்? படம்
எடுப்பவர்கள் அமைச்சர்களைப் பார்க்கவா செய்கிறார்கள்?
இல்லையாதே, பணம் தான் குறிக்கோள். அதற்கு பிரபலமான
வர்களைப் பற்றி படம் எடுத்தால்தான் படம் ஓடும். பிர
பலமானவர்களைப் பற்றி குறை சொன்னால் தான் ஓடும்.
பிரபலமானவர்களைப் பற்றி குறைத்து எழுதினால்தான் பத்திரி
கையும் விற்கும், இதுதான் இன்றைக்கு நம்முடைய நாட்டில்
இருக்கக்கூடிய நிலை ஆகும். (குறுக்கீடு, கூச்சல்).

[1987 மே 11

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, Central Board of.... (குறுக்கீடு, கூச்சல்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எப்படி நீங்கள் தப்பு என்று சொல்லமுடியும்? Why do you want an inslut from a petty producer? (குறுக்கீடு, கூச்சல்).

மாண்புமிகு திரு. வி. வி. சாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்டிரல் போர்டு ஆப் பிலிம் சென்சாரில் மிகத் தெளிவாக எந்தெந்த அடிப்படையில் தணிக்கை செய்யலாம் என்பதில், visuals or words involving defamation or contempt of Court are not presented........ என்று மிகக் கவலையுடன் அவர்கள் அதிலே தெரிவித்து இருக்கிறார்கள். கண்டம்ப்ட் ஆப் தி அவுஸ்' அதில் இல்லை. 'கண்டம்ப்ட் ஆப் அவுஸ்' அதில் இல்லாததை, இந்த மாபெரும் மக்கள் சபையை அவமதிப்பதை ஒழுங்குபடுத்துவதற்காகவும், கட்டுப்படுத்துவதற்காகவும் தான் இந்தச் சட்டம் வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு, கூச்சல்) சர்க்கார்..........................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னராசு (குறுக்கீடு, கூச்சல்); ஏன் உங்களைக் குறை சொன்னதாக எடுக்கவேண்டும்? புரொட்யூஸரிடம் போய் ஏன் அதைச் சொல்லவில்லை? (குறுக்கீடு, கூச்சல்) நான் 'பெட்டி' என்று சொன்னதா உங்களுக்கு கோபம் வருகிறது? (குறுக்கீடு, கூச்சல்) ஒரு புரொட்யூஸர் உங்களைப் பற்றிக் கேவலமாக எழுதுகிறான், எடுக்கிறான். உங்களுக்கெல்லாம் வேதனை இல்லையா? (குறுக்கீடு) அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னராசு. (குறுக்கீடு, கூச்சல்).

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடத்தில் நான் முடித்து விடுகிறேன். இந்தச் சட்டம், இப்போது, எடுக்கப்பட்டு வருகிற படங்களுடைய தரத்தின் காரணமாக வந்திருக்கிறது. உதாரணத்திற்கு நான் ஒன்று சொல்கிறேன். மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள்........................ (குறுக்கீடு, கூச்சல்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்''.



1987 மே 11] [பேரவைத் தலைவர்]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது. (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்).

(பிற்பகல் 6–40)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இரண்டு பேரும் (குறுக்கீடுகள்) ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்களை குறித்து எழுதுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது ஜனநாயகப் படுகொலை... (குறுக்கீடு) இது முறையா? இது முறையா? இது முறையே கிடையாது..... (குறுக்கீடு)..............
You are insulting the people. The producer is insulting the people and you are supporting that producer.

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பேசும் போது ஒரு சாதாரண விஷயத்தை வைத்துக் கொண்டு, பெரிதுபடுத்தி அதைப் படமாக்கி மக்கள் மத்தியிலே காட்டி அதன் மூலம் பணம் சம்பாதிப்பவர்களைப் பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள் என்று கேட்டீர்கள். உங்களுக்குச் சொல்கிறேன். மந்திரிகளைப் பற்றியோ அல்லது எம். எல். ஏக்களைப் பற்றியோ — அவர்கள் எல்லாம் தேவதூதர்கள் அல்ல — அவர்களும் மனிதர்கள்தான் — மற்றவர்களைப் பற்றியோ அந்தப் படத்தில் அவர்கள் ஏதாவது எழுதியிருந்தால் அல்லது பிக்சரைஸ் செய்திருந்தால் அதை ஏற்றுக் கொள்ள மறுக்கிற மக்கள் தமிழகத்தில் ஏராளமாக இருப்பார்களானால் ஆட்டோமேட்டிக்காக அவர்களே அதைச் செய்வார்களே தவிர சட்டப் பிரிவைக் காட்டி அந்தக் காரியத்தைச் செய்ய முடியும் என்று நீங்கள் கருதுவீர்களானால் ஏமாந்து போவீர்கள் என்பதை மட்டும் நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : These people are all white-collareds. They are all white-collareds. நீங்கள் யாரை சப்போர்ட் செய்கிறீர்களோ they do not sweat. They thrive on poor people's money.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : எங்களை அப்படிச் சொல்வதைக் கடுமையாக நான் ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஆர். வேங்கடரமணன் அமர வேண்டும். Don't hold a brief for an outsider. (குறுக்கீடு) உங்களையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். உங்களைச் சேர்த்து அவமானப்படுத்துவதற்குத்தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். என்னை யாரும் அவமானப்படுத்த முடியாது. அதை என்னால் சமாளிக்க முடியும். அதையும் சொல்லிக் கொள்கிறேன். உங்களைப் போன்றவர்களுக்குத்தான் இந்தச் சட்டம். எனக்கு இந்தச் சட்டம் தேவையில்லை. என்னை என்

னால் பாதுகாத்துக் கொள்ள முடியும். எந்த நடவடிக்கையையும் நான் எடுக்க முடியும். அதையும் சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடு) இது என்னுடைய பாதுகாப்புக்காக அல்ல. உங்களுடைய பாதுகாப்புக்காக, உங்களைக் காப்பாற்றுவதற்காக (குறுக்கீடு) உங்களுக்காக...... இவர்களுக்காக.......... (குறுக்கீடு) உங்களால் முடியாது. உங்களால் முடியாது. அதனால்தான் (குறுக்கீடு)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளியேறினர்.)

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப் படங்கள் (முறைப் படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## 1. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

### (ஓ) சென்னனப் பெருநகர்ப்பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1987. (ஆ. இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு: 1987ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.



## 2. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி).

### (ஃ) சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு 1987—(தொடர்ச்சி).

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு விவசாயிகளுடைய நலனைப் பாதிக்கக் கூடிய அளவில் இருக்கிறது. இந்தச் சட்டத்தில் விவசாயிகளுடைய நிலத்திற்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை...

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இந்தச் சட்டம் விவசாயிகளை எதிர்த்து கொண்டு வரப்பட்டதல்ல. சென்னைப் பெருநகரில் உள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக் கொண்டு வரப்பட்டது. இது விவசாயிகளைப் பாதிக்காது.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா :** Mr. Speaker, Sir, clause 3 of the Bill lays down that notwithstanding anything contained in any other law, no person shall sink a well in a Schedule area unless he gets the permission of the competent authority.

இந்தச் சட்டம் பொருந்தாது என்று எந்தப் பகுதியிலும் சொல்லப்படவில்லை. விவசாயிகள் புதிதாகக் கிணறு வெட்டுவது என்றால் அதற்கு காம்பிடென்ட் அத்தாரிடியிடமிருந்து பெர்மிஷன் வாங்க வேண்டும். என்னுடைய கவலையெல்லாம் விவசாயிகளுக்கு பாதுகாப்பு கிடைக்க வேண்டும் என்பதுதான், சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம், செங்கற்பட்டு மாவட்டத்திலே ......

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் சென்னைப் பெருநகருக்குத் தான். இங்கே விவசாயம் இல்லை, ஆகவே விவசாயிகளைப் பாதிக்கக் கூடிய நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஒரு திருத்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது, அதிலே...... "Without prejudice

* 1987 ஆம் ஆண்டு மே திங்கள் 11ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

to the foregoing provisions of this Act and with a view to ensure, optimum utilisaticn of hydraulic ba rier against sea water intrusion the Governmeuf shall issue instructions to the Board for implementing within such period as may be prescribed the scheme fo, artificial re-charge cf the Arni-Korteliyar basin with the excess flood water flowing into the sea by interlinking A ni and Korteliyar at two or more feasible points and also by constructing sufficient number of check dams at the appropriate places in the Korteliyar river course." என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. விவசாயிகளின் நலனைக்காக்க உப்புநீர் வராமல் தடுக்க, நிலத்தடி நீரை அதிகமாக உருவாக்க உலகவங்கியின் ஆலோசனையைக் கேட்டு, விவசாயிகளின் நலனுக்காக இப்போது இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமெண்ட்மெண்ட்டைப் பார்த்தேன் மெட்ரோ வாட்டர் போர்டைப் பொறுத்தவரையில் எங்கே வேண்டுமானாலும் அதிகமான ஆழத்திற்கு போர்-வெல் போட்டு தண்ணீரை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் தாலுக்கா மற்றும் என்னுடைய தொகுதியில் காட்டுப்பாக்கம் பகுதியில் தண்ணீரை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் அதற்குப் பக்கத்திலேயுள்ள விவசாயம் பாதிக்கப்படுகிறது. ஆகவே மெட்ரொ வாட்டர் போர்ட் போர் போடும் போது விவசாயம் செய்கின்ற பகுதியில் விவசாயிகளுடைய ஊற்றுக் கிணறு பாதிக்காத அளவிற்கு பாதுகாக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்தாக வைக்கிறேன். இந்தச் சட்ட திருத்தத்திலே விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். மெட்ரோ வாட்டர் போர்ட் விவசாய ஊற்றுக் கிணறுகளுக்குப் பக்கத்தில் போர்-வெல் போடுகிறது. அதைத் தடுக்க மெட்ரோ வாட்டர் போர்ட் விவசாயம் பாதிக்காத அளவிற்குப் போர்-வெல் போட வேண்டும் என்று இந்தச் சட்டத்திலே ஒரு திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறோம். அதிலே விஞ்ஞான ரீதியாக எந்த அளவிற்கு குடிதண்ணீர் எத்தனை அடி தூரத்தில் கிடைக்கிறதோ அத்தனை அடி போட்டு தண்ணீரை எடுக்கிறோம். சென்னை நகரத்திலே குடிதண்ணீர் பஞ்சம் வந்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஏற்கனவே இருந்த சட்டம் காலாவதியாகி விட்டதால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டிய நிலை இருக்கிறது. முதலிலே மக்களுக்கு பாதுகாப்புத் தந்தாக வேண்டும். அவர்களுக்கு முதலிலே குடிதண்ணீர் தர வேண்டும். அந்த வகையிலே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்போது விவசாயம் நடைபெறவில்லை. மழை பெய்தால் தான் விவசாயம் பற்றிய கவலை வருகிறது. எந்த வகையிலேயும்





விவசாயிகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை. கடல் ஓரப் பகுதிகளில் 50 அடிக்கும் கீழே போனால் உப்பு தண்ணீர் வருகிறது. ஆகவே அங்கே தண்ணீர் எடுக்கும் வாய்ப்பு இல்லை. எங்கெங்கே நீர்நிலைகள் இருக்கின்றன என்பதை மீட்டர் வைத்து பார்த்து நல்ல தண்ணீர் எங்கே கிடைக்கிறது என்று விஞ்ஞானிகளை வைத்துப் பார்த்து மக்களுக்கு உடனடியாக தண்ணீர் தர வேண்டிய கட்டாயத்தில் இந்த அரசு இருக்கிறது. இந்த கட்டாயக் கடமையை நிறைவேற்றத்தான் இந்தச் சட்டம்.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகருக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்கு எங்கள் பகுதியில் ஆட்சேபணை சொல்லவில்லை. எங்களைப் பாதிக்கக் கூடாது என்றுதான் நான் சொல்லுகிறேன். நான்கூட 127 அடிக்கு போர் கிணறு எடுத்து விவசாயம் செய்கிறேன். மெட்ரோ வாட்டர் போர்டில் இருக்கிறவர்கள் விவசாயப் பகுதியில் எங்களுடைய ஊற்றுக் கிணறுக்கு அருகாமையில் மிகப் பெரிய ஆழ்துளை குழாய்களை போட்டுவிடுவதால் பாதகம் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே எங்களுக்கும் இந்த அரசு பாதுகாப்பு கொடுக்குமா என்பதை கேட்க ஆசைப்படுகிறேன். The Met o-W:ter Board is inconsistently digging bore-wells. The Metro-Water Boa d has already cug huge bore-wells in agri-culture zones, thereby ffecting agriculture. Therefore my arcent app l is that the interests f agriculturists and the cultivators should be pro ected. This is my ardent app al. We should be protected. இந்தக் கருத்தை முன் வைத்து இந்தச் சட்டத்திலே திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லி, வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6—50)

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிலத்தடி நீரை எடுப்பதைக் கட்டுப்படுத்தல், முறைப்படுத்தல் சட்டமுன்வடிவை, இந்தச் சட்டமன்றத்திலே உள்ள 234 உறுப்பினர்களில் என்னைவிட அதிகமாக வரவேற்கிறவர்கள் இருக்க முடியாது. காரணம், 4 ஆண்டுகளுக்கு முன் பாகவே இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை கொண்டுவர வேண்டுமென்று, கடுமையாக இந்தப் பகுதியிலேயிருந்து வாதிட்டவன் நான் அப்போது இப்படிப்பட்ட ஒரு கடுமையான வறட்சி ஏற்பட்ட நேரத்தில், மேலை நாடுகளில் எல்லாம் river water is used for agriculture; grounc water is being used for crinking purpcses only என்பதை மேற்கோளாக எடுத்துக் காட்டி, கப் சாயில் வாட்டர் நிலத்தடி நீர்தான் மக்கள் குடிநீருக்குப் பயன்படுத்த வேண்டுமென்று எடுத்துச் சொல்லி, இப்படி கண்டபடி அவரவர்கள் ஆங்காங்கே குழாய்க் கிணறுகளைப் போட்டு, வறட்சி காலத்தில் நீர் எடுப்பதைத் தடுக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லி, பல முறை வாதிட்டிருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால், இந்த நிலத்தடி நீரை ஏராளமாகத் தோண்டி எடுத்

தால் கடல் நீர் உள்ளே புகுந்து; சென்னை நகரில் உள்ள எல்லாக் கிணறுகளிலும் உப்பு நீராக மாறி, குடிக்கப் பயனில்லாதாகும். என்பதையும் சொல்லியிருக்கிறேன். இப்போதாவது யுனைடெட் நேஷனிலிருந்து மிஷன் வந்து; இந்த நிலைமையை அரசாங்கத்திற்குச் சொன்ன பிறகு; இவர்கள் விழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து; பெருமைப்படுகிறேன்.

இன்னும் சொல்லப்போனால், நிலத்தடி நீரைத் தோண்டி எடுக்கிறோம். அதை ரீசார்ஜ் செய்வதற்கு மீண்டும் நிலத்தடி நீரை அதிகமாக உள்ளே பெர்குலேட் செய்வதற்கு என்ன வகைகள் செய்திருக்கிறோம் என்பதை இங்கே சட்டத்திலும் சரி, நோக்கத்திலும் சரி, சரியாகச் சொல்லவில்லை. குறிப்பாக, அடையாறு பகுதியிலும், கொற்றலையாறு பகுதியிலும் மழை வரும் கால கட்டத்தில் நிச்சயமாக ஷட்டர்ஸ் அல்லது தடுப்புச் சுவர் எழுப்பி, மழை நீரை சில நாட்கள் தேங்க அனுமதிப்போமானால் sub-soil water is l kely to get rech rged once ag in. என்பதையும் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அண்மையிலே தொலைக்காட்சியிலே பார்த்தேன். மராட்டிய மாநிலத்திலுள்ள சிற்பூர் நகரத்திற்கு தினந்தோறும் 140 இலட்சம் காலன் நிலத்தடி நீர் 2–1/2 கோடி ரூபாய் செலவில் கொண்டுவரப்படுகிறது. ஒரு வாரத்திற்கு முன்பு தொலைக்காட்சியிலே பார்த்தேன். சென்னை நகரிலுள்ள மக்களுடைய தேவை, சுகாதார அடிப்படையில் ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு 40 காலன். 4 மில்லியன் ஜனத்தொகை உள்ள சென்னைக்கு தினந்தோறும் 160 மில்லியன் காலன் தண்ணீர் தேவைப்படுகிறது. 14 மில்லியன் காலன் தண்ணீருக்கு 2–1/2 கோடி ரூபாய் என்றால் 160 மில்லியன் காலன் தண்ணீரை 30 கோடி ரூபாய் செலவிலே, கொற்றலையாறு, அடையாறு, ஏன் கூவத்திலே கூட 100, 150 அடி ஆழ்குழாய் கிணறுகளைத் தோண்டி, அதிலிருந்து தண்ணீர் கொண்டு வரலாம். ரெட்ஹில்சை மாத்திரம் நம்பி இருக்காமல்; இந்த நிலத்தடி நீரை சென்னை நகரம் முழுவதற்கும் 30 கோடி ரூபாய் செலவிலே கொண்டு வரலாம்.

நாம் வீராணத்தை எதிர்பார்க்க வேண்டியதில்லை. தெலுங்கு கங்கையை எதிர்பார்க்க வேண்டியதில்லை. நீங்கள் ஆராய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களுக்குச் சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் வரவேற்று, அமைகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பயப்படுவதுபோல தற்போது சூழ்நிலை ஒன்றுமில்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நிலத்தடி நீரை எந்த அளவுக்கு எடுக்கலாம் என்பதை நாங்களல்ல, உலக வங்கியிலே இருக்கும் நிபுணர்கள் வந்து, இங்கே ஆராய்ந்து எங்களுக்கு எடுத்துச் சொல்லி, அதன் மூலமாக சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியமும், தமிழகத்தில் இருக்கும்



குடிநீர் வடிகால் வாரியமும் அந்த அளவுக்கு தண்ணீரை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இப்போதுகூட பூண்டி வறண்டு போயிருக்கிறது. புழலேரியில் கொஞ்சம் தண்ணீர் இருக்கிறது. அங்கேயிருந்து தினசரி தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆழ்குழாய்க் கிணறுகளை அங்கே தோண்டிக் கொண்டிருக்கிறோம். கடந்த 7 ஆண்டுகளாக பூண்டியும், புழலேரியும் நிரம்பவில்லை. இதுதான் இருக்கும் நிலைமை. உடனடியாக ஏதாவது செய்ய வேண்டும் என்பதிலே இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது. புழலேரிக்கு 15 கல் தொலைவில் ஆரணியாறு என்று ஒரு ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. எப்போதாவது மழை பெய்தால்கூட, அந்த ஆற்றுத் தண்ணீர்கூட கடலிலே போய் சேர்ந்துவிடுகிறது. அதிலே தடுப்புச் சுவர்கள் போட்டு, ஒரு வாய்க்கால் வெட்டி, அதை புழலேரிக்குக் கொண்டு வந்து சேர்ப்பதற்கான, பூண்டியில் கொண்டு வந்து சேர்ப்பதற்கான திட்டங்களை வெகு விரைவாக நிறைவேற்றுவதற்கு இந்த ஆட்சி முடிவு செய்திருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே சென்ற வாரம் விவாதம் நடந்தபோது, அதற்கான நடவடிக்கைகளை உடனே எடுத்துவிடுங்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌரிராஜன் அவர்கள் சொன்னதுபோல, ரூ. 30 கோடி அளவில்கூட ஆகாது. 10 கோடி, 12 கோடி ரூபாயில் அதற்கான வாய்க்காலை வெட்டிவிட முடியும். அதைப்போல கன்ற ஒழுங்குபடுத்துவதற்கு என்று ஒரு திட்டத்தைப் போட்டிருக்கிறோம். அந்த வகையில் தமிழகத்திலே இருக்கின்ற, விவசாயப் பொறியியல் கழகத்திலே இருக்கின்ற புல்டோசர்கள் எல்லாம்கூட கொண்டு வந்து புழலேரியிலே கரைகளை, பூண்டியிலே ஏரிக் கரைகளை உயர்த்துவதற்கு ஆவன செய்யப்படும்.

அதோடு மட்டுமல்லாமல், அந்தப் பகுதியில் கே.கே. நகர் பகுதியில் சில ஏரிகள் இருக்கின்றன. அங்கே போரூர் ஏரியெல்லாம் இருக்கிறது. அந்த ஏரிகளிலே உள்ள கரைகளை எல்லாம் உயர்த்தி அதிலே இருந்து வருகின்ற தண்ணீரை குடி தண்ணீராக எடுத்துக்கொள்வது எப்படி என்பதைப்பற்றியெல்லாம் ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருக்கிறோம். அதிலே என்ன நிலைமை என்று சொன்னால், அதற்கு ஆயக்கட்டுகள் இருக்கின்றன. அந்த ஆயக்கட்டுகள் எல்லாம் வீட்டு மனைகளாகப் போடப்பட்டு மாறிப்போய்விட்டிருக்கின்றன. அப்படி மாறிப் போய் வீட்டுமனைகள் வந்திருப்பதால் அங்கு ஆயக்கட்டுகளாக இல்லை. அந்த ஏரிகளை குடிநீருக்குப் பயன்படுத்துவதற்கு நாம் திட்டமிட்டிருக்கிறோம். ஆகவே பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டுதான் வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு வகையில் நாம் பார்க்கிறோம். சட்டம் விரைவில் வருகிறது என்று சொன்னாலும், பக்கத்திலே இருக்கின்ற கர்நாடகாவில் கிருஷ்ணா நதி ஓடுகிறது. அங்கேயிருந்து,

[திரு. க. இராசாராம்] [1987 மே 11

தண்ணீர் கொண்டுவர முடியுமா என்று பார்த்தோம். ஆனால்
அந்தத் துறைமுகம் சிறிய துறைமுகமாக இருக்கின்ற காரணத்தி
னாலே கப்பலிலே தண்ணீர் கொண்டு வர வழியில்லை
என்று சொன்னார்கள். மகாபலிபுரத்திற்குப் பக்கத்தில்
ஒரு துறைமுகம் இருக்கின்றது. அந்த துறைமுகத்திலேயிருந்து
தண்ணீர் கொண்டு வரலாமா என்று ஆராய்ச்சியிலே ஈடுபட்டு
இருக்கிறோம். தண்ணீர் கப்பலில் கொண்டு வந்தாலும் ஒரு
லட்சம் மில்லியன் லிட்டர் கொண்டு வருவதற்கு வாய்ப்பிருக்
கிறது. இன்னொரு ஆராய்ச்சிக்கூட நாங்கள் செய்தோம்.
நேற்று முன்தினம் ஜப்பானிய தூதுவரை நான் டெல்லியிலே
பார்த்தேன். அரபு நாடுகளிலே இருந்து எண்ணெய் எடுத்துக்
கொண்டு ஜப்பானுக்கு போகின்ற கப்பலில் ஜப்பானிலேயிருந்து
குடிக்கின்ற தண்ணீரை கொண்டு போகிறார்கள். ஜப்பானிலே
தண்ணீர் அற்புதமாக இருக்கின்றது. ஜப்பானிலே தண்ணீர்
நிறைய இருக்கிறது. அந்த கப்பல்கள் திரும்ப வரும்
போது, காலியாக வருகிறது. அந்தக் கப்பலை
சுத்தம் செய்வதற்கு 2 மணிநேரம் ஆகிறது. அதற்கு
என்று அதற்குள்ளே இயந்திரம் வைத்திருக்கிறார்கள்.
அந்த கப்பலை 2 மணி நேரத்தில் சுத்தம் செய்து கொண்டு
வருகின்றார்கள். அந்த கப்பலிலே ஒரு லட்சம் மில்லியன்
லிட்டர் தண்ணீர் கொண்டு வர முடியும் என்று சொல்கிறார்கள்.
அந்தக் கொண்டு வர முடியுமா என்று பார்த்துக்கொண்
டிருக்கிறார்கள். இதையெல்லாம் நீங்கள் அறிந்துகொள்ள
வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். வந்தால்,
வந்த தண்ணீரை எங்கே கொண்டுபோய் இறக்குவது என்ற
பிரச்சினை எழுகிறது. தற்போது துறைமுகத்திலே 'சம்ப்
என்று சொல்லக்கூடிய நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்
பட்டிருக்கின்றன. அதிலே ஓரளவுக்கு நிரப்பலாம். ஆனால்
அங்கேயிருந்து அண்ணா பூங்காவிலே, பழைய நேப்பியர்
பூங்காவிலே பெரிய தொட்டிகளைக் கட்டி, அந்தத்
தொட்டிகளிலேயிருந்து வட சென்னைக்கு தண்ணீர்
கொடுத்துவிட்டால் ஓரளவுக்குச் சமாளிக்கலாம். ஏறத்தாழ
50 வருடங்களாக வெள்ளைக்காரன் காலத்தில் போட்ட
ஒரே நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தந்துகொண்டிருக்
கின்றார்கள். ஆகவே அதை இரண்டாகப் பிரித்து சென்னை
நகரத்திற்கு குடிதண்ணீர் கொடுக்கின்ற ஒரு வேலையைத்
தொடங்கலாம் என்று இருக்கின்றோம். அந்த எண்ணத்தில்
நாம் இருந்துகொண்டிருக்கிறோம். அந்த நேப்பியர் பூங்கா
ஒரு கிலோமீட்டர் தூரத்திலே தான் அமைந்திருக்கிறது
ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு கப்பலில் வந்த தண்ணீரை
கொண்டு வருவதனால் அந்த பிரஷரைத் தாங்குவதற்காக
நல்ல ஸ்டீல் பைப்புகள் தேவை. தற்போது நல்லவேளையாக
டெல்லியிலே செய்வதாகச் சொல்கின்றார்கள். அந்த பைப்பு
களைக் கொண்டு வந்து, துறைமுகத்திற்குத் தண்ணீர் அதிகமாக
வந்தால், அங்கேயிருந்து இங்கே கொண்டுவருவதற்கும், இங்கே,
தண்ணீர் அதிகமாக இருந்தால் துறைமுகத்திற்குக் கொண்டு



1987 மே 11] [திரு. க. இராசாராம்]

போகவும் திட்டம் போட்டிருக்கிறோம். ஆகவே இதிலே
நாம் யாரும் சும்மா இருக்கவில்லை. நாம் வேகவேகமாக
சிந்தனை செய்துகொண்டு செயல்பட்டுக்கொண்டுதான் இருக்
கிறோம். அந்த வகையிலே சென்னை நகரத்திற்குத் தண்ணீர்
கொண்டு வருகின்ற தன்மையைப் பார்த்துக் கொண்டிருக்
கிறோம். திருமதி யசோதா அம்மையார் அவர்கள்கூட கேட்
டார்கள். சுற்றுப்புற கிராமங்களில் உப்புத் தண்ணீர் வந்து
விட்டால் என்ன பண்ணுவது என்று கேட்டார்கள். அதைக்
குடிநீர் வடிகால் வாரியம் மிகுந்த கவலையோடு, அக்கறையோடு
பார்த்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன். அங்கே தண்ணீர் எடுக்கிறபோது, 2, 3 அடியி
லிருந்து சில இடங்களிலே தண்ணீர் வருகிறது. அதனாலே
மேலே இருக்கின்ற தண்ணீர் குறைந்துபோவதாக யாரும்
கவலைப்படத் தேவையில்லை. அங்கே இருக்கின்ற தண்ணீர்
மட்டம் வேறு, இங்கே இருக்கின்ற தண்ணீர் மட்டம் வேறு.
சில பேர்கள் சென்ற வாரத்திலேகூட சில கிராமங்களிலே
குழாய் கிணறுகள் போட்டால் பக்கத்தில்உள்ள கிணறுகள்
வற்றிப் போய்விடும் அனுமதிக்க முடியாது என்று தடுத்தார்கள்.
முதுகுளத்தூரில் ஒரு ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னாலே
துப்பாக்கிப் பிரயோகம்கூட நடந்துவிட்டது. நானும் மாண்பு
மிகு புரட்சித் தலைவர் அவர்களும் அங்கே சென்று பார்த்து
சமாதானம் சொன்னது எனக்கு இன்றைக்குக்கூட நினைவுக்கு
வருகிறது.

(இரவு 7—00)

அப்படிப்பட்ட, தேவையற்ற, மற்றவர்களுக்குத் தொல்லைத்
தருகின்ற எந்தக் காரியத்தையும், ஏற்கெனவே இருக்
கின்ற பாதுகாப்பு குறைகிற வகையில் எந்தக் காரியத்தையும்
இந்த அரசு அணு அளவும் செய்யாது என்பதை இந்த நேரத்தில்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு பல இடங்களில் தண்ணீர் கிடைக்கிற நிலைமை
இருக்கிறது. பல பகுதிகளில் தண்ணீரை வைத்துக் கொண்டு
தர தயாராக இருக்கிறார்கள். பல இடங்களில் தண்ணீருக்காக
தோண்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. சென்னையைப்
பொறுத்தவரையில் எப்படியும் நிலைமையை, மழை வரும்
வரை சமாளித்து விடலாம் என்கிற நம்பிக்கையில் போய்க்
கொண்டிருக்கிறோம். சென்ற வாரம் காஞ்சிபுரம் சென்று
விட்டு வரும்போது ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் 10 நிமிடத்திற்கு
மேல் கடுமையான மழை பெய்ததை நான் பார்த்தேன். ஆகவே,
எதிர்பாராத வகையில் எந்த நேரத்திலும் மழை வரக் கூடும்.
இச்சட்ட முன்வடிவைக் கொண்டு வந்ததே பொதுமக்களுக்கு
பாதுகாப்புக்குத்தானே தவிர, யாருக்கும் தொல்லை தர அல்ல
என்பதால் இச்சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்
ளும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (முறைப் படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

புதிய பிரிவுகள் 14 மற்றும் 15.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன்:

(1) *After* clause 13; *insert* the following clauses:—

"14. *Implementation of scheme for artificial re-charge*—Without prejudice to the foregoing provisions of this Act and with a view to ensure optimum utilisation of ground water and formation of hydraulic barrier against sea water indetrusion, the Government shall issue instructions to the Board for implementing within such period as may be prescribed the scheme for artideficial re-charge of the Arni Korteliyar basin with the excess flood water flowing into the sea by interlinking Arni and Korteliyar at two or more feasible points and also by constructing sufficient number of check dams at the appropriate places in the Korteliyar river course.

15. *Power of Board to make regulations*:—With a view to prevent sea water intrusion, the Board shall make regulations for assessing scientifically, from time tn time, the quantity of water which can be drawn from the Minjur, Duranallur–Panjetti and Tamaraipakkam –Kilanur well fields in the Arni-Korteliyar basin, the Poondi, Korteliyar Flood Plains and Kannigaipper aquifers and also Poonamallee Porur aquifer in Cooum-Adayar basin and for fixing up the limits of the drawal of ground water by the Board:

Provided that no regulation shall have effect unless a draft of the regulations has been sent by the Board to the Government and the approval of the Government has been obtained therefor."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று புதிய பிரிவுகள் 14 மற்றும் 15 சட்ட முன்வடிவின் பகுதிகளாகச் சேர்க்கப்பட்டன.



மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன்:

"*Re-number* clauses 14, 15 and 16 as clauses 16, 17 and 18 respectively."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, பிரிவுகள் 16, 17 மற்றும் 18 சட்ட முன் வடிவின் பிரிவுகளாக ஏற்கப்பட்டன.

அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு 1.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன்:

"In clause 1, for sub-clause (3), *substitute* the following:

" (3) Sections 14 and 15 shall come into force on such date as the Government may, by notification appoint and the rest of this Act shall come into force at once."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு 1, திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன்:

"In the Preamble, after fifth paragraph, *insert* the following ;

" AND WHEREAS based on the United Nations Development Programme studies, a scheme for artificial re–charge of the basin with excess flood water flowing into the sea is to be taken up by inter-

linking Arni and Korteliyar at two or more feasible prints and also for constructing sufficient number of check dams at the appropriate places in the Korteliyar river course:

AND WHEREAS such re-charge will enable optimum utilisation of ground water and formation of hydraulic barrier against sea water intrusion;''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

நெடுந்தலைப்பு, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1987) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு, திருத்தப் பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

## 1. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(ஔ) பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்த விவரங்கள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எட்டாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர் 27—2—1987 ஆம் நாளன்று தொடங்கியது. இன்று வரையில் அக்கூட்டத் தொடர் நடைபெற்றுள்ளது.

பேரவையில் 27—2—1987 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் உரையாற்றினார்கள்.

| | |
|---|---|
| இக்கூட்டத் தொடரில் பேரவை கூடிய மொத்த நாட்கள் .. .. .. | 44 |
| மாலையிலும் பேரவை கூடிய நாட்கள் .. | 13 |
| அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம். .. | 210 மணி 45 நிமிடங்கள். |
| ஆளுநர் உரை மீது விவாதம் நடைபெற்ற நாட்கள் .. .. .. .. | 6 |
| அவ்விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்கள் .. .. .. .. | 70 |



**நிதி அலுவல்கள் :**

| | |
|---|---|
| 1987—88 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் பேரவையில் அளிக்கப் பெற்ற நாள் .. .. .. .. | 20—3—1987 |
| வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் .. | 7 |
| பங்கு கொண்ட உறுப்பினர்கள் .. .. | 74 |
| மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள் .. .. .. .. | 24 |
| கொடுக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் | 3,383 |
| அவை முன் வைக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் .. .. .. .. | 3,187 |
| விவாதித்து நிறைவேற்றப்பெற்ற மானியக் கோரிக்கைகள் .. .. | 59 |
| உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரை | 321 |

**வினாக்கள்-விடைகள் :**

| | |
|---|---|
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 623 |
| உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | 600 |
| துணை வினாக்கள் .. .. .. | 1,827 |

**கவன ஈர்ப்பு :**

| | |
|---|---|
| அனுமதிக்கப் பெற்றவை .. .. | 553 (456 பொருள் பற்றி). |
| அவையில் எடுத்துக் கொள்ளப்பெற்றவை | 336 (289 பொருள் பற்றி). |

**உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள் :**

| | |
|---|---|
| அறிவிப்பு வரப் பெற்றவை .. .. | 4 |
| ஆய்வில் உள்ளவை .. .. .. | 2 |
| உரிமைக்குழுவிற்கு அனுப்பப்பெற்றவை .. | 2 |
| உரிமைக்குழு கூடிய நாட்கள் .. .. | 3 |

**அரசினர் சட்ட முன்வடிவுகள் :**

| | |
|---|---|
| ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பெற்றவை. | 39 |
| நிறைவேற்றப்பெற்றவை .. .. | 39 |

**சட்டமன்றப் பேரவைக் குழுக்கள் :**

16—5—1986 முதல் 11—5—1987 வரை—

| | கூடிய நாட்கள். | அளித்துள்ள அறிக்கைகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மதிப்பீட்டுக் குழு .. .. | 40 | 4 |
| பொதுக் கணக்குக் குழு .. | 48 | 28 |
| பொது நிறுவனங்கள் குழு .. | 50 | 21 |
| அவைக் குழு .. .. | 9 | .. |
| அரசு உறுதிமொழிக் குழு .. | 21 | 2 |
| அலுவல் ஆய்வுக் குழு .. | 8 | .. |
| சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 37 | 3 |
| மனுக்கள் குழு .. .. | 33 | 3 |
| சட்ட மன்றப் பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு .. .. | 13 | 3 |
| நூலகக் குழு .. .. | 1 | .. |
| காமன்வெல்த் பாராளுமன்றக் குழு .. .. .. | 6 | .. |

**பேரவை முன்வைக்கப்பெற்ற ஏடுகள் :**

| | | |
|---|---|---|
| (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் .. | .. | 108 |
| (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.. | .. | 230 |

**பார்வையாளர்கள் :**

| | | |
|---|---|---|
| மாடத்தில் அனுமதிக்கப்பெற்ற | ஆண்கள் .. | 11,668 |
| | பெண்கள் | 1,598 |
| தலைவர் மாடத்தில் அனுமதிக்கப்பெற்றவர்கள் .. .. .. .. .. | | 10,231 |
| பேரவை நிகழ்ச்சிகளைக் காண வருகை தந்தோர் மொத்த எண்ணிக்கை .. | | 23,497 |



**நூலகம் :**

| | |
|---|---|
| சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர். | 1,269 |
| வழங்கப்பெற்ற நூல்கள் | 610 |

**நடவடிக்கைக் குறிப்புகள் :**

| | |
|---|---|
| தட்டச்சு செய்யப்பெற்ற மொத்த பக்கங்கள். | 10,528 |

சிறந்த முறையில் பேரவை நிகழ்ச்சிகள் நடைபெற ஒத்துழைப்பு நல்கிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் பாராட்டு தெரிவிப்பதுடன் அவர்களுக்கு என் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையை நடத்திச் செல்வதில் உதவியாக இருந்த பேரவை துணைத் தலைவர் மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும், மாற்றுத் தலைவர் திருவாளர்கள் மா. சின்னராசு, டாக்டர் கே. சமரசம், கே. குப்புசாமி, செ. செம்மலை, டி. ஆர். வேங்கடரமணன் ஆகியோருக்கும் என் நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் கட்சிகளின் கொறடாக்களுக்கும் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சீரிய முறையில் பேரவை நிகழ்ச்சிகளை நடத்திச் செல்ல ஒத்துழைப்பு தந்த மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் ஆகியவற்றின் செய்தியாளர்களுக்கும் என் பாராட்டுதல்கள்.

நம்முடைய பேரவைச் செயலகத்தின் ஆணையர் மற்றும் செயலாளர் திரு. சி. கு. இராமசாமி அவர்கள் என்னுடன் மிகவும் ஒத்துழைத்தார்கள். அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவை அனைத்து அலுவலர்கள், பாதுகாப்பு அலுவலர்கள் ஆகியோருக்கும் அவர்கள் ஆற்றிய சீரிய பணிகளுக்காகப் பேரவை மூலம் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அரசினர் தீர்மானங்கள்.

(ஆ) பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெறுகிறது. வணக்கம்.

பின்னர் இரவு 7-08 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

108. 1983–84 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகத்தின் பத்தாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

230. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்து கவன ஈர்ப்புப் பட்டியல் (எண்கள் 1 முதல் 71 வரை)

D(
Y211,31 N87
N87.43.5 136534

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road. Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tinnevelli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.